# மிகவும் எளிதான கதை
# ஆழமான வேதாகம பயிற்சி "வாய்வழி முறை"

எஸ் டி எஸ் புத்தகம்

கேட்பது மற்றும் பதில் அளிப்பதின்

மூலம் வேதாகமத்தை ஆராய்தல்

டோரத்தி A. மில்லர்
தேவனின் கதை பயிற்சி

இந்தக் கையேட்டை உங்கள் மொழியில் மொழிபெயர்க்க நீங்கள் விரும்பினால், அது குறித்து உங்களுடன் கலந்துரையாட நாங்கள் ஆவலாக உள்ளோம். இதன் சமீபத்திய பதிப்பைப் பெறவும், உங்கள் மொழியில் மொழிபெயர்ப்புப் பணிகள் ஏற்கனவே நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்தவும், வீஸீயீஷீ@ஷிவீனீஜீறீஹ்ஜிலீமீஷிமீஷீக்ஷீஹ்.ஷீக்ஷீரீ என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**Simply The Story கையேடு, பதிப்பு 6g  (Oct 2nd 2026)**

பதிப்புரிமை © 2024 **The God's Story Project**

வெளியீடு: **The God's Story Project**
**PO Box** 187, **Hemet, California** 92546
(951) 658-1619. India Address : P O Box.3, Sidhartha Nagar (PO), Mysore-570011-India.
**info@SimplyTheStory.org**
**| info@Gods–Story.org**
**www.SimplyTheStory.org | www.Gods–Story.org**
பல்வேறு மொழிகளில் சொல்லப்படும் நேரடி (**live**) கதைகளைக் கேளுங்கள்.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. வெளியீட்டாளரின் முன் அனுமதியின்றி, அச்சிடப்பட்ட விமர்சனங்களில் இடம்பெறும் சுருக்கமான மேற்கோள்களைத் தவிர, இந்தப் படைப்பின் எந்தப் பகுதியையும் மறுபதிப்பு செய்யவோ, தகவல் மீட்பு அமைப்பில் சேமிக்கவோ அல்லது மின்னணு, இயந்திரவியல், ஒளிநகல், ஒலிப்பதிவு அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலோ அல்லது முறையிலோ பரப்பவோ கூடாது.

இந்த ஆவணத்தை மொழிபெயர்க்க நீங்கள் விரும்பினால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும். மொழிபெயர்ப்புக்கான அனுமதியை வழங்குவதிலும், ஜிநிஷிறி-யின் வழிகாட்டுதல்களின்படி அனைத்தும் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதிலும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம்.

டோரதி ஏ. மில்லர் (ஞிஷீக்ஷீஷீமீலீஹ் கி. விவீறீறீமீக்ஷீ)
நிர்வாக இயக்குனர், ஜிலீமீ நிஷீபீ'ஷ் ஷிமீஷீக்ஷீஹ் றிக்ஷீஷீழீமீநீமீ

இந்தப் ஆங்கில வெளியீட்டில் உள்ள அனைத்து வேதவசன மேற்கோள்களும் கிங் ஜேம்ஸ் பதிப்பு (ரிவீஸீரீ யிணீனீமீஷ் க்ஷிமீக்ஷீவீஷீஸீ) வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

இந்தக் கையேட்டில் உள்ள வேதவசனக் குறிப்புகளைத் தேடிப் பார்க்குமாறு உங்களை ஊக்குவிக்கிறோம். கதையின் பொருளை மாற்றக்கூடிய வகையில் பல்வேறு வேதாகமப் பதிப்புகளுக்கு இடையே உள்ளடக்கத்தில் வேறுபாடுகள் இருந்தால், அக்கதையைத் தாங்களே ஆழ்ந்து படித்து, அதை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதைத் தீர்மானிக்க தேவனிடம் வழிகாட்டுதலைக் கோருங்கள்.

ISBN **978-0-9855206-0-1**

# மிகவும் எளிதான கதையை குறித்து ஜனங்கள் என்னச் சொல்கிறார்கள்

எளிதான கதை என்கிற இந்த முறை மிக சிறந்தது காரணம் கதையை அனுபவிக்க உதவுகிறது. இந்த கதையில் நாம் கண்டுப்பிடிக்கிற எல்லா பொக்கிஷங்களும் மிகவும் சக்திவாய்ந்ததாய் இருக்கிறது. இதை நான் பல இடங்களிலும் பயன்படுத்தி நல்ல பலனை கண்டதில் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

பாபு காந்தா - வேதாகம சமுக, தொடர்பு அதிகாரி

உலகம் தான் என்னுடைய 30 ஆண்டு முகவரி, ஊழியத்தை பெருக்குதல் என்பது எனது லட்சியம். பெருக்குதல் என்கிற திருப்தி சீனாவிலிருந்து எதிர்பாராது கனடாவிற்க்கு குடிப்பெயர்ந்த ஒரு 79 வயது முதியவர் மூலம் எனக்கு கிடைத்தது அவர் சொன்னது:

நாற்பது வருடத்திற்கு(40) முன்பு இந்த பயிற்சி கிடைத்திருக்க கூடாதா கலந்துரையாடி வேதாகமத்தை கற்றல் மற்றும் கேள்விகள் மூலம் ஆராய்ச்சியையும் நான் கிறிஸ்தவனாக வளர்ந்தபோது அறிந்துக்கொள்ள முடியவில்லையே இப்பொழுது வேதாகமம் ஒரு புதிய புஸ்தகம் போன்று தோன்றுகிறது.

கர்த்தருடைய வார்த்தையை சரியாக பயன்படுத்தத் தெரியாது என்கிற ஊழியம் மற்றும் கிறிஸ்தவர்கள் பொய்யர்கள்: எஸ்.டி.எஸ் என்பது இயேசு கொடுத்த பிரதான கட்டளையை நிறைவேற்றப் பயன்படுகிறது.

ஜீம் தர்பர் - வேதாகம கல்லூரி ஆசிரியர்

என்னுடைய வேண்டுதலுக்கு பதில் கிடைத்தது என்று எஸ்.டி.எஸ் பயிற்சியை குறித்து சொல்வது மிகையாகாது. நான் கடந்த 35 ஆண்டுகளாக அநேக கண்டங்களில் மிஷினரியாக இயேசுவுக்காக பணியாற்றியிருக்கிறேன், அதுவும் உலகத்தில் கிறிஸ்தவம் அல்லாத மூன்று மதப்பிரிவினர்களுக்கு என்னுடைய விசுவாசத்தைக் குறித்து புரிய வைக்க மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்த பயிற்சி ஜனங்களுடைய இருதயத்தை சென்றடையும் விதமாகயிருப்பதால் இது என்னுடைய வாழ்க்கையை மாற்றி எப்படி சாதாரணமாக சுவிசேஷத்தை அறிவிக்க முடியும் என்பதை அறிந்துகொண்டதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், முன்பு இல்லாத அளவிற்கு இப்போது என்னால் ஊழியத்தில் இதை பயன்படுத்தியதால் அதிக கனிக்கொடுக்க முடிகிறது

ப்ரியன் தாம்ஸன் - சபை ஸ்தாபகர், மிஷனரி கதைச் சொல்பவர் - யு.கே.

எல்லா வேதாகம கல்லூரி மற்றும் கிறிஸ்தவ ஊழிய பயிற்சிக் கொடுக்கும் எல்லா இடங்களிலும் இந்த எஸ்.டி.எஸ் பயிற்சி ஒரு பாடமாக இருக்க வேண்டும். சுவிசேஷ

ஊழியத்தை சிறப்பாக செய்ய விரும்பும் எந்த கிறிஸ்தவனுக்கும் இந்த பயிற்சி மிக அவசியம்.

ரெஜினா மெர்ஸி, அகில உலக மிஷன் ஊழியர்கள்

---

முதல் பயிற்சியை எடுத்ததிலிருந்து எஸ்.டி.எஸ் பயிற்சிதான் தேவனை அறியாத ஜனங்களிடத்திற்க்கு சுவிசேஷத்தை கொண்டு செல்லும் சிறந்த பயிற்சியாக கருதுகிறேன். கர்த்தருடைய கதைகளை சேர்த்து வைக்க இதை பயன்படுகிறது. இது படித்து பழக்கப்படுத்தியவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும்

அருட்திரு அப்பல்லோ டிஜிபோ நைகர்

---

தங்களுடைய சொந்த வார்தையிலேயே இந்த கதையை சொல்லுகிறவர்கள் சொல்வதால் இது ஒரு முக்கிய பலனாக இருக்கிறது. அதோடு வசனத்தையும் கூட்டாமல், குறைக்காமல் சொல்கிறார்கள். கேட்கிறவர்கள் ஆவியானவர் தங்களுக்கு வெளிப்படுத்துகிற பொக்கிஷங்களை தங்கள் வாழ்கையில் பழக்கப்படுத்த அநேக கேள்விகள் இந்த கதையில் கேட்கப்படுகின்றன. கர்த்தருக்கு மகிமையை கொண்டு வர கேட்கிறவர்களும் மற்றவர்களுக்கு போதிக்க முடியும் என்று உணர இது பெரிதும் உற்சாகப்படுத்துகிறது.

மைக் ஹோல்மே - சர்வதேச கற்றுக்கொள்ளுதல்.

---

ஒரு பத்திரிக்கையாளனாக நான் பணிபுரிகிறேன். கர்நாடக மாநிலத்தில் நூற்றுக்கும் அதிகமான தலைவர்களுக்கு இந்த எஸ்.டி.எஸ் பயிற்சிக் கொடுப்பதில் எனக்கும் ஒரு பங்குண்டு. ஒரு பொது மனுஷனாக எனக்கும், என் குடும்பத்தும் நாங்கள் எங்கெல்லாம் செல்கிறோமோ எல்லா இடங்களிலும் கர்த்தருடைய வார்த்தையை இந்த பயிற்சியை நாங்கள் கொடுப்பதின் மூலம் பகிர்ந்து கொண்டு எங்கள் இருதயத்தில் அதைக்காத்துக் கொள்ள இந்த முறைப் பயன்படுகறிது.

மா. கிருஷ்னா எம்.ஏ -மூத்த பத்திரிக்கையாளர், கர்நாடகா, இந்தியா

---

30 வருடங்களாக தாய்லாந்து ஜனங்கள் மத்தியில் பணிப்புரிகிறேன். புத்த மதத்தை சார்ந்த இந்த மக்களுக்கு வாய்மொழியாக காத்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துக்கொள்ள இந்த எஸ்,டி.எஸ் பயிற்சிகள் மிக தகுதியுள்ளதாக கருதுகிறேன்.

லாரி டிங்கின்ஸ் - வேதாகம பேராசிரியர் - தாய்லாந்து

---

எங்களிடத்தில் 60 அநாதை பிள்ளைகள் இருக்கிறார்கள். வித்தியாசமான இடங்களிலிருந்து வித்தியாசமான கலாச்சாரத்திலிருந்து வரும் இந்த பிள்ளைகளை கட்டுப்படுத்த அனுதினமும் மிகவும் கஷ்டப்பட்டோம். இப்பொழுது இந்த எஸ்.டி.எஸ் முறையை பயன்படுத்தியதால் எங்களுடைய பிள்ளைகள் நன்றாக படிக்கவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும், மற்ற நண்பர்களுக்கு இதை எங்கள் பிள்ளைகள் போதிக்கவும் மிகவும் பயன்படுகிறது.

அருட்திரு விஜயராஜ் - கர்நாடகா, இந்தியா

---

எங்களுடைய ஆப்பிரிக்கா நாட்டிலே மிஷனரி சபை ஸ்தாபகர், மற்றும் வேதாகம கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றும் நான் ஆத்தும அறுவடைச் செய்யும் எல்லா ஊழியர்களும் இந்த எஸ்.டி.எஸ் முறையை பயன்படுத்துமாறு சிபாரிசு செய்கிறேன். உலகத்திலுள்ள எந்த இடமானாலும் கர்த்தருடைய வார்த்தையை கேட்க ஆர்வமுள்ள, வாய்மொழியாக கற்றுக் கொடுக்க விரும்புகிறவராய் இருந்தாலும் இதை பயன்படுத்துவது மிகவும் சிறந்தது. சுலபமான கதை என்கிற இந்த முறை எங்கள் வீட்டில் எல்லா இரவும், உறங்க; போவதற்கு முன்பு குடும்பத்தார் அனைவரும் வேதாகமத்தில் உள்ள ஒரு கதையை படித்து பயன்படுத்தி கலந்துரையாடுவோம். இது எங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றினது.

அருட்திரு ஜேக்கப் ஒச்சிங் நகோத் - கென்யா

---

கர்த்தருடைய கதைச் சொல்லும் நிறுவன பணியில் டோராத்தியும் மில்லரும் மிகுந்த சிறப்பானவர்கள். கற்றவர்கள், கல்லாதவர்கள் என்ற இரு பிரிவினருக்கும். இந்த எஸ்.டி.எஸ் முறை ஒரு உயிரோட்டத்தை கொண்டுவர நான் பழக்கப்படுத்தினேன்.

சார்லஸ் சைபிள் - சர்வதேச ஊழியம்

---

எத்தியோப்பியாவிலும் அதற்கு அப்பாற்பட்டும் விட்டுப்போன ஊழியத்தை நிறைவேற்ற இந்த எஸ்.டி.எஸ் மிகவும் உதவினது. எத்தியோப்பியாவிலே கர்த்தருடைய வார்த்தையை கலந்துரையாடல் மூலம் கற்றுக்கொள்ள எஸ்.டி.எஸ் முறை உதவினது. இதை பயன் படுத்துகிறவர்கள் ஜனங்களை கிறிஸ்துவுக்கு நேராக கொண்டு வந்து வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஆவியானவர் உணர்த்துகிற வகையில் சத்தியத்தை கற்றுக்கொள்ள பயன்படுகிறது.

ஜூலி கே. பீல்டு - சர்வதேச மிஷன் ஊழியம்

---

நான் இமலாய மலைவாசிகளின் மத்தியில் வாய்மொழி மட்டும் கொண்டு தங்கள் பழக்கவழக்கங்களை கைக்கொள்ளும் மக்களிடம் அருட்பணி செய்கிறேன். ஆகவே கதைச் சொல்லுதல் முறை தான் இந்த ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க சிறந்த முறை. ஆகவே இந்த மலை பிரதேசங்களில் எழுந்த அச்சரங்கள் இல்லாததால் வாய்மொழி வழி சுவிசேஷ மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது.

அருட்திரு. தின்யுன்பா சிம்ச்சன் - மூத்த போதகர் / வேதாகம ஆசிரியர், அருனாச்சல், இந்தியா

---

எஸ்.டி.எஸ் ஆண்டவரை எளிதாக புரிந்துக்கொண்டு முழு கதையையும் நம்முடைய இருதயத்தில் பதிக்க பெரிதாக உதவுகிறது. எங்களுடைய சபையிலும், சபையிலுள்ள படிப்பறிவில்லாத மூத்தவர்களையும் தேவனுடைய வார்த்தையை படிக்கவும் அதை அவர்கள் அருகில் உள்ளவர்களுக்கும், அடுத்த கிராமங்களுக்கும் பகிர்ந்துக் கொள்ளவும் இந்த பயிற்சி பெரிய உதவியாக இருக்கிறது. எஸ்.டி.எஸ் மூலம் முன்பு இல்லாததைவிட அதிக சபைகளை ஸ்தாபிக்க உதவுகிறது.

அருட்திரு தேவசகாயம் - மூத்த போதகர் / சபை ஸ்தாபகர், ஆந்திரா, இந்தியா

---

எளிதாக சொல்லும் இந்த கதைகளில் வேதாகமம் சரியாக பயன்படுத்தப்படுகிறதை பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டேன். கதையை திரும்ப சொல்ல வைத்து அதிலிருந்த வேறுவேறு கண்ணோட்டங்களில் பார்த்து அப்பியாசப்படுத்தபடுதல் மிக சிறப்பாய் இருக்கிறது. ஒரு வேளை கதையில் ஏதேனும் ஒரு சிறு காரியத்தை மாற்றிச் சொன்னாலும் உங்களை பயிற்றுவிக்கிற கதையில் இந்த காரியம் இருக்கிறா? என்று கேட்டு ஜனங்களை கதைக்கு நேராக திருப்பி கொண்டு வருவது ஆச்சரியம்.

பாஸ்டர் மலைஸ் டி பௌடிக்ட்ஸ் - அமெரிக்கா

---

"வேதவியாக்கியானங்களை சரியாகச் சொல்ல இறையியல் கல்லூரி மானவனான எனக்கு இது ஒரு சிறந்த முறையெனச் சொல்லலாம். படிப்பறிவில்லாத ஜனங்களை என்னுடைய 24 வருட ஊழியத்தில் ஒருவரைக்கூட தேவனுக்கு நேராக நடத்தியதில்லை. ஆனால் இப்பொழுது இந்த எஸ்.டி.எஸ் முறை மூலம் என்னால் நிறைவேற்ற முடிகிறது. ஆகவே இதை நான் எல்லா கல்லூரி மாணவர்களுக்கும் சிபாரிசு செய்கிறேன்."

அருட்திரு லுவோ - எருசலேம் புது ஜீப பெந்தேகோஸ்தே சபை, காங்கோ

---

தேவனுடைய கதை என்கிற இந்த ஊழியம் இந்தியாவில் வளர்ந்து வருகிறதை என்னால் பார்க்க முடிகிறது. சாதாரணமாக சொல்லப்படும் கதைகளிலிருந்து எப்படி தேவனுடைய வல்லமை ஜனங்களுக்கு செல்லுகிறது என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். இந்த காலகட்டத்தில் ஜனங்களை சுவிசேஷத்தோடு சந்திக்க வேண்டுமென்றால் மிகவும் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் நாம் பகிர்ந்துக்கொள்ள வேண்டும். அதற்கு நான் இந்த பயிற்ச்சியை சிபாரிசு செய்கிறேன்.

அருட்திரு. சாம் ஆபிரகாம் - டைரக்டர், இமாச்சல் வேதாகம கல்லூரி,
பெராக்கா ஊழியம், இந்தியா.

---

# உள்ளடக்கம்

முன்னுரை: ஆப்பிரிக்கா ....8
முன்னுரை: அமெரிக்க ஐக்கிய நாடுகள் ....9
அத்தியாயம் 1: வாய்மொழி உத்தியின் அவசியம் ....11
அத்தியாயம் 2: கேள்விகள் மற்றும் கதைகள் – வேதாகம முன்மாதிரிகள் ....19
அத்தியாயம் 3: **'சிம்ப்ளி த ஸ்டோரி' (Simply The Story) –** ஒரு பக்க கண்ணோட்டம்....27
அத்தியாயம் 4: **'சிம்ப்ளி த ஸ்டோரி'** முறையில் ஒரு கதையைத் தயார் செய்வது எப்படி? .... 28
திறன் **I:** ஒரு கதையைத் தேர்ந்தெடுத்து, கற்றுக்கொண்டு, சிறப்பாகச் சொல்வது எப்படி? ....28
திறன் **II:** கதையில் உள்ள பொக்கிஷங்களைக் கண்டறிவது எப்படி? ....43
"ஆவிக்குரிய அவதானிப்புகள்" (**Spiritual Observations**) எனும் பொக்கிஷங்களைக் கண்டறிவது எப்படி? ....57
"ஆவிக்குரிய பயன்பாடுகள்" (**Spiritual Applications**) எனும் பொக்கிஷங்களைக் கண்டறிவது எப்படி? ....42
திறன் **III:** உங்கள் கேள்விகளை வடிவமைப்பது எப்படி? ....57
கதைக்கான முன்னுரையை உருவாக்குவது எப்படி? ....61
அத்தியாயம் 5: தயாரிப்பு மற்றும் விளக்கக்காட்சித் திறன்களைச் சோதித்துப் பார்ப்போம் ....64
தயாரிப்பு: ஆவிக்குரிய பொக்கிஷங்களைக் கண்டறிதல் ....53
விளக்கக்காட்சி - நிலை ஒன்று: கதையை மூன்று முறை கூறுதல் ....56
விளக்கக்காட்சி - நிலை இரண்டு: ஆவிக்குரிய அவதானிப்புகள் குறித்த கலந்துரையாடல் ....76
விளக்கக்காட்சி - நிலை இரண்டு: ஆவிக்குரிய பயன்பாடுகள் குறித்த கலந்துரையாடல ....84
அத்தியாயம் 6: கலந்துரையாடல்களை வழிநடத்துவதற்கான பொதுவான . குறிப்புகள் ....90
அத்தியாயம் 7: துல்லியமான பயன்பாடு – 'யானையைக்' கண்டறிதல் ....104
அத்தியாயம் 8: எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் மற்றும் வாய்மொழி வழி வேதாகமப் பள்ளிகள் ....112
அத்தியாயம் 9: முட்களை அகற்றுதல் – சிந்தனையில் ஏற்படும் அடிப்படை மாற்றங்கள் ....121
அத்தியாயம் 10: **'சிம்ப்ளி த ஸ்டோரி'** கதைசொல்லிகளின் வகைப்பாடுகள் ....141
அத்தியாயம் 11: பயன்படுத்த வேண்டிய இடங்கள் – **STS-**ஐக் கற்றுக்கொள்ளவும் பரப்பவும் வழிகள் ....145
பின்னிணைப்பு **A:** பயிற்சி மதிப்பாய்வுப் படிவங்கள் ....153
பின்னிணைப்பு **B:** ஒரு மாதிரி கதை வழியான பயணம் ....156
பின்னிணைப்பு **C:** பயனாளர் தாக்க அறிக்கைகள் – வழிகாட்டுதல் மற்றும் பெருக்கம் ....185
பின்னிணைப்பு **D:** ஒரு தலைவரின் கண்டுபிடிப்பு ....188
தேவனுடைய கதை: படைப்பு முதல் நித்தியம் வரை ....192
உலகளாவிய தொடர்புகள் ....195

# முன்னுரை : ஆப்பிரிக்கா

சில ஆண்டுகளுக்கு முன்பாக வளைகுடா நாட்டில் டோராத்தி மில்லரையை ஒரு முக்கியமான கருத்தரங்கில் சந்தித்தேன். தடை செய்யப்பட்ட இடங்களில் கூட எப்படி தேவனுடைய கதையை சொல்லும் திட்டத்தை எனக்கும், என் மனைவிக்கும் அறிமுகப்படுத்தினார்கள் மார்த்தாள், மரியாள் என்கிற சாதாரன கதையிலிருந்து எத்தனை பொக்கிஷத்தை கண்டறிய முடிந்தது.

கல்வாரி ஊழியங்கள் என்கிற சில ஊழியங்களுக்கு இந்த முறையை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். கல்வாரி ஊழியர்கள் என்பது நைஜீரிய நாட்டிலுள்ள அருட்பணி ஊழியம் . அவர்கள் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள தேவனை அறியாத 20 நாடுகளில் சபை ஸ்தாபிக்கும் ஊழியங்களை செய்து வருகிறார்கள்.

ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு தேவன் எப்படி தன்னை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்துகிறார் என்பதை உணர முடியும். வேதாகமத்தில் இதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. கிறிஸ்துவின் மூலம் மற்றும் ஆவியானவர் மூலம் தேவன் தம்மை வெளிப்படுத்தினார்.

எஸ்.டி.எஸ் என்றால் வேதாகமத்தை சரியாக பகுத்தறிதல் என்று அர்த்தம் இதில் படிக்காதவர்களும், படித்தவர்களும் தேவனுடைய வார்த்தையை ஆழமாக படிக்க முடியும்.

வாழ்க்கையை மாற்றும் ஆப்பிரிக்கா கலாச்சாரத்திற்கு தகுந்த கதைகளை சொல்வதால் அவர்களுடைய கிராமப்புறங்களில் ஜனங்கள் அதிகமாக வாழ்கிறபடியால் அவர்களுடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணினது,

தங்களுடைய சொந்த கண்டுபிடிப்பினால் கேட்கிற ஜனங்கள் தாங்களே முடிவுவெடுக்க இந்த எஸ்.டி.எஸ் முறையானது கேட்பவர்களுக்கு உதவியாய் இருக்கிறது. கதைச் சொல்லுகிறவர் கேட்கிற அதிகமான கேள்விகளால் இது சாத்தியமாகிறது. இது ஆவிக்குரிய வேதாகம சத்தியங்களை கலாச்சார தடையின்றி பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.

ஆவிக்குரிய கண்ணோட்டத்தையும், ஆவிக்குரிய நடைமுறைப்படுத்து தலையும் கேட்பவர்களுக்கு தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. கதையிலிருக்கும் வேதாகம சத்தியங்களை புரிந்துக்கொள்ளவும், மனதில் வைத்துக்கொள்ளவும் இந்த முறை உதவுகிறது.

அதுமாத்திரமல்ல, எஸ்.டி.எஸ் கதைச்சொல்பவர்களுக்கு அதை எப்படி பிரித்து சொல்லி கொடுக்க வேண்டும் என்கிற எச்சரிக்கையும் கொடுக்கிறது. கதையில் வரும் இடம், சாரம்சம், கருத்துக்கள், நடைமுறைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை கேட்பவர்கள் புரிந்துகொள்ள உதவுகிறது,.

உலகம் முழுவதும் இந்த எஸ்.டி.எஸ் பயிற்சிக்கும் மேலாக, இந்த புஸ்தகம் கேள்விகள் என்கிற துணுக்குகள் மூலம் வேதாகமத்தை ஆராய்ந்து படிக்க முடியும்..

தங்களுடைய வார்த்தையில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகவும், தேவனுக்கும் தனக்கும் இடையில் உள்ள உறவு மேம்படவும், கர்த்தருக்கென்று உலகமெங்கும் சீடர்களை உண்டாக்குதல் என்கிற அழைப்பை பெற்றவர்களுக்கு இந்த எஸ்.டி.எஸ் பயிற்சியை எடுத்துக்கொள்ள நான் சிபாரிசு செய்கிறேன்.

ஆமோஸ் அடேர்னமு - கல்வாரி ஊழியங்கள், அகில உலக நடத்துநர் (CAPRO)

# முன்னுரை : அமெரிக்கா

டோரத்தியும் மில்லரும் எனக்கு 40 வருட நல்ல நண்பர்கள். தேவனுடைய கதை என்கிற திரைப்படத்தை அவர்கள் முதலாவது படைத்தார்கள், பிறகு எளிதான கதை என்கிற பயிற்சியையும் நான் பார்க்க உதவினது.

தேவனுடைய வார்த்தையை எப்படி மற்றவர்களுக்கு போதிப்பது எப்படி கிறிஸ்துவை அறியாதவர்களிடம் கிறிஸ்துவை வெளிப்படுத்துவது என்கிற புதிய யுக்தியை அவர்களுடைய ஊழியம் செய்து வருவது ஓர் சந்தோஷமான விஷயம். இந்த வகையான சுலபமாக கதை சொல்லுதல் என்கிற முறை உலகத்திலுள்ள எல்லா கிராமங்களையும் சென்றடைந்து புதிய உற்சாகத்தை உண்டாக்குகிறது எல்லாரும் எல்லாயிடங்களிலும் இந்த முறையை பயன்படுத்தலாம்.

எஸ்.டி.எஸ் என்கிற இந்த முறை வேதாகமத்தை ஆராய்ந்து படிக்கவும், புதிய அணுகுமுறையும் எல்லாரையும் தேவனுக்கு நேராக வழி நடத்த பேருதவியாகும்.

வயது, தேசம், மதம், கல்வி என்கிற எந்த வேறுபாடின்றி இந்த எஸ்.டி.எஸ் முறை சுவிசேஷத்தை அதிக அளவில் கொண்டு செல்ல பயன்படுகிறது.

அதிக திறமை இல்லாதவர்கள் அதிக அளவில் தெரியப்படாதவர்கள் என்கிற எல்லா வர்க்கத்தையும் இந்த ஊழியம் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. தேவனுடைய ராஜ்ஜியத்தை உலகம் முழுவதற்கும் கொண்டுச் செல்ல இந்த பயிற்சி மிகவும் பிரயோஜனமாய் இருக்கிறது.

டான் & சோன்பறா ட்ப்டன்- அளவில்லா நண்பர்கள் நிறுவனர் & ஸ்தாபகர்.

---

## மிகவும் எளிதான கதை புத்தகம் தேவனுடைய மேலான உண்மைகள் பல சிறுகதைகள் மூலம் வேதாகமத்தில் நிறைந்துள்ளது.

## உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கபடுமோவென்று பயந்திருக்கிறேன். (2 கொரி 11:3)

**நன்றியுரை** : பரிசுத்த வேதாகமத்தில், நம்முடைய கர்த்தராகிய ஆண்டவர் தம்மையும் தம்முடைய சித்தத்தையும் நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். நாம் தேவனையும் அவருடைய வார்த்தைக்கு நன்றி பலி செலுத்துகிறோம். தேவன் நம்மை நினைத்து நாம் அவரை சேவிக்க அவனுடைய வார்தையை அறிவிக்க வைத்திருக்கிறார்; அதற்காய் நாம் தேவனை துதித்து, எல்லா கனம், மகிமை அவருக்கு செலுத்தி அவரை கொண்டு விருத்தியாகும் ஊழியத்திற்கு நன்றியை செலுத்துகிறோம்.

தேவன் அநேகரை அனுப்பி, இந்த "தேவனுடைய கதை" ஊழியத்தை எத்தனையோ ஆயிரத்திற்கும் மேலான உதவியாளர்களை கொண்டு பல மொழிகளில் இந்த புத்தக ஊழியம் வெளிவர உதவி செய்து இருக்கின்றார் நாங்கள் எல்லா மொழி பெயர்பாளர்கள், பாட்டுக் குழுவினர், கதை சொல்லுபவர்கள் பதிவு செய்பவர்கள், பணத்தினால் இந்த ஊழியத்தை தாங்குவோர் மற்றும் "தேவனுடைய கதை" புத்தகத்தை பயன்படுத்துவோர், இப்படி பல தரப்பட்டோர் பல மிஷனரி பிரயாணத்தில் இருந்து வந்தவர்கள் மற்றும் களைப்பில்லாமல் உற்சாகமாய் வேலை செய்கிறவர்கள் இவர்கள் எல்லோரும் அருமையான மனிதர்கள் மிக முக்கியமாக இயேசுவை அதிகமாய் நேசிப்பவர்கள்.

முக்கியமாக வெளி நாடுகளில் வேலை செய்பவர்கள் மற்றும் பல ஸ்தாபனங்களை உருவாக்கியோர் இவர்கள் பல நாடுகளை சேர்ந்தவர்கள், இவர்களை தவிர மற்றவர்களால் பார்க்கபடாத மற்றும் பாராட்டப்படாத பலர் உள்ளனர். அவர்களுக்காய் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இப்படிப்பட்டோர்களுடைய முயற்சி மற்றும் அவர்களின் கண்ணோட்டம், என பல காரியங்களை இப்புத்தகத்தில் பயன்படுத்தி உள்ளோம். தேவனுக்காய் வளரும் மிகவும் எளிதான கதை உருவாக்குபவர்கள் அதை மற்றும் செயல்படுத்துவோர் அவர்களையும் கனப்படுத்த கடமைப்பட்டுள்ளோம். உலகம் எங்கிலும் இரகசியமான போர் வீரராய் பல லட்சம் மனிதர்கள் தைரியத்தோடு

உற்சாகத்தோடு இக்கதையை கொண்டு செல்வதற்க்காய் தேவனை துதிக்கிறோம்.

சுமார் 1994, ஓவியர் நொர்ம் மெக்கேரி 10 வேதாகம படங்களை வரைந்தார், அவர் தன்னுடைய திறமையை பயன்படுத்தி "இயேசுவை" "நானே" என வடிவமைத்து, இதன் மூலம் முதிர்வயதான அம்மா இயேசுவை தன்னுடைய தெய்வமாக இரட்சகராக ஏற்றுக்கொள்ள மற்றும் நம்ப செய்தார். நொர்ம் 2012 தேவனிடத்தில் மற்றும் தன் தாயாரோடு பரலோகத்தில் இயேசுவோடு பங்கடைந்தார். அவருடைய சித்திரம் "தேவனுடைய கதை" என உருவெடுத்து பின்னர், இதன் மூலம் மிகவும் எளிமையான கதைகள் என உருவானது நாங்கள் நொர்ம் அவர்களின் ஊழிய இருதயத்தை நேசிக்கிறோம். ஒரு மனிதனின் ஓவியம் தன் தாய்யை தேவனிடம் திரும்ப செய்தது, மட்டும் அல்லாமல் உலகையே மாற்றியது என்பதற்காய் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

**டாம் மற்றும் டோராத்தி மில்லர்**

**தவனுடைய கதை ஆராய்ச்சி**

# பாடம் 1: வாய்மொழி பாடத்தின் முக்கியத்துவம்

உலகபிரகாரமாக மற்றும் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு வேதாகம ஆசிரியராக வட நாட்டு உலகத்தில், என்னுடைய ஆசையானது, வேதாகமத்தை எளிதாய் கற்கசெய்வது, அதன் மூலம் ஒருவரின் வாழ்க்கை மாற்றப்படுகிறது.

முறையாய் வேதாகமத்தை தொகுத்து, அதை உரையாடல் மூலம் கதை வடிவில் சொல்வதின் மூலம், அது சாத்தியம் என்று கண்டுகொண்டேன். முக்கியமாக மக்களை கேள்விகள் வழியாய் கொண்டு சென்று அவர்களே பல ஆழமான இரகசியத்தை அறிய, இதன் மூலம் வேதாகமத்தை, மக்கள் தங்களின் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதை என்னால் காணமுடிந்தது.

தேவன் எனக்கு திறந்து கொடுத்த வழி "தேவனின் கதை" என்ற திரைப்படத்தை உருவாக்க செய்ததின் மூலம்தான், அதாவது “படைப்பில்” “இருந்து” நித்திய வாழ்வு” வரை,. அந்த படமானது முறையாய், கதை ரூபமாய் வேதாகமத்தை, உலக மக்களுக்கு எடுத்துறைக்க உதவியது. 80 மணி நேர, கதை மூலமாய், பல மொழிகளில் வர இப்படம் வெளிவந்தது. இந்த படம் மற்றும் ஆடியோ டிராக் முக்கியத்துவம், எங்களை இக் கதையின் மூலம் சுவிசேஷம் சொல்லுவது மற்றும் சிஷியர்கள் உருவாக்குவது என பல காரியங்களை அறிந்து கொண்டோம்.

பின்னர், இதைக்கொண்டு பல மிஷினரி, தலைவர்கள் சொன்ன ஒரு கதையின் முக்கியத்துவத்தை அறிவது எப்படி என்ற பிரிவோடு இதை இணைத்தோம். இப்படிப்பட்ட மிஷினரிமார்கள் தேவ வசனத்தை மக்களுக்கு கொண்டு செல்லும் முறையின் முக்கியத்துவத்தை அறிந்து உலகத்தில் தேவ வசனத்தை அறியாத, மற்றும் படிக்க தெரியாத வாய்மொழி கல்வியாளர்கள் மூலம் பயன்பெற வேண்டும். என எண்ணினர். இப்படிப்பட்ட ஆழமான காரியங்களை எடுத்துரைத்து மற்றும் காண்பித்த தலைவர்கள், மூலம் குழுவாக ஒருவரோடு ஒருவர் பேசின பின்பு ஒரே கதையின் அடிப்படையில் மாத்திரம் சொல்லித்தர வேண்டும் என்று சொல்ல, இதன் விளைவாய் வந்ததுதான் "மிகவும் எளிதான கதை"

எஸ்.டி.எஸ் மிகவும் எளிதான கதை என்பது .ஒரு வேத கதையைக்கொண்டு, தேவ வார்த்தைக்குள் ஆழமாய் செல்வதாகும். கேள்விகள் மூலம் மக்கள் தானாக, பல அர்த்தங்களை கண்டு பிடிக்கலாம். முக்கியமாக இந்த முறையின் மூலம் அக்கதையை அறிவது மற்றும் வாழ்வில் அப்பியாசப்படுத்துவதை பார்க்கிலும், அதை நன்கு மனதில்

உறுதியாக பதிய உதவுகிறது.

**"ஊரைவிட்டு அந்நியனை துரத்த தெரிந்தவனுக்கு அவன் திரும்பும் வழியும் தெரியும்"**

பல நல்ல மாற்றங்கள் இந்த முறையின் மூலம் பெறுவதை காட்டிலும், பல மக்கள் உற்சாகமாய் தைரியமாய் மற்றவர்களுக்கு இதைபற்றி பகிர்ந்து கொண்டனர்

இந்த எஸ்.டி..எஸ் முறையானது, வேதாகம உண்மைகளை சொல்லிகொடுத்து, நடத்துவோர் தேவன் கொண்டு செல்லும் வழியில், முழு கதையை சொல்ல உதவுகிறது இப்படி "கதையை" எடுக்கும் போது, அநேக வேதாகம பகுதிகளை எடுக்க உதவி செய்கிறது. இந்த வேத பகுதிகள், கதையின் முன் பகுதியில் காணப்படாலும் இருக்கலாம். இந்த புத்தகம் மக்களை கவருவதாக, துல்லியமாக ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடல் செய்ய வழி வகுக்கிறது. இந்த புத்தகத்தை தவிர தொலைக்காட்சி, மற்றும் தனி நபர் பயிற்சி அறையில், மக்கள் இப்படிப்பட்ட திறமையை வளர்த்து கொள்ளலாம்.

யாருக்கு தேவ வாக்கியங்கள் இப்படிப்பட்ட முறையில் படிக்க தேவையாய் இருந்தது?

எஸ்.டி.எஸ் பயிற்சி கூடத்திற்கு வந்த ஒரு மேற்கத்திய நாட்டை சேர்ந்தவர் அவர் வந்த காரணத்தை சொன்னார்:-

போதகராய் 1 வருட பயணத்தில் இருக்க, ஒரு பெரிய பிரச்சனை இருப்பதை கண்டேன். எனக்கு 4 ஆண்டு போதக கல்லூரியில் அதாவது "சார்லஸ்டன்" சதன் பல்கலை கழகத்தில் படித்து பின்னர், மேற்படிப்பானதை கார்டன்- காண்வில் என்ற வேதாக கலாசாலையில் அதிக மதிப்பெண் பெற்று முடித்தேன். நான் மற்றவர்களுக்கு தேவனை பற்றி சொல்ல தயாரானேன், தேவன் எனக்கு கொடுத்த மிக பெரிய திட்டத்தை முடிக்க ஆசைப்பட்டேன். மேடையில் இருந்து சொல்லும் வேத வார்த்தைகள், அதற்கு தலை அசைக்கும் விசுவாசிகள், நல்ல பிரசங்கம் என விசுவாசிகளின் பாராட்டு நன்கு தான் என் ஊழியம் சென்று கொண்டு இருந்தது.

ஒரு சில மாதங்களில் அநேக புது விசுவாசிகள் வர அவர்களுக்காய் வடிவமைக்கப்பட்ட "ஞாயிறு பள்ளி வகுப்புக்கு இந்த விசுவாசிகள் தேவ விசுவாசத்தில் வளர்ந்தவர்களாக காணப்பட்டனர், இவர்களுக்கு இன்னும் தேவனுக்குள் வர உதவிகளை செய்ய வேண்டும் என்று எண்ணி, இப்படிப்பட்ட மக்களுக்கு நான்

உருவாக்கப்பட்ட "காலாண்டு" என்ற பத்திரிக்கை படிவங்களை கொடுத்து இவற்றை அவர்கள் படித்து, வகுப்புக்கு வரும்பொழுது இந்த காரியங்களை பற்றி பேச ஏதுவாய் இருக்கும் என கொடுத்து அனுப்பினேன்.

நான் ஒவ்வொரு வாரமும் பார்த்து, கொடுத்த படிவத்தை படித்தீர்களா, உங்களுக்கு புரிந்ததா" ஏதாகிலும் அரியதான காரியங்களை

அறிந்தீர்களா, கேள்விகள் ஏதேனும் உள்ளதா என, நான் கேட்க அதற்கு அவர்கள் தந்த பதில் மவுனம்.

எனக்கு ஒன்று நன்றாக புரிந்தது, என்னவெனில் இந்த படிவங்களை யாரும் வீட்டில் படிக்க வில்லை, விரக்தியின் உச்சியில் சென்ற நான் ஒரு நபரை இந்த படிவத்தில் பத்திரிக்கையில் உள்ள காரியத்தை படிக்க சொன்னேன், பல நிமிடங்கள் பொறுமையாக இருந்த பிறகு ஒரு நபர் இருக்கையில் இருந்து எழும்பி படித்தார், திக்கி தடுமாறி பல வார்த்தைகளை தப்பாய் உச்சரித்து படித்தார். அப்பொழுதுதான் எனக்கு புரிந்தது. இந்த மக்கள் வீட்டில் போய் படிப்பது இல்லை, ஏனெனில் இவர்களுக்கு படிக்கவே தெரியவில்லை என்று அறிந்து கொண்டேன்.

நான் இந்த காரியத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய, கணக்கெடுப்புகள் வெளிபடுத்தியதாவது, என் சபையின் அக்கம் பக்கம் உள்ள அநேக மக்கள் பள்ளி படிப்பு படிக்காதவர். வாலிப போதகராய் இருந்த எனக்கு எழுந்த கேள்வி, இப்படி கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு எப்படி சுவிசேஷம் கூற மற்றும் அவர்களை சீஷராக்குவது என்ற குழப்பம்.

எதிர்பாராதவிதமாய் எனக்கு இந்த கேள்விக்கு விடை தெரியவில்லை, மற்றும் பல ஆண்டுகள் வேதாகம கல்லூரியில் படித்தும் "வாய் மொழி" பயிற்சி பற்றி அறியாதவனாய் இருந்தேன். எப்படி கல்வியின்மை ஊழியத்திற்கு பெரிய சவாலாய் உள்ளது. என்பதும், அதை மாற்ற எந்தவித உபகரணங்கள் எனக்கு இல்லாமல் இருந்த வேளையில், இப்படிப்பட்ட மக்களுக்கு வாய்மொழி பயிற்சி மூலம் தேவ ஊழியம் செய்ய, தேவன் என்னை அழைத்தார் என்பதை நான் அறிந்து இந்த பயிற்சி - முகாமில் கலந்து கொண்டேன்.

## ஊழியர்கள் மற்றும் எஸ்.டி.எஸ் பயிற்ச்சிக்கு வந்த

## அநேகர் வாஞ்சித்த மூன்று காரியம்.

1. புதையலாக தேவ வாக்கியத்தை எண்ணுவது
2. அதை அறிந்து கொள்ள வாஞ்சிப்பது
3. ஞாபகத்தில் பதியவைப்பது மற்றும், அந்த வாக்கியத்தை தன் வாழ்வில், அப்பியாசப்படுத்தி, அதை வைத்து மற்றவர்களுக்கு போதிக்க விரும்புவது.

வாய்மொழி பயிற்ச்சியின் மேலான முக்கியத்துவம் என்ன?

தேவனின் கதைகளை மற்றவர்களுக்கு சொல்லும் வடிவமைப்பில் அதன் முக்கியத்துவத்தின் அளவை அறிய உதவியது வாய்மொழி கல்வியாளர்கள் பிரிவுகள், மற்றும் இப்படிப்பட்டோர் எப்படி செய்திகளை அறிந்து கொள்கின்றனர் என்பது ஆகும்..

படிக்க தெரியாதவர்களை, "வாய் மொழி கல்வியாளர்கள்" பட்டியலில் வந்தனர், பொதுவாக பல நாடுகள் பல ஆராய்ச்சியின் மூலம், தங்கள் நாட்டில் படிப்பறிவு இல்லாதோர் பட்டியல் அல்லது படிப்பு அறிவு அற்றாரின் எண்ணிக்கையை வைத்து அறிந்துக்கொள்வார்கள், அதாவது "தங்களின் கையெழுத்தையே போட தெரிந்தவர், தெரியாதவர் படிப்பறியாதவர் என வகுத்தனர்.

பல ஆராய்ச்சி மூலம் அகில அளவில் வாக்கெடுப்பு முறையின்படி, படிக்க தெரியாது மக்களின் பதிவேட்டில் சுமார் 43% மக்கள் மேல் நாட்டில் முழு வாக்கியத்தை படிக்க மற்றும் அறிந்து கொள்ள இயலாதவர் என்றும், மற்றும் 44% மேல்நாட்டில் பல செய்திகளை பறிமாற்றங்கள் மூலம் தான் காரியங்களை அறிகிறார்கள், என ஆய்வில் தெரிந்தது. இந்த உண்மையான வாக்கெடுப்பினால் பல வளரும் நாடுகளில் கூட படிப்பறிவு இல்லாதவர்களை காண முயன்றது. ஆச்சரியமாய் கணக்கெடுப்பினால் 87% சதவீதமான வளர்ந்த நாடுகளிலும் பல மக்கள் கற்காதவர் அல்லது "வாய்மொழி கல்வியாளர்கள் என அறிய வைத்தது. வளரும் நாடுகளில் பள்ளிக்கு போகும் வாய்ப்புகள் கொஞ்சம் இருக்க, படிப்பறிவுள்ள, பெற்றோர் குறைந்து இருக்க, படிக்க தெரியாத மற்றும் வாய்மொழி கல்வியார்களின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கிறது.

வாய்மொழி கல்வியாளர் படிக்க அல்லது எழுத முடியாத பல காரியங்களை மனதில் கொள்ள, கதை வடிவில் பாடம் இருக்க வேண்டும் என்றும் இப்படிபட்ட மக்களுக்கு தலைப்பு, உள்நோக்கம், கதை இல்லாத காரியங்கள் சொல்லிகொடுங்கள், அவர்கள்

ஞாபகத்தில் அது பதிவு ஆகாதபடி மறைகிறது.

வேதாகமத்தை 3 பிரிவாக தேவன் கொடுத்துள்ளார்.

10 % சதவீதம் ஆராய்ச்சி வடிவம்
25- 35 % பாடல் வடிவம்
55- 65 % கதை வடிவம்

நீங்கள் ஒரு காரியத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க, அடுத்த நபர் பல கேள்விகள் கேட்டு, கிண்டல் செய்ய, நீங்கள் கதையை முடிக்கும் போது அந்த கதையின் முக்கியத்துவத்தை சொல்லாமல் இடையூறுகளின் மூலம் தடை ஆவதை

காண்கிறோம். தேவ கதைகள் பல முக்கியமான உண்மைகள் கொண்டது. தேவன் 75% வேதாகமத்தை கதை வடிவில் கொடுத்து இருப்பதால், அந்த கதையை நாம் அறிய தேவனிடம் உதவி கேட்க வேண்டும்.

இன்றைய நடைமுறையில் உள்ள பயிற்சிகளின் தடைக்கற்கள்:-

இந்த காரியத்தை கற்பனைசெய்து பாருங்கள், நீங்கள் ஓர் அழகிய பரிசை நன்கு அதை வண்ணக் காகிதத்தினால் பத்திரப்படுத்தி உங்கள் நண்பருக்கு அனுப்புகிறீர்கள். ஆனால் நீங்கள் அனுப்பின பரிசு உங்களிடம் திரும்ப வந்து சேர்கிறது. நீங்கள் என்ன நினைப்பீர்கள்? என் நண்பருக்கு பிடிக்காததால் திரும்ப அனுப்பிவிட்டானா? அல்லது உங்கள் நண்பருக்கு அந்த பரிசை பிரிக்க தெரியததால் திரும்ப வந்ததா?

இதை போன்றே, நாம் வேதாகம உண்மைகளை தலைப்பு வடிவில் மற்றும் ஆராய்ச்சி செய்யக்கூடிய வடிவில் வாய்மொழி கல்வியாளர்களுக்கு எடுத்துறைக்க, அது அவர்களுக்கு புரிவதில்லை.

வேதாக உண்மைகளை எடுத்து உரைக்கும் நமக்கு அக் “கதையை” மற்றவருக்கு சொல்ல அதன் சாரம்சத்தை இழக்கவும் நேரிடும். பெரும்பாலானோர் வேதாகம உண்மைகளை அறிகிறவர்கள் மற்றும் அவர்களை சீஷர்களாய் மாற்ற கூடிய நபர்கள் வாய்மொழி கல்வியாளர்கள் ஆவர். தேவ கதையை அதன் வாக்கியங்களை சொல்லும், இருக்கும் விதமாய் சொல்லாமல் எளிதாய், புரியும் வண்ணமாக அக்கதையை உருவாக்கி சொல்ல வேண்டும். ஏனெனில் வாய்மொழி கல்வியாளர்களுக்கு தேவ உண்மைகளை புரிந்து அல்லது ஞாபகத்தில் வைக்கவோ முடியாது, பெரும்பாலானோர், நாம் அவர்களுக்கு கற்றுக்கொடுக்க தேவ உண்மைகளை புரிந்து கொள்ளாதவர்களாய் காணப்படுகின்றனர்.

## ஏன் மிகவும் எளிதான கதையை " நாம் பயன்படுத்த வேண்டும்"

எஸ்.டி.எஸ் பயிற்ச்சிக்கும் மற்றும் தலைப்பு விவாத பயிற்சிக்கும் உள்ள வித்தியாசம், இந்த கேள்வியில் அடங்குகிறது யார்? மற்றும் என்ன? கற்றுக்கொடுக்க போகிறார்? வேதாகம அடிப்படையில் ஒவ்வொரு-ஆசிரியர், மாணவர், வசனம் மற்றும் பரிசுத்தாவியானவரின் முக்கியத்துவத்தை பார்ப்போம்.

தலைப்பு அடிப்படையில் கற்றுக்கொடுக்கும் முறையில், ஆசிரியர் முன்னதாகவே என்ன சொல்லி கொடுக்க போகிறார் என்பதை மற்றும் வசனம் மற்றும் அதற்கு ஒத்த அதிகாரங்கள் கேட்போருக்கு கொடுத்து அதை சொல்லிக்கொடுக்க, இதில் நடைமுறையில் எப்படி நாம் பயன்படுத்துவது, மற்றும் ஆசிரியரின் நோக்கம், இதன் மூலம் என்ன என்பதை எடுத்துரைக்கிறது. இந்த முறை தவறல்ல, ஆனால் இது மட்டும் தான் சொல்லிக்கொடுக்கும் முறையும் அல்ல.

தலைப்பின் அடிப்படையில் சொல்லி கொடுக்கும் கதையின் மூலம், ஒரு கதையை பிரித்து அதில் உள்ள காரியங்களை மனதில் இறுத்துவது கடினம். வேதாகம கதைகள் நம்- ஆவி, ஆத்துமா, சரீரத்தோடு பேசுகிறதாய் காணப்படுகிறது. கதையை பிரித்து அதிக காரியங்களை அதன் மூலம் ஆசிரியர் பகிர்ந்து கொடுக்க அது ஆவி, ஆத்துமாவை தொடுவதில்லை, மூளைக்கு மட்டும் எட்டுகிறது.

இப்படி தலைப்பின் வடிவில், கற்றுக் கொடுக்க அதை எடுத்து உரைப்பவர், அவர் எடுத்த கதைக்கு தக்க அதிகாரம் மற்றும் சிறு பிரிவுகளின் தலைப்பை ஒப்பிட்டு பார்க்க. முழு வேதாகமத்தில் இருந்து குறிப்பெடுக்கிறார். இந்த முறையினால் விசுவாசிகள் சொல்லப்படும் வாக்கியங்களை, வசனத்தை குறிப்பிடுபவர். ஆனால் படிக்க எழுத தெரியதவர் எதையும் அவர்கள் மனதில் வைத்துக்கொள்ள அல்லது ஞாபகத்தில் பதிவு செய்ய முடியாமல் திணறுகிறார்கள். படிப்பறிவற்றவர்கள் எலும்பு இல்லா உடலுக்கு ஒப்பாவர்.

இப்படிப்பட்ட வாய்வழி கல்வியாளர்கள் சொல்லப்பட்ட காரியத்தை கோர்வையாய் தங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாமல், மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்ள முடியாமல். ஒரு கதையை மாத்திரம் அடிப்படையாய் மனதில் எடுத்து கொள்ளாததால் எதை எதோடு இணைந்து ஞாபகத்தில் வைத்திருப்பது என கேள்வியும் எழும்பும்.

படிப்பறிவு உள்ளவர்கள், அவர்களை பற்றி என்ன? அவர்கள் தாங்கள் செய்தியில் கேட்டவற்றை எழுத்தின் வடிவில் எழுதி இருக்க அதை திரும்ப படித்ததால்தான்

உண்டு மற்றும் அவர்களால் எந்தவொரு பொது இடத்தில் அந்த எழுத்து வடிவத்தை எடுத்துக் கொண்டு செல்ல இயலாது. எனவே கற்றவர், படிப்பறிவற்றவர் கூட வாய்மொழி கல்வியாளர்கள் பட்டியலில் ஒன்றாவர். இவர்கள் அனைவரும் தாங்கள் செய்தியில் கேட்டதை, யாரிடமும் சொல்ல இயலாது.

பொதுவாக கேட்டறிந்து புரிந்து கொள்பவர்கள் செய்தி வடிவில், சொல்லும் காரியங்களை தாங்களாக புரிந்து கொள்ள இயலாது, மாறாக அவர்கள் அதை பற்றி அறிய தங்கள் ஆசிரியரை சார்ந்திருக்க வேண்டும். சிறிய செய்திகளை மாத்திரம் கேட்டறிந்து கற்க முடிகிறது. அது தாய் பறவையானது தங்கள் குட்டிகளுக்கு இரையை போடுவதற்கு ஒப்பாக உள்ளது. ஒவ்வொரு வாரம் கேட்டறிந்து கற்பவர்கள், அடுத்தவாரம் வரை காத்திருந்து தங்கள் உணவாக செய்திகளை பெறமுடியும். பல இப்படிபட்ட தலைப்பு வகையில் கேட்டறிந்து கற்கிறவர்கள் தங்கள் கூட்டில், பல காலம் அதாவது 50 வயது வரை கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

வேறொரு தடைக் கற்களாய் இருப்பது, தலைப்பு முறையில் பாடம் கற்பதும் மற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு இந்த கதை, வேத வாக்கியம் பொருந்தும் என நினைத்து கற்றுக் கொடுப்பது. ஆனால் இது காலப்போக்கில் ஆசிரியர்கள் தங்களுக்கு நன்கு தெரிந்த கதையையே சொல்லுவார்கள். இதினால் ஆசிரியர்கள் குறைந்த கதையை வேதாகமத்தில் இருந்து சொல்ல நேரிகிறது.

பல விசுவாசிகள் கிறிஸ்துவ கருத்தரங்களில் கலந்து கொள்வது உண்டு. அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும் தலைப்பானது சுவிசேஷம், சந்திக்கப்படாத சந்ததியை ஆதாயப்படுத்துவது, குடும்பம், பண நிர்வாகம், ஜெபம், தேவனுக்கு ஏற்ற குணாதிசயம், சுகம், வியாபாரத்தில் முன்னேற்றம் அல்லது தீர்க்கதரிசனம், இப்படி பல, தலைப்புகள் சொல்லிக்கொடுக்க இப்படிபட்ட தலைப்புகள் ஆச்சரியவிதமாய், இப்படிபட்ட தலைப்புகளை ஓர் கதை அல்லது அதை பாட வடிவில் எடுத்து உரைக்கவும் இயலும்.

இப்படிப்பட்ட வாய்மொழி மற்றும் ஆழமான வடிவில் முழு கதையை சொல்ல, அக் கதையின் உள்கருத்துகளே அந்த கதையை வழி நடத்தி பல காரியங்களை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

ஒரு கதையை பற்றி சொல்ல ஆசிரியர் முன்னதாகவே வேதபகுதி அல்லது கதையை தேர்ந்தெடுக்க வேண்டும், அப்படி செய்வதால் அதில் உள்ள செய்திகளை

தவிர்ப்பதாய் அதை மேலோட்டமாய் பார்க்க வழி வகுப்பதாய் மாறுகிறது. ஆனால் ஒரு கதை முழுமையாக ஆராய அதன் மூலம் கேள்விகளை தயாரிக்க அதை பகிர்ந்துகொள்ள, பல புதிய பிற தலைப்புகள் அதில் இருந்து வெளிவர உதவி, பல செய்தியை கலந்துரையாட வழிவகுக்கிறது. ஆவியானவரே தனிப்பட்ட முறையில் பல வெளிப்பாடுகளை அருளுவார்.

பொதுவாக தலைப்பு அடிப்படையில் சொல்லப்படும் பகுதிகள் மற்றும் தேவ வசனங்களை தெரிந்தோ, தெரியாமலோ பல வேத பகுதிகளை கொண்டுவர செய்து கேட்போருக்கு ஒருவிதிமுறையாய் அல்லது தேவ கற்பனைகளாக தோன்றுகிறது, ஆனால் கதையை சொல்வதின் பயன் அதை கேட்பவர்களிடம் அக்கதை பேசுவதாய் மாறுகிறது.

முக்கிய தீர்மானம்:- நம்முயை முக்கிய குறிக்கோள் வேத வார்த்தையின் உண்மையை வளர்ந்த நாடுகளில் சொல்லுவது, இதனால் 10/40 சதவீதம் தேவனை அறியாத ஜனங்களுக்கு சொல்ல வழிவகுக்கிறது. ஒரு பெரிய அல்லது வித்தியாசமான மாற்றத்தை நாம் சொல்லிக்கொடுக்கும் முறையின் மூலம் கொண்டுவரலாம். இதற்கு நீங்கள் செவிகொடுக்கிறீர்களா? உங்களுக்காய் வடிவமைக்கப்பட்ட, வாய்வழி கல்வியாளர்களை சீஷராக்குதல், எப்படி என்ற புத்தகத்தை பாருங்கள், இந்த புத்தகத்தை இணைய தளத்தில் மற்றும் C.D வடிவில் நீங்கள் இந்த www.oralbible.com என்ற தளத்தில் இருந்து எடுக்கலாம்.

# பாடம் -2 கேள்விகள் மற்றும் கதைகள் வேதாகமம் முறையில் முன்னோக்கி போதல்.

## இயேசுவின் பயிற்சி முறை: கதை சொல், கேள்வி கேள்

இயேசு எப்படி போதித்தார்? இயேசுவை 200 தரவை கேள்விகள் கேட்க; அவர் சொன்ன பதில் நேரடியாக பல நேரம் இருக்க! பெரும்பாலான நேரத்தில் இயேசு கதையை சொல்லி அதை அப்படியே முடிக்காமல் கதை சொன்ன பிறகு, கேள்வி கேட்டு அதில் இருந்து அநேக கருத்துக்கள் மக்களை வெளிப்படுத்த செய்தார்.

இயேசு ஏன் கதைகளை பயன்படுத்தினார். ஏன் அவர் "டோரா பள்ளியில்" பட்டம் வாங்காததினாலோ அல்லது அவர் ஒரு தட்சனுக்கு பிறந்ததினாலோ? அது அல்ல இயேசு இருந்த நாட்களில் மக்களின் கல்வி நிலை வெறும் 11% சதவீதம் மாத்திரம். கல்வி அறிவுயில்லாதோர் இருக்க, இயேசுவானவர் வேறு வழி இன்றி ஜனங்களை வேத வாக்கியங்களை அறியச் செய்ய கதைகளை சொன்னார்? ஆனால் சிந்திக்க வேண்டிய காரியம்? இயேசு பரிசேயர்களுக்கு எப்படி பதில் அளித்தார்? அவர் அவர்களிடம் கதையின் மூலம் பேசினாரா? ஆமாம், பலர் அவர் சொன்ன கதையின் அர்த்தத்தை அறிந்தனர், அது மட்டும் அல்லாமல் அநேகர் அவரை விசுவாசித்தனர்..

நமக்கு நாமே கேட்க வேண்டியது, இயேசு அனைவரும் வியக்கத்தக்க தன் உரையாடல்களை நல்ல வாய்மொழி வடிவில் சொல்ல இருப்பாரா? ஆமாம், அவர் அப்படி உரையாடல் கொடுக்க வல்லவராய் இருக்கிறார். ஆனால் அப்படிப்பட்ட வாய்மொழியை அவர் கொடுக்காமல் ஒன்றும் அறியாத ஜனங்களுக்கு எடுத்து உரைத்து அதை அவர்கள் அறியத்தக்க வகையில் அவர் சொல்லி, அவர்கள் புரியும் வண்ணம் செய்தார். நன்கு படித்தவர்கள் மட்டும் அறியாதவராய் அல்ல ஒன்றும் அறியாத ஜனங்கள் அறியக்கூடிய வகையில் அவர் எடுத்துரைத்தார்.

இயேசு இவ்வுலகத்தில் வரலாற்றை கற்றுக்கொடுக்க வரவில்லை அவர் ஆவிக்குரிய செய்தியை கொண்டு வந்து, அதை கேட்டோர் மனதில் இருக்க செய்தார். எஸ்.டி.எஸ் பயிற்சியாளர்கள் ஆவிக்குரிய பொக்கிஷங்கள் கதையில் இருந்து எடுத்து கற்றுக்கொண்டு, பின்னர் அதில் இருந்து கேள்வி மற்றும் குழு பகிர்ந்துரையாடல் முறையில் அப்பொக்கிஷத்தை அறிய மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

இந்த எஸ்.டி.எஸ் புத்தகத்தில் உள்ள விதிமுறைகள், அல்லது இந்த எஸ்.டி.எஸ் பயிற்ச்சி வகுப்பில் தேர்ச்சி பெற்றோர்- (நல்ல பயிற்சியாளர்களாய் மாற அதன் மூலம்

தேவனின் வார்த்தைகளை உலகம் எங்கிலும் பரவ உதவுகிறது.)

இந்த புத்தகத்தில் உள்ள அநேக காரியங்கள், பயிற்சி பெற்று மற்றும் ஆழமான விஷயங்களை கற்பதின் மூலம் ஓர் சிறந்த பயிற்ச்சியாளர்களாய் வர வாய்ப்பு உண்டு. காலப்போக்கில் இந்த பயிற்ச்சியாளர்கள் பட்டம் பெற்ற எஸ்.டி.எஸ் பொறுப்பாளராய் வர வாய்ப்பு உண்டு. இந்த புத்தகம் அப்படிப்பட்ட காரியத்தை செய்ய வல்லதாய் உள்ளது. இப்படிப்பட்ட நல்ல தலைவர்களின் பெருக்கத்தை பார்க்க வாஞ்சைப்படுகிறோம்.

வேதாகமத்தில் உள்ள பொக்கிஷம் என்ன? அதன் பாதை:-

தன் சொந்த கிராமத்தில் இருந்து பட்டணத்தில் வேலை செய்ய ஒரு மனிதன் வந்தான், தன் கடின உழைப்பால் அவன் பணம் சம்பாதித்தான். பின்னர் தன் சொந்த கிராமத்திற்கு செல்ல அவனுடைய நண்பர்களும் அவனை வரவேற்றனர்.

இந்த புதிய பணக்கார நண்பன் தன் சொந்த நண்பர்களுக்கு பரிசளிக்க ஆசைப்பட்டு ஒரு திட்டத்தை போட்டான், தன் சொந்த கிராமத்தை ஒரு நாள் சுற்றி வந்த பிறகு தன் நண்பர்களிடம் நீங்கள் என் நல்ல நண்பர்கள், நம் கிராமத்திற்கு அக்கரையில் உள்ள ஒரு மலைப்பகுதி அருகே என்னை சந்தியுங்கள் என்றான்.

பணக்கார நண்பன், தன் நண்பர்களுக்கு ஒரு அறிக்கையிட்டான், நீங்கள் அக்கரையில் உள்ள நதியின் வழியாய் போகும் போது பாதையில் அநேக பரிசுகளை வைத்துள்ளேன், அந்த பாதையில் சென்று அதை பெற்றுக்கொள்ளுங்கள் என்றான்.

பணக்கார நண்பனின் நண்பர்கள் பயணத்தை தொடர்ந்தனர்; ஒரு சிலர் எளிதாக சென்றடைய கூடிய வழியாய் போனார்கள். ஆஹா இந்த வழி அருமையாய் உள்ளது, அவர்கள் குனிந்து பார்த்தனர், அங்கிருந்த மண் செழிப்பாய் காணப்பட எடுத்து பரிசோதிக்க எடுத்து சென்றனர். வேறு சிலர் நதியின் பாதை வழியே சென்றனர், அதன் முற்றத்தை அடைந்த பின்பு அவர்கள் கூறியதாவது அட, இந்த பாதை எங்களுக்கு நன்கு தெரிந்தது என முணுமுணுத்து, இங்கு எதுவும் புதியதல்ல என்றனர், அவர்களுக்கு எந்த பரிசும் கிடைக்கவில்லை.

மீதி நண்பர்கள் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர் அவர்களுக்கு. நன்கு தெரிந்த பாதையில் நடந்தனர். அவர்கள் உள்ளே போக அவர்கள் பார்த்தது, அட இந்த பழைய பெரிய மரத்தை நமக்காய் பணக்கார நண்பன் ஒதுக்கி வைத்துள்ளான், என

சொல்லியபடி நடக்க, பின்னர் அவர்கள் கவனித்தது முற்செடிகள் எல்லாம் வெட்டப்பட்டு இருந்தது அவர்கள் பயணத்தை பாதுகாப்பாக தொடர்ந்தனர்.

சீக்கிரமாய் செல்லாமல் மெதுவாய் அவர்கள் சென்றனர், பரிசை பெற அல்ல, அவர்கள் நடக்கும் போது அனைத்தையும், பாதையையும் தங்கள் பணக்கார நண்பன் சரி செய்து இருக்கிறார் என கருதி சரி செய்யப்பட்ட பாதையே, தங்களுக்கு பெரிய பரிசு என எண்ணி தங்கள் பயணத்தை தொடர்ந்தனர்.

ஆச்சரியப்பட தக்க, ஒரு நண்பன் ஓரிடத்தில் நிற்க, நண்பர்களே அங்கு பாருங்கள் என்று அவன் கூச்சலிட, அங்கு, மூட்டை அரிசி ஒரு அடர்ந்த செடியின் மத்தியில் காணப்பட்டது.

இன்னொரு பக்கம் பார்த்தால் புதிதான சமைக்கும் பாத்திரங்கள் இன்னும் மெதுவாக நடந்து செல்ல செல்ல பல மறைக்கப்பட்ட பொக்கிஷம் கிடைத்தது, அந்த பணக்கார நண்பருக்கு நன்கு தெரியும் அவனுடைய உண்மையான நண்பர்கள் அவனுடைய பரிசுகள் மற்றும் அவன் அமைத்து கொடுத்த புதிய பாதையை பாராட்டுவார்கள் என்றும், பணக்கார நண்பனை அவர்கள் நம்ப, அதினால் அவர்களுக்கு பல வெகுமதி கிடைத்தது.

ஆனால் அதிவேகமாய் சென்ற மற்ற நண்பர்களுக்கு எந்த பரிசும் கிடைக்கவில்லை கிடைத்தது ஏமாற்றமே, அவர்கள் மெதுவாக பணக்கார நண்பர் அமைத்த பாதையில் செல்லவில்லை, மற்றும் அவனை மதிக்கவோ அல்லது அவன் அமைத்த பாதையை கூட பாராட்டவில்லை. மற்ற சிலர் மண்ணை ஆராய்ந்து பார்க்கலாம் என சென்றவர்கள் அதை இன்னும் ஆராய்ந்து கொண்டே இருந்தனர்.

ஒவ்வொரு வேதாகம கதையிலும் பல அருமையான பொக்கிஷம் உள்ளது, அதை பொறுமையாய் ஆராய அந்த வேதாகம பாதையில் பொக்கிஷம் மற்றும் தேவனுடைய உண்மைகள் வெளிப்படும், இதுவே “மிகவும்” எளிதான கதை புத்தகம்" நமக்கு எடுத்துரைக்கிறது.

தீர்க்கதரிசி நாத்தான்வேலின் எடுத்துக்காட்டின் பாதை:-

**II** சாமு 12:1-14, ஆண்டவர் ஓர் வித்தியாசமான விளக்கவுரையை இப்பகுதியில் தாவீதுக்கு எடுத்துரைப்பதை பார்க்கிறோம், தாவீது ஓர் தெரிந்துக்கொள்ளப்பட்ட தேவ மகன், பின்னர் ராஜாவாக, காலப்போக்கில் ஓர் பெரிய தவறை பட்சேபாலோடு

செய்தான், அது மட்டும் அல்லாது அவளுடைய கணவனை ராணுவ தலைவனை வைத்து கொன்றுவிட்டான், பின்னர் ராஜா செய்த தவறை அப்படியே விட்டுவிட இயலாமல், தீர்க்கதரிசி நாத்தான்வேல் தாவிதின் இடத்திற்கு சென்று ஒரு கதையை எடுத்துரைத்தான்.

> இரண்டு மனிதர்கள் வாழ்ந்தனர், ஒருவன் செல்வந்தன் மற்றொருவன் ஏழை, பணக்காரனுக்கு எண்ணற்ற ஆடு, மாடுகள் இருந்தன, அந்த ஏழை மனிதனுக்கு இருந்தது எல்லாம் ஒரே செல்ல ஆடு, அந்த பணக்காரன் அந்த ஏழை மனிதனிடம் இருந்த அந்த செல்ல ஆட்டை திருடி, அதை கொன்று தன்னுடைய விருந்தாளிகளுக்கு விருந்தளித்தான்.

இந்த கதையை கேட்டவுடன், தாவீதுக்கு கோபம் உச்சத்தை எட்டியது, வேதாகம கதையில் தாவீது நாத்தான் வேலியிடம் சொல்லுவதாவது" தேவன் உயிரோடு இருக்கிறவர் ஆனால் அந்த பணக்காரன் கண்டிப்பாய் சாக வேண்டும், அந்த ஒரு ஆட்டுக்கு பதிலாய் 4 ஆடுகள் தரவேண்டும், ஏனெனில் பணக்காரனுக்கு கொஞ்சம்கூட இரக்கம் இல்லை என்றான்

பின்னர் நாத்தான்வேல் தாவீதை நோக்கி நீ தான் அந்த மனிதன் என்றான்.

இந்த கதையை தாவீது கேட்பதற்கு முன்பு, தேவனை பின்பற்றும் தாவீதுக்கு விபச்சாரம், ஏமாற்றுவது மற்றும் கொலை செய்வது தவறு என தெரியுமா? ஆம், மற்றும் தாவீது தான் தவறு செய்துவிட்டோம் எனவும் தெரியும், தாவீது தான் செய்த தவற்றை ஒத்துக்கொண்டானா? இல்லை அவன் அந்த பாவத்தை மறைத்தான்.

பொதுவாக நாத்தான்வேல் தேவனுடைய தீர்க்கதரிசி, விபச்சாரம் மற்றும் கொலை குறித்து ஒரு செய்தி கொடுக்க இயலுமா? எப்படிபட்ட செய்தியை நாத்தான்வேல் கொடுத்தான்? சரியான, தாவீதை நேரடியாக தாக்காதபடி அவன் ஒரு கதையின் மூலம் வெளிப்படுத்தினான், பாருங்கள் என்ன நடந்தது என, தாவீது எப்படி இதை எதிர்கொண்டான்? சரி, தாவீது சரியாக அந்த பணக்காரன் செய்தது தவறு என்றும் மற்றும் அந்த பணக்காரன் நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்றான். எதை குறித்து

பெருமை அடைய வேண்டும், ஆம் தாவீது, அந்த பணக்காரன் ஆடுகள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் மற்றும் பணக்காரன் சாக வேண்டும் என்றான்.

தாவீது இப்பொழுது அந்த கதையை உணர்ந்தான், பணக்காரனின் பாவத்தை

அறிந்தான், ஓர் சரியான ஆவிக்குரிய ஆராய்ச்சியை செய்தான்.

பின்னர் தாவீது காரியங்களை வெளிப்டுத்தினார் நாத்தான் வேல், தாவீதை அந்த கதையின் ஆவிக்குரிய அர்த்தத்திற்கு கொண்டுபோக நீ தான் அந்த மனிதன் என குறிப்பிட்டு" பின்னர் நாத்தான்வேல் தாவீதை நீ தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தாய் என விவரித்தான்.

பின்னர் தாவீது நாத்தான்வேலை நோக்கி "ஆம் நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றான்" எப்படிப்பட்ட தண்டனை என்றால் அதாவது அந்த செல்வந்தனுக்கு மரணத்திற்கு ஏதுவானதால் தண்டனை கொடுக்க வேண்டும் என்றான். அந்த காரியம் தாவீதின் குடும்பத்திற்கே, நேர்ந்தது வேதாகம கதையில் தாவீதின் கதை

"மிகவும் எளிதான கதை" புத்தகத்தில் முக்கிய அம்சத்தை எடுத்துரைக்கிறது. இந்த கதையை மக்கள் கேட்டு, அதை பற்றி பகிர்ந்துகொள்ள பல காரியங்களை அறிய உதவுகிறது. இந்த கதையில் உள்ளான கருத்துகள் பார்க்க பல ஆவிக்குரிய செய்திகளை பகிர முடிகிறது. அதை தான்" ஆவிக்குரிய ஆராய்ச்சி என்கிறோம்".

இந்த கதையை கேட்போர் அதை அறிந்து அதைப்பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள பாவங்களை பற்றி பேச உதவுகிறது. கதை சொல்லுபவர், மக்களை, அக்கதையின் கதாபாத்திரத்தில் தங்களை வைத்து பார்த்து, அதை அறிய செய்கிறார்கள். அக்கதையின் உட்பகுதிக்கு செல்ல, தனிப்பட்ட முறையில் இன்றைய மக்கள் எப்படி இப்படிபட்ட காரியங்களை சந்திக்க நேரிடுகிறதையும் அறிய உதவுகிறது. கதை சொல்லுபவர் பல கேள்விகளை கேட்டு அக்கதையை ஆராய்ந்த, ஆவிக்குரிய சத்தியத்தினை வாழ்வில் அப்பியாசப்படுத்துவது எப்படி என்பதை பற்றி சொல்லிகொடுக்கிறார்.

ஆச்சரியதக்க விதமாய், இப்படி ஆவிக்குரிய சத்தியத்தை கேட்போர் அதனை அறிந்துக்கொள்ளுவதற்கு முன்னதாகவே, தனிப்பட்ட முறையில் ஆவியானவர் அவர்களின் உள்ளத்தில் அதை வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார்,எஸ்..டி.எஸ்-யில் இதனை "ஆவிக்குரிய அப்பியாசப்படுத்துதல்" என்கிறோம்.

## யார் மற்றும் எது இந்த வேலை செய்ய உதவுகிறது?

எவ்வளவு வருஷமாயினும், ஒருவர் ஆண்டவரை அறிந்து ஏற்றுக்கொண்டு இருக்கலாம்

அல்லது முறையான வேதாகம பயிற்சி பெற்றவராகவும் பெறாதவராகவும் இருக்கலாம், இருவரும் ஒரே முறையில் தான் வேதாகமத்தை அறிய முடியும். வேதாகமத்தில் பல ஆவிக்குரிய உண்மை அடங்கி உள்ளது. இவற்றை விளக்க ஆவியானவர் தான் வெளிப்பாட்டை அருள வேண்டும்.

அநேக விசுவாசிகள், ஆண்டவரை பற்றி அறிய மற்றவர்களை எதிர்பார்ப்பார்கள். சபைக்கு செல்வோர் போதகரை எதிர்பார்க்கிறார்கள் வேதாகமத்தை பற்றி அறிய வேதாகம பள்ளிக்கு செல்வார்கள். போதகர்கள் பல கருத்தரங்கு மற்றும் பல காரியங்களை பயிற்சி மூலம் இதனை அறிவீர்கள், இப்படி பயிற்சி நடத்துவோர் பல புத்தகங்களை வேதாகமம் சம்மந்தப்பட்டதை படித்து தங்கள் அறிவை அதிகரிப்பார்கள்.

இப்படிப்பட்ட அநேக உபகரணங்கள் மூலம் நாம் ஆண்டவருடைய செய்தியை அறிந்தாலும், ஆண்டவருடைய செய்தியை அறியாமல் பல உண்மையை நாம் வேறுவிதமாய் அறிய வைக்கிறது! இந்த உபகரணம் தேவனுடைய ஈவு, அது எவை என இந்த கதையில் நாம் பார்க்கலாம்.

3 வருடம் இயேசுவோடு தனிப்பட்ட முறையில் அவரை அறிந்த சிஷர்களுக்கு, இயேசு போகும் போது அவர் சொன்னதாவது, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக மற்றும் பயப்படாதிருப்பீர்களாக" ஏன் இயேசு இப்படி சொன்னார்.

> சீஷர்களின் உணர்வை அறிந்தவராய் அதை சொன்னாரா? ஆம், அவர்கள் பயந்திருந்தனர். அவர்களின் அருமையான ஆசிரியர் இனி அவர்களோடு இருக்க போவதில்லை, யார் இந்த சீஷர்களை தேற்றுவார்கள்? யார் அவர்களுக்கு சொல்லி கொடுப்பார்கள்? இயேசு சொன்ன கடைசி வார்த்தை,

அது சீஷர்கள் இனி தனிமையாய் இருப்பதில்லை என்பதற்கு, அத்தாட்சியாய் இருந்தது. இயேசு சீஷர்களுக்கு உங்களோடு ஒரு நல்ல ஆசிரியர் மற்றும் வாரத்தில் 7 நாள் இரவும் பகலும் உங்களோடு இருப்பார் என கூறினார். அந்த தேற்றவாளன் பரிசுத்த ஆவியானவர்தான். யோ 14:26

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். யோ. 16:13

சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை

நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

எழுதியிருக்கின்றபடி, கண்கள் காணாது, காதுகள் கேட்காது எந்த மனுஷனின் இருதயத்தில் உட்புகுவதில்லை ஆண்டவர் வைத்திருந்த பெரிய மறைவானதை தம்மை நேசிப்போருக்கு ஆவியானவர் மூலமாய் வெளிப்படுத்தினார். மனுஷனுக்கு என்ன தெரியும் இன்னொரு மனிதனை பற்றி அல்லது மனுஷனின் ஆவியை இரட்சிப்பது யார்? ஆவியானவர் அனைத்தையும் அறிகிறார்.

நாம் உலகத்தின் ஆவியை அல்ல தேவ ஆவியை பெற்று உள்ளோம். ஏன் தேவன் நமக்கு இலவசமாய் கொடுத்த அனைத்தையும் அறிந்துகொள்ளதான். இந்த காரியமானது மனுஷனின் ஞானத்தின் போதகத்தால் அல்ல, ஆவியானவரின் ஆவிக்குரிய நடத்துதலின் மூலம்தான், அறியமுடியும்.

சாதரண வாழ்வு வாழ்பவன், தேவ காரிங்களை தெரிந்து கொள்ள முடியாது, ஏன் ஆவியில் மாற்றம் தேவை 1 கொரி 2: 9-16 சொல்லுவதில்லை.

9- எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

14- ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும் அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்- படுகிறவைகளானதால், அவைகளை அறியமாட்டான்.

15 - ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்பட்டான்.

16- கர்த்தருக்கும் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.

## (தேவ வார்த்தையை அறிய உதவுபவர் ஆவியானவர் - இயேசு நமக்கு விட்டுசென்ற வெகுமதி.)

**எப்படி ஆவியானவர் நமக்கு கற்றுக்கொடுப்பவர் என்பதை தேவனே விளக்குகிறார்:-**

அநேக காலமாய் ஆவியானவரின் வகுப்பறை காலியாக உள்ளது. கேள்விகள் கேளுங்கள் ஆவியானவரிடம் கற்றுக்கொள்ளுங்கள், உங்களின் கேள்வி பதிலை ஆவியானவரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

---

# பாடம் -3 மிகவும் எளிதான கதை/ முழு வரைபட பகுதி

தயாரித்தல்:-

எஸ்.டி.எஸ் முறையில் வேதாகம கதையை கற்று, அதில் இருந்து புதையல்கள் கண்டுபிடிப்பதாகும். அது மட்டும் அல்லாமல் வாய்மொழி பயிற்சி மூலம் கேள்விகளின் உதவியோடு அந்த கதையை கருத்துரையாடலில் ஈடுபட உதவுகிறது.

எடுத்துரைப்பது:-

இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. கதை சொல்லுதல் பின்னர் அதில் உள்ள புதையல்களை ஆராய்வது.

பகுதி -1: கதை மூன்று வகையாக எடுத்துரைக்கப்படுகிறது, கேட்பவர்கள் அதன் உள் கருத்தை நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் திறமையாய் கதையை நன்கு சொல்லுதல், கேட்போரை உற்சாகப்படுத்தல், அக்கதையில் உள்ள செய்தியை நன்கு விவரித்து அதை உற்சாகம் ஊட்டும் வண்ணம் சொல்லுதல்.

1. சொல்:- கதை ஆசிரியர் கதை சொல்ல தொடங்க (அது கேட்போர் தங்கள் கண்களில் முன் கொண்டு வந்து அக்கதையை உணருவதாய் இருக்கும்.
2. உதவியாளர்:- கதை ஆசிரியர் ஒரு உதவியாளரை அழைத்து, அந்த கதையை திரும்ப சொல்ல சொல்வார் அல்லது இரண்டு நபர்களுக்கு கேட்க தக்க சொல்லும்படி செய்வார். (கேட்பவர்கள் அதிக கவனத்தோடு திரும்ப சொல்லப்படும் கதையை கேட்டு மற்றவர்களுக்கு சொல்லும் போது அது சரியாய் உள்ளதா என கூர்மையாய் கவனிக்க வேண்டும். இதன் மூலம் கேட்பவர் உள்ளத்தில் கதை ஆழமாக பதிகிறது.
3. நடத்தி செல்லுதல்:- கதை சொல்லுபவர் அல்லது கதை ஆசிரியர் 3 ஆம் தரம் கதையை சொல்வார், அந்த கதை நன்கு புரியும் வண்ணமாக பல முறைகளை கைக்கொண்டு ஆழமாய் கேட்போர் மனதில் பதிய உதவுவார்.

பகுதி 2:- கதை சொல்லுபவர் கதை கேட்போர் ஆவிக்குரிய புதையல்கள் அக்கதையில் இருந்து எடுக்க உதவுவார். இந்த பகுதியில் கதை சொல்லுபவர், திரும்ப கதையை கேட்போர். இடம் திரும்ப கதை சொல்ல வைக்காமல், அந்த கதையில் உள்ள சில முக்கிய பகுதிகளை திரும்ப சொல்லி அக்கதையை ஆராய்ந்து பார்க்க உதவுவார்.

1. ஆவிக்குரிய ஆராய்ச்சி : கேள்விகள் மூலம் கதை ஆசிரியர் கதை கேட்போர், அப்பொக்கிஷத்தை எடுக்க உதவுவார். கேட்பவர்கள் அந்த கதாபாத்திரத்தின் செயல்களை அறிய உதவுவார்கள். பின்னர் கேள்விகள் மூலம் இக்கதையில் உள்ள கதாபாத்திரத்தின் ஆவிக்குரிய நிலைமை என்ன, மற்றும் எப்படி தேவன் அதில் இடைபடுகிறார் என்பதை கதையின் மூலம் கதை கேட்போம் இடம் கேட்க ஆவிக்குரிய ஆராய்ச்சி செய்வதாய் மாறுகிறது.
2. ஆவிக்குரிய நடைமுறைபடுத்துதல்:- இரண்டாவதாக இந்த ஆவிக்குரிய ஆராய்ச்சி அறிந்த பின்னர் வாழ்வில் அப்பியாசப்படுத்துதலை பற்றி ஆசிரியர் அறிய உதவுகிறார். கதை ஆசிரியர் பல கேள்விகளை கொண்டு கடைசியாக அதை ஆராய்ந்து அறிந்து, கலந்துரையாடி; வாழ்வில் அப்பியாசப்படுத்த உதவுகிறார். அதை ஆவிக்குரிய நடைமுறைபடுத்துதல் என்கிறோம்.

---

# பாடம் - 4 எப்படி கதையை தயாரித்தல் - எளிதான கதையின் வாயிலாக

## எஸ்.டி.எஸ் வடிவில் கதையை சொல்ல 3 திறமை தேவை:-

I. எப்படி கதையை தேர்ந்தெடுத்து, படித்து கதையை நன்கு சொல்லுதல்

II. எப்படி கதையில் உள்ள பொக்கிஷத்தை அறிவது

III. எப்படி ஆழமான மனக்கண்களை திறக்க கூடிய கேள்விகளை உருவாக்குதல் என்பதாகும்

**திறமை-I எப்படி கதையை தேர்ந்தெடுத்து, படித்து கதையை நன்கு சொல்லுதல்**

இந்த பகுதியின் வழியாய், அதாவது மிகவும் எளிதான கதை, மூலம் கதைக்குள் சொல்ல-ஒரு முக்கியமான காரியம், நாம் ஆண்டவரை நம்புவது ஆகும். இந்த முழு கதையும், தேவன் தான் நன்கு நான் எடுத்துரைக்க எழுதி இருக்கிறார் என நம்ப வேண்டும். வேதாகம கதையை சொல்லும்போது, நீங்களாக காரியங்களை கூட்டாமல் மற்றும் எந்த பகுதியையும் விட்டுவிடாமல் அல்லது எதையும் நீங்களாக போதிக்க மற்றும் கதையின் உட்பகுதியை முதலில் சொல்லக்கூடாது.

வேதாகம கதையை தெரிந்தெடுத்தல்:-

சிலர் சூழ்நிலைகளின் காரணமாக, முக்கிய கதை அல்லது வேதாகம பகுதியை தலைவர் உங்களுக்கு தெரிந்தெடுத்து ஆனால் கொடுக்கலாம், ஆனால் நீங்கலாக கதையை தேர்ந்தெடுக்க பல காரியங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம்.

1. உங்களுக்கு வேதாகம கதை சொல்லக்கூடிய வாய்ப்பு குறைவாய் இருந்தால், நீங்கள் எடுக்கும் கதை கேட்பவரின் வயதுக்கு ஏற்ப, பல உள் ஆழங்கள் கொண்ட கதையை தேர்ந்தெடுக்க வேண்டும். மற்றும் நேரத்திற்கு ஏற்ப சுருக்கமான அல்லது நீளமான கதையை தேர்ந்தெடுத்தல் தேவையான ஒன்றாகும்.. ஆவியானவரின் உதவியோடு அந்த கதையில் உள்ள உண்மையை கேட்போர் அறிந்து கொள்ள உதவ ஜெபியுங்கள்.

2. ஆண்டவர் நமக்கு வேதாகமத்தை கொடுப்பதற்கு முன்பாய் அதில் பல சரித்திரபூர்வம் நிறைந்த காரியங்கள் அமைத்து, தேவனின் மேலான ஞானம் அது மனுக்குலத்திற்கு தேவை என்று அதை வேதத்தில் எழுதிவைத்து, மற்றும் மனிதனின் தேவையை அறிந்தவராய், அவர் சர்வ வியாபியாய் இருப்பதால் அனைத்து மக்களின் பாரம்பரிய, விசுவாசத்தின் அடிப்படையில் வேதாகமத்தில்

முக்கிய செய்திகளை கொடுத்தார்.

வேதாகமம் அனைத்து கலாச்சாரத்தை சார்ந்ததாய் அதினுடைய உள் காரியங்கள் கலாச்சாரத்திற்கும் மேலானதாய், அமைந்திருக்கிறது. ஆனபடியால் தான், கதை ஆசிரியர்களுக்கு சொல்லுவதாவது ஆண்டவர் ஒவ்வொரு கதைக்குள் ஒரு அருமையான ஆவிக்குரிய முக்கியத்துவத்தை வைத்திருக்கிறார்.

நீங்கள் எதையோ எடுக்க வேண்டும் என்று தவறான கதையை தேர்ந்தெடுக்காமல், நீங்கள் எடுக்கும் கதை, அதை ஆவியானவரே மற்றவர் அறியும்படி உங்களுக்கு எடுத்துரைப்பார் என விவாசியுங்கள்.

3. எஸ்.டி.எஸ் பயிற்சியில் முன்னதாகவே, வேதாகம கதைகளை சுவிசேஷம் சொல்லுவற்காகவோ அல்லது சீஷர்களை உருவாக்குவதற்கோ எடுத்து உரைப்பது இல்லை. கண்கூடாக எஸ்.டி.எஸ் பயிற்சியாளர்கள் பார்ப்பது, பரிசுத்தாவியானவரே கதைகளின் மூலமாய், மக்களிடம் இடைப்பட்டு, அவர்களை சீஷராக்கி மற்றும் விசுவாசத்திற்குள் கொண்டு வர உதவியாளராய் உள்ளார்.

4. பல தருணங்களில் வேதாகம கதைகளை சொல்லக் கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், அதை ஆரம்பத்தில் இருந்து துவங்குவது நல்லது. ஏனெனில் பல கதைகள் ஒவ்வொன்றோடு ஒத்து இருப்பதால் கோர்வையாக சொல்லிக் கொடுப்பது நல்லது.

5. கதையை சொல்லும் போது அல்லது அக்கதையை பதிவு செய்யும்போது, நீங்கள் சில கதைகளை விட்டுவிடலாம், அப்படியிருக்க நீங்கள் ஒரு புதிய கதையை ஆரம்பிப்பதற்கு முன் அதன் பிண்ணயத்தை சொல்லுவது நல்லது. ஏனெனில், கதையின் கோர்வை சரியாய் கிடைக்க நீங்கள் சில கதையை விட்டுவிடாமல் சொல்வீர்களானால். முன்பு நடத்தின கதையை பற்றி கதை கேட்பவர்களிடம் கேட்டறியலாம், மற்றவர்களை உற்சாகப்படுத்தும் விதமாய் ஒரு நபரை முன்பு நிறுத்தி கதையை பற்றி கேட்டறியலாம்.

6. கதை நீளமாக இருக்க அதனை 2 பிரிவுகளாக பிரிப்பது நல்லது. இதனால் கதை கேட்போர் நன்கு புரிந்துகொண்டு பகிர்ந்து கொள்ள உதவுகிறது. கதையை பிரித்து சொல்லும்போது, இயற்கை முறையில் பிரிந்திருப்பதாக காட்டுதல் நல்லது,

மத்திய பகுதியில் தான் கதையை பிரிப்பது என்ற அவசியம் இல்லை.

எடு - நாகமான் கதையில் II இராஜா 5:1-27 அருமையாய் எஸ்.டி.எஸ் முறையில் சொல்லக்கூடிய கதை. உங்களுக்கு 3 மணி நேரம் பகிர்ந்து கொள்ள நேரம் இருந்தால் சொல்லலாம். இந்த பெரிய கதையில் இயற்கையாக பிரித்தெடுக்ககூடிய பகுதிகள் உள்ள வசனங்கள் 1-5, 6-14, 15-19 மற்றும் 20-27.

7. சில கதைகள் பெரிய பட்டியல் உள்ளதாய் காணப்படும் இப்படி இருக்கும் கதையை அது எந்த இடத்தில் இருந்து பட்டியல் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்தில் பிரிப்பது நல்லது. அடுத்து கதை சொல்லுவதற்கு முன்பு அதன் பட்டியலை குறிப்பது நல்லது. சில வேளை பல கலாசாரத்தை சேர்ந்தோர் 14 நாடுகளில் இருந்து கூடி இருப்பவர்கள் ஆனால், கதை ஆரம்பிப்பதற்கு முன்பு அந்த பட்டியலை பற்றி சொல்லுவது நலம்.

   இப்படி செய்தியை பகிர்ந்து கொல்ல, நீங்கள் இரண்டு வேதாகம கதையை வசனத்திற்கு ஏற்ப சொல்லி இருக்கிறீர்கள். புதிதாய் கதை சொல்லுவோர் மற்றும் கதை கேட்போருக்கு, கதையை இரண்டாக பிரித்து சொல்லுவதின் மூலம் அந்த கதையை நன்கு ஞாபகத்தில் வைக்க உதவுகிறது. கதை சொல்வோரின் திறமை வளர வளர, முன்பு சொன்ன கதையை வைத்து அந்த கதையை இணைத்து, கதையில் உள்ள பல பெயர்களை உட்புகுத்தி சொல்லலாம்.

எப்படி கதையை தேர்ந்தெடுப்பது, அதை அறிந்த ஆராய்ந்து சொல்லக்கூடிய விதிமுறைகள்:-

1. ஜெபம்:- கதையை புரிந்து கொண்டு அதை சரியாய் சொல்ல ஜெபத்தின் உதவி முக்கியமாய் தேவை.

2. கதையை நன்கு சத்தமிட்டு ஒரு முறை சொல்லி பார்ப்பது:- மற்றவர் சொல்ல கேட்பது மற்றும் படிப்பது) நீங்கள் கதையை வாசிக்க சில காரியங்களை நீங்கள் மாற்ற நினைக்கலாம், நீங்கள் மாற்றும் வார்த்தைகள் மற்றவர்களை (கதை கேட்போர் தங்களை வெளிப்படுத்தும் வார்த்தையாய் அது இருப்பது நல்லது. எ.டு பயப்படுதல் என்ற வார்த்தை அச்சம் அல்லது பயம் என பேசும் வார்த்தையாய் மாற்றலாம், இதனால் கதை எந்த விதத்திலும் மாறாமல் இருக்க செய்வது அவசியமாகும்.

நீங்கள் பல மொழி கற்றவராய் இருக்க, கதை சொல்லும் அறிவை வளர்க்க, வித்தியசமான முறையில் கதை சொல்ல வாய்ப்பு உண்டு. ஒரு மொழியில் கதை சொல்லி அதை சத்தமிட்டு வாசித்து பின்னர், பல மொழிகளில் அதை எப்படி சொல்லுவது என பயிற்சி பெறலாம்.

உங்களுக்கு இந்தி நன்கு தெரிய, ஆங்கிலத்தில் கதை சொல்ல விரும்பினால் ஆங்கிலத்தில் கதையை சத்தமிட்டு சொல்லிபார்க்கலாம், இதனால் எளிதாய் கதையை ஞாபகத்தில் வைக்க மற்றும் அதன் உள்பொருளை நன்கு அறிந்து இயற்கையாய், எளிய மொழி வடிவில், பேசும் பாஷையில் கதை சொல்ல உதவுகிறது.

3. உங்கள் கண்கள் மற்றும் உங்கள் வேதாகத்தை மூடி, கதையை திரும்ப ஞாபகத்தில் கொண்டுவந்து சத்தமாய் சொல்லி பார்க்கவும்.

உங்களால் முடிந்த வரை சொல்லுங்கள், கதை எவ்வளவு ஞாபகத்தில் உள்ளதோ சொல்லிபாருங்கள். நீங்கள் செய்திகளை மறந்தாலும், வார்த்தையை விட்டுவிட்டாலும் பரவாயில்லை, பின்னர் அதை பார்த்து கொள்ளலாம், கதையை நிறுத்தாமல் சொல்லி பார்ககவும், இது கதை சொல்லி பழகுவது ஆகும், மனப்பாடம் செய்வது அல்ல.

எ.டு. "இயேசு பேதுரு, யாக்கோபினை அழைத்துக் கொண்டு போனார்" சில நேரம் இந்த பெயர்கள் ஆரம்பத்தில் மறந்தாலும் கதையை நிறுத்தாமல் இயேசு 3 சீஷர்களை அழைத்து சென்றார், என சொல்லி கதையை தொடங்குங்கள், நடுவில் இவர்கள் பெயர்கள் ஞாபகத்தில் வர அவர்கள் என சொல்லுவதை மாற்றி பேதுரு, யோவான், யாக்கோபு என கூறலாம் (தற்சமயம் நீங்கள் கதையை வரிசைப்படுத்தி சொல்லி பார்க்காதீர்கள் பின்னர் கதையை, 2 முறை சொல்லி பார்க்க நன்கு ஞாபகத்தில் பெயர்களும் பதிந்து விடும்.

4. இன்னும் சத்தமாய் கதையை திரும்ப வாசித்தல்:

இதன் மூலம் நீங்கள் எதை வாசிக்க விட்டுவிட்டீர்கள் எவ்வளவு அளவு உங்கள் ஞாகத்தில் கதையை வைத்துள்ளீர்கள் என தெரியவரும்.

நீங்கள் எடுத்து கொண்ட கதை பெரியதாய் இருந்து (12-15 வசனங்கள்) அதை இரண்டு பாகங்கலாய் பிரித்து ஞாபகத்தில் வைப்பது அவசியம், கதையினை படங்கள் வடிவில் ஞாபகத்தில் வைத்து கொள்ளலாம். இது கதையை, அப்படியே உங்கள் ஞாபகத்தில், படத்தின் மூலமாய் பதிவு செய்து கொள்ளுவதாக அமையும்.

5. கடைசி முறை வேதத்தை, உங்கள் கண்களையும் மூடி கதையை சத்தமாய் சொல்லுங்கள்:-

சத்தமாய் படிப்பதின் மூலம் உங்களை திசை திருப்பும் காரியங்களில் இருந்து விடுபடுவதாய் இருக்கும். கண்களை மூடச் சொல்லிபார்ப்பதால் அக்கதையை படத்தின் வழியாய் கதையை அறிய முடிகிறது. அந்த கதையில் உள்ள ஜனங்கள், சூழ்நிலைகளை கண்களுக்கு முன்பாய் கொண்டு வாருங்கள், இந்த முறை முன்பைவிட, பல காரியங்களை நீங்கள் ஞாபகத்தில் கொண்டு வரவும், முதலில் சொன்ன கதையில், ஞாபகத்தில், இருத்தின காரியங்களைவிட அதிக காரியத்தை மனதில் இருத்த இயல்கிறது. பின்பு உங்கள் கண்களை உங்கள் வேதத்தை திறந்து சத்தமாய் படித்துவிட்ட செய்தியை அறிவது நல்லது. வேதாகம கதையை சரியாய் சொல்லுவது மிகவும் அவசியமான காரியம் ஆகும்..

6. ஆரம்ப மற்றும் முடிவு அர்த்தத்தை தெரிந்தெடுக்கவும்:

எப்படி, மற்றும் எந்த பாதையில் கதையை கொண்டு போவது என்பதை முடிவெடுங்கள், பின்னர் அதை எப்படி முடிப்பது என ஆலோசியுங்கள். நீங்கள் தேர்தெடுத்த கதை, எளிதாய் இருந்து, உங்கள் ஞாபகத்தில் இருக்க அதை ஒரு சரியான பாதையில் கொண்டு சென்று, ஆரம்பம் முதல் முடிவு வரை சொல்லி முடிக்கலாம்.

7. ஞாபகக் குறிகள்:-

பல நேரங்களில் சில கஷ்டமான பெயர்கள், மற்றும் பகுதிகளை ஞாபகத்தில் இருத்தி கொள்ள முடியாமல் போகிறது. அதை ஞாபக குறிவைத்து மனதில் வைப்பது அவசியம். எத்தனை முறை படித்தாலும் இப்படிப்பட்ட காரியங்கள் மறக்க வாய்ப்பு இருந்தாலும், உங்கள் ஞாபக குறி மூலம் அக்கதையின் கஷ்ட பகுதிகளை ஞாபகத்தில் இருத்தி கொள்வது அவசியம்.

அ) சில வார்த்தை, பெயர்கள் கதையில் கஷ்டமாய் இருக்க ஒரு பகுதியை வரைந்து அதை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுங்கள் (எ.டு) ஜெரி லூக்காஸ், "ஞாபகத்தின் மருத்துவர்" என அழைக்கப்படுவர் இந்த முறையை கண்டுபிடித்தார்.

எ.டு நீங்கள் யோனா கதையை சொல்ல, யோனாவின் தந்தை பெயரை மறக்கலாம் அதாவது (அமிடாய்) உங்கள் சொந்த மொழி பாஷையில் அதை

மனதில் வையுங்கள். ஆங்கிலத்தில் கதை சொல்கிறவர் இப்படி ஞாபகத்தில் பதிவு செய்துகொள்ளலாம், ஒரு மனதின் கால்பந்து காலில் விழாமல், தடுக்கும் உபகரணத்தை தன் கழுத்தில் அணிந்திருப்பதாக கற்பனைச் செய்யுங்கள்.

எவ்வளவு சிரிப்பாக ஒரு காரியத்தை வரைகிறீர்களோ; அவற்றை எளிதாய் மனதில் வைக்க முடியும். வார்த்தைகளை, பெயர்களை உங்கள் பாஷையில் சிரிப்பாய் அல்லது கோர்வையாய் வைக்க, அது உங்கள் ஞாபகத்தில் திரும்ப கொண்டுவர உதவும்.

ஆ) சிலர் கதை சொல்லும்போது அதில் உள்ள பெயர்களை மனதில் வைக்க கட்டாயப்படுத்துவதில்லை, ஏன் எனில்; அது கதையின் கஷ்டமான பகுதி. தேவனுக்கு நாம் பெயர்களை மனதில் வைப்பது கடினம் என தெரியும், எனவே தான் அவர் பல பெயர்களை அவர்களின் சுபாவத்தை குறிப்பதாய், அவர்களின் சூழல்களை குறிப்பதாய் வைத்திருக்கிறார். அதை நாம் முக்கியத்துவம் படுத்தி சொல்லலாம்

8. கதையை சரியாய் சொல்ல கதையை சொல்லி பார்த்து மற்றும் சோதிக்கும் பகுதி:-

திரும்ப திரும்ப சரியாய் கதையை சத்தமாய் சொல்லி பார்க்கலாம், நாம் கதையை சரியாய் சொல்லும் வரையில் கண்களை மூடி சத்தமாய் சொல்லி பார்க்கலாம்.

கதைகளுக்கு பல காரணங்கள் சொல்லுவதில் ஜாக்கிரதை தேவை, கதை தொடர்பு, உள்ள பகுதிகளை சொல்லும் போது சரியாய் சொல்ல வேண்டும். சில கதைகளை தேவன் ஒரு முறைக்குமேல், சொல்லும்படி வைத்திருக்கிறார். கதை சொல்லுதல் பல காரியங்களில் வேறுபடலாம். ஆண்டவர் சில கதைகளை எதனோடும் இணைத்து உள்ளாரோ, அப்படியே சொல்லுவது நலம், சில வேலையில், நேரத்திற்கு ஏற்ப கதையின் ஆழத்துவத்தை சொல்ல வேண்டிய நிலைமை வரும். இதன் மூலம் அக்கதையின் உண்மையான சத்தியத்தை தெரிந்துகொள்ள உதவுகிறது. ஒரு கதையோடு இணைந்துள்ள மற்ற கதையை பின்னர் ஆராய, அது நம்மை ஒரு ஆராய்ச்சிக்குள்ளே கொண்டு சென்றுவிடும்.

அறியாத பகுதியில் கால் எடுத்துவைப்பது:-

ஒரு காரியத்தில் நாம் நல்ல பயிற்சியுடையவர்களாய் மாற, நம்முடைய பழக்கமானது ஒரு சில கற்றுக் கொண்ட காரியத்தை மட்டும் பயன் படுத்துவோராய் மாற்றுகிறது.

எது முக்கியமோ அதை மட்டும் பயன்படுத்துகிறோம்.

உங்களுக்கு விளங்கும்படி:-

பல உதவியாளர்கள் என்னுடைய மிக எளிமையான புதிய கதை சொல்லிக்கொடுக்கும் முறையை கேட்க ஆசைப்பட்டனர். என்னுடைய விருப்பம் ஒரு பகுதியாவது நன்கு தெளிவாய் புரிய வேண்டும் என்பதாகும், ஆனால் ஆண்டவர் இந்த முழு காரியத்தின் மூலம் பாடத்தை எனக்கு கற்றுக் கொடுத்தார்.

இந்த பகுதியை சரியாய் சொல்லிக்கொடுக்க இரண்டு மிகவும் கூச்சப்படும் சுபாவம் கொண்டவர்கள், இந்த கதையை கற்க கூப்பிட்டேன். ஒருவர் பெண்மணி, அவர் எஸ்.டி.எஸ் பயிற்ச்சியில் பயிற்ச்சிபெற்றவர், இன்னொருவர் 80 வயதானவர், அவர் 20 வயது வாலிபர்களை போல உற்சாகமுடையவராய் காணப்பட்டார்.

வெற்றிகரமாக கதை சொல்ல கற்றவர். அவர்களிடம் நீங்கள் விதிமுறைகளை சரியாய் கற்றுக் கொண்டால், எளிதாய் நீங்கள் கதையை சொல்ல முடியும் என்றேன், பத்து வசனத்தை பத்து நிமிடத்தில் கற்க முடியும் என்றேன்; எஸ்.டி.எஸ் முறையில் இதை எப்படி கற்பது என விளக்கினேன். ஒரு முறை கதையை சத்தமாய் படிக்க வேண்டும் என்றேன். சத்தமாய் படிக்கும்போது எளிதான, சாதாரண வார்த்தைகள் பயன்படுத்தலாம் என்றேன்.

எ.டு. இந்த கதையில் இதோ என்ற வார்த்தையை "பார்" என படிக்கலாம் என்றேன், உங்கள் அறிவுக் கண்களால் அக்கதையை அறிந்து, அந்த கதையில் என்ன நடக்கிறது என பார்க்க, ஒரு முறை கதையை படித்த பின்பு, கண்களை மூடி அக்கதையை ஞாபகத்தில் வைத்து சொல்லச் செய்தேன்.

உங்கள் லட்சியம் கதையை ஞாபகத்தில் பதிப்பது, அதில் உள்ள வார்த்தைகளை அல்ல என்றேன். திரும்பவும் பின் சென்று, கதையை சத்தமாய் படிக்க காரியங்களை உங்களால் பார்க்க முடியும் பின்னர் கண்களை மூடி திரும்பவும் சொல்லவும், இப்படி நான்கு முறை செய்யவும் என அறிவித்தேன்.

பணிவாக எனக்கு கீழ்படியும் உள்ளங்கள், நான் சொன்ன காரியத்தை சொன்னார்கள் "சத்தமாய் வாசித்தல், எளிதான வார்த்தை பயன்படுத்தல், திரும்பவும் கண்களை மூடி கதையை சொன்னார்கள், பயபக்தியோடு பயிற்சி பெற்றார்கள்.

இப்பொழுது கதையை அவர்கள் சொல்ல ஆரம்பித்தனர், முதலில் வாசித்தனர். மெதுவாக, சத்தம் வெளியே கேட்கவே இல்லை. "நீங்கள் இந்த கதையை எப்படி வாசிக்க வேண்டும் என்றேன்? இருவரும் பதில் அளித்தனர்" சத்தமாய்". ஆனால் எனக்கு ஒன்றும் கேட்கவில்லை என்றேன்.

அந்த நபர் சொன்ன பதில், நான் எனக்குள்ளேயே படிக்கிறேன் என்றார்.

ஆனால் நீங்கள் சத்தமாய் படிப்பீர்கள் என்கிறீர்கள், நீங்கள் நன்கு ஒத்துழைப்பு கொடுப்பவர்கள், என்று நான் எண்ணினேன் அப்படி இருக்க ஏன் நான் சொன்னதை நீங்கள் கடைபிடிக்க வில்லை என கேட்டேன்.

அவர்கள் சொன்ன பதில் எனக்கு தெரியவில்லை, நான் இப்படி செய்யகூடாது என நினைக்கிறேன் என்றார்.

அந்த அம்மாவிடமும் இந்த கேள்வியை கேட்டேன், நீங்களும் சத்தமாய் படிக்க வேண்டியது தானே என்றேன், அது உங்களுக்கும் தெரியுமே என கேட்டேன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை, தெரிந்தும் நீங்கள் ஏன் சத்தமாய் வாசிக்கவில்லை என்றேன். அதற்கு அந்த அம்மா சொன்னது, வெட்கத்திற்குரிய பதில், எனக்கு இப்படிபடிப்பது முட்டாள்தனமாய் இருக்கிறது என்றாள்.

நாங்கள் எல்லோரும் சிரித்தோம், ஏனெனில் வாசிக்கப்பட்ட கதையானது சகேயுவை பற்றியது; மற்றும் அவன் இயேசுவை எப்படியாவது பார்க்க வேண்டும். என்று முட்டாள்தனமான வேலையை செய்தான், அப்படி இருந்தும் அவன்; இயேசு சொன்ன எல்லா விதிமுறைக்கும் கீழ்ப்படிந்தவனாய் காணப்பட்டான்.

வெகுநேரம் பேச்சு, மற்றும் ஆலோசனைக்கு பிறகு, அவர்களின் கட்டுகளில் இருந்து வெளிவந்தவர்களாய், கதையை சத்தமாய் வாசித்தனர், பின்னர் கண்களை மூடி அதை சொல்லிப் பாத்து, திரும்ப வாசித்து அவர்களால் முடிந்த முயற்ச்சிகளை செய்தனர்.

நான்கு முறை நன்கு வாசித்த பிறகு, வெறும் பத்தே நிமிடங்களில் அருமையாய் இருவரும் கதையை நான் கேட்டு, வியக்கதக்க வண்ணமாய் அதை எனக்கு சொல்லி காட்டினார்கள்.

அந்த 80 வயதுக்கு உட்பட்ட நபரை பார்த்து வேடிக்கையாய் நான் கேட்டது? பத்து

நிமிடங்களில் பத்து வசனத்தை உங்களால் வாசிக்க முடியுமா, என கேட்க அவர் நகைத்தார்.

அந்த பெண்மணி என்னிடம் மெதுவாய், நான் முன்பெல்லாம் இப்படி வேதாகம கதையை படித்ததில்லை; அது என்னால் முடியாததாய் காணப்பட்டது என்றார்.

நீங்கள் எல்லா விதிமுறைகளை கடைபிடித்ததுண்டா என கேட்க, ஒன்று கூட கடைபிடிக்கவில்லை என்றாள்.

இந்த சம்பவத்தை உங்களை உற்சாகப்படுத்தவே எழுதுகிறேன். இந்த எஸ்.டி.எஸ்-யில் உள்ள எல்லா பகுதிகளை கற்கிறீர்கள். நீங்கள் படிக்கிறவர்களாய் காணப்பட, எஸ்.டி.எஸ் முறையில் காரியங்களை கற்று வாய் மொழியில் கல்வி தேர்ச்சி பெற்று அடுத்த உலகத்தில் செல்ல உங்களை எஸ்.டி.எஸ் ஏவுகிறது.

விசுவாசத்தால் எஸ்.டி.எஸ் பயிற்ச்சியில், எல்லா பகுதிகளை கற்று கடைபிடியுங்கள். ஏனெனில் இதன் மூலம் நல்ல வெற்றிகளை காண இயலும். எஸ்.டி.எஸ் வெளிப்பகுதியை நன்கு அறிய அதன் மூலம் ஆண்டவர் உங்களுக்கு பல விதமான தாளந்துகளை, திறமை தந்து உயர்த்த; அது எஸ்.டி.எஸ் பயிற்சிக்கு முக்கியத்துவத்தை அளிப்பதாய் மாறும்.

ஆழத்துவத்துக்குள் கதையை கேட்க ஆர்வத்தை அளித்தல்:-

1. கதையின் முக்கிய பகுதியை யோசித்தல்

கதைக்குள் கொண்டு செல்லும் வேதப்பகுதியை படித்தவராய்; நீங்கள் சொல்லும் கதையின் ஆவிக்குரிய மற்றும் சரித்திர பிரகாரமான காரியத்தை அறிந்திருப்பது அந்த கதையை நன்கு சொல்ல உதவிசெய்யும். கதையை பற்றி அறிந்த பின்பு, இந்த கதைக்கு முகவரி தேவையா அல்லது கதை ஆரம்பிக்க, சில செய்தி சொல்லுவதால் கதை கேட்பவர்கள் எளிதாய் அக்கதையை அறிய முடியுமா; என்பதைப்பற்றி யோசியுங்கள். பின்பாக இப்புத்தகத்தில் எப்படி முகவரியை தயாரித்தல் என்பதை பார்ப்போம்.

2. கதைக்கு பேர் கொடுக்கும் செய்திகளை தவிர்த்தல்:- நீங்கள் பெயர்கள், இடம், அதனை வைத்து கதை சொன்னாலே கேட்பவர்களுக்கு நன்கு புரியும், அவன், இவள், அவள் என்ற பதங்கள் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

3. கதையின் நேரத்தை கவனித்தில் வைத்தல்:-

நேரம் மற்றும் கதையை அப்படியே வாழ்ந்து காட்டுதல், இவை இரண்டும் கதையின் முக்கிய பகுதி.

(அ) கதையை புரிந்து, மெதுவாக நிதானமாக கதையை படிக்கவும். அந்த பொக்கிஷங்களை கண்டு பிடிக்க, நிதானமாய் போன, நண்பர்களின் கதையை ஞாபகத்திலிருத்தி பார்க்கவும்.

ஆ) வரைப்படமாய் கதையை யோசித்து, அந்த கதையில் சொல்லப்பட்ட செய்திகளை படிப்படியாக வாசித்து, அந்த கதையை எதை வெளிப்படுத்துகிறது, மற்றும் மற்ற கதையில் உள்ள மனிதர்களின் யோசனை உணர்ச்சி பற்றி ஆராயவும்.

இ) ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக அந்த கதை நடந்து இருந்தாலும் நீங்கள், கதை சொல்லும் போது முதல் முறையை இது நடப்பதாய் சொல்ல வேண்டும். நீங்கள் நன்கு அக்கதையை அறிந்திருந்தாலும், குறிப்புகள் எடுப்பது நல்லது; எப்படி அந்த கதையில் உள்ள நபர்கள் உணர்திருப்பார்கள்; அந்த சூழ்நிலையில் அம்மக்கள் நடந்திருப்பார்களோ, என யோசித்து கதை சொல்லவும்.

4. கதையோடு வாழ்:-

ஒவ்வொரு கதாபாத்திரமும் மற்ற கதாபாத்திரத்தோடு இணைந்து உள்ளதா என்பதை பார்க்கவேண்டும். கதையை கேட்கும்போது அந்த கதாபாத்திரத்தின், ஆவிக்குரிய தன்மையை உணர முடியும். கூர்மையாய், கதை சொல்லிக்கொடுப்போர் கதையை கவனிக்க, எளிதாய் அதை கற்று அவர்கள் அக்கதையை சொல்லித்தர முடியும்.

நாம் வேதாகமத்தில் படிக்கும் கதையில், வரும் எல்லா தலைவர்கள், தீர்க்கதரிசிகள், மனிதர்கள், தேவனுக்கு கீழ்படிந்து, கடினமான நேரத்தில்கூட விசுவாசத்தை காத்துக்கொண்டு நடந்தனர்; ஒவ்வொரு காரியத்திலும் மனிதன் சரியாய் முடிவு எடுப்பது அவசியம். முக்கியமாய் மனிதன் தேவனை நம்புவதில் மற்றும் விசுவாசிப்பதில் அது மிகவும் அவசியமானது.

5. கதையில் உள்ள எல்லா உணர்ச்சிகளை எடுத்துக்காட்டு:- கதாபாத்திரத்தில்

உணர்ச்சிபூர்வமான காரியத்தை நடித்துக்காட்டு, கதையில் முக்கியமாய் வரும் பயம், தோல்வி, வருத்தம், கோபம் போன்ற உனர்ச்சிகள் கதையில் வெளிப்பட; அதை அப்படியே வெளிப்படுத்தும். கதையில் இப்படிப்பட்ட காரியம் இல்லை என்றாலும், அந்த கதாபாத்திரத்திற்கு ஏற்ப நடித்துக்காட்ட வேண்டியது அவசியம். இப்படி கதை சொல்ல, அது கதைக்கே ஒரு புதிய உயிர் கொடுப்பதாய் மாறுகிறது.

கதாபாத்திரம் வெளிப்படுத்தும் உணர்வை உங்களால் எடுத்துரைக்க முடியவில்லை என்றால், நீங்கலாக அதற்கு ஏற்ற உணர்ச்சிகளை நடித்துகாட்ட வேண்டாம். ஏனெனில் தேவன் வேதாகமத்தில் இத்தகைய செயல்களை தவிர்க்க எச்சரிக்கிறார்.

உபாகமம் 12:32 நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாய் இரு நீ அதனோடு ஒன்றும் கூட்டவும் வேண்டாம் அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (நீதி 30: 5-6)

தேவனுடைய வசனம் எல்லாம் புடமிடப்பட்டது, தம்மை அண்டிக் கொள்கிறவர்களுக்கு அவர் கேடகமானவர், அவருடைய வசனங்களோடு, ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னை கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்.

6. கதையை வெளிப்படுத்தல்:

நீங்கள் கதை சொல்ல, பழக பழக உங்கள் பேச்சு திறன், அந்த கதையில் உணர்ச்சிக்கு; ஏற்றவகையில் இருக்க வேண்டும்.

அ) முதல் முறை கதை சொல்லுபவர்கள், தாங்கள் சொல்லும் கதை நாடகப்பூர்வமாய் இருக்க; அவர் கதை ஆரம்பம் மற்றும் முடிவு வரை அதே பேச்சு தோரணையில் பேசி முடிப்பார்கள். முழு கதையை நல்ல பேச்சு தோரணையோடு எடுத்து சொல்ல; கேட்போருக்கு ஒருவிதமான உற்சாகத்தை அளிக்கிறது. நிஜ வாழ்வில் எந்தவொரு கதையையும் உற்சாகமாய் எடுத்துரைக்க இயலாது.

ஆ. சில கதையின் பகுதியில் துக்கம், தோல்லி, பயம், பெருமை, ஏமாற்றம் இப்படிப்பட்ட உணர்ச்சிகள் மற்றும் உற்சாகம் அளிக்கும் உணர்சிகள் இருக்கும். உணர்ச்சிக்கு ஏற்ற வண்ணம், நம் குரலை மாற்றி கதை சொல்ல வேண்டும். சில வேளை குரலை உயர்த்தியோ அல்லது மெதுவாக மற்றவர்கள் கேட்கும் வண்ணமாக சொல்ல முடியும். கதையின் பகுதிகளை மெதுவாக சொல்ல,

சீக்கிரமாய் அதை எடுத்துரைப்பது, மிகவும் அவசியம். குரல் உற்சாகத்தை கதையில் செலுத்தி, பல உணர்ச்சிகளை உங்கள் குரல் மாற்றத்தின் மூலம் காண்பிக்கலாம்.

இ) ஒவ்வொரு பாஷையிலும் ஜனங்கள் பேசும்பொழுது, குரல்வளத்தினால் வார்த்தைகள் சொல்லாதபடி, இயற்க்கையாக சில பதத்தை வெளிப்படுத்துவர். பல மொழிகளில் ஒரு சத்தம் அல்லது ஒரு உணர்ச்சி ஒவ்வொரு பாஷைக்கும் முக்கியத்துவமாய் இருக்கிறது.

பல உணர்ச்சிகள் பல காரியத்தை வெளிப்படுத்துகிறது; "சைய்" என்ற காரியம் ஒரு விதமான வெறுப்பையும், மூச்சு விடுவது - ஒருவிதமான விரக்தியை, ஒரு விதமான சந்தோஷம் / வியப்பையும், சிரிப்பு மற்றும் பல காரியங்கள் பல உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது, இப்படிப்பட்ட காரியங்களை, நம்மை சுற்றி உள்ளவர்களிடம் இருந்து கற்கிறோம்.

உங்கள் திறமைகளை வேதாகம கதையை சொல்லும்போது, அதை சுவாராஸ்யமாய், கவனத்தை இழுக்க கூடியதாய் பல குரல் மாற்றம், மற்றும் பலமொழிகளின்; உணர்ச்சிகளை மற்றவர்களிடம் பேசி கற்றறிதல் அவசியம் ஆகும். இப்படிப்பட்ட உணர்ச்சிகளை, குரல் மாற்றத்தை மனதில் பதிய வைத்து; வேதாகம கதை சொல்லும் போது பயன் படுத்த வேண்டியது முக்கியமாகும்.

ஈ) ஒரு அமைதி அல்லது ஒரு தடுமாறும் குரல், பல நாடகத்திறன் கேட்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். எ.டு. கதை தொகுப்பாளர் ஒரு குஷ்டரோகியை பற்றி சொல்லும் போது, இயேசு தம் கரத்தை நீட்டி குஷ்டரோகியை தொட்டார் என்பதாகும், இப்படி விளக்கமாய் சரியான வார்த்தையை; கதை தொகுப்பாளர் பயன்படுத்தாமல் இருந்தால், கதையின் சாரத்தை நாம் அறியமுடியாமல் இழந்திருப்போம்.

இயேசு குஷ்டரோகியை தொட்டார் என்பது பெரிய காரியமாகும், அது அவரின் பாசத்தை வெளிப்படுத்துகிறது. கதை சொல்லுபவர்நிதானமாய் இதனை சொல்ல வேண்டும். ஒரு அழகான தருணம், கதை சொல்லுபவர் நிதானமாய்; அந்த உணர்ச்சியை அறிந்து சொல்லுவதாகும், இயேசு - தன் கையை நீட்டி, குஷ்டரோகியை தொட்டார்.

உ. ஒவ்வொரு முறையும் ஒரு நாடகத்தன்மை, கதையில் அமைந்துள்ளதா என பார்க்க வேண்டும். ஏதேனும் வித்தியசமாய் மற்றும் உறுதியான வாக்கியங்கள் சொல்லப்பட்டு இருந்தால், அமைதியாய் மற்றும் கதையை சொல்லும்போது; பொறுமையை கடைபிடித்தல் அவசியம். இது பல உண்மையான வெளிப்பாடுகளை திறந்து, கேட்போரை உணரச் வைக்கிறது..

ஊ. கதைகள் சாதாரண முறையில் குறிப்பிட்டு இருந்தால், அதை சாதாரண குரல் வளத்தோடு மாறுபாடின்றி சொல்லாம்.

எ. சில நேரம், கதை தொகுப்பாளரின் வார்த்தைகள் ஆர்வத்தை கெடுப்பவைகளாய் காணப்படும். கதை தொகுப்பாளி சில நேரம் நம்மை ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு நேராய் அல்லது வேறு இடத்திற்கு கூட்டிக்கொண்டு போவதாய் காணப்படலாம், அது எப்படி எனில்; கதை தொகுப்பாளர் ஏதோ ஒரு மறைவானதை நமக்கு வெளிப்படுத்துபவராய் காணப்படலாம், அப்படி கதை இருக்க, ஓர் உரத்த சத்ததோடு அக்கதையை சொல்வதின் மூலம் அது, நன்றாய் புரியும் மற்றும் ஆர்வத்தை தூண்டி கதை கேட்போரை கவரும்.

இப்படி நாம் கதை சொல்ல அது கேட்போரை உற்சாகப்படுத்தி, மற்றும் சாதாரண வார்த்தைகள் ‘சில நேரம்’ அல்லது ‘அதே சமயம்’ அல்லது அவர்கள் ‘வந்தடைந்த பின்னர்’; இதை எல்லாம் சொல்லுபோது வித்தியாசமான ஆர்வத்தை அளிக்கும். சில வேளையில் வித்தியாச குரல் மாற்றம், மற்றும் உடல் அசைவால்; சில செய்தியை நன்கு வெளிப்படுத்தலாம்.

7. செய்கையை பயன்படுத்தி, கதையை காண்பி:- சரியான செய்கைகளான பயம், பொறாமை, வெறுப்பு, சண்டை, ஆச்சரியம், வீரம், ஞானம், துயரம் என பல உணர்ச்சிகளை; கதைக்கு ஏற்ப நாம் பயன்படுத்த வேண்டும். இப்படி பட்ட உணர்ச்சி, உடல் அசைவோடும் வெளிப்படுத்துவதால், கதையில் உள்ள மக்கள் மற்றும் ஜனத்திற்கு இடத்திற்கு ஏற்ப நீங்கள் ஒரு சில உணர்ச்சிகளை உடல் அசைவோடு சொல்லலாம்.

கதையில் உள்ள நபரை பற்றி சொல்லும் போது உங்கள் உடலை அந்த இடம், மற்றும் சரியான விதத்தில் நின்று அதை வெளிப்படுத்துபவராய் காணப்பட வேண்டும். எ.டு. ஒரு மனிதன் சுகம் பெற அவன் ஆச்சரியபடுவான், தன் செயல் பெற்ற உருப்பை; அசைத்து காட்டுதல், மற்றும் சந்தோஷம் அடைந்து

குதித்தல் போன்ற காரியத்தை வெளிப்படுத்துவதாகும். ஒரு விதமான நிதானம், மற்றும் அசைவுகள் கதையை நாடக நயத்தோடு சொல்ல உதவுகிறது

முக்கிய குறிப்பு: நீங்கள் கதை சொல்லுவதை பார்த்து சிலர் "நீங்கள் சிறந்த கதை சொல்லுபவர்" அல்லது "நன்கு நடித்து காட்டுகிறீர்கள்" என்றால் நீங்கள் கதை சொன்ன விதத்தை ஆராயுங்கள், கதை சொல்லுவதில் ஆச்சரியபடுவது அல்ல; தேவ வார்த்தையில் ஆச்சரியபடுவதுதான் முக்கியம்.

8. நின்று அல்லது உட்கார்ந்து கதை சொல்லுதல்? பல கலாச்சாரத்தில் உட்கார்ந்து கதை சொல்லுவது முக்கியமாய் இருக்க, நாங்கள் நின்று கதை சொல்லும் முறையைதான் கற்று கொடுக்கிறோம். இப்படி செய்வதின் மூலம் முழு சரிர அசைவுடன் கதையை நன்கு சொல்லமுடிகிறது; பெரிய கூட்டத்திற்கு கதை சொல்லும்போது இந்த முறை நல்ல பலனை அளிக்கிறது.

செய்கை மற்றும் உணர்ச்சிகள் பயன்படுத்தி கதை சொல்ல; நிற்கும் முறை உதவும். உட்கார்ந்து கதை சொல்லும் முறையில், இதை பயன்படுத்தலாம், ஆனால் இந்த முறையில் சில செய்கைகள் மட்டும் தான் கதையில் சொல்ல உதவுகிறது, அதை வைத்தும் கதை சொல்லலாம்.

9. கதையை ஆரம்பித்தல்:- கதையை ஆரம்பிக்கும்போது "நான் இப்பொழுது கதை சொல்ல போகிறேன். அல்லது "இது வேதாகம கதை" என ஆரம்பிக்கலாம், கதை சொல்லும் போதே வேதாகமத்தை திறந்து, அதை வாசிப்பது போல செய்கைகாட்ட கேட்போர், நிஜமாகவே இது வேதாகமத்தை அறிய முடிகிறது. நீங்கள் கதை பற்றி முதலில் எடுத்துரைக்கும்போது, வேதாகமத்தை மூடி வைக்கலாம், ஏனெனில் கதையின் முன்னுரை; பொதுவான வார்த்தை வடிவில் இருக்கலாம்.

கதை சொல்லும்போது இரண்டு கையை பயன்படுத்தி, ஓர் இடத்தில் வேதாகமத்தை வைத்து கதையை தொடரவும்; மற்றும் நீங்கள் அப்படியே உட்காரும்போது கதை சொல்லிக் கொண்டே உட்காரலாம் ஏனெனில், அது கேட்போரின் சிந்தனை சிதறலை தடுக்கும், பின்னர் கதையை, அப்படியே தொடர்ந்து கதை முடிவுக்கு வர; உங்கள் வேதாகமத்தை திரும்ப, எடுத்து அப்பகுதிக்கு நேராய் எடுத்து செல்லவும்.

நீங்கள் கிறிஸ்தவர் அல்லாதவர் இடத்தில் கதை சொல்லும்போது, வேதாகமம்

பயன்படுத்த வேண்டாம். இது ஒரு வேதாகம கதை எனவும் சொல்ல வேண்டும்; கதையின் கருப்பொருளை பகிர்ந்து கொள்வதின் மூலம், அவர்களே அந்த ஆவிக்குரிய காரியத்தை அறிய முடிகிறது.

10. எல்லோரையும் ஒரு முறை பார்த்தல்:- எஸ்.டி.எஸ். பயிற்சியாளர்கள் அனைவருக்கும் நாங்கள் சொல்லுவது; கதை சொல்லுபவர் எல்லோரையும் பார்க்க வேண்டும். ஒரு முறை எஸ்.டி.எஸ். பயிற்சி கூடத்தில் ஒரு புதிய கதை ஆசிரியர் கதை சொல்ல, என்னையே ஆரம்பம் முதல் முடிவு வரை பார்த்து கொண்டு கதை சொல்லி முடித்தார். எனக்கு ஒரு எண்ணம் வந்தது; நான் அவரிடம் கேட்டது உங்கள் கலாச்சாரத்தில பெரியவரை பார்த்து பேசுவது அவசியமோ என நான் கேட்க, அவர் ஆம், என்றார்.

அடடா! கலாச்சார குழப்பம் நாங்கள் அந்த எஸ்.டி.எஸ். பயிற்சி கூட்டத்தில் சொன்னது, கலாச்சாரம் ஒரு பக்கம் இருக்க மற்றும் பெரியோருக்கு மரியாதை கொடுப்பது இன்னொரு பக்கம் இருக்க, நாம் கதையை ஒருவருக்கு மாத்திரம் அல்ல அனைவருக்கும் சொல்ல வேண்டும் என எடுத்துரைத்தேன்.

மரியாதை ஒரு பக்கம் இருக்க, உயர்ந்த ஜாதி, மற்றும் மேல் ஜாதி எனப்படுவோர் அவர்களை மாத்திரம் பார்த்து; கதை சொல்லும் பழக்க இல்லாமல், சமாரிய ஸ்திரியின்; கதை - இன்றைக்கு யார் நம்முடைய சொந்தங்கள்; யார் என்கிறீர்கள்? அது எல்லோரையும் குறிக்கிறது என்றேன்.

எஸ்.டி.எஸ். பயிற்ச்சி கூடத்தில், எல்லோரும் அதாவது சமுதாயத்தில் கீழாக காண்கிற மக்களை, சமமாய் பார்க்க செய்கிறோம். பெண்கள், பிள்ளைகள், தீண்டாதவர், படிப்பறிவு அற்றோர், இவர்கள் பிரிக்கபட்ட சமுதாயம் ஆவர்.

கலாச்சாரம் வேத வாக்கியத்தோடு உடன்பட, நம் மனதில் இருக்க வேண்டியது :

> ஒரு கலாச்சாரம் ஒருவரின் நம்பிக்கை, ஒரு செய்கையை நடத்த அல்லது வேதாகம வாக்கியம் படி செய்ய, உன் நம்பிக்கையை மேல் படிக்கு எடுத்து செல்லுவது, ஒவ்வொரு விசுவாசியின் முடிவு எடுத்தலில் உள்ளது.

11. கதை முடிவு:- இது தான் கதையின் முடிவு, என சொல்லி உங்கள் வேதாகமத்தை மூடவும்

12. குறிப்பிட்ட கதையை அதிகம் சொல்:- உங்கள் கதை சரளமாய் வர, கதையை சொல்லி பார்க்கவும், ஆட்கள் இல்லை என்றாலும் மிருகம்/ மரத்தை பார்த்து சொல்லுங்கள்; இது கதையை மனப்பாடம் செய்வது அல்ல, கதையை கதையாக சொல்லுகிறீர்களா என்பதை அறிய உதவுகிறது.

தைரியமாய் இரு - நம்பிக்கை பெறு - எதையும் எழுத வேண்டாம்!

நினைத்து பாருங்கள், ஆண்டவர் மலையின்மேல் தம்முடைய செய்தியை கொடுக்க எதையாகிலும் எழுத்துவடிவில் வைத்து படித்து இருப்பாரா? இல்லை. உங்களிடம் மற்றவர் உங்கள் சாட்சியை கேட்க அல்லது எப்படி உங்கள் மனைவி அல்லது கணவரை சந்தித்தீர்கள் அல்லது உங்கள் வாழ்வின் சந்தோஷமான செய்தி சொல்லுங்கள் என கேட்க; நீங்கள் உங்கள் புத்தகத்தை தேடுவீர்களாக ஏனெனில் இந்த காரியங்கள் நன்கு நம் மனதில் பதிந்தபடியால் நண்பர்களிடம் அதை எடுத்துரைக்க, அதை நன்கு சொல்லுகிறோம். அந்த காரியம் ஞாபகத்தில் நன்கு பதிந்தபடியால், இது சாத்தியமாகிறது.

மேலும் அவை கதை வடிவில் இருப்பதால், அது மனதில் நிற்கிறது. எஸ்.டி.எஸ், ஒரு புதிய திறமையை எதிர்பார்க்கிறது, நீங்கள் ஆசிரியராய் அல்லது மேடை பேச்சாளர் என்றால் உங்களுக்கு உங்கள், எழுத்து அடங்கிய தால்கள் தேவை; ஆனால் கதைவடிவில் இருந்தால் அதற்கு புத்தகமோ அல்லது எழுத்து அடங்கிய காகிதம் தேவையில்லை.

ஒரு சாக்லேட் கேக்கு சாப்பிடுகிறீர்கள் என்றால், அதை ருசிப்பீர்கள் அதில் என்னென்ன பொருட்கள் உள்ளது என அறிந்து அதையே நீங்கள் வீட்டில் தயாரிக்க, சாக்லேட்டுக்கு பதிலாய் வெண்ணிலாவோ அல்லது மாவுக்கு பதிலாய் அரிசி என; நாம் தவறாய் தாயரிப்பது இல்லை. அந்த கேக்கின் அழகு அதில் அடங்கி உள்ள பொருட்கள் ஆகும்.

நாங்கள் எஸ்.டி.எஸ். முறையை படிப்படியாய் நீங்கள் கற்க உற்சாகப்படுத்துகிறோம்.

எஸ்.டி.எஸ். முறையில் கதையை சொல்லும்போது எந்த எழுத்து அடங்கிய நோட்புக்குகள் பயன்படுத்த வேண்டாம்; எஸ்.டி.எஸ். முறையில் நன்கு கற்றுக் கொள்ளுதல், அதை நன்கு எடுத்துரைப்பதுதான் அவசியம். ஆமாம்! எதையும் எழுத வேண்டியது அல்ல படிக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்த எஸ்.டி.எஸ். பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற உற்சாகப் படுத்துகிறோம், பத்து வசனத்தை எளிய முறையில் அறிந்து ஆவிக்குரிய கண்ணோட்டத்தையும் அறிய முடிகிறது.

## திறமை- II ம் எப்படி பொக்கிஷத்தை கதையில் எடுப்பது

## நீங்கள் சொல்ல நினைக்கும் கதையில் இருந்து எப்படி பொக்கிஷத்தை எடுப்பது என்பது தான் இரண்டாவது திறமை.

வேத கதையில் பொக்கிஷம் எது? வேதத்தில் உள்ள ஆவிக்குரிய உண்மைகளை பொக்கிஷம் என்கிறோம். இது ஆவிக்குரிய கண்ணோட்டம் மற்றும் அப்பியாசப்படுத்துதலை இணைந்து உள்ளது.

ஆவிக்குரிய கண்ணோட்டம், தேவனின் மனிதர்களின் வாழ்வில் செய்த காரியத்தை காண்பிக்கிறது.

ஆவிக்குரிய அப்பியாசபடுத்தல், ஆவிக்குரிய உண்மையை நம் வாழ்வில் பயன்படுத்துவது.

தேடுவோருக்கு உதவுதல்:- பிலிப்பு மற்றும் திருநங்கை பற்றிய கதையை நாம் அறிந்துள்ளோம், இந்த எத்தியோப்பிய நாட்டை சேர்ந்த மதிக்கப்பட கூறிய திருநங்கை, தன்னுடைய இரத்தில் உட்கார்ந்து; ஏசாயா புத்தகத்தை படிப்பதை காண்கிறோம். தேவன் பிலிப்பை அனுப்பி; வேத வாக்கியங்களை அவனுக்கு புரிய உதவினார், கதையை கேட்பது நல்லது; ஆனால் கதையில் உள்ள உட்பொருளை மக்கள் அறிய செய்வது அதினும் மேலானது.

எப்படி இந்த பொக்கிஷத்தை அறிவது அதாவது “ஆவிக்குரிய கண்ணோட்டம்”

நீங்கள் சரித்திர பூர்வமாய் ஆராயாமல், ஆவிக்குரிய காரியங்களை அறிய ஆராய்ச்சி செய்ய வேண்டும். வேதாகமத்தில்; ஒவ்வொரு கதையில் உள்ள நபர்களை குறித்து தேவனுக்கு திட்டம் இருந்தது, அந்த கதாபாத்திரம் அந்த கதையில் கற்ற காரியம், நாம் தேவனிடம் கற்க காரியத்தை ஆராய உதவுகிறது. வேதாகம கதையில் வாழ்வது தான், கதையை அறிந்து அதை மனதில் பதிய வைக்ககூடிய கருவியாய் உள்ளது.

கதையில் நீங்கள் வாழும்போது, ஒவ்வொரு கதாபாத்திரம் சொன்ன மற்றும் செய்த

காரியங்களை அறியமுடிகிறது. மற்றும் தேவன் அவர்கள் வாழ்வில் இடைப்பட்ட காரியத்தை அறியமுடிகிறது. “கதையில் வாழும்போது” அது ஆவிக்குரிய ஆராய்ச்சி செய்ய உதவுகிறது.

இந்த பொக்கிஷத்தை அறிய கதையில் சொல்லப்பட்ட ஒவ்வொரு நபரைபற்றி மற்றும் குழுவாய் உள்ள மக்களை பற்றி; சொன்ன காரியம் புரியும், தேவன் இவர்கள் எல்லோர் மூலம் கிரியை செய்து அவர்களுக்கு சொல்லிகொடுப்பவராய் இருக்கிறார்.

உங்களிடம் பதிவு செய்யபட்ட ஆடியோ; வசனங்கள் நிறைந்த வேதம் இருந்தால்; அதை வைத்து அக்கதையை ஆராயலாம். எந்த காரியம் கதைக்கு முன் வருகிறது என்பதை ஆராய்ந்துபார். ஏதாகிலும் உனக்கு உதவியாக எந்த கதாபாத்திரம் கதையில் வருகிறது, என்ன தெரிந்து இருந்தது, அவர்கள் அனுபவித்தது என்ன என்ற காரியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

போதிக்கும் ஞானி:-

ஒரு சிறிய வரை படம் - ஆவிக்குரிய கண்ணோட்டத்தை அறிய:- ஊர் மக்கள் பல நாட்களாய் ஒரு கிணறு மற்றும் அதன் உரிமை யாருக்கு என அவர்களுக்குள் தகராறு நடந்துகொண்டே இருந்தது, இதனை முடித்து கொள்ள ஒரு நல்ல ஞானபோதகனை அணுகினர். இவர் பல வேள்விகளை கேட்கும் தன்மைகொண்டவர்.

ஏனெனில்; அந்த பிரச்சனை பற்றி நன்கு அறிய இப்படி அவர் கேள்விகளை கேட்பது அவரின் சுபாவம்.

அந்த ஞானபோதகர் "உங்கள் பிரச்சனை என்ன, எது உங்களை தொந்தரவு செய்கிறது என்று கேட்டார்?"

அந்த ஊர் மக்கள் தங்கள் கதையை சுருக்கமாய் சொன்னார்கள், அந்த ஞானி சரி, இந்த பிரச்சனை ஆரம்பிப்பதற்கு முன்பு ஏதாகிலும் நடந்ததா, இந்த பிரச்சனை வர காரணம் என்ன; எனக்கு முன் கதையை பொறுமையாய் சொல்லுங்கள் என்றார்.

பாதி கதை ஊர் மக்கள் சொன்ன பின்பு; அந்த ஞானி, நிறுத்துங்கள், இந்த பிரச்சனை உருவாவதற்கு முன்பு யாராகிலும், எதையாவது சொல்லவோ அல்லது எதையாகிலும் செய்திகளை கேட்டீர்களா; என்றார், நான் சரியாய் பிரச்சனையை அறிய இதை கேட்கிறேன் என்றார்.

ஊர் மக்கள் அதற்கு பதில் சொன்ன பின்னர், ஞானி கேட்டார், யாராகிலும் ஏதாவது திட்டத்தை போட்டிர்களா அல்லது எந்த நபராவது அவ்வித திட்டத்தை சொன்னாரா, திட்டம் சொல்லபடுகையில் எதாகிலும் பலன் அத் திட்டத்தில் உண்டா என்ன கண்டறிந்தீர்களா?

இப்படியே ஞானி கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக்கொண்டே போனார், இன்னும் விளக்கமாய் உங்கள் கதை சொல்லுங்கள் என்றார்.

கடைசியாக கதையை ஊர் மக்கள் சொல்லி முடித்தனர்; ஞானி அந்த கிராமத்தார் சொன்ன கதையை பொறுமையாய் கவனித்து, அவர்கள் பிரச்சனை அறிந்து; நல்ல அறிவுரை சொன்னார்.

இப்படி மிகவும் எளிதான கதையில், பல விதமான வேத பொக்கிஷத்தை கண்டறிய கேள்விகள் கேட்பதுண்டு. இதே விதமான கேள்வியை மக்களிடம் கேட்போம்; எப்படி, அந்த ஞானி கேட்டாரோ, அப்படியே நாங்களும், கதைக்குள் ஆழமாய் மக்களை கொண்டு சென்று அதில் உள்ள ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ள ஆராய்ச்சி செய்கிறோம்.

எப்படி அந்த ஞானி அந்த ஊர் மக்களிடம் விரிவாய் உங்கள் பிரச்சனை சொல்வீர்களா? என்றாறோ, பல வேதாகம கதையில் உள்ள, பரபரப்பு அல்லது பிரச்சனை, சூழ்நிலை; அந்த கதையை ஆராய்வதற்கு முன், பல சூழ்நிலைகளை பார்க்கிறோம்". கதையில் உள்ளவர்களுக்கு “பசியா” அல்லது “ஆபத்தா" அவர்களுக்கு “பயமா” அல்லது “குழப்பமாய்” “மனஸ்தாபமா” என்ற காரியங்களை முதலில் அறிந்து கொள்கிறோம்.

இப்படி சூழ்நிலைகள் மூலம், அந்த கதையில் உள்ள நபர்கள், நிஜமாய் இருப்பவர்கள் போல காணலாம், உணர்வுபூர்வமாய் சூழ்நிலை கதையின் ஆழத்திற்கு நாம் செல்லமுடியும்.

கதையை ஊர் மக்கள் சொல்லுவதற்கு முன்பு; அந்த ஞானி பிரச்சனைக்கு முன்பு என்ன நடந்தது எனக்கேட்டது போல, கதையில் பொக்கிஷம் அறிய முதலில் கதையின் "கருப்பொருளை அறிய வேண்டும்.

இதை அறியுங்கள்:- அந்த ஞானி செய்ததைவிட, சரித்திர பூர்வமாய கதையை பார்க்க, எப்படி ஆவிக்குரிய விதமாய் தேவன் இப்படிப்பட்ட மனிதர்களின் வாழ்வில்

இடைப்பட்டார், என அறிவது மிகவும் அவசியம். நாம் பார்க்க வேண்டியது எப்படி இவர்கள், இந்த சூழ்நிலையில் சிக்கினார்கள், எவ்வளவு நாள் கஷ்டப்பட்டார்கள், எவ்வளவு தூரம் தேவனை சேவித்தார்கள், இப்படிபட்ட ஆவிக்குரிய கருப்பொருள் மூலம்; அவிக்குரிய வெளிப்பாடுகளை கதையில் அறிய முடியும்.

எப்படி அந்த ஞானி நிதானமாய் கிராமத்து மக்களிடம் கதை கேட்டு ஆராய்ந்தாரோ, மிகவும் எளிதான கதையிலும், ஒவ்வொரு பகுதியை நிதானமாய் படித்து, நம் மனதில் இதில் என்ன கற்கலாம், என அறிந்து, மற்றும் ஆவிக்குரிய முறையில் என்ன இந்த வார்த்தை, செய்கை, ஒவ்வொரு கதாபாத்திரம் சொல்லுகிறது என்பதை நன்கு உணரலாம்.

ஒவ்வொரு நபரை பற்றி ஆராய; அதாவது இயேசு, பிதா, நாம் - நான் ஆவிக்குரிய விதமாய் எதை இக்கதையில் அறிகிறேன், என்ன திட்டம் எனக்கு உண்டு, அதன் விளைவு மற்றும் மற்றவர்களை எப்படி கொண்டுவருவது இந்த கேள்விகளின் பதில்களின் மூலம்" ஆவிக்குரிய கண்ணோட்டத்தை அறிய முடிகிறது.

இப்படி நாம் நிதானமாய், அறிய நம் வாழ்வில் வரும் பிரச்சனை எப்படி நான் எதிர்கொள்கிறேன் என்பதை அறிய முடிகிறது. பல காரியங்களை அறிகிறோம்; அதாவது எப்படிப்பட்ட திட்டத்தை கைகொண்டனர், அதன் விளைவு, அல்லது இப்படிபட்ட திட்டதை நடைமுறைபடுத்தி இருக்கலாம், என அந்த ஞானி கேட்டதற்கு மேலாக, நாம் தேவனை அக்கதையில் தேட வேண்டும். தேவன் அந்த சூழ்நிலையில் எப்படி செயல்பட்டார், அவரை பற்றி நாம் என்ன அறிய முடியும், என்பதுதான் முக்கியம்.

நிஜ நபர்கள் வேதாகம கதைக்கு ஏற்ப வாழ்ந்து காட்டினர்:-

எப்படி மனிதர்கள் அந்த கதைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஒத்து வாழ முடிந்தது என்றும்; அந்த சூழ்நிலையைநீங்களும் சுவாசிக்க வேண்டும், அந்த கதையில் உள்ளவர்களுக்கு உணர்ச்சிகள் இருந்ததா, இந்த கதையில் உள்ள நபர்கள் எப்படி அந்த சூழ்நிலையை எதிர்க்கொண்டார்கள், அந்த கதை பற்றி, இன்னும் அதில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரத்தை பற்றி நிதானமாய் அறிவது அவசியம்.

முதல் பகுதியை நன்கு கவனியுங்கள், உங்களுக்குள் கேளுங்கள் ஆவிக்குரியவிதமாய் இந்த கதாபாத்திரத்தால் என்ன கற்கமுடியும்? அவர்கள் பயந்தார்கள் அல்லது

தைரியமாக அல்லது கவலை மற்றும் சோகமாய் காணப்பட்டனரா? எந்த சூழ்நிலை அவர்கள் அப்படி நினைக்க மற்றும் செயல்பட வைத்தது?

அந்த நபர்கள் எந்த வழியை தெரிந்தெடுத்தனர்? அல்லது வேறுவிதமாய் திட்டம் / வழியை பின்பற்றினார்களா? ஒவ்வொரு பகுதியிலும் கதையில் ஒவ்வொரு நபர் பிதா, குமாரன், இயேசு பல  வழிகளை ஏற்படுத்தி இருக்கலாம்.

ஒவ்வொரு பாதை, திட்டம், நீங்கள் அந்த உண்மையை அறிந்து கொள்ள; இப்படிபட்ட திட்டம் முதலில், சிந்தையில் தோன்றும். பின்பு அந்த திட்டத்திற்கு ஏற்ப செயல்படுகிறார்கள். இந்த கதையை, நீங்கள் ஆராய மக்கள் என்னென்ன வழிமுறை, திட்டம் போட்டனர், என்பதையும் அவர்கள் எடுத்த முடிவினை அறிய உதவுகிறது.

யோசிக்க ஆரம்பி:

வேறு எந்த திட்டம் அவர்கள் போட்டிருக்கலாம் அல்லது அவர்கள் ஞானம் அல்லாமல் தெரிந்தெடுத்த காரியம் என்ன?

எடுத்த முடிவு சரியாய் இருக்கலாம் அது நல்ல பலனை கொண்டு வந்திருக்கலாம், தப்பான திட்டம், அது வேறுவிதமான மாற்றத்தை கொண்டு வந்திருக்கும். அதனை நாம் யோசிக்க வேண்டும். எப்படிப்பட்ட திட்டம், எப்படி அது நடைமுறை படுத்தப்பட்டது என்பது முக்கியம்.

உனக்குள் கேள்:-

எப்படி நான் ஆண்டவரை இந்த கதையில் பார்ப்பது? எதை நான் கற்க உதவுவதாய் உள்ளது?

இதுதான் ஆவிக்குரியகண்ணோட்டம், கதையின் ஒவ்வொரு பகுதிக்கு சென்ற ஒரே விதமான கேள்வியை கேட்பதாகும், நாம் பார்ப்பது வார்த்தைகள், செயல்பாடு, என்ன திட்டம், அதன் விளைவு பல, மற்றவர்களை மற்றும் எப்படிபட்ட மாற்றத்தை கொண்டுவந்தது; நான் எப்படி ஆண்டவரை அந்த கதையில் அறிகிறேன், அல்லது எப்படி அவர் மற்ற மனிதர்களின் வாழ்வில் செயல்பட்டார்? என்பதை அறிவதாய் உள்ளது.

இப்படி நாம் கதையை ஆராய, ஆவிக்குரிய பொக்கிஷத்திற்காய் அந்த ஞானியின் வேறுபட்ட கேள்விகளாவன?

- ஒவ்வொரு கதாபாத்திரம் என்ன செய்கிறது / சொல்கிறது?
- எனக்கு அந்த நபரின் ஆவிக்குரிய வாழ்வு என்ன காட்டுகிறது?
- அந்த நபர் ஒரு விசுவாசியா அல்லது வெறும் பதிலை தேடுபவரா/ கேட்ககூடியவரா அல்லது எதையும் கேட்க கூடாத மனநிலைபடைத்தவரா?
- விசுவாசம் / சந்தேகம் சொல்லபட்டிருக்கிறா?
- எந்த சூழ்நிலை வைத்து இந்த கதையில் தேவன் நம்மை எச்சரிக்கை / போதிக்க மற்றும் உற்சாகப்படுத்துகிறார்?

நீண்ட செய்திகளை அறிய, விரும்புவோரிடம் இதை போன்று பல கேள்விகளை கேட்கலாம். இப்படி பொக்கிஷத்தை அறிந்து கொள்ளலாம்.

உனக்குள்கேள்:-

- என்னை ஆச்சரியப்படுத்திய காரியம் கதையில் இருந்ததா, தேவ செயல் / மனித சுபாவ மாற்றம், கவனமாய் நீங்கள் கதையை கேட்க; அதில் ஆச்சரியப்படத்தக்க காரியம் உண்டா என ஆராய்ந்துபார்.
- இந்த கதைக்கு முன்பாக நடந்த சம்பவம் என்ன. இந்த கதாபாத்திரங்கள் இப்படி ஏன் நடந்து கொண்டார்கள்?
- தேவனின் குணாதிசயம் காணப்பட்டதா, இக் கதையில் அதாவது பொறுமை, துன்பப்படுவது, கோபம், அறிவு, நியாயம், மனம் உருகுதல், கிருபை, இரக்கம் எளியோருக்கு இரங்குதல் எல்லா மனிதனை சமமாய் பாவித்தல், அன்பு இவை காணப்பட்டதா?
- இந்த குணாதிசயங்களை யாவருக்கு தேவன் காட்டினார், அதில் இருந்து நான் கற்றுக்கொண்டது?.
- இந்த கதையின் கதாபாத்திரம் மூலம் விசுவாசிகள் யார் அவ்விசுவாசிகள் யார் என அறிதல்?
- உண்மையாய் தேவனை தேடுவோர், சாதாரணமாய் தேடுகிறவர்கள் அல்லது தேவனை முழுமையாய் வெறுக்கிறவர்கள் இக்கதையில் இருந்தனரா?
- எப்படி கஷ்டமான சூழ்நிலையை அந்த நபர் எதிர் கொண்டார்?

- அந்த கஷ்டம் நிறைந்த வேளையில் தேவனை நோக்கி, எப்படி உதவி கேட்டிருப்பான்?
- அந்த மனிதர் எப்படி தேவனை அணுகினான், பயத்தோடா அல்லது ஆனந்தத்தோடா.
- தேவனின் சுபாவம் ஆவது அன்பு, நியாயம், இரக்கம், பொருமை, உபத்திரவம், ஞானம் போன்ற தேவ சுபாவத்தை வெளிகாட்டுகிறதா?
- தேவனின் அணுகுமுறை என்ன, நமக்கு அது என்ன காட்டுகிறது?
- எந்த தலைவராவது இக்கதையின் தேவனை பின்பற்றினரா? கீழ்படிந்ததால் வந்த நன்மை என்ன?
- எந்த தலைவராவது இக் கதையில் தேவனை பின்பற்றாமல் இருக்கிறார்களா, கீழ்படியாமையின் விளைவு என்ன?
- யாரவது இந்த கதையில் தங்கள் நம்பிக்கையை மாற்றிகொண்டார்களா?
- எந்த கதாபாத்திரமாவது விசுவாசம், அன்பு, இரக்கம், கோபம், பயம் பெருமை, சந்தேகம், வெறுப்பு குழப்பம், அறியாமை, ஞானம், அறிவு, மதிக்காதது, மூடநம்பிக்கை இப்படிப்பட்ட காரியத்தை வெளிப்படுத்தினார்களா?
- இப்படிப்பட்ட நம்பிகைக்கு தேவனின் அணுகுமுறை என்ன, அவனின் அணுகுமுறை மூலம் நாம் என்ன அறியலாம்.
- இந்த கதாபாத்திரத்தின் உணர்வுகள் மாற்றப்பட்டதா?
- எது அவர்களை மாறச் செய்தது?
- அவர்கள் மாறினதால் என்ன நடந்தது, அது நமக்கு எவற்றை போதிக்கிறது?
- ஏதாவது அற்புதம் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியம் இந்த கதையில் நடந்ததா? அது எப்படி மனிதர்களை மாற்றியது?

எப்படி பொக்கிஷமாகிய “ஆவிக்குரிய நடைமுறைப்படுத்துதல்” அறிய முடியும்

கதையை நன்கு படித்த பின்பு, இந்த கதை என்ன சொல்லுகிறது என அறிய வேண்டும், இதில் ஆவிக்குரிய நடைமுறை படுத்தல் இருக்கிறதா; என அறிய வேண்டும். நம்மை அந்த சூழ்நிலையில் வைத்து நமக்கு வரும், போராட்டம் போல இது இருக்கிறதா, என பார்க்க வேண்டும்.

எஸ்.டி.எஸ் வெற்றிக்கு படிகள் “ஆவிக்குரிய அப்பியாசப்படுத்துதல்” இது ஆவிக்குரிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஆராய வேண்டும்.

இந்த கேள்விகளை உங்களுக்குள் கேள்:-

1. ம்... இந்த சூழ்நிலை அக்கதையில் நான் கண்டது, இன்றைக்கு அப்படிப்பட்ட காரியம் ஏதாகிலும் நடக்கின்றதா..?
2. அப்படி ஆனால், எந்த எந்த, வழியில் இதை போன்ற சூழ்நிலை ஏற்படுகிறது?
3. இப்படிப்பட்ட சூழ்நிலை யாருக்காவது இருக்கிறதா, எனக்கு தெரிந்தவர்களுக்கு இப்படி நடந்து உள்ளதா?
4. இப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைய நடைமுறையில் நடக்கிறதா? எப்படி நடக்கிறது இந்த கதை, எப்படி உதவுகிறது?

அதே கேள்விகளை கொண்டு, ஆவிக்குரிய கண்ணோட்டத்தை வைத்து தனிப்பட்ட ஆவிக்குரிய அப்பியாசப்படுத்துதலை கண்டு பிடியுங்கள்:

- ஆம், இந்த சூழ்நிலை எனக்கு இருந்தது, என்ன சொன்னேன்? என்ன செய்தேன்?
- எனக்கு ஏதாவது வாய்ப்பு இருந்ததா? நான் எப்படி முடிவு எடுத்தேன்?
- நான் என்ன செய்து இருப்பேன்? அந்த முடிவுக்கு வெற்றி என்ன?
- நானும் இந்த சூழ்நிலையில் சென்றேனா, எப்படி நான் அதை எதிர்கொள்கிறேன்?
- நான் அதன் மூலம் என்ன கற்றுக்கொண்டேன்? இந்த சூழ்நிலை மூலம் நான் கற்றது என்ன?

கடைசியாக இந்த கதையில் கேட்கக்கூடியவை:

- என் வாழ்வில் ஆண்டவர் இந்த சூழ்நிலை வழியாய், எப்படி நடத்துகிறார்.
- நான் என்ன கற்றுக் கொண்டேன், அல்லது ஆண்டவரை பற்றி என்ன அறிந்திருக்கிறேன், அவரின் தன்மை என்ன?

கதையை நீங்கள் படிக்கும் போது குழப்பமாய் இருக்கலாம், மற்றும் எப்படி தேவன் இந்த கதையின் மூலம் என்னோடு தேவன் இடைபடுகிறார் என்றும்; மற்றும் இந்த கதை நன்றாக உள்ளது, ஆனால் ஆவிக்குரிய விதமாய் இதில் கற்க, ஒன்றும்

இல்லையே என நினைக்கலாம், உன் வாழ்வில் எப்படி இது சம்மந்தப்படுத்துவது என சந்தேகமும் வரலாம்.

இதை கவனி: ஒவ்வொரு கதையும், நாம் வாழும் காலகட்டத்திற்கு, எதையோ உணர்த்துவதாய் இருக்கலாம். இந்த இரண்டு வேதவாக்கியம் தேவன் வேதாகமத்தின் பல செய்தியை ஏன் கொடுத்தார் என அறிய உதவுகிறது இந்த செய்தி நம்மை

உற்சாகப்படுத்தி, என் தேவன் இந்த கதையில் உள்ளபடி தன்னை வெளிச்சபடுத்துகிறார் என அறியசெய்கிறது. அதன் மூலம் ஆவிக்குரிய கண்ணோட்டம், ஆவிக்குரிய நடைமுறை படுத்துதலை வேதாகமத்தின் மூலம் நமக்கு அளிக்கிறார். 2 தீமோ 3: 16-17

16- வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி.

17- அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிப்பதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

I கொரி 10:11 -13. 11- இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. 12- இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். 13- மனஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

இந்த இரண்டு வாக்கியங்கள் வேதாகமத்தில் எல்லா கதை, நமக்காய் எழுதப்பட்டுள்ளது என அறியலாம். நமக்கு தெரியும் வேதாகமத்தின் கதை மூலம் அடங்கியுள்ள செய்தியை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

கதை சொல்பவராய் நீங்கள் இருக்க கேள்வி கேட்டவராய் இருக்க, சில படிகள் மூலம் கதை கேட்போர் உண்மை அறிய உதவவேண்டும்.

## "நீங்கள் அந்த பொக்கிஷத்தை அறியாதபட்சத்தில், உங்களை கேட்பவர்கள் அதை ஆராய வேண்டும் என்று நினைக்க கூடாது".

கதையை தயாரிக்க, நீங்கள் ஆவிக்குரிய நன்மை அறிய, நேரம் எடுத்து தேவ சமூகத்தில் கதை படித்தும்; பல உண்மைகள் நீங்கள் அறிய வேண்டும். அந்த பொக்கிஷத்தை கண்டு பிடிக்க முடியவில்லை, எனில்; நீங்கள் கதை சொல்ல இன்னும் பயிற்சி போதவில்லை என அர்த்தம்.

நீங்கள் கதை அறிந்து, அதில் உள்ள பொக்கிஷத்தை அறிந்து நீங்கள் கேள்வி கேட்டு அந்த பொக்கிஷத்தை மற்றவர் கண்டறிய உதவுகிறவர்களாய் காணப்படுகிறீர்கள்.

### கேள்வி கேட்பதின் முக்கியத்துவம்:-

நீங்கள் ஓர் இடத்தில் நடந்து கொண்டு இருக்க, அங்கு ஒரு பொக்கிஷத்தை பார்த்து அதை எடுத்து ஆச்சரியத்தில் மகிழ்வீர்கள். அந்த பொக்கிஷத்தை உங்கள் நண்பர்களுக்கு காட்டி மகிழ்ச்சியடைவீர்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியை விட, கண்டு பிடிப்பது என்பது; ஒரு பெரிய அதிசயம்/ ஆச்சரியம் தான்.

எளிதாய் பதில் வரும் கேள்வியை உருவாக்க, அதை பயன்படுத்தி கலந்துரையாடுவது தான், எஸ்.டி.எஸ் வேதாகம பயிற்சியின் வெற்றி ஆகும்?

அநேக மக்கள் வேதத்தில் பொக்கிஷம் உள்ளது என அறியாமல் இருக்கிறார்கள், அநேகருக்கு இந்த விஷயம் தெரிந்திருந்தாலும் அவர்களால் இந்த பொக்கிஷம் அறிய இயலாது என எண்ணுகிறார்கள். மக்கள் சிறிய காரியத்தை கதையில் இருந்து கண்டு பிடிக்க, அதற்கு அங்கீகாரம் கிடைக்க; அவர்கள் இன்னும் பல பதில்களை கண்டு பிடிக்கலாம்.

அநேக விசுவாசிகள் கவனமாய் வார்த்தை அர்த்தத்தை வேதாகம கதையில கண்டு பிடிப்பது அல்ல, தரமான கேள்விகள்; பயன் உள்ளதாய் மட்டும் அல்ல அது மக்களை இன்னும் ஆவிக்குரிய கண்ணோட்டத்திற்குள் கொண்டு செல்கிறது.

எஸ்.டி.எஸ் பயிற்சியில் புதிதாய் கேட்பவர்களிடம், அந்த பொக்கிஷத்தை அறியும்படி

செய்து அதை அவர்களிடம் எடுத்தும் காட்டுகிறோம். திறமை வாய்ந்த ஆசிரியர், கேட்பவர் அறியாமலே பொக்கிஷத்தை அவர்களுக்கு எடுத்துரைக்க அது அவர்களே எடுத்ததாய் உற்சாகபடுத்துகிறார்கள்.. வகுப்பறை நபர்களால் பொக்கிஷத்தை எடுக்க முடியாத போதிலும் அவர்களை உற்சாகப்படுத்தி பொக்கிஷத்தை தேட உதவுகிறார்கள் ஆசிரியர்கள்.

அதிக வேதாகம கல்வி, அறிவு, பல கருத்தரங்கு, கல்வி மூலம் கதையை அறிவோர் அதனை பிரித்து அல்லது ஆராய அறிவர், ஆனால் அதனை கேட்க கூடிய பொறுமை இருக்காது. சொன்னவண்ணமாக எஸ்.டி.எஸ் அந்த வேதாகம கதையை முழுமையாய் மற்றும் அதன் காரியங்களை கேட்டு அறிய ஒரு தனி உண்மை பெட்டகமாக அமைகிறது.

ஆழத்திற்கு செல்வது: எதேர்சியாய் மனிதர்களை பார்க்க, வேதத்தை குறித்து அவர்களிடம் பேசலாம். அதாவது இந்த பெருமை நிறைந்தவர்களை நம் கேள்வி மூலம் ஆழத்திற்குள் அழைத்து ஆராய நிஜம் அல்லது சம்மந்தம் இல்லா கதையில் அமைந்துள்ள காரியம் நீங்கள் கேள்வியில் கேட்டு பதிலை தவறாய்பெற தவறாய் பதில் அளித்ததை வைத்து. நீங்கள் அந்த பதிலுக்கு "சரி, நல்லது என சொல்லி உண்மையான சத்தியத்திற்குள் அவர்களை இழுத்து செல்லாம்".

உரையாடல் சூடு பிடிக்க, சரியான பதில் வெளிவர, துரிதமாய் பதில் அளிப்போர் நினைப்பது, தவறாய் முன்பு விடையளித்தோமே என நினைப்வர்கள். அவர்கள் பதில் சரியல்ல என செல்லுவது மாத்திரம் அல்ல மெதுவாய் அவர்கள் நினைத்தவண்ணம் அல்ல, அநேக காரியம் தெரியவில்லை என உணர்த்தி, ஆழத்தில் கொண்டு சென்று எனக்கு எல்லாம் தெரியும் என்ற மனப்பான்மை கொள்வோரை கதையில் வாஞ்சை ஏற்படுத்தி அவர்களையும் அநேக காரியம் தெரியவில்லை, என உணர செய்தது.

சில நேரம், ஜனங்கள் கண்டறிவது அவர்கள் முன்பு கேட்ட கதையில் அநேக முக்கிய காரியத்தை அறிய இழந்து விட்டோம் என்பதாகும். இந்த தரப்பட்ட மக்கள், பின்பு பொறுமையாய் கதை கேட்பது அவசியம், பலகாரியம் கதையில் இருந்து அறிய இது முக்கியம் என அறிந்து கொள்கிறார்கள்.

பரிசுத்த ஆவி சிறந்த ஆசிரியர்:-

விசுவாசியாய் இருக்கம் நாம் அவ்விசுவாசியை சந்திக்க, அவர்களுக்கு நாம்

எடுத்துரைக்கும் காரியம் யோ 3:16 அந்த வசனத்தை கொடுத்து நாம் பெரிதாய் ஒன்றும் பேசாமல், இது ஆவியானவர் வேலை எண்ணுகிறோம், அது அல்ல; முடிந்தால் அந்த வசனத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

வேதம் சொல்லுகிறபடி வேத உண்மைக்குள்ளாக நடந்து, எல்லா சத்தியத்திற்கு நேராய் வழி நடத்துவது ஆவியானவர் என்றும்; இந்த எஸ்.டி.எஸ் முறையை உலகமெங்கும் பறைசாற்ற நமக்கு வருத்தம் அளிப்பதாய் அமைவது; அநேக விசுவாசிகளுக்கு

வேதத்தில் பொக்கிஷம் மறைந்துள்ளது என்பதை அறியாமல்; இருப்பதாகும். இந்த காரியத்தில் அவர்களுக்கு தேவன் உதவுவார் ஆக.

ஆவியானவர் சொல்லிக் கொடுப்பவராய் அவர் ஆயத்தமாய் யாரும் இல்லா வகுப்பறையில் முன்பு இருப்பார்.

எஸ்.டி.எஸ் முறையில் கதை தயார் செய்ய ஆண்டவரிடம் நாம் கேட்பது; ஆண்டவரே வேதத்தில் உள்ள பொக்கிஷத்தை அறிய மற்றும் அதற்கு ஏற்ப கேள்விகளை தயார் செய்து, இதன் மூலம் மற்றவர்கள் பொக்கிஷத்தை கண்டு பிடிக்க உதவுகிறது. கேள்விகளுக்கு பதிலை கேட்வர்களிடம் பெற, ஆவியானவர் அவர்களுக்கு அந்த காரியத்தை களந்துரையாடலில் புரிந்து சொல்ல உதவ ஜெபிப்போமாக ஆராய்ச்சி நேரம் முடிவில் நாங்கள் பார்ப்பது, ஆவியானவரே காரியங்களை மக்களுக்கு போதித்து, ஒவ்வொருவரின் மனதில் மற்றும் எங்கள் மனதில் பேசுவதை பார்க்கிறோம்.

சிலர் நேரம் கேட்போர், ஒரு கேள்வியை கேட்க, அதற்குரிய பதில் வேறு வேத பகுதியில் இருந்து கொடுக்க வேண்டியதாய் இருக்கும், ஆண்டவரின் ஞானம் உங்களுக்கு அந்த கதையில் உள்ள காரியங்களை முழுமையாய் அல்லது அறிய மற்றும் சொல்ல உதவுவாராக, அல்லது சில நேரம் நீங்கள் "இது நல்ல கேள்வி என சொல்லவும், அவர் வழி நடத்துவதில் நாம் பொறுமையாய் இருக்கலாம், அடுத்த முறை கதை சொல்ல அதில் இந்த கேள்வி பதில் இருக்கும் எனலாம் அதாவது இந்த பெருமை நிறைந்தவர்களை நம் கேள்வி மூலம் அந்த ஆயுதத்தின்கள் அழைக்க ஆயும் என்னும் நிஜம் அல்லாது சம்மந்தக் இல்லா கதையில் அமைந்துள்ள காரியம் நீங்கள் கேட்கும் கேள்வி பதிலை தராதபடியாய் ஆனால் பாவமாய் கேட்போரை தவறாய் பதில் அளிக்க செய்பவை நீங்கள் அந்த பதிலுக்கு "சரி, நல்லது என சொல்ல உண்மையான சத்தியத்திற்குள் அவர்களை அழத்து செல்லாம்", கேட்போரின் காரியங்களுக்கு உங்கள் செவி சரியாய் கவனமாய் இருப்பதாக, சில நேரம்

ஆவியானவர் ஆவிக்குரிய பரியை ஏற்படுத்துவார், நீங்கள் ஜெபிப்பவர்களானால் ஆண்டவர் சம்மந்தமில்லா காரியத்திலும் அவர் பலகாரியங்களை ஆயார வைக்கிறார். அந்த தருணத்தை இழக்காமல் பதில்சொல்லுங்கள்.

கதை சொல்பவர் எஸ்.டி.எஸ் முறைபடி கேள்விகளை தரமாய் எடுக்க கூடிய அளவில் தேர்ச்சி அடைவார்கள். மாணவர்கள் தாங்களாய் பதில்களை கண்டு எடுக்க சொல்லிக் கொடுப்பார்கள்; அந்த பகுதியில் பல செய்திகளை கொண்டுவர மாணவர்கள் அதிகமாய் ஆராய்ச்சி செய்ய உதவுகிறது, அதன் அதிசயம் தேவனின் ஈவாகிய ஆராய்ச்சியாகும்.

அன்பை காட்டு:-

இந்த முறையை அதாவது உரையாடல் முறையை பயன்படுத்த அதன் வெற்றி இந்த வசனத்தில் அடங்கும் 1 கொரி 13:1 - நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

இதை அறிந்துகொள்: பலர் முன்பு வந்து; கதை சொல்ல பயப்படுவார்கள், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

பல நேரம் போதகர்கள் மற்றும் ஆசிரியர்கள் மக்களுக்கு முன் பேச பயம் இல்லாத போதிலும்; மற்றவர்கள் முன் தாங்க சொன்னதில் திருத்தம் உள்ளது என கேட்டு பழகினவர்கள் அல்ல.

அதனால் உரையாடல் மூலம் பயனற்ற சுபாவம், மற்றும், மற்றவர் முன் திருத்தத்தை எதிர்பாராத போதகர் மற்றும் ஆசிரியர்களுக்கு சொல்ல வேண்டியது, எப்படி வேண்டுமானாலும் அவர்கள் கதையை, வேறுவிதமாய் சொன்னாலும் கதை சொல்லுபவர் பொறுமையாய் கேட்டு பதில் அளிக்க வேண்டும், தவறாமல் திருத்த வேண்டும்.

நீங்கள் அந்த உரையாடல் பகுதியை மாணவர்களுக்கு உற்சாகமாய் ஆராய்ச்சி செய்ய உதவலாம், அல்லது அந்த நேரத்தை ஒரு பயம் அல்லது பய பக்தியோடு தான்; மற்றும் ஒரு வகுப்பறை போல சரியான பதில் தர வேண்டும்; என அப்படி பட்ட சூழலையும் ஏற்படுத்தலாம்.

திரும்பவும் நீங்கள் கஷ்டபட்டு முயற்சி எடுத்து கதை சொல்லி கேள்வி கேட்க; உங்கள் மனதில் நீங்கள் நடத்தும் மக்களை குறித்த எண்ணம் வேண்டும். உங்கள் மனதில் இருக்க வேண்டியது; உங்கள் திறமை இந்த உரையாடலில் காண்பிப்பது அல்ல, உங்கள் அன்பு மாணவர்களிடம் காட்டுவதே பெரியது.

## திறமை - III - எப்படி கேள்வியை தயார் செய்வது

முக்கிய இலக்கு மற்றும் கதை சொல்வதின் பலன் ஆவன.

- ஆண்டவரின் குணாதிசயத்தை அறிவது
- மனித குளத்தில் ஆண்டவர் என்ன எதிர்பார்க்கிறது
- நம்மை பற்றிய உண்மையை ஒத்துக்கொள்வது

கென்னியா தேசத்து பாடசாலையை சேர்ந்த சபை நிர்வாகத்தில் இருந்தவர் பயிற்சியில் கலந்து கொண்டு அவர் சொன்ன ஒரு கண்ணோட்டம் ஆவது. 4 வருடம் சிறிய வளர்ச்சியை தான் கீழ் தரப்பட்ட கிராமத்தில் கண்டார்.

இந்த வகுப்பறைக்கு வர நான் இரண்டு நாள், ஒரு நாள் ஒட்டகத்தில் அடுத்த நாள் நெருக்கம் உள்ள பஸ் மேல் கூரையில் அமர்ந்து வந்து இங்கு சேர்ந்தேன். நான் இப்பயிற்ச்சயில் உற்சாகம் அடைந்தேன். நான் மற்றவர் எனக்கு சொல்லிக் கொடுத்ததை நான் சொன்னேன், ஆனால் இந்த பயிற்சிக்கு வருவதற்கு முன்பு வேதாகமத்தை எப்படி சொல்வது என அறியாமல் இருந்தேன் ஆனால்

"நான் ஜனங்களை நான் அறியாத இடத்திற்கு,
கொண்டு செல்ல முடியாது என்பதை அறிந்தேன்"

இதனால் தான் கேள்வியை கதை சொல்லுபவர் தயாரித்து, தான் தேவனிடம் அறிந்து; அதன் பின்னர் ஜனங்கள் அந்த பொக்கிஷத்தை அறிய செய்வதாகும்.

“ரொட்டி துணிக்கைகள்” முறைதான் எஸ்.டி.எஸ் முறையில் படிக்கிறோம், இந்த பயிற்சியில் பயில்வோருக்கு சிறந்த திறமையான சரியான கேள்வி உருவாக்கி, அதை கேட்க உதவுகிறது, இது எதேட்சியாய் நடக்கலாம், அதே வண்ணம் கேள்விகளை நீங்கள் கேட்க ஆரம்பிக்க; முதலில் சின்ன சின்ன கேள்விகளை கொண்டு ஜனத்தை உற்சாகபடுத்தி அவர்களை ஆராய்ச்சி செய்ய உதவ வேண்டும்.

உங்கள் கவனத்திற்கு: அடுத்ததாக உங்கள் பயிற்சிக்கு கொடுக்க பட்ட கதை ஆபிரகாம் மற்றும் சாராள். இந்த கதை மற்றும் பல கதை இந்த புத்தகத்தில் இருக்க;

இதன் மூலம் ஆவிக்குரிய கண்ணோட்டம், நடைமுறை படுத்தல் மற்றும் கேள்விகள் கூட, இங்கு எழுதப்பட்டு உள்ளது. எஸ்.டி.எஸ் பயிற்சியில் நீங்கள் கேள்விகளை எழுதிவைக்க பயிற்சி கொடுப்பதில்லை. இந்த இடத்தில் கேள்விகளை கொடுத்ததின் காரணம்; யாருக்கெல்லாம் படிக்க தெரியுமோ; எஸ்.டி.எஸ் பயிற்சி மற்றும் வகுப்பறையில் பயிற்சி பெற முடியாதோ, அவர்கள் கற்பதின் மூலம் இந்த எஸ்.டி.எஸ் பயிற்சி முறையை அறிந்து கொள்வார்கள். இவையெல்லாம் மாதிரி வினாக்கள். உங்கள் தனிப்பட்ட வேதாகம பயிற்சி மற்றும் நாட்டுத்துதலின் மூலம்; உங்கள் யோசிக்கும் திறன் கேள்விகளில் தெரியும் அல்லது வெளிப்படும்.

நீங்கள் கதை சொல்பவராய் காணப்பட்ட, சில கண்ணோட்டம், அப்பியாசப்படுத்தும் காரியம் நாங்கள் கொடுத்தின்மூலம் நீங்கள் ஆராயவும்; கேள்விகளை கேட்பதற்கு முன்பே பொக்கிஷங்களை கதையை கேட்பவர்கள் அறிந்து கொள்வார்கள். இப்படி சீக்கிரமாய் பொக்கிஷத்தை எடுக்கும் மாணவர்கள்; பாராட்டதக்கவர். ஏனெனில் வேதத்தில் ஆழமான அதிகாரம் மற்றும் பொக்கிஷங்களை கேட்போர் தாங்களாய் கண்டு பிடிக்கிறார்கள்.

மற்றவர்கள் பொக்கிஷத்தை அறிய தயாராகும் வினாக்கள்

கேள்விகளை உருவாக்க, அதாவது மற்றவர்கள் வேத பொக்கிஷத்தை அறிய உதவ கதையை திரும்ப வாசியுங்கள், கதையின் பல காரியத்தை மனதில் இருத்தி ஆவிக்குரிய கண்ணோட்டத்தின் மூலம் ஆராய தொடங்க; அந்த ஞானி எத்தனை கேள்விகளை கதையில் கேட்டானோ, இது தான் ஆவிக்குரிய கண்ணோட்டத்தை அறிய முதல்படி.

அதே வண்ணமாக, கோர்வையாய் நீங்கள் உங்க கதைய கேட்போரை, கேள்விகளுக்குள் கொண்டு சென்று; ஆராய்ச்சியை செய்ய உதவ வேண்டும். நீங்கள் கேட்ட கேள்வியை மனதில் கொண்டுவர நேரம் எடுக்க; கேட்ட கேள்விகளையே பயன்படுத்துங்கள், மற்றவர்களிடமும் அதே கேள்வியை கேள்.

> எ.டு. ஆதி 12-10- 20 இந்த அதிகாரத்தை அதில் அடங்கி உள்ள கதையை சொல்ல, நீங்கள் அநேக ஆவிக்குரிய கண்ணோட்டத்துடன் காரியங்களை அந்த அதிகாரத்தின் பின் பகுதியை வாசிப்பதற்கு முன்பாகவே உங்களுக்கு தெரியும். (ஆதி 12:10 -13)

அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிரகாம் எகிப்து தேசத்திலே தங்க அவ்விடத்துக்குப் போனான். அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது தன் மனைவி சாராளைப்பார்து : நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரி என்று அறிவேன் எகிப்தியர் உன்னைக் காணும்போது இவள் அவருடைய மனைவி என்று சொல்லி என்னைக் கொன்றுபோட்டு உன்னை உயிரோடு வைப்பார்கள். ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும் நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்.

இந்த கதை ஆபிரகாம் முன்னதாகவே ஒரு காரியத்தை தானாக தெரிந்துகொண்டான். அவன் ஆண்டவரை நம்பி இருக்கலாம், ஆனால் பயத்தை வெளிகாட்டினான், அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பஞ்சம் வர; அங்கு இருந்து எகிப்துக்கு ஓட, சாராளையும் தன் தங்கை என பொய் சொல்ல செய்தான், சிலர் எகிப்துக்கு போவதே ஒரு பாவம் என கருதி கண்ணோட்டத்தில் சொல்ல, யாக்கோபு மற்றும் அவன் குடும்பம் எகிப்துக்கு தேவனின் நடத்துதலால் சென்றனர்; என்பதின் மூலம் பரிவை காட்டலாம்.

இதற்கு பின்பு பல ஆராய்ச்சி மூலம் நீங்கள் ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தும் காரியங்களை கொண்டு; கண்ணோட்டத்தையும் அறிந்திருக்கலாம். ஆண்டவர் எல்லோருக்கும் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார் என அறிவோம். அது நாம் கீழ்படியும் இடமாக இருக்க வேண்டும் என வசனம் சொல்லுகிறது. அதன் பின் அப்பியாசப்படுத்தலில் - நாம் சோர்வின் மூலம் தவறாய் முடிவு எடுத்து தேவனை நாடாமல்; உலகத்தை நாடி உதவிக்காய் செல்கிறோம். இப்படி ஓடுவதின் மூலம் பெருத்த பாவம் செய்பவர்களாய் மாறுகிறோம்; அதாவது பொய் மற்றும் நம்மை நம்பி உள்ளவர்களையும் பாவம் செய்ய வைக்கிறோம்.

உங்கள் கண்ணோட்டங்களை கேள்வியாய் மாற்று:-

உன் கேள்வியை தயாரிக்க மற்றவர்களை ஆராய்ச்சியில் நடத்தி புதையல்லை கண்டெடுக்க உன் கேள்வியை கதையை விட மேலானதாய் எடுத்துகாட்டு.

ஆவிக்குரிய கண்ணோட்டத்தை வைத்து உங்கள் முன் அநேககேள்விகள் வைக்கபட்டு உள்ளன.

1. இந்த கதையில் முன்பு பார்த்தவண்ணம், ஆண்டவர் ஆபிரகாமை எங்கு போக மற்றும் என்ன சொன்னார்?

2. நாம் பார்த்தது ஒரு பஞ்சத்தின் மூலம் ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை விட்டு எகிப்துக்கு உதவிக்கு போவதை காண்கிறோம். வேறேனும் காரியம் ஆபிரகாம் செய்திருக்கலாம் அந் தேசத்தைவிட்டு போகாமல் இருக்க, என்ன நினைக்கிறீர்கள்.

3. எந்தவிதமான உணர்ச்சி மற்றும் உணர்வு ஆபிரகாமை இந்த கதையில் தடுத்தது? அவனின் உணர்வு எகிப்தியர் பற்றி, ஆபிரகாம் சாராளிடம் சொல்ல எப்படி இருந்திருக்கும்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

4. இந்த கதையில் பார்த்த வண்ணம், ஆபிரகாமுக்கு எதேனும் வாக்குத்தம் கொடுத்தாரா, அவனை பயம் இல்லாமல் இருக்க செய்தாரா? அப்படியானால் அது என்ன? எங்கு அவன் நம்பிக்கை வைத்தான் என எண்ணுகிறார்கள்?

5. ஆபிரகாமுக்கு நெருங்கியவர், பாவத்தின் பிடியில் சிக்க இருந்தார்களா? என்ன பார்க்கிறீர்கள் இந்த கதையில்?

ஆவிக்குரிய கண்ணோட்டத்தை கொண்டு அப்பியாசப்படுத்த பல ஆராய்ச்சிக்குள் கொண்டு செல்லும் மாதிரி கேள்விகள்.

1. ஆண்டவர் எந்த இடத்தில் ஆசிர்வாதம் என சொன்னார் கதையில் எவர்களுக்குயாவது விதிமுறைகள், எங்கு நீ இருந்தால் தேவனின் ஆசீர்வாதம் உண்டு என சொன்னதுண்டா? அப்படியிராமல் இருக்க நாம், ஆசீர்வாதமாய் எப்படி இருக்க வேண்டும் என தேவனின் விதிமுறை உண்டு? அது என்ன என்ன?

2. இன்றைக்கு வாழ்க்கைக்கு சவால் கொடுக்கும் சூழ்நிலை விசுவாசிக்கு உண்டா? எப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலை எதிர்கொள்கின்றனர். நீ அல்லது உனக்கு தெரிந்தவர் இப்படிபட்ட சூழ்நிலையில் உள்ளவர்களா? கஷ்டமான நேரத்தில் ஆபிரகாம் சரியான தீர்வு எடுத்து இருக்கலாம் என்கிறீர்களா?

3. ஆபிரகாம் தன் உணர்ச்சி அவனை மேற்கொள்ள தன் விசுவாசத்தை கைவிட்டான்? இன்றைக்கு இப்ப நடக்கிறதா? விசுவாசத்தை இழப்பது எப்படி அது காணப்படுகிறது? கஷ்டமான நேரத்தில நாம் எப்படி இருக்க வேண்டும் என இக்கதை உணர்த்துகிறது?

4. காரியங்கள் மோசமாய் இருக்க தேவன் சொன்ன இடத்தை விட்டு இன்றைக்கு தேவன் நம்மை அழைத்த இடத்தில் இருந்து நாம் செல்கிறோமா? உனக்கு

இப்படி நடந்துள்ளதை அல்லது மற்றவர்களுக்கு இப்படி நடந்ததுண்டா?

5. கஷ்டமான நேரத்தில் என்ன நாம் ஆபிரகாம் வாழ்வு, நாம் என்ன செய்வது என்ற காரியத்தை உணர்த்துகிறதா? எப்படிப்பட்ட காரியத்தை செய்ய வேண்டும்?

6. தவறான உணர்வு / தவறான பாதையில் இன்றைக்கு நடத்தும் என்று அறிகிறீர்களா? எப்படிபட்ட உணர்வு கஷ்டமான நேரத்தில் மனிதனை ஆளுகை செய்கிறது? நீங்கள் அல்லது நீங்கள் அறிந்தோர் தவறான உணர்வு மூலம், தவறான பாதை தெரிந்தெடுத்ததை அறிவீர்களா? அதை பகிர்ந்து கொள்ள முடியுமா?

7. வேதாகமத்தில் உள்ள பல கதைகளில் தேவன் கொடுத்த வாக்குதத்தம் - இன்றைக்கு நாம் நம்புவதாய் இருக்கிறது.

8. ஆபிரகாமின் அவ்விசுவாசம் அநேகரை பாதித்தது? இன்றைக்கு தேவனை நம்பாதது அநேகரை பாதிக்கிறதா? எப்படி இருக்கும்? உனக்கோ அல்லது மற்றவர்களுக்கு இப்படி நடந்ததுண்டா?

முதல் பகுதியான ஆதியாகமத்தில் இருந்து; சில ஆவிக்குரிய கண்ணோட்டம், அப்பியாசப்படுத்தலின் மூலம் எடுக்கப்படட கேள்விகள் ஆகும்.

மனதில் வை: நீங்கள் கேள்விகளை எடுத்திருந்தாலும் நீங்கள் கேட்பவர் சொல்லும் காரியங்களுக்கு; உங்கள் செவியை சாய்ப்பது அவசியம். அவர்கள் பல பொக்கிஷம் மற்றும் கேள்விகள் அந்த பகுதியில் இருந்து சொல்லலாம், நீங்கள் தயாரித்ததை கேளுங்கள். ஆனால் மற்ற காரியம் வித்தியாசமாய் பொக்கிஷத்தை அறிவதில் செல்ல; அதன் வழியாய் கலந்துரையாடலும் செல்லட்டும். உங்கள் கேள்வி மூலம் ஆவியானவர் நேரடியாய் மக்களிடம் பேசுவது எவ்வளவு அருமையான காரியம்.

---

# கதையின் முன்னுரையை தயாரித்தல்:-

ஆவிக்குரிய பொக்கிஷம் மற்றும் கண்ணோட்டம், அப்பியாசப்படுத்துதல் போன்ற காரியங்களை கண்டெடுத்த, பின்னரே முன்னுரையை பார்த்து கதைக்கு அது தேவையா என ஆராய்கிறோம், ஏனெனில் எல்லாவற்றையும் கண்டுபிடித்த பின்னரே இதை தீர்மானம் செய்ய இயலும்.

முன்னுரை அது கதையின் முதுகெலும்புபோல் கதையை புரிய உதவும், வசனத்திற்கு முன்பாய் என்ன வருகிறது என்பதை அறிய உதவுகிறது.

முன்னுரையில் இருக்க கூடிய காரியம்?

1. முன்னுரை தேவையானால், சில வார்த்தை மற்றும் பகுதியைகொண்டிருக்க வேண்டும். முன்னுரை என்பது ஒரு விதமான சிறு பகுதியின் வடிவு; அது சிறியதாய் மற்றவர்களை உற்சாகப்படுத்துவதாய் இருக்க வேண்டும். சின்ன வடிவு நல்லது. பெரிய காரியங்களை விட ஒரு சிறுகுறிப்பு வடிவில் உள்ளது நல்லது. இங்கு முன்னுரையில் பயன்படுத்த வேண்டிய 3 காரியம் சொல்லப்பட்டுள்ளது.

அ. ஒரு நேரத்திற்கு சம்பந்தபட்டதாய் இருக்க; அல்லது இடம், அதை முன்னிட்டு முன்னுரையை சொல்லவும்; நன்கு கதை புரியதக்க அளவில் முன்னுரை இருத்தல் அவசியம்.

ஆ. சில அர்த்தங்கள் கதையில் இருக்கும்; அது புதிதாய் குழம்புவதாய் இருக்கலாம் அந்த காரியத்தை முன்னுரையில் சொல்லி கதையை ஆரம்பிக்கலாம். வார்த்தைகளை "தேவலாயம்" "தேவகுமாரன்" "தீர்க்கதரிசிகளின் குமாரன்"

இ. கேள்வி நேரத்தில், கேட்பவர் பொக்கிஷத்தை அறிய அது பழைய ஏற்பாட்டின் காரியத்தை அறிந்திருந்தால்தான் கண்டெடுக்க முடியும். எ.டு. யோவான் புஸ்தகத்தில் இருந்த கதை சொல்ல "இதோ உலகத்தின் பாவத்தை சுமக்கும் தேவாட்டுக்குட்டி, இதனை பல தடவை தேவன் வெளிபடுத்தி உள்ளவை வேதத்தில் எனவும். முன்பு ஒரு பாவம் செய்தவர்கள் ஆகில் அவர்கள் ஒரு ஆட்டினை பலியிட வேண்டும் என்பதை உணர்த்தலாம்.

2. எந்தெந்த காரியம் உங்கள் கதையில் கேட்க விரும்புகிறீர்களோ, அத்தனையும்

முன்னுரையில் தேவையில்லை.

3. சில வேளையில் முன்னுரையில் தேவையில்லை.

4. எஸ்.டி.எஸ் பயிற்சியில் வேதாகமத்தில் உள்ள செய்தியை சொல்லுவோம் அதைவிட வேறு செய்தியான எபிரேய, கிரேக்க பதங்கள் நிறைந்ததை பயன் படுத்துவது இல்லை. எல்லா விசுவாசிகளை உற்சாக படுத்தி வேத வாக்கியத்தை கதையில் சொல்ல விரும்புகிறோம். கற்போர் தேவ வார்த்தை அறிந்து, அதில் நம்பிக்கை பெற ஆசைபடுகிறோம்.

5. முன்னுரை கதையில் எல்லா கருத்தை அடக்கி உள்ளது. முன்னுரை சரியாய் சொல்ல வேண்டும். அதனை முடித்த பிறகு இது முடிந்தது இப்பொழுது கதைக்குள் போகலாம் என சொல்ல வேண்டும். இது தான் கதை என சொல்வதைவிட; அந்த கதையே அவர்களுக்கு இன்னது என்பதை தெரிவிக்கட்டும்.

# பாடம் 5
# எடுத்துரைத்தல் மற்றும் தயாராக்குதல் என்னும் திறமையை முயற்சி செய்ய வேண்டும்

## முதலாவது, இந்த உதாரண கதையை கற்றுக்கொள்வோம்

லூக்கா சுவிசேஷத்திலுள்ள இந்த வேதாகம கதையை கற்றுககொள்ள நாம் திறன் ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ள காரியங்களை கற்று, திருப்பிபார்க்க வேண்டும்.

> பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மாசுத்தாள் என்னும் பேர்கெண்ட ஒரு ஸ்திரி அவரை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள், அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்காா்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மாா்த்தாளோ பற்பல வேளைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து : ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.
>
> இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக : மாா்த்தாளே, மாா்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டுப்போகாத நல்ல பங்கைத் தெரிந்துக்கொண்டாள் என்றாா் (லூக் 10:38-42).

தயாராகுதல் : ஆவிக்குரிய பொக்கிஷத்தைக் கண்டறிதல்

### பொக்கிஷம் வேட்டை - 1 ஆவிக்குரிய காரியங்களை கண்டறிதல்

கதையை படிக்கின்ற வேளையில் சில முக்கியமான பொக்கிஷங்களை அறிந்திருக்பீா்கள். இப்பொழுது நாம் படித்த வேதாகம கதையின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, புத்தியுள்ள ஆலோசகரின் கேள்விகளை இங்கு பயன்படுத்தினால் நாம் இன்னும் அதிகமான பொக்கிஷங்களை கண்டுக்கொள்ள முடியும். ஒவ்வொரு புத்தியுள்ள ஆலோசக கேள்விகளை நாம் முயற்சிக்க வேண்டும். கதையிலுள்ள சூழ்நிலை என்ன? இதற்கு முன்பு இது போன்ற சம்பவங்கள் வேதாகமத்தில் (சரித்திரபிரகாரமாக அல்லது ஆவிக்குரிய பிரகாரமாக) இருக்கிறதா அது ஒரு வேளை

இந்த கதையை கண்டு புரிந்துகொள்ள உதவுமா? ஜனங்கள் அதை குறித்து என்ன சொன்னார்கள், செய்தார்கள் என்றும் இதிலிருந்து என்ன ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொள்ள முடியும்? ஒரு வேளை தெரிந்துக்கொள்ளுதல் இருந்தால், எதை தெரிந்துக்கொண்டார்கள்? இந்த தெரிந்துக் கொள்ளுதலிருந்து வந்த முடிவு ஏதேனும் உண்டா? ஆலோசகர்கள் உபயோகத்திருந்த திறன்கள் - அவருடைய அநேகமான கேள்விகள், ஆலோசகர் கேள்விகளுக்காக மேலாக, ஜனங்களுக்கும், இந்த சூழ்நிலையிலும் தேவனுடைய கிரியை என்ன; என்று நாம் கேள்வி எழுப்ப வேண்டும்.

இது போன்ற எல்லா கேள்விகளின் மூலம், கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய காரியங்களை கவனித்து கண்டறிதல்.

1. மார்த்தாள் தானே எல்லா வேலையையும் செய்ய முடியாததால், சில தவறான முடிவை எடுக்கிறாள். மார்த்தாள் இயேசுவை அழைத்திருந்தாலும் அவள் அங்க இல்லாததற்கு மற்றவர்களை குற்றம் சாட்டினாள். இயேசுவையும் குறைச்சொன்னாள். இயேசுவிடம் உதவி கேட்பதற்கு பதிலாக இயேசுவையே கேள்விக்கேட்பாள்.
2. இயேசுவை, மார்த்தாள் ஆண்டவர் என்று அழைத்தாலும், அவளே அங்கு அதிகாரம் பண்ணினாள்.
3. மார்த்தாள் அவமதிப்பதை, இயேசு பொருட்படுத்தாமல் இருந்தார்.
4. இயேசு மார்த்தாளை அன்பாய் திருத்தினார்
5. மார்த்தாள் தான் செய்யும் காரியம் தான் மிகவும் முக்கியமானது என்று நினைத்தாள், ஆனால் இயேசு மரியாளே தேவையான அந்த ஒரு காரியத்தை செய் என்றார்.
6. மார்த்தாள் தெரிந்துக் கொள்ள வாய்ப்பு இருந்தது.
7. மரியாள் தன்னுடைய, கலாச்சாரத்திற்கும்; மற்றவர்களின் எதிர்பார்ப்புக்கும் மேலாக இயேசுவையே தனது பங்காக தெரிந்துக்கொண்டாள்.
8. மரியாள் தன்னை விட்டு எடுப்படாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள் என்பதை இயேசு புரியவைத்தார்.

# பொக்கிஷ வேட்டை - 2 ஆவிக்குரிய காரியங்களைநடைமுறைப்படுத்தி கண்டறிதல்

ஆவிக்குரிய காரியங்களை கவனித்து நாம் கண்டறிந்த, காரியங்களை அடிப்படையாக கொண்டும், கதைக்கு திரும்பி போய் சில ஆவிக்குரிய நடைமுறைப்படுத்துதல் என்றும் பொக்கிஷங்களைப் கண்டறிய வேண்டுமே.

முதலாவது, ஆவிக்குரிய காரியங்களை கவனித்து பார்த்ததை நாம் நினைவிற்க்கு கொண்டு வந்து, சில கேள்விகளைக் கேட்க வேண்டும், இந்த நாட்களில் அதுபோன்ற காரியங்கள் நடக்கிறதா? எந்தெந்த வழிகளில் நடக்கும்? எனக்கோ அல்லது எனக்கு தெரிந்த மற்றொருவருக்கோ இது நடந்திருக்கிறதா? ஒரு வேளை எனக்கு நடந்திருந்தால், இந்த கதை எனக்கு உதவியாக இருக்கிறது? ஆவிக்குரிய காரியங்களை நடைமுறைப்படுத்த கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் உதவியாக இருக்கும்.

1. தேவனுடைய வார்த்தைக்கு நேரமில்லாத அளவிற்கு மற்ற வேலைகள் உங்களை நெருக்காதபடிக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.
2. நம்முடைய வாழ்வில் பிரச்சனையை வைத்துக்கொண்டு தேவனை நோக்கி உமக்கு கவலையில்லையா, என்று கேட்பது எவ்வளவு துக்ககரமான செயல்
3. நம்மால் முடியாத காரியங்களை, நாம் ஏற்றுக்கொண்டு அதை முடிக்க இயலாமைக்கு கர்த்தரை குறைச்சொல்லுவது எவ்வளவு அநியாயம்.
4. நாம் பிரச்சனைகளை எப்படி தீர்ப்பது என்று தேவனுக்கு சொல்லித்தர வேண்டுமா?
5. அநேக வேளைகளில் தேவையில்லா வேலை மற்றும் தேவன் வழி நடத்தா பாதையில் செல்கிறோமா?
6. நாம் எதிர்பார்க்கும் நல்ல சூழ்நிலை இல்லாவிட்டால் நாம் அநேகமுறை தேவனுடைய அன்பை கேள்விகேட்கிறோம்.
7. இயேசு, மார்த்தாளை பொறுமையுடனும், நிதானத்துடனும் கையாண்டு சரிப்படுத்தினார். நாம் அநேகமுறை தேவனை அவமதித்தாலும் அவர் நீடிய சாந்தத்துடன் நம்மோடு கனிவோடு பேசுகிறார்.
8. எப்படி இயேசு கரிசனையோடு மார்தாளை பெயர் சொல்லி அழைத்து அவள் மீது அவர் வைத்திருந்த உறவை வெளிப்படுத்தினாரோ, அதே போல நம்மையும் பெயர் சொல்லி அழைத்து நம்மோடு தனிப்பட்ட முறையில் உறவாடுகிற தேவன் அவர்.

9. சமையலறையில் அல்லது பரிமாறுதல் அல்லது ஊழிய சம்மந்தமான பிற வேலைகளுலுக்கு நேரத்தை ஒதுக்குவது தவறு அல்ல, ஆனாலும் அந்த வேலைகள் நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை கேட்பதற்கு தடையாக இருந்தால், நீங்கள் நல்ல பங்கை தெரிந்து எடுக்கவில்லை என்று அர்த்தம்.

10. இயேசு கடைசியாக மார்த்தாளை குறித்து அந்த பகுதியில் சொல்லும்போது, மரியாள் தேவையானதை தெரிந்துக்கொண்டாள் என்றார். மார்த்தாள், மரியாள் தனக்கு உதவி செய்வதையே முக்கியமானதாக நினைத்தாள்.

    சில வேளைகளில் நாமும் நாம் செய்யும் வேலைதான் முக்கியம் என்று தீர்மானிக்கிறோம். ஒருவேளை, அந்த வேலை கர்த்தருடைய பார்வையில் முக்கியமானதாகவும் இருக்கிறது.

11. சில வேளைகளில் சில சூழ்நிலைகளில், நாம் தேவனிடத்தில் கேட்காமல் நாமே அந்த சூழ்நிலைகளை எதிர்க்கொள்ள பார்க்கிறோம். எது அவசியம், நமக்கு எது முக்கியம் என்று நாமே தீர்மானித்துக்கொள்கிறோம். ஜனங்கள் ஒருவேளை தேவன் சொன்னதை அந்த சூழ்நிலையில் செய்ய முற்படும்போது; அவர்களை நாம் தடை பண்ணுகிறோம்.

12. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துக்கொண்டாள் என்று இயேசு கூறினார்.

    கடைசி நியாயத்தீர்ப்பிலே, நம்முடைய வாழ்க்கையில் நாம் செய்த சில காரியங்கள், தேவனுடைய பார்வையில் அவசியமில்லாததாய் காணப்படும். ஒருவேளை அது அவசியமுள்ள காரியமாய் இருந்திருந்தால் அது நம்மைவிட்டு எடுபடாத நல்ல பங்காய் இருந்திருக்கும்.

13. அநேக நேரம் நாம் நம் கலாச்சாரம், குடும்பத்தின் விருப்பத்திற்கு எதிராய் ஆவிக்குரிய காரியங்களை தெரிந்தெக்க நேரிடும்.

இப்பொழுது உங்களிடத்தில் இருக்கிற பொக்கிஷங்களைக் கண்டு கொண்டீர்கள், இப்போது கதைக்கு திரும்பிச் சென்று நம்மை கேட்கிறவர்கள் தங்கள் பொக்கிஷங்களை கண்டுக்கொள்ள உதவும் கேள்விகளை நாம் உருவாக்க வேண்டும். அடுத்தாக எஸ்.டி.எஸ். STS முறையை பார்க்க வேண்டும், அந்த முறை ஒருவேளை நீங்கள் உருவாக்கின கேள்விகளை பயன்படுத்தியிருக்கலாம். ஆகவே, இப்போது நாம் கதையை மற்றவர்க்கு செல்லும்போது நாம் என்ன செய்கிறோம் என்பதை சற்று திருப்பிப்பார்ப்போம்.

# கதையை மூன்று முறைச் சொல்லுதல்

கேள்விகளுக்கு சரியான உத்தரம் அளிக்க கேட்கிறவர்களுக்கு மூன்று முறை கதையை சொல்லுதல் பிரயோஜனமாக இருக்கும்.

1. கதையைச் சொல்லுங்கள்
2. கேட்பவர்களிலிருந்து ஒரு நபரை கதையை திரும்பச் சொல்ல சொல்லுங்கள்
3. நீங்கள் கதையை முன்னோட்டமாக சொல்லி, கேட்கிறவர்கள் கதையை சொல்ல வையுங்கள்.

முதல் தடவை - நீங்கள் கதையைச் சொல்லுங்கள்

உங்களால் முடிந்தவரை கதையை நேர்த்தியாகவும், சுவையாகவும் சொல்லுங்கள். நீங்கள் கதை சொல்லும்போது உங்களுடைய சரீரத்தையும் கதைக்கு தகுந்தாற்போல் அசைத்து பாவனை செய்யுங்கள்.

இரண்டாவது முறை - தன்னார்வ உள்ள ஒருவரை கதையை திரும்பச் சொல்லச் சொல்லுங்கள்.

தன்னார்வமுள்ள ஒருத்தரை, பயன்படுத்துவதின் நோக்கம், ஒரு குழுவுக்கு ஒரு நபர் எப்படி சத்தமாக கதை சொல்ல முடியும் என்பதை உற்சாகப்படுத்த தான், தன்னார்வ சமயம், என்பதுதான் ஒரு குழுவை உட்படுத்திக் கொள்ளுதல் என்பதற்கான முதல் முயற்சி. ஒரு குழுவில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் உற்சாகமமாக பேச வேண்டும் என்றால் முதலாவது அந்த குழுவிலிருந்த ஒரு தன்னார்வ நபரை, நாம் அழைத்து அவரிடம் நாம் பரிவுடன், கனிவுடன் நடக்கும்போது, நாம் கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் அவர் மாத்திரமல்ல, அவரோடு சேர்ந்து அந்த குழுவில் உள்ள எல்லாரும் உற்சாகமாகவும் தைரியமாகவும் சத்தமாகவும் பேச வாய்ப்பாய் இருக்கும்.

அம்மா கதை மாத்திரம் (சுகமா) என்கிற இந்த முயற்சியில், ஜனங்கள் ஏதோ கதையை மாத்திரம் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல; அவர்களும்; கதையை நேர்த்தியாக எப்ப மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க முடியும் என்பதை பின்னர் பார்ப்போம்.

ஒரு வேளை உங்களுக்கு சமயமில்லை என்றால் இரண்டாவது முறையான, தன்னார்வ முறையை தவிர்த்து, மூன்றாவது முறைக்கு நேரடியாக சென்றுவிடுங்கள் தன்னார்வ நபர் அழைப்பதற்கு இரண்டு வழிகள்:

வாய்ப்பு 1. தன்னார்வ நபரை நோக்கி இப்படிச் சொல்லுங்கள்; உங்களுக்கு அருகாமையில் உள்ள ஒருவரிடம் நீங்கள் கேட்டக் கதையை சொல்ல சொல்லலாம் அல்லது நீங்கள் அந்த கதையை அவரிடம் சொல்லலாம்" தன்னார்வ தோழரை பயன்படுத்துவதன் நோக்கம், ஏற்கனவே நாம் சொன்னதுபோல குழுவில் உள்ளவர்கள் சத்தமாக பேச அது ஏதுவாயிருக்கும் எப்போதுமே ஒரு குழுவில் தங்களுக்கு பிடித்த நபருடன் பெரும்பாலும் ஜனங்கள் அமருவார்கள், ஆகவே அது அவர்கள் தங்கள் அருகில் உள்ளவர்களுக்குச் கதைச் சொல்ல ஏதுவாயிருக்கும்.

பொதுவாக கிறிஸ்தவ சமுதாயத்திலும் போதனை முறையை கையாளுகிறார்கள் ஆனால் ஜனங்கள் எளிதாக கற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அவர்களுடைய கருத்துக்களையும், சாதனைகளையும் பகிர்ந்துக்கொள்ள வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஒரு புதிய குழுவுக்கும் நீங்கள் முதல் முறையாக கதைச் சொல்லும் போது சிறந்த முறை என்பது ஒரு தன்னார்வ பெயரைத் பயன்படுத்தி, நாம் சொன்ன கதையை திரும்பச் சொல்ல வைக்க வேண்டும்.

ஒரு துணுக்கு! ஒருவேளை முதல் முறை கதைச் சொல்லும்போது ஏதாவது ஒரு பகுதியை நீங்கள் மறந்திருந்தால், இந்த தருணம் என்கிற முறையை பயன்படுத்துவது மூலம் நீங்கள் பகிர்ந்த; கதையை ஒரு முறைக்கூட சரிபார்க்க உதவும். ஜனங்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ளவர்களிடம் கதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது நீங்கள் வேதாகமத்தை திறந்து சரிப்பார்த்துக்கொள்ளலாம்

வாய்ப்பு 2 முதலாவது வாய்ப்பை பயன்படுத்தின பிறகு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தலாம். அம்மா கதை சொல்லுதல் முறையை பயன்படுத்தியதின்

மூலம் ஜனங்கள் தன்னார்வமாக வந்து, கதைச் சொல்ல முற்படுவார்கள்.

யாராவது ஒரு தன்னார்வ நபர் முன்பு வந்து, மற்ற எல்லாருக்கும் கதைச் சொல்லிக்கொண்டிருக்கும் போது நீங்கள் வேதாகமத்தை திறந்து சரிப்பார்த்துக்கொள்ளலாம்; கதைச்சொல்லுமாறு அழைக்க வேண்டும். ஒருவேளை தயக்கம் காட்டினால், அவர்களிடம் உங்களுக்கு தெரிந்தவரைக்கும் சொல்லுங்கள் என்று புன்னகையுடன் உற்சாகப்படுத்துங்கள். முன்னும், பின்னுமாக நடந்து, யாராவது ஒரு தன்னார்வ நபரை அழையுங்கள்.

ஒரு வேளை கதை பெரியதாகவோ அல்லது ஏதோ காரணத்தினாலோ யாரும் முன் வரவில்லையென்றால், இப்படி சொல்லுங்கள் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, ஏன் எல்லாரும் சேர்ந்து சொல்லக் கூடாது? என்று சொல்லி யாராவது ஒருவர் முதலில் தொடங்குங்கள், ஒருவேளை மற்றவர்கள் அவருக்கு உதவி செய்து முழுகதையும்

சொல்லச் சொல்லுங்கள்.

அநேகரை பயன்படுத்துதல், அவர்களுக்கு தைரியத்தை உண்டாக்கும்.

என்னுடைய அனுபவத்தில், 25 நாடுகளில் கதைச் சொல்லும்போதும் தன்னார்வ நபர்கள்; எப்போதும் வந்துவிடுவார்கள் ஒருவேளை வரவில்லையென்றால் நான் பழியை என் மீது ஏற்றுக்கொண்டு, நான் அவர்களிடம் கதையை ஒருமுறைக்கூட சரிபார்க்க வேண்டும் என்றும் சொல்லி அவர்களை கதைக்கு உள்ளாக நடந்துவேன்).

தன்னார்வ நபர் கிடைக்கும் போது கரங்களைத் தட்டி, அவரை வரவேற்று உற்சாகப்படுத்தவேண்டும். அவரை முழுக்கதையையும் சொல்லுமாறும் சொல்லுங்கள்; ஒருவேளை அவரால் சொல்ல முடியவில்லையென்றால் ஒரு முறை தானே கேட்டிருக்கிறீர்கள், நீங்கள் மறந்திருந்தாலும் பரவாயில்லை தெரிந்ததைச் சொல்லுங்கள் என்றும் சொல்லி கதையை நாம் ஆரம்பித்து வைக்க வேண்டும்.

தன்னார்வ நபரிடமிருந்து பத்து அடி தள்ளி நில்லுங்கள், அவருக்கு அருகாமையில் நீங்கள் நின்றால் அவர் குழுவைப்பார்த்துச் சொல்லுவதை தவிர்த்து உங்களைக் பார்த்து கதை சொல் உங்களுடைய ஒப்புதலை பெறப்முயற்சிப்பார். நீங்கள் ரொம்பவும் தள்ளி, நின்றாலும் அந்த நபர் தனிமையாய் இருப்பதை போல் உணருவார். எப்போதும் தன்னார்வ நபர் கதை சொல்லும்போது அவர் சொல்லுவதை ஆமோதிப்பதுபோல உங்கள் தலையையோ அல்லது மற்ற செய்கைகளினால் உற்சாகப்படுத்துங்கள்.

தன்னார்வ நபரின் மீதே உங்கள் பார்வை இருக்க வேண்டும். இந்த நேரத்தில் வேறு யாருடனும் பேசிக் கொண்டிருக்காதீர்கள். அந்த தன்னார்வ நபர்க்கு உங்கள் நம்பிக்கை வரவேண்டுமென்றால் நீங்கள் அவரை கவனித்து கேட்டுக் கொண்டிருங்கள்.

பிறகு அந்த கதையை தன்னார்வ நபர் சொல்லி முடித்துபின்பு, நீங்கள் அதினால் சந்தோமடைந்தீர்கள் என்பதை வெளிக்காட்டுங்கள்; அவர் சொன்ன விதத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது பிடித்திருந்தால் அதை சுட்டிக்காட்டி அந்த தன்னார்வ நபரை உற்சாகப்படுத்துங்கள்.

சில சமயங்களில், அந்த நபர் முழுக்கதையும் ஞாபகம் வைக்கப் முடியாமல் சரியாக சொல்லவில்லை என்றால், குழுவிலிருந்து யாரையாவது அல்லது நீங்களோ அவரை சரிச்செய்ய முயற்சிப்பது நன்றாக இருக்காது.

கதையை கற்றுக்கொள்கிறவர்கள் மத்தியில், கதையை பாதியில் சரிச்செய்ய முயற்சிப்பது குழப்பத்தை உண்டாக்கும். அதற்கு மாறாக அவர்கள் சில இடங்களில் சரியாக சொல்லியிருப்பார்கள் அதைச்சொல்லி உற்சாகப்படுத்துங்கள்.

அந்த தன்னார்வ நபர் ஒருவேளை, நீங்கள் சொன்ன கதையில் கொஞ்சம் சுட்டிச்சொல்லியிருந்தால் அதை நீங்கள் அணுகுகிறீர்கள் என்று மற்றவர்கள் எதிர்ப்பார்த்து கொண்டிருப்பார்கள்; ஆகவே அந்த சூழ்நிலையில்; கனிவோடு அந்த நபரை திருத்தாமல், கண்டுகொள்ளவில்லையென்றால், மற்றவர்கள் உங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கண்டுக்கொள்ளாததின் விளைவு: வேதாகம வல்லுநர்கள் எஸ்.டி.எஸ் ஜனங்களை தேவவார்த்தையோடு சில கருத்துக்களை காட்டுகிறார்கள் என்று நினைப்பார்கள். மற்றவர்களும், நாம் கதைச் சொல்லும்போதும் கற்றுக்கொள்ளலாம் என்று தாமாகவே தீர்மானித்து விடுவார்கள். அப்படி சுட்டிக்காட்டும் தன்னார்வ நபரை, நீங்கள் புன்னகையுடனும் அன்புடனும் "நீங்கள் நல்ல வாஞ்சையால் இருப்பதால் நான் சொன்ன கதைக்கும் மேல் சொஞ்சம் அதிகமாக மற்ற தகவல்களையும் சொன்னீர்கள், அது அந்த கதையில் இல்லையென்று நினைக்கிறேன் என்று சொல்லுங்கள்! வேதாகமம் சொல்லுகிற மாதிரியே அப்படியே கதை சொல்வது சற்று சவாலான விஷயம்தான்.

தன்னார்வ நபர், கதையை நன்றாகவோ அல்லது மோசமாகவோ கதைச் சொல்லியிருந்தாலும் முக்கியமாக அவர் சொன்ன சில நல்ல விஷயங்களை பாராட்டிச்சொல்லுங்கள்.

எஸ்.டி.எஸ் கதைசொல்லும் முறைமையில் இவ்வாறு தன்னார்வ நபர், கதைச்சொல்லுவது என்பது கிடையாது. கதை கற்றுக்கொள்ளும்போது இம்முறையைப் பயன்படுத்துவது அத்தனை நன்றாக இருக்காது. காரணம், ஒரு முறை தான் அந்த தன்னார்வ நபர்களை, உபயோகப்படுத்தினால் அதிகமான பிழைகள் வரும், அதினால் கதையை எல்லா ஜனங்களும் மறக்க நேரிடும்.

இப்படி தொடர்ச்சியாக தன்னார்வ நபர்களை, அதிகமாக பயன்படுத்தி அவர்கள் செய்யும் பிழைகளை பொதுவில் சரிச் செய்வதால் ஜனங்களை முன்னதாக வரமாட்டார்கள். சில தைரியமுள்ளவர்கள் மட்டுமே வருவார்கள், காரணம் பொதுவில் மற்றவர்கள் முன்னிலையில் அவர்கள் பிழைகள் சரிப்படுத்துவது அவர்களுக்கு அவமானமாக்கப்படும்.

ஒருவேளை கதைச் சொல்லுகிறவர் சரியாகச் சொன்னாலும், மற்றவர்களுக்கு அவர் திரும்பவும் வேதாகம கதையை சொல்லுவது சிபாரிசுக்கு அற்றது. ஒருவேளை அது சரியாக இருந்தாலும் அது

கேட்பவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் போகும். கதைக் கற்றுக் கொள்வதுக்கு அது

சிறந்த முறையாக இருக்காது.

எஸ்.டி.எஸ் நோக்கம், ஏதோ கதைச்சொல்லுவதுமாத்திரமல்ல, ஜனங்கள் கதையை புரிந்துக்கொண்டு, அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு அந்த கதையிலிருந்து அவர்கள் கண்டறிந்த நெறிகளை அவர்களுடைய வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும்.

எஸ்.டி.எஸ் முறையின், எல்லா படிகளையும் கடந்து கதையை முழுமையாக பகிர்ந்துக் கொண்டபிறகு; கதையின் சுருக்கத்தை எல்லாரும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இதனை பிற்பாடு படிக்கலாம்.

கதைச்சொல்லும் முயற்சியின் இரண்டாவது படியிலேயே கதை கற்றுக்கொள்ளுதலில் உள்ள சிரமத்தை சரிச்செய்துவிடலாம். அதற்கு பிறகு, கதை திரும்ப சொல்ல வைத்தல் என்ற முறை வரும்போது எல்லாருடைய மனதிலும் கதைத் தங்கிவிடும். அதற்குமேலாக, கதைச்சொன்னவர் கதையிலிருந்து சில முக்கிய கருத்துகளை வைத்து கேள்விக் கேட்கும் போது அவர்கள் கதையை புரிந்துக்கொண்டார்களா என்று அறிய முடியும். இப்படி செய்யும்போது கதையிலுள்ள சாரம்சம் கேட்கிறவர்களுக்கு தெளிவாகிவிடும்.

உலகத்திலுள்ள சில புதிய இடங்களில் நாம் இந்த கருத்தரங்கை நடந்தபோது ஒருவேளை அங்குள்ள் தலைவர்கள் சற்று தடையாக இருக்கலாம்; அவர்கள் நம்மிடத்தில் தனியாக சந்தித்து எங்கள் ஜனங்கள் கேள்விகேட்டால் பதில் சொல்லமாட்டார்கள் என்று சொல்லும்போது நாம் அவரிடத்தில் நன்றி, எப்படி ஆகிறது என்றுப் பார்ப்போம் என்றுச் சொல்ல வேண்டும்.

எல்லா இடங்களிலும், எல்லா ஜனங்களும், எங்களுக்கு தெரிந்தவரை எல்லாரும் ஆர்வமாக கவர்ந்துக்கொண்டு அர்த்தத்தை புரிந்து எங்கள் கேள்விகளுக்கு பதிலளித்தார்கள்.

எஸ்.டி.எஸ் முறைப்படி நாங்கள் அவர்களை உற்சாகப்படுத்தி மெதுவாக அவர்களுக்கு போதித்தபடியால் அவர்களும் ஆர்வமாக இருந்தார்கள். சில ஜனங்கள் மற்றவர்களைவிட சற்று அதிக நேரமாகி தைரியத்தை வரவழைத்து கேள்விகளுக்கு சத்தமாக பதில் சொல்வார்கள்; ஒருவேளை அவர்களுடைய கிறிஸ்துவ சமுதாயத்தில் சத்தமாக பேசக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கலாம் அல்லது பொது இடத்தில் சத்தமாக பேசுவதால் பிழைகள் வந்துவிடுமோ என்று அச்சப்படுகிறவர்களாய் இருப்பார்கள், அநேகர் ஆவிக்குரிய கருத்துகளைச் சொல்ல எனக்கு அந்தளவுக்கு ஞானம் இல்லை என்று நினைப்பார்கள். உண்மையில் ஜனங்களை அதிகமாக சிந்திக்கவைக்குமாறும்,

வசனத்தின் ஆழத்திலிருந்து புதிய ஆலோசனகளை சொண்டுவரவும் தடைப்பண்ணியிருப்பார்கள். நாம் அந்த தடைகளை முறியடிக்க வேண்டுமே.

தடைகளை முறியடிப்பதின் உதராணம்:-

தன்னுடைய எழுபதாவது வயதில் படிப்பறிவுள்ள ஒரு பெரியவர், "என்னுடைய வாழ்க்கையில் 40 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த எஸ்.டி.எஸ் முறையைக் கற்றுக்கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் காரணம்; சீனர்களாகிய நாங்கள் எங்கள் வாழ்க்கையில் எதைச் முன்னோர்கள் சொல்லுகிறார்களே அதையை நாங்கள் நம்பி கடைப்பிடிப்போம். இந்த எஸ்.டி.எஸ் முறை மிக சிறந்தது, என் வாழ்க்கையில் முதல் முறையாக நானே எனக்குள் இருக்கிற சிந்தனைச் சக்தியை கண்டறிய முடிகிறது.

நேப்பாளத்தில் உள்ள படிப்பறிவில்லாத கிராமவாசிகள் முதலில் எங்களுடைய கேள்விகளுக்கு பதில் கூறவில்லை. ஆனால் அவர்களை உற்சாகப்படுத்தினதால் அவர்கள் எல்லாரும் ஆர்வமாக உறையாட தொடங்கினார்கள். அவர்களில் ஒருவர், "கர்த்தர் படிப்பறிவில்லாதவர்களோடு பேசுவார் என்று எனக்கு இதுவரை தெரியாது" என்றார். தாய்லாந்திலிருந்து ஒரு போதகர் ஒரு கிராமத்தில் இந்த வகுப்பை நடத்திய பின்னர், இப்படியாக கூறினார்" இங்குள்ள பெண்கள் யாரும் வாய் திறக்காமல் இருந்தார்கள் பெண்களும் பேச உரிமையுண்டு, என்பதை அவர்கள் கண்டறிய அநேக நாட்கள் ஆயிற்று. அதன்பிறகு அவர்களை கட்டுபடுத்த முடியாத அளவிற்கு பேசத் தொடங்கிவிட்டார்கள்.

மூன்றாவது முறை - கதைக்குள்ளாக நடத்துங்கள்

முதலாவது நீங்கள் கதையைச் சொன்னீர்கள், அதன்பிறகு தன்னார்வ நபர் ஒருவர் கூறினார். இப்போது மூன்றாவது முறை எல்லாரையும் கதைக்குள்ளாக நடத்துங்கள்.

இந்த முறையில் ஏதோ உங்களுக்கு கதையின் சில பகுதிகள் மறந்துவிட்டதுபோல நடியுங்கள். அப்போது ஜனங்கள் ஞாபகப்படுத்துவார்கள் இதுதான் இரண்டாவது முறையாக ஜனங்கள் நன்றாக கேட்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள், ஆகவே ஜனங்களை இந்த முறையில் கதையைச் சொல்லவையுங்கள்.

கதையைச் ஆரம்பித்து தருமாறு கேளுங்கள், அப்போது கேட்கிறவர்களிடம் மீதி பகுதியை சொல்லுமாறு செய்யுங்கள்.

உதாரணமாக, நீங்கள் இவ்வாறாக சொல்லலாம், "இயேசுவும் சீடர்களும் ஒரு குறிப்பிட்ட பட்டணத்துக்கு போய் ஒரு ஸ்தீரியைபார்த்தார்கள், அவள் பெயர் ம....ம்...ம் என்று இழுங்கள்- அப்போது ஜனங்களை அந்த பெயரைச் சொல்லுமாறு சைகைகாட்டுங்கள்,

அவர்கள் மார்த்தாள் என்று சொன்ன பிறகு சரிதான்; என்றும் உற்சாகப்படுத்தி கதைக்குள்ளாக நடத்துங்கள்.

பொதுவாக ஜனங்கள் எல்லோரையும், பெயர்களையும் ஞாபகம் வைத்துகொள்வது கஷ்டம், ஆனால் கதைக்குள்ளாக நடத்தும்போது ஜனங்களிடம் பெயரை பெரும்பாலும் கேட்பதில்லை.

பெயர்களை திரும்பக்கேட்பதற்க்கு சரியான வேளை என்று தீர்மானிப்பதற்கு ஞானம் தேவை. சிறுகதையில் மார்த்தாள், மரியாள், இயேசு, என்கிற பெயர்கள் திரும்ப திரும்ப வருவதால் ஜனங்கள் சுலபமாக சொல்லிவிடுவார்கள். ஞானத்தைப் பயன்படுத்தி சுலபமாக பதில்

கொடுக்கக்கூடிய கேள்விகளை கேளுங்கள் அப்போது ஜனங்களும் சுலபமாக பதில் கூறுவார்கள்.

இப்படி கேளுங்கள், "மார்த்தாள் யாரை எதற்காக அழைத்தாள்" அவர்கள் பதில் சொன்னபிறகு, "மார்த்தாள் இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்தாளா? மிகச் சரி, என்று சொல்லுங்கள்.

சிலவேளைகளில் கதைச் சொல்பவர்கள், கதையை பாதியில் நிறுத்திவிட்டு கதை கேட்கிறவர்களைப் நோக்கி, மீதி கதையச் சொல்ல வைப்பார்கள். அப்படி ஜனங்கள் சரியாகச் சொல்லும்போது அவர்களை பாராட்டுவார்கள்.

மாத்தாவுக்கு என்னப் பிரச்சனை அல்லது எதைப் பிரச்சனையாக கருதுகிறாள் என்று கேளுங்கள்.

இப்படி கதையில் சில பகுதியை கோடிட்ட இடத்தில் நிரம்புவதுப்போல கேட்பதினால் ஜனங்கள் சொல்ல

ஒருவேளை கேட்பவர்கள், பதிலைச் சொல்ல தடுமாறினால் நீங்களே மெதுவாக பதிலைச் சொல்ல ஆரம்பிக்க மீதியை ஜனங்கள் சொல்லிவிடுவார்கள்.

சில முக்கிய திறவுகோள் வார்த்தைகளை கேள்விகளாக கேட்கும்போது, ஜனங்கள் கதையின் அடுத்தப்பகுதியை ஞாபகம் வைத்துத் எதையும் மாற்றாமல் அப்படியே சொல்லிவடுவார்கள்.

திறவுகோள் வார்த்தை இல்லை என்றால் உதாரணம் : கதையை திருப்பி கேட்கும்போது நீங்கள் ஒருவேளை "மாத்தாள் என்றுச் சொன்னாள்"? என்றுக் கேட்டுகும்போது மரியாளை எனக்கு உதவும்படி கூறுங்கள்" என்றுச் சரியாக சொல்லிவிடுவார்கள் அது

சரியான பதில்தான் ஆயினும் அதற்கு முன் மார்த்தாள் இயேசுவை நோக்கி, மரியாள் என்னை தனியாக வேலைச் செய்யவிட்டதை நீர் கவனிக்கவில்லையா? என்று கேள்வியை மறந்துவிடுவார்கள்.

திறவுக்கோள் வார்த்தை இருக்குமானால்: நீங்கள் எதிர்பார்க்கும் பதிலை ஜனங்கள் கொடுக்க வேண்டுமென்றால், கதையின் சாரம்சத்தை சார்ந்த கேள்வியை கேட்க வேண்டும். அதற்கு உதாரணம் மார்த்தாள் இயேசுவைப் பார்த்து என்ன கேட்டாள்? என்ன கேட்பாள் என்று ஞானத்தில் கேட்கும்போது, ஜனங்கள் சரியாகச் சொல்ல வாய்ப்பு இருக்கும். ஜனங்கள் உற்சாகத்துடன் பதிலைச் சொல்ல அதிக சுலபமான கேள்விகளை கேளுங்கள், ஒருவேளை அவர்கள் தவறாகச் சொன்னால் அதை நன்மையாக மாற்றுங்கள்.

உதாரணமாக, மார்த்தாள் இயேசுவை எப்படி அழைத்தாள்? என்றுக் கேட்கும்போது அவர்கள் ரபி அல்லது ஆண்டவர் என்றும் சொல்லுவார்கள் ஆண்டவர் என்பது சரியான பதில்தான், ரபி என்பதும் சரிதான். மார்த்தாள் இயேசுவை ஆண்டவர் என்று சொன்னது சரிதான். ரபி என்பது தவறாக இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டாமல் ஆண்டவர் என்பது மிக சரி என்றுச் சொல்லுங்கள்.

கதைக்குள்ளாக அவர்களை முதலில் தொடங்கி, கடைசி வரை நடத்தும்போது, சில கேள்விகளைக் கேட்கலாம். இயேசுவை வீட்டிற்கு அழைத்தது யார்? மரியாள் இந்த கதையில் என்ன செய்தாள்? மார்த்தாள் எதை முக்கியமாக செய்து கொண்டிருந்தாள்? இயேசுவை மார்த்தாள் எப்படி அழைத்தாள்? மார்த்தாள் இயேசுவிடம் என்ன கேட்டாள்? மார்த்தா பிரச்சனையை எவ்வாறு தீர்க்க விரும்பினாள்? மாத்தாளை பார்த்து தேவையில்லாததை நீ அதிகமாக செய்கிறாய் என்று எதைச்சொன்னாள்? அதன்பிறகு, இயேசு மரியாளை இந்த இடத்தைவிட்டு போ என்றார் சரியா தவறா? தவறு இயேசு அப்படி சொல்வில்லை; அப்படியென்றால் இயேசு மரியாளை குறித்து எந்த பங்கை தெரிந்துக்கொண்டாள் என்றுச்சொன்னார்?

இப்படி மூன்றாவது முறைக் கதைச் சொல்லும்போது, ஜனங்கள் மனதில் கதை பதியும்; ஜனங்களை பதில் சொல்ல வைப்பதின் மூலம் அவர்களுக்கு தைரியம் உண்டாகி நன்றாக பேசுவார்கள். இந்த தைரியம் தான் அடுத்த இரண்டு எஸ்.டி.எஸ் முறைக்கு அவசியம். கருத்துகளை ஜனங்கள் பரிமாறுவதால் "கதையில் உள்ள பொக்கிஷங்களை ஜனங்கள் கண்டறிந்து அதைச் சத்தமாகச் சொல்ல வேண்டும்.

## கதைச்சொல்லும் முறை இரண்டு:
## ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

ஆவிக்குரிய கண்ணோட்டம்: ஆவிக்குரிய கண்ணோட்டத்தையும் ஆவிக்குரிய அப்பியாசப்படுதலையும் கண்டறிய அநேக பொக்கிஷங்களை இந்தக் கதையிலிருந்து பெற்றுக்கொண்டோம். ஆவியானவர் உதவியோடு அதிகமான வேத வார்த்தையின் பொக்கிஷங்களை கண்டறிய முடியும்.

கீழேயுள்ள சில உதாரணங்கள் நீங்கள் பொக்கிஷங்களை கண்டறிய உதவும் அது மாத்திரமல்ல மார்த்தாள் - மரியாள் கதையிலிருந்தது கண்டறிந்து ஆராய்ச்சியிலும் பொக்கிஷங்களை, கண்டறிய முடியும். அடுத்ததாக ஆண்டு வரிசையில் கதையை பார்க்க போகிறோம்.

1. இந்த கதையில் இயேசு மார்த்தாள் நடந்துக்கொண்ட முறையை அங்கீகரித்தாலும் மார்த்தாளை குற்றப்படுத்தினார். சரியா (பதிலுக்காக காத்திருங்கள்) எனக்கு ஒரே குழப்பம்! விருந்தோம்பல் நல்ல காரியமா? (பதிலுக்காக காத்திருங்கள் வீட்டில் விருந்தாளிகளுக்கு சமைப்பது நல்லதுதானே? (பதிலுக்காக காத்திருங்கள்) ஆனால் பாரபட்சமான காரியம் என்ன என்றால் ஏன் இயேசு மரியாளிடத்தில் சந்தோஷமாகவும் மார்த்தாவை பராட்டாமலும் இருந்தார்.
2. ஒருவேளை இந்த கதையில் உள்ளதுபோல், வேதம் படிக்கப்போனால் யார் சமைப்பார்கள்? (பதிலுக்கு காத்திருங்கள்) ஒருவேளை உங்கள் மனைவியை வேதாகமம் கற்றுக்கொள்ள வேண்டிய சமயத்தில் விருந்தாளிகளுக்கு சமையலைச் செய்ய சொல்வது சரியா? (பதிலுக்காக காத்திருங்கள். 2) இயேசு முக்கியமில்லாத காரியத்துக்காக அவர்கள், என்று கூறினார் என்பதை விளங்குங்கள். இயேசு எப்போதும் உண்மையை பேசுவார்? இந்த கதையில் என்ன சொல்கிறார் என்பதை பார்க்க ஒருவேளை நாம் மறுபடியும் கதையை பார்க்க வேண்டும்?
3. மார்த்தாள் எப்படி இயேசுவை வீட்டிற்கு அழைத்தாள் என்பதை நினைவுக்கூறுங்கள்? இந்த கதையில் மாத்தாள் என்று எவ்வாறு இயேசு விசேஷித்தவர் என்று புரியவில்லையோ என்று தோன்றுகிறது (பதிலுக்காக காத்திருங்கள்)

உங்களை கேட்பவர் சொல்வார்கள், மார்த்தாள் இயேசுவை வீட்டிற்கு அழைத்தால், மார்த்தாள் இயேசுவை ஆண்டவரே என அழைத்தாள் மார்த்தாள் தேவன்

சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டு இருந்தாள், அல்லது மாத்தாள் இயேசுவை தம் சீஷர்களோடு கண்டாள், அது அவரை ஒரு படி மேலாக நிறுத்தியது என இவை எல்லாம் சரியான பதில்கள்தான்.

4 இந்த கதையில் மாத்தாளின் சகோதரி இயேசுவின் பாதத்தடியில் அவரின் போதகத்தை கேட்டுக்கொண்டிருந்தால். "பாதத்தண்டையில் என்றால் என்ன"? (பதிலுக்கு பொருங்கள்) பாதத்தண்டை என்றால் ஒரு மாணவர் அல்லது ஆசிரியர் தன் மரியாதயை செலுத்துபவனாய் அந்த ஒரு உறவை காட்டுகிறது. இவை ஒருவரின் தோற்றம் மற்றும் அவளின் உண்மையான அன்பை வெளிப்படுத்துகிறது.

5. மார்த்தாள் இயேசுவை கூப்பிட்ட விதம்? (பதிலுக்கு பொரு) ஆண்டவர் என்றால் என்ன? (நான் என் கையை உயர்த்த ஆசைபட்டேன், அது உயரிய இடத்தில் உடையவர் என சொல்ல மக்கள் இப்படியாக நினைக்க கூடாது, மார்த்தாள் இயேசுவையே ஆண்டவர் என்கிறான் என்று (பதிலுக்கு காத்திரு) எப்படி நமக்கு தெரிகிறது மாத்தாளுக்கு இயேசு ஆண்டவர் என தெரியும், (பதிலுக்கு காத்திரு) அவளுக்கு தெரியும் இயேசு மேலானவர் எல்லோரையும் விட அதிக மேலானவர் என்று அவள் சொல்வது.

"இவர் என் ஆண்டவர்" ஆனாலும் அவர் வார்த்தையை கேட்காமல் சமையல் அறையில் சமைத்துக்கொண்டே இருந்தாள்? (பதிலுக்கு காத்திரு) அவளின் வார்த்தை செயலுக்கு ஏதேனும் சம்மந்தம் உள்ளதா? இந்த கதையில் அதை எப்படி பார்க்கிறீர்கள்?

6) இந்த கதையில் மார்த்தாள் வேலையால் அதிக பாரட்டப்பட்டாள் அவள் மற்றவர்களை உபசரிக்கிறவளாய் காணப்பட்டால். இந்த கதையில் இருந்து, எவ்வளவு அளவு அல்லது எவ்வளவு பெரிய உணவு பட்டியலை அவள் தயாரித்து கொண்டிருந்தாள் என எண்ணுகிறீர்கள் (பதிலுக்கு காத்திரு). அவள் சாதாரணமாய் சில உணவு, பழம் அல்லது தேநீர் கொடுக்க இருந்தாளா அல்லது அதைக்காட்டிலும் பெரிய காரியத்தை செய்ய விரும்பினாளா (பதிலுக்கு காத்திரு) இயேசுவை வீட்டிற்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொடுத்தது யார்? (பதிலுக்கு காத்திரு)

எனக்கு ஒரு கேள்வி உண்டு. இப்படி மார்த்தாள் நினைத்திருக்க இயேவின் போதகத்தை நான் கேட்கவேண்டும், ஆனால் ஆச்சரியமாய் அவன் தெரிந்து கொண்டது அதிக நேரம் எனக்கும் உணவை தயாரித்தல்? இந்த தெரிந்து கொள்ளுதலைபற்றி உங்கள் அபிப்பிராயம்? (பதிலுக்கு காத்திரு) மார்த்தாள்

இயேசுவிடம் குறை கூறுகிறாள் எனக்கு அதிக வேலை உள்ளது. ஆனால் அவன் தான் அந்த காரியத்தை தெரிந்து கொண்டாள்? அவரின் கேள்வி சரியானதா? (பதிலுக்கு காத்திரு)

7) ம்..ம்..? என்ன காரியத்தை மாத்தாள் இயேசுவிடம் கேட்டாள்? (பதிலுக்கு காத்திரு) யாரிடம், யாரைப்பற்றி அவள் சொல்கிறாள்? உமக்கு அக்கரை இல்லை என்று? நான் ஆச்சரியபடுகிறேன். அவளின் வார்த்தைகள் இயேசு மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை காட்டுகிறதா? (பதிலுக்கு காத்திரு)

8) மார்த்தாளின் பிரச்சனைக்கு தீர்வு என்ன? இயேசுவே வேலைக்கு எனக்கு உதவி செய்ய தங்கையை அனுப்பும்? (பதிலுக்கு காத்திரு) எப்படி மார்த்தாள் இயேசுவை நடத்துகிறாள்? (பதிலுக்கு காத்திரு), சரிதான் அவள் இயேசுவை அடிமையாய், தான் அதிகாரிபோல் நடந்துகொள்கிறார்! உங்களுக்கு அவள் மற்றவர்களைபற்றி நினைக்கும் காரியம் புரிகிறதா?

9) மார்த்தாளின் வார்த்தைகளானது மற்றும் இயேசு அவளிடம் சொன்னது. அவளை கண்டித்து மார்த்தாளை அவர் கவுரவிக்கிறார்? ஒரே ஒரு காரியத்தை இயேசு சொல்கிறார்? (பதிலுக்கு காத்திரு)

10) இரண்டு நபர்களை மாத்தாள் கண்டிக்கிறாள்? (பதிலுக்கு காத்திரு) ஆம் மார்த்தாள் மற்றும் இயேசு எப்படி அவர்களை கண்டிப்பதை காண்கிறோம்? (பதிலுக்கு காத்திரு) மார்த்தாள் சொன்னது" இயேசு உங்களுக்கு கொஞ்சமாகிலும் அக்கரை இல்லையோ என் சகோதரி நான் தனியாய் வேலையை செய்ய விட்டுவிட்டாள்? உங்கள் மனதில் இருக்க வேண்டியது? அழைப்புக்கு வரவைத்தது யார்? (பதிலுக்கு காத்திரு)

இந்த கதையில் யாருடைய பெயர் குறிப்பிடபடவில்லை, அவளின் அவல நிலைக்கு காரணத்திற்கு? (பதிலுக்கு காத்திரு) மார்த்தாள் தன்னை எல்லா பிரச்சனைக்கு காரணம் என்று பட்டியலில் சேர்க்கவில்லை.

11. மார்த்தாளின் தெரிந்துகொள்ளுதல், அவள் இயேசுவின் போதகத்தை கேட்காதபடி செய்தது. ஆனால் மார்த்தாளின் பிரச்சனை தீர்க்கும் காரியம் (அவளைப் உருவாக்கினது) யாரையாகிலும் பாதித்ததா? (பதிலுக்கு காத்திரு) ஆம், மார்த்தாள், அவள் இயேசுவின் பிரசன்னத்தை விட வேண்டிய சூழ்நிலை மார்த்தாளின் பிரச்சனையின் முடிவு என்னவாய் இருக்க வேண்டும்? (பதிலுக்கு காத்திரு)

12. எப்படிப்பட்ட மரியாதையை மார்த்தாள் இயேசுவுக்கு செலுத்தினாய்? (பதிலுக்கு காத்திரு) அவள் பேசின தோரனை, இயேசுவை தனக்கு இரக்கம் காட்டாமல் இருப்பது மற்றும் அவரை ஒரு அடிமைபோல எண்ணி பேசுகிறதாகும்.

13. இயேசு ஏதாகிலும் உணர்ச்சிகளை மார்த்தாளிடம் திரும்ப வெளிப்படுத்தினாரா? (பதிலுக்கு காத்திரு) ஆச்சரியமாய் எப்படி இயேசு அவளுக்கு பதில் அளிக்க கூடும், எல்லோருக்கும் முன்பாய் அவரை குறை சொல்லி, அவளுக்கு அறிவுரை சொல்லி (பதிலுக்கு காத்திரு) நான் அதை பார்க்கிறேன். அவர் மிகவும் கோப்பட்டு அல்லது அந்த வீட்டை விட்டு வெளியே சென்றிருக்கலாமே அவரின் வார்த்தைக்கு கொடுத்த பதில் என்ன? (பதிலுக்கு காத்திரு) அவர் தாழ்மையாய் சொன்னது, மரியாளின் தெரிந்துகொள்ளுதல் மாத்தாளை விட சிறந்தது?

14. வேறு எந்த விதமாய் மாத்தாள் இயேசுவை அவமதித்தார்? (பதிலுக்கு காத்திரு) இயேசு மதிப்பிற்குரிய ஆசிரியர் இவள் இயேசுவை மாத்திரம் குறைகூறாமல், அவரின் சீஷர்களுக்கு முன்பாய் குறை கூறினாள்! இப்படி செய்ததால் திரும்பவும் இயேசுவை அவமதித்தால்? இயேசு பெருமை அல்லது தாழ்மையை, மாத்தாளுக்கு பதில் அளிக்க பயன்படுத்தினாரா? எப்படி (பதிலுக்கு காத்திரு)

15. எந்தவிதமாய் மார்த்தாளை கூப்பிட்டார், அவளின் வருத்தத்தை வெளிப்படுத்தினார், அவருக்கு அல்லது அவளை பற்றி நன்கு தெரியுமா? (பதிலுக்கு பொரு) ஆம் இயேசு, ஒரு உண்மையான விருப்பத்தை அவளை கூப்பிடும்போது காண்பிக்கிறார், இரண்டு முறை அவர் அழைக்கிறார்.

16. இந்த கதையில் நமக்கு தெரியும் செய்தியை பார்த்தாள், இப்படிப்பட்டவை அல்லது வருத்தப்படுவது அவளுக்கு புதியதா அல்லது அவளின் பழக்கமா? (பதிலுக்கு காத்திரு) இயேசு சொன்னது மார்த்தால், அநேக காரியத்தை குறித்து கவலைப்படுகிறாள், அது அவளின் சுபாவம்.

17. இந்த கதையில் ஏதாகிலும் சொல்கிறதா, மார்த்தாளின் தெரிந்துகொள்ளுதல் அவள் சமையல் அறையில் இருந்த சாப்பாட்டை தயார் செய்து அல்லது இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் போதகத்தை கேட்பது, மரியாள் நல்ல பங்கை தெரிந்துகொண்டாள் இயேசுவின் பாதத்தில் நல்ல பங்கை தெரிந்துகொண்டாள் இயேசுவின் வார்த்தையால் மார்த்தாளை குறித்து, அவர் சொல்லுவது என்ன? (பதிலுக்கு காத்திரு)

18. இயேசு சொன்னார், "மார்த்தாளே, மார்த்தாளே பல காரியங்களை குறித்து கவலைப்படுகிறாய். மரியாள் நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். மார்த்தாளின் தெரிந்து கொள்ளுதலாகிய பெரிய உணவு தாயாரித்தல் அதைப்பற்றி இயேசு

என்ன கூறுகிறார்? (பதிலுக்கு காத்திரு) மரியாள் ஒரே ஒரு காரியத்தை தெரிந்துகொண்டாள்?

19. மார்த்தாள் யோசித்து நான், தெரிந்துகொண்டது சரிதான் என்பதா? (பதிலுக்கு காத்திரு). அல்லது இயேசு மார்த்தாள் செய்வது சரிதான் என்றாரா? (பதிலுக்கு காத்திரு) சாப்பிடுவது முக்கியமா? (பதிலுக்கு காத்திரு) எனக்கு இதை விளக்குங்கள்? இயேசு என்ன தேவை, தேவை இல்லை என்கிறார்?

20. இந்த கதையில் மார்த்தாள் கவலை கொண்டது அது அவளுக்கு புதிதாய் அல்லது பழக்கபட்டதா?

21. ஒரு கலாச்சாரம் மிகுந்த சூழ்நிலை மார்த்தாளிடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன? (பதிலுக்கு காத்திரு) மரியாளுக்கு தெரிந்து கொள்ளுதல் கடினமாய் இருந்ததா? அவள் விருப்பத்திற்கு மாறாய் மரியாள் ஏழையாகிலும் தெரிந்து கொண்டாளா? (பதிலுக்கு காத்திரு) ஆம் அவளின் கலாச்சார, குடும்ப எதிர்பார்ப்பு.

22. வேலை பார்ப்பது, மற்றும் மார்த்தாள்; அதிகம் வேலை பலுவுக்குள் சென்று மற்ற வேலையையும் முடிக்க முடியவில்லை. யோசியுங்கள் அந்த பலுவை முடிக்க அவள் வேறு காரியத்தை யோசித்து இருக்கலாமா? (பதிலுக்கு காத்திரு) பல தெரிந்து கொள்ளுதல் அவளுக்கு இருந்திருக்கலாம். (ஜனங்களை அவள் என்னென்ன செய்ய சொல்லி இருக்கலாம் என சிந்திக்க செய்யுங்கள்?

23. இயேசுவிடம் சென்று பார்த்தால், உதவி கேட்க வெட்கப்பட்டாளா? (பதிலுக்கு பொரு) நீங்கள் மார்த்தாளை, அவளின் மனப்பான்மையை கணிப்பது எப்படி? (பதிலுக்கு காத்திரு) அவளின் மனப்பான்மையை இயேசுவுடன் ஒப்பிட்டுபார்.

24. மார்த்தாள் / மரியாள் தெரிந்து கொள்ளுதல், ஒப்பிடு அது ஒருமனமானதா அல்லது வித்தியாசப்பட்டதா/ எந்த ஸ்தீரி இயேசுவுக்கு கொடுப்பதாய், எந்த ஸ்தீரி பெறுவதாய் காணப்படுகிறாள்? (பதிலுக்கு பொரு) எந்த மனப்பான்மைய இயேசு கனப்படுத்துகிறார்? (பதிலுக்கு காத்திரு) நமக்கு எதையாகிலும் இது காட்டுகிறதா? (பதிலுக்கு பொரு)

இங்கு மார்த்தாள் இயேசுவுக்கு கொடுக்கிறதாய், மரியாள் இயேசுவிடம் பெறுவதாய் உள்ளது. இயேசு சொன்னது மார்த்தாள் செய்வது தேவையற்றது. இந்த காரியம் வேலை/கிருபை கலந்துரையாடலில் கொண்டு செல்லும்.

நீ சொல்லி கொடுக்கும் முறை உன் கேள்விகள் எடுத்துரைப்பதாய் இருக்கும்

முதலாவதாய் நீங்கள் கேள்விகளை தயாரிக்க, ஜனங்கள் நீங்கள் கண்டறிந்த கண்ணோட்டத்தின் முறையில் எடுத்த பொக்கிஷத்தை அறிய வேண்டும். நாம் சில வித்தியாசமாய் கேள்வி கேட்கும் முறையை யோசிக்க வேண்டும். சில கேள்விகள் மூலம் கேட்பவர்கள் கதை சொல்லுபவர்கள் எப்படிப்பட்ட நல்ல பயிற்சியாளர் என அறிவார்கள் கதை சொல்பவரின் குரல், செய்கை, சரிவு, அசைவு அவர் உருவாக்கும் கேள்வி, அது பல நபர்களை வெளிப்படுத்துவதாய் உள்ளது, அதாவது ஒரு பள்ளி தலைவனாய், கல்லூரி ஆசிரியராய் அல்லது சாதாரண மேலோங்கி செல்பவராய்.

ஒரு கண்டிப்பான பள்ளி தலைவரின் விதம்; இவை எஸ்.டி.எஸ் முறையில் எடுபடாது. அந்த கண்டிப்பு, கேட்பவர்கள் மனதில், "பதிலே இல்லை, நான் எந்த பதிலை சரி / தவறாய் சொன்னாலும் எனக்கு அவமானம்தான்" அதினால் ஜனங்கள் உற்சாகமாய் பதில் அளிப்பது இல்லை; முழு எஸ்.டி.எஸ் பயிற்ச்சியில் நாங்கள் உற்சாகப்படுத்துவது; தேவன் கொடுத்த திறமை, கொண்டு மற்றும் ஆவிக்குரிய பொக்கிஷத்தை தேவ வார்த்தை மூலம் ஆராயுங்கள், நீங்கள் கண்டிப்பான பள்ளி தலைவராய் இருப்பது எங்களின் விருப்பம் அல்ல.

ஒரு அமைதியான கல்லூரி பேராசிரியர் இரக்கம் மற்றும் மலர்ந்த முகமாய் இருப்பார். ஆனால் அவள் சொல்லிக்கொடுக்கும் விதம், பதிலை முதலிலே தெரிந்து கொள்ளுதலாய் இருக்கும், கேட்பவர்கள் எண்ணுவது, கதை சொல்பவரின் எண்ணமாவது " நான் அறிவின் உச்சியில் உள்ளேன், நீங்கள் திறமையானவர்கள் ஆனால் மேலே ஏறி அந்த செய்தியை நான் சொல்லுவதற்கு முன் அறிய முடிகிறதா? கேட்பவர் கலந்துரையாடலில் ஈடுபடுவர். கவனிக்கும் போது சரியான பதில் சொல்பவர்கள் நல்ல கூர்மையான அறிவு பெற்றவர்களாய் இருப்பார். இந்த முறைபடி கதை சொல்பவரை சிலருக்கு பிடிக்கும், அவர்களுக்கு ஒரு நல்ல கூர்மையான அறிவு மிகுந்த, மக்களோடு இருப்பது மட்டுமே திருப்தியானதாய் இருக்கும்.

ஆனால் அந்த கூர்மையான அறிவு உள்ளவர்கள், யார் எல்லாம் கலந்துரையாடலில் ஈடுபடவில்லையோ அவர்களை பற்றி கவலை இல்லை. விடுபட்டவர்கள், கூர்மையற்றவர்கள், அவர்கள் ஈடுபடவில்லையே அதை பற்றி கவலை இல்லை, (விடுபட்டவர்கள் கூர்மையற்றவர்களாய், தங்களைபற்றி அறியாதவர்கள், என்னால் ஏறமுடியும் என்ற நம்பிக்கை அற்றவர்கள் ஆவர்).

தன்னோடு - மேலே ஏறுவது போன்ற; கதை சொல்பவர்கள், எல்லோரும் மலையில் ஏறி அந்த பொக்கிஷத்தை அறிய விரும்புகிறார்.

மற்றவனை தன்னோடு இணைத்து மேலே ஏறுவது ஒரு கதை சொல்பவருக்கு சவாலானது ஆனால் இந்த எடுத்துக்காட்டான முறை எல்லோருக்கும் நம்மை அருளும். எல்லோரையும், இயற்கையாக கலந்துரையாடலில் ஈடுபடவைப்பது இது பெருமை மற்றும் நான் மட்டும் தான் சொல்வேன் என்ற எண்ணத்தை குறிக்கிறது.

ஒரு பயிற்சிகூடத்தில் கேட்பவரில் ஒருவன், தன்னோடு - மேலே ஏறும் முறை கதை சொல்பவரின் மேன்மையை ஆராய்ந்தார். ஒரு ஸ்திரி சொன்னது "நீங்கள் சொல்லி கொடுத்த மார்த்தாள் - மரியாள் கதை எனக்கு பிடித்தது. நான் அதிகம் அதைபற்றி நினைக்க வைத்தது என்றாள். எனக்கு என்ன பிடித்திருந்தது, என்று உங்களுக்கு தெரியுமா? நான் புன்னகையோடு எது என்றேன்?

உங்களுக்கு கேள்விக்கான பதில் தெரியாமல் இருக்க நான் அதை ஆராய உதவினது என்றாள்.

அப்படியா! அது நல்லது என்றேன், நான் எஸ்.டி.எஸ் முறையை ஒரு பயிற்சி முறையாய் பார்த்தேன்; எனக்கு அந்த கதைபற்றி தெரியும், பதிலும் தெரியும் பல இடம், நாடுகளில், பேசி உள்ளேன். நீங்கள் அதை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காய், நான் பின்வாங்கினேன் என்றான்.

அவள் தலை அசைத்தால் "எனக்கு தெரியும் நான் சொல்வது உங்களுக்கு பதில் தெரியாத பல இடத்தில் எங்களை கண்டு பிடிக்க வைத்தீர், எனக்கு அது பிடித்திருந்தது, நீங்கள் பயப்படாமல் எனக்கு தெரியாது நீங்கள் கண்டு பிடியுங்கள் என்று சொன்னதாகும்.

ம்.... எனக்குள் நான் நினைத்தது! நான் என் வேலையை செய்தேன். நீங்கள் கண்டு பிடித்தது, எனக்கு முன்பே தெரியும், என சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதில் மற்றவர்கள் உற்சாகமாய் பங்கு கொண்டனர். அவர்கள் உணர்ந்தது, அவர்களுக்கு கொடுத்த ஒரு வாய்ப்பு அவர்கள் யோசிக்க, ஆராய, நாங்கள் ஒருமனமாய் அந்த மலையை அடைந்தோம் என்ற திருப்தி ஆகும்.

எப்படி தன்னோடு ஏறச்செய்பவராய் மாறுதல்

நீங்கள் கேள்வி கேட்கும் முறை உற்சாகம் அல்லது உற்சாகம் இல்லாததாய் மாறும், எடுத்துகாட்டுக்கு-கதை சொல்பவர் கேட்கிறார்" ஆபிரகாம் எத்தனை ஒட்டகங்களை கொண்டு வந்தார், அது ஒரு தெரிந்த கேள்வி, அவனை சரியான பதில் அளிக்க ஆராய சொல்வர்; இவை ஒரு பள்ளிக்கூட வகுப்பை போல அந்த ஆராய்வது கலந்துரையாடலுக்கு முற்றுப் புள்ளிவைப்பதாய் இருக்கும்.

அதற்கு மாறாக நீங்கள் சொல்லும் - முறை குறல், சரி; எத்தனை ஒட்டகங்களை கொண்டு வந்தார் என நினைக்கிறீர்கள்? உங்கள் செய்கை / முகபாவானை எல்லாம் நீங்களே யோசிப்பதாய் இருக்க; அது கேட்போரை பதிலை சொல்ல தூண்டும். ஒருவர் 12 என கூற, நீங்கள் பார்க்கலாம் 12 அல்லது அதற்கு மேலாக அடுத்தவர் 14 என சொல்ல; ஆம் நான் ஒத்து கொள்கிறேன் 14, உங்கள் பதிலுக்கு நன்றி எனலாம்.

நீங்கள் உங்களுக்கே உதவி வேண்டும் என்று உங்களை காண்பிக்க, அது பலரின் பதிலை வெளிப்படுத்த உதவும் மற்றும் அது கண்ணோட்டம் அல்லது அப்பியாசப்படுதல்; ஜனங்கள் தாங்களே உதவி செய்ய விரும்புவர்; உற்சாகமாய் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பதில் அளிப்பார்கள், கூர்மையான பதில் இல்லாமல் சரியான காரியத்தை உணர்த்துவதாய் அமையும்.

ஒருவிதமான நல்ல சூழ்நிலையை கொண்டுவருவது; நீங்கள் கேட்கும் கேள்வி ஒரு ஆசிரியர், போதகர், போதிக்க இவர்கள் எல்லா பதிலும் அறிந்தவர்கள் என்று எண்ண செய்யும். பலர் இந்த கலந்துரையாடலில்; பல காரியத்தை கற்கலாம் என அறியாமல் உள்ளனர். கதை சொல்பவர், கேட்போரை உற்சாகபடுத்த, யோசிக்க தூண்டும் கேள்விகளுக்கு பதில் வர, ஒரு பள்ளி தலைமை ஆசிரியரை போல "சரியான பதில்" தேவையில்லை, எனவும் உணர்த்துவதாய் வழிநடத்தலாம்.

செய்தி கண்டுபிடிக்கபடாதபோதிலும், ஆம், எனக்கு உங்கள் பதில் பிடித்துள்ளது. "ஆம் நீங்கள் சொன்னது சரி" அல்லது அது சரியாய் தோன்றுகிறது என உற்சாகப்படுத்த, யோசிக்க தூண்டும் கேள்விகளுக்கு பதில் வர, ஒரு பள்ளி தலைமை ஆசிரியரை போல "சரியான பதில்" தேவையில்லை எனவும் உணர்த்துவதாய் வழி நடத்தலாம்.

பல நேரம் கதைக்கு சம்மந்தம் இல்லா மற்றும் எண்ணம் அல்லது பொருந்தாத காரியங்களை சொல்லலாம். தன்னோடு - ஏறச் செய்தல், கதை சொல்பவர் அது அப்படி அல்ல அது கேட்போரை தூண்டுவதாய் அல்லாமல் கதையை சரியான வழியில் கொண்டு செல்வதாய் மாறும்.

சில வேளை இது சரியான ஒரு காரியம் எனலாம், ஆனால் இந்த செய்தி உங்கள் கதையில் இல்லை என தெரியும். நீங்கள் சொல்லலாம்" எனக்கு உதவுங்கள் நீங்கள் சொன்னது அந்த கதையில் எங்கு உள்ளது? நீங்கள் இப்படி சொல்வதன் மூலம் கேட்போரை மற்றவர் முன் துக்கப்படுத்தாதபடி; அது அந்த தவறை உணரச் செய்கிறது. இப்படி செய்வதால் அந்த நபர் உற்சாகமாய், அவரின் ஆராய்ச்சியை தொடர உதவும்.

நீங்கள் சொன்னது தவறாய் அல்லது சரியாய் இல்லாமல் போக நீங்கள் இப்படி கேள்வி கேட்கலாம்; அதாவது தாழ்மையாய் கேட்போரின் அபிப்பிராயத்தை அறிவது. நீங்கள்

இப்படி சொல்லாம், "ம்ம்..... ஆச்சரியமானது, அநேகர் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனயோசிக்கிறேன்? எப்படி இக்கதையை பார்க்கிறீர்கள்? கேட்போரை அந்த கலந்துரையாடலில் இருக்க வைத்து, நீங்கள் அந்த பள்ளி தலைவர் அல்லது கல்லூரி ஆசிரியர் அளவுக்கு செல்லாமல் இருக்க உதவும். ஆவியானவர் தான் சிறந்த ஆசிரியர். அவரின் வார்த்தைகள் அதிகாரபூர்வமானதாகும்,.

ஞாபகத்தில் இருக்க வேண்டியது, எவ்வளவேனும் உங்களுக்கு தெரியவில்லை என காண்பிக்க, அது ஜனத்தை கலந்துரையாடலில் கலக்கசெய்கிறது. அப்படிப்பட்ட நபர் தான் நல்ல கேள்வியை கேட்டு, கலந்துரையாடலை தொடர முடியும். நீங்கள் எல்லாம் தெரிந்தவர், என காண்பிக்க, கேட்பவர்கள் பதிலை சொல்ல திணறுவர். வகுப்பறை சூழ்நிலை கொண்டு வராதீர்கள், ஜனங்கள் பதிலை சொல்லக்கூடாதபடி பயத்தை உருவாக்க கூடாது..

உங்கள் கேள்வியின் வார்த்தைகள் : நான் யோசிக்கிறேன்? இப்படி இருக்குமா? இது சாத்தியமா? இது இப்படி இருக்குமா? என்ன பார்க்கிறீர்கள்? இது எதை குறிக்கிறது? இப்படிப்பட்ட வார்த்தைகள் கதை சொல்பவர் பயன்படுத்த பதிலை பெற ஒரு நல்ல சூழலை உருவாக்குகிறது.

ஒரு சவாலான காரியம் "மிகவும் எளிதான கதை" பகுதியில் அதிக பயிற்சி தேவை; எப்படி கேள்விகளை உருவாக்குவது என்பதாகும். நீங்கள் தெரியாதவர்கள் போல அல்ல அல்லது எனக்கு தெரிந்தது ஆனால் தெரியாதது என்பது அல்ல; இது எப்படி என்றால்; கேள்விகள் கேட்பது. அது நீங்களே ஒரு கல்வி கற்பவர்போல மாற்றுகிறது. இந்த முறையில் எலிய கேள்வி, பதிலை சொல்லி மக்களை உற்சாகபடுத்தும்.

## எடுத்துரைக்கும் பகுதி இரண்டு:
## ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தல் கலந்துரையாடல்
## ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தல்

ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தல் மார்த்தாள் - மரியாள் கதையில், பல ஆவிக்குரிய அப்பியாசபடுத்துதலை பார்த்தோம். நாம் பல ஆண்டவரி' வார்த்தைகள் எப்படி நாம் கண்டுபிடித்த காரியத்தை, இன்றைய நடைமுறையில் தேவன் நமக்கு அப்பியாசப்படுத்த உதவுகிறார் என பார்த்தோம்.

அடுத்த எஸ்.டி.எஸ் படி, எப்படி கேள்வி கேட்டு அது மக்களை ஆவிக்குரிய

அப்பியாசப்படுத்துதலை அறிவதாகும். இந்த திறமை சவாலானது, நல்ல பலனை அளிப்பதாகும். நீங்கள் கண்டுபிடித்த பொக்கிஷத்தை சொல்ல; ஒரு விதமான கட்டுப்பாடு உங்களுக்கு தேவை. அல்லது நீங்கள் உருவாக்கும் கேள்வி நீங்கள் கண்டுபிடித்த பொக்கிஷத்தை அறிய உதவவேண்டும்.

இங்கு சில கேள்விகள் எடுத்துகாட்டாய் உள்ளது. இதன் மூலம் ஜனங்கள் சில ஆவிக்குரிய அப்பியாசப்டுத்தும் காரியத்தை அறிவர். அதை மார்த்தாள்- மரியாள் கதையில் இருந்து அறியலாம். இந்த ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தல் ஆராய்ச்சியில் போவதற்கு முன்பாக அந்த கதையை ஆராய்ந்து முடிவுரை சோதித்தறியவேண்டும் பாருங்கள்: ஒவ்வொரு நேரம், ஒரு கேள்விக்கு முன் ஒரு கதையின் பகுதி சொல்லபடும். அடுத்து சில கேள்விக்கு பின் கேட்பவர், ஒவ்வொரு அப்பியாசப்படுத்துதலில் பல தேவையற்ற காரியத்தை ஒதுக்கி, குறிப்பிட்ட அப்பியாசப்படுத்துதலில் நடத்தும்.

1) இந்த கதையில் மரியாள் சமையல் வேலை செய்வதைவிட்டு இயேசுவின் பாதத்தில் அமருவதை தெரிந்து கொண்டாள். இந்த காரியத்தில் எதையாகிலும் அப்பியாசப்படுத்துவதாய் உள்ளதா, யாராகிலும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து கற்க முடியுமா? (பதிலுக்கு காத்திரு)

   கேட்பவர்கள் அப்பியாசபடுத்துதலில் ஈடுபடுவர் இன்றைக்கு வேதத்தை வாசிப்பது அவரை ஆராதனை செய்வது, அது தேவனின் குரலை கேட்பதாய் உள்ளது. தேவனின் பாதம் என்பது ஒரு நபரின் வேதத்தை அறியும் வாஞ்சையை காட்டுகிறது.

2) மார்த்தாள் தான் வேலையின் பெரிய பலுவை அவளே தெரிந்து கொள்வதால் அதை பெற்றுகொண்டாள். இன்றைக்கு நமக்கு அப்படிப்பட்ட கஷ்டம் உள்ளதா? என்ன நினைக்கிறீர்கள் (பதிலுக்கு காத்திரு) எல்லா பொறுப்புகளுக்கு நாம் தான் காரணம் என்று சொல்ல இயலுமா?

3) இன்றைக்கு மக்கள் ஊழியத்தில் அல்லது வேலை ஸ்தலம் அல்லது வீடு எந்த காரியத்தையாவது தங்களால், செய்ய முடியாத காரியத்தை எடுத்து கொள்கிறார்களா? எப்படி எல்லாம், இது நடக்கிறது? (பதிலுக்கு காத்திரு) எப்படி நம்மால் முடியாத காரியத்தை நாம் ஊழியத்தில், வேலையில் எடுக்க, அது நாம் தேவனோடு நேரம் செலவிடுவதை குறைத்து நம்மை பாரப்படுத்துகிறது (பதிலுக்கு காத்திரு)

4) மக்களுக்கு வாழ்வில் தேர்ந்தெடுக்க கூடிய காரியங்கள் உண்டா? பதிலுக்கு காத்திரு) மக்கள் நல்லவிதமான காரியம், நல்ல வேலை அதாவது கிறிஸ்துவ வேலை தேர்ந்தெடுக்க கூடுமா? எப்படி ஜனங்கள் தேவனுக்கு, ஏதாகிலும் செய்ய வேண்டும் என்றும், அவர் எதையும் கேட்பது, அவரின் ஆசையும் இல்லை; ஆனால் தானாய் செய்கிறார்கள்? நீங்கள் எதையாகிலும் செய்து அல்லது அப்படி நடந்தது உண்டா? அதை சொல்ல முடியுமா?

நாம் தேர்தெடுக்கும் காரியம் தேவனுக்காய், செய்கிறோம் என்று எண்ணி அது நம்மை தேவனோடு நேரம் செலவிடாதபடி நம்மை இழுத்து செல்வதாய் காணப்படுகிறது? (பதிலுக்கு காத்திரு). நாம் தேர்தெடுக்கும் ஊழிய வேலை, எப்படி நம்மை தேவனின் வார்த்தையை அவர் பாதத்தில் அமர முடியாதபடி செய்கிறது? (பதிலுக்கு காத்திரு)

5) மார்த்தாள் தன் தங்கை மரியாள் தனக்கு வந்தோருக்கு உதவவில்லை என்று சொல்லுகிறாள். இன்றைக்கு ஒன்றுக்கு மேலான பொறுப்பை ஒருவர் தானாய் ஏற்க யார், மற்றும் எவர்களை, நாம் குறை கூறுகிறோம்? நான் சொல்வது, நாங்கள் எடுத்த தீர்மானத்தின் பலனால் வந்த பாரம் அல்லது அவர்கள் மற்றவர்கள் காரணம் என்கிறார்களா? என்ன காரியத்தைகாண்கிறீர்கள்? (பதிலுக்கு காத்திரு)

6) மார்த்தாள் இயேசுவை குற்றபடுத்துகிறாள், நீர் எனக்கு இரங்கவில்லை என்று இன்றைக்கும் ஜனங்கள், இப்படி சூழ்நிலையை அல்லது மனிதர்களை தாங்கள் தானாய் எடுத்த முடிவினால் குற்றப்படுத்துகிறார்கள்? (பதிலுக்கு காத்திரு) அல்லது, ஜனங்கள் தேவனை குற்றபடுத்துவது தானாய், எடுத்த முடிவினால் பின்னர் கடவுளுக்கு அக்கரை இல்லை என்கிறார்களா? (பதிலுக்கு காத்திரு)

7) இந்த கதையில் மாத்தாளுக்கு தெரியும், இயேசு போதகர் அவருக்கு அநேக சீஷர்கள் உண்டென; அவள் இயேசுவை" ஆண்டவர்" என்றாள் அவள் அவரை ஒரு பெரிய அதிகாரியாய், மேலானவராய் பார்க்க, பின்னர் என்னுடைய பிரச்சனை தீர்த்து வையும் என்கிறாள். இன்றைக்கு அநேகருக்கு வரும் பிரச்சனை (தானாய் எடுத்த முடிவினால்) பின்னர் தேவனிடம் பிரச்சனை தீர்த்து வையும் என்கிறார்கள்? பதிலுக்கு காத்திரு)

எப்படி ஜனங்கள் இப்படி செய்கிறார்கள்? (பதிலுக்கு காத்திரு) நாம் தேவனை ஆண்டவர் என அழைத்து, நாம் எடுத்த முடிவால் வந்த பிரச்சனையை தேவனிடம் சென்று இந்த பிரச்சனை போகட்டும் என்கிறார்கள்? நீங்கள் என்ன

நினைக்கிறீர்கள் ? (பதிலுக்கு காத்திரு)

8. ஆச்சரியமானது - குற்றப்படுத்துவது; ஆண்டவர் என்ன நினைப்பார் ஜனங்கள் தங்களால் ஒன்றும் செய்யலாகாது, பின்னர் தேவனை நோக்கி உமக்கு மற்றவர்கள் போல் அக்கறை இல்லை? என்கிறோம்? (பதிலுக்கு காத்திரு)

9. மரியாள் நல்ல பங்கை தெரிந்து கொள்ள மார்த்தாள் அவளை ஏலனம் பண்ணுகிறாள். இன்றைக்கு நல்ல முடிவை ஜனங்கள் எடுக்க, பின்னர் அவர் மற்றவர்களால் அவமதிக்கப்பட பின்னர் வேறு ஏதாகிலும் செய்ய என்னுகிறார்கள்? (பதிலுக்கு காத்திரு). எப்படி மற்றும் இடங்களில் நடக்கிறது? நம்முடைய வீடு, பணி, இடம், பள்ளி, ஊழியம் அல்லது ஊழியத்தில் நம்மோடு இருப்பவர்களால் கூட? (பதிலுக்கு காத்திரு) நல்ல முடிவை எடுத்து, அதினால் வரும் அவமானம்? (பதிலுக்கு காத்திரு) இயேசு அந்த அவமதிப்பை எப்படி சந்தித்தார், என பார்த்தோம்? (பதிலுக்கு காத்திரு? அதில் இருந்து நாம் என்ன கற்கிறோம்?

10. சரீரபிரகாரமாய் வேலை செய்து, மார்த்தாள் போல அதே நேரத்தில் கடவுளை ஆராதிக்க கூடுமோ? இதை விவரியுங்கள்? (பதிலுக்கு காத்திரு)

11. இன்னொரு பக்கத்தில் அந்த இடத்தில் நான் அந்த நபராய் இருக்க, அதாவது மரியாள் போல, அவர் (இயேசு) வேதத்தை வாசிப்பது மற்றும் படிப்பதாய் அவளின் எண்ணம் வேறு எங்கேயோ கவனமாய் இருக்கிறது? (பதிலுக்கு காத்திரு). இப்படி நீங்களும் எதையாகிலும் செய்பவராய் இருக்கிறீர்களா (அல்லது நீங்கள் அறிந்தவர்கள் இப்படி இருக்கிறார்களா? (பதிலுக்கு காத்திரு)

12. நான் யோசித்து, நான் வேதத்தை வாசிக்க அல்லது ஜெபிக்க என் மனது நான் செய்ய வேண்டிய பல காரியத்தை சிந்திக்க வைத்தது. இப்படி உங்களுக்கு நடந்ததுண்டா? (பதிலுக்கு காத்திரு) இந்த மாத்தாள் / மரியாள் கதையில் இந்த சிந்தனை சிதறலை எப்படி கணக்கிடுகிறாய்? (பதிலுக்கு காத்திரு)

13. இயேசு மார்த்தாளை நோக்கி மரியாள் தேர்ந்தெடுத்ததை யாரும் பரிக்க இயலாது. இன்றைக்கு ஜனங்கள் எடுக்கும் தீர்மானம் உறவினை குறித்து அதாவது இயேசுவின் உறவு - அதாவது அவரில் விசுவாசம், அவரோடு ஆழமான உடன்படிக்கை அல்லது முழு நேர ஊழியம் அவர்கள் இனத்தார் மற்றும் குடும்பம் அவரை ஏலனம் படுத்துவதாய் இருக்கலாம்? (பதிலுக்கு

காத்திரு) எந்த விதமான பிரச்சனை அது கொண்டு வரும் (பதிலுக்கு காத்திரு)

மரியாளின் முடிவை பற்றி, இயேசு சொன்னார், எந்த விதமான முடிவு அல்லது தெரிந்து கொள்ளுதல் நமக்கு பிரயோஜனம்

உள்ளதாய் இருக்கும், இன்றைய நிலையில்? எந்த வழியில்? (பதிலுக்கு காத்திரு)

14. எந்த விதமான மதத்தை பற்றியாவது, மனதில் இருத்தி ஜனங்கள் யோசிக்க செய்; அந்த மதத்தில், ஆசாரியை கவர, பல வேலைகளை அல்லது எல்லா ஆசீர்வாதத்தை பெற எந்த ஒரு பலன் இல்லாமல், வேலை செய்கிறார்கள். எல்லா மதத்தை ஒப்பிட்டு பார் எந்த நல்ல காரியத்திற்கு / இயேசுவை போல மதிப்பீடுகிறதாய் இருக்கிறது. (பதிலுக்கு காத்திரு)

15. மார்த்தாளுக்கு அதிக வேலை இருப்பதை உணர்ந்து, அவளால் செய்ய முடியாமல், போக மரியாள், இயேசுவை குறை சொல்ல ஆரம்பித்தாள், அவள் என்னால் முடியாது என்று எண்ண, அவள் தன் தேவை மேலாக பார்த்து, அவள் இயேசுவிடம் கேட்பதையும் அவரின் உதவியை நாம் நாடுவதையும் இதை மனதில் வைத்து, நாம் இப்படிபட்ட காரியங்களை சமாளிக்கிறோம், நாம் அதிக பாத்திரவான்களாய் இருக்க நல்ல முடிவை தேர்தெடுப்பதை குறித்த இந்த கதை குறிப்பிடுவது என்ன? (பதிலுக்கு காத்திரு)

16. மரியாளை இயேசு கனப்படுத்தினார், அவள் செய்த காரியம் அவரின் கலாச்சாரம், மற்றும் எதிர் பார்ப்புகளுக்கு விரோதமாய் இருந்தது? (பதிலுக்கு காத்திரு) தேவனை அறிய மற்றும் அவர் பாதத்தில் அமர, நீங்கள் கலாச்சாரத்திற்கு, மனிதர்களின் எதிர்பார்புக்கு, பிற காரியங்கள் செய்ய முடியுமா? எப்படி?

இப்படி மாத்தாள் - மரியாள் வேறு கதையை மிகவும் எளிதான கதை மூலம் முடிக்க உங்கள் ஊழியத்தை பல விதத்தில் செயல்படுத்தலாம், அதாவது ஜெபத்தில் அல்லது எதையாகிலும் நடைமுறை படுத்துவதாய் அல்லது சில கேள்விகள் கேட்டு முடிவு செய்யலாம்.

- இந்த கதையில் இருந்து கற்றது?
- ஆண்டவர் இந்த கதையில் உங்களுகு வெளிப்படுத்தியது?
- ஆண்டவரை பற்றி நீங்கள் அறிந்து கொண்டது?
- எந்த ஆராய்ச்சி உங்களுக்கு அடுத்த வாரத்தில் உதவு காணப்படும்

அடுத்த ஆழமான கதை - மற்றும் கேள்வி தயாரித்தல் அது பின்னிணைப்பு ? இதில் உள்ளது - கரு எடுத்துக் காட்டு கதையில் பயணம்

வித்தியாசமான நடைமுறைபடுத்துவது:-

எல்லா ஆராய்ச்சி கதையை பற்றி முடிந்தவுடன் மக்கள் நன்கு அந்த கதை அறிய, அந்த

ஆராய்ச்சி மூலம் தெரிந்த அப்பியாசப்படுத்தும் காரியங்கள், கதை சொல்பவர் ஒரு வித்தியாசமான முறையில் அக்கதை மக்களின் மனதில் பதிய உதவுகிறார்.

எ.டு. ஐந்து நாள் பயிற்சி கூடத்தில், கற்பவர்கள் 21 கதையை அறிகிறார்கள் அதன் பின் அது ஞாபகத்தில் அப்படியே இருக்க ஒரு நடைமுறை படுத்தும் காரியம் தேவை. அந்த கதையை அலசிப்பார்ப்பது, பிரயோஜன படுத்த அது மனதில் இருக்கும்.

இந்த பிரயோஜனபடுத்த மக்கள் தாங்கள் அறிந்த கதையை மற்றவருக்கு சொல்ல உதவுவார்கள்? நீங்கள் மக்களை ஒரு பாட்டு அல்லது ஒரு பாடல் வடிவில் கதை சொல்ல செய்யுங்கள். எதையாகிலும் நீங்கள் வாய்-வழி கல்வி மூலம் உருவாக்க அது ஞாபகத்தில் தங்க உதவுகிறது.

இந்த நடைமுறை படுத்துவது முக்கியமாய் படிக்க தெரியாதவர், தன் சொந்த மொழியில் வேதம் இல்லாதவர், எந்த சி.டி அல்லது எந்த ஒரு புத்தகம் இல்லாதோருக்கு உதவும் கல்வி; கற்காதவர், பல மொழி தரப்பட்டோர், வேதாகம சி.டி அல்லது கதை பயிலாதவருக்கு உதவும்.

ஆச்சரியமான தீர்வுகள் தானாக நீங்கள் கண்டுபிடித்த பின்பு, நாங்கள் கண்டுபிடிக்க பல நன்மையான தீர்வு மனதில் வந்தது. தங்கள் மொழியில் வேதாகம கதை பதிவு செய்து, அதன் மூலம் கதை பதிவு செய்து, அதன் மூலம் கற்பவர்களுக்கு அந்த பாடசாலையில் அவர்கள் மொழியில் கதையை பதிவு செய்கிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன் நாங்கள் உருவாக்கியது "இருதயபை" நீங்கள் கேட்ட கதையை இருதய பையில் இருந்தது... பின்னர் நாங்கள் கண்டறிந்த கஷ்டம் நூறுக்கு மேற்பட்ட கதையை படிப்பறிவு அற்றவர்கள் படிக்க, அவர்களுக்கு கதை தெரிந்தும், அவர்களால் வரிசைபட எழுதி வைக்க முடியாத நிலை, எந்த கதை ஞாபகத்தில் உள்ளன என பகுத்தறிய முடியாமல் போனது.

நாங்கள் கொண்டு வந்த இருதய பை புத்தகம். ஒரு சிறிய அட்டையில் ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு வரைபடத்தால் படிப்பறிவு அற்றவர் உடனே அது எந்த கதை என அறிய. இயலும் என்பதை உணர்ந்து உருவாக்க இது மனப்பாடம் செய்வது அல்ல, ஒரு சிரிய கோடுகள் தான் கதையை பற்றிய வரைப்படம் வைத்து ஒவ்வொரு பக்கங்கள் நன்கு மூடப்பட்ட ஒரு சாவி கொத்தைபோல அது கதை சொல்பவரின் இருதயம் புத்தகமாய் மாறியது (படித்தவர்களுக்கு கூட இந்த புத்தகத்தை விரும்பினர்.

இந்த அருமையயான சிந்தை மற்றும் ஒரு அருமையான தீர்வை, எண்ணத்தை கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

# பாடம் :6 பொது அறிவுரை உரையாடலை நடத்த

உங்கள் கலந்துரையாடல் முன்னேறி செல்ல, தேவன் உங்கள் பழைய அனுபவங்கள் மற்றும் வேதாகம அறிவின்படி தேவன் கேள்விகளை தயார் செய்ய உதவுவார். ஆவியானவரே, நீங்கள் எதை பேச வேண்டும் என உங்களை அதன் வழியாய் நடத்துவார்.

நாங்கள் சொல்லும் முக்கியம

ான திறமை, வெற்றிகரமான கலந்துரையாடலில் கொண்டு செல்ல; கதையை கேட்டு அதற்கு பதில் அளிக்க உதவுகிறது. ஆண்டவரின் வார்த்தையை கவனமாய் வாசித்து, மற்றும் நீங்கள் கதையை சொல்ல, நீங்கள் தேவன் காட்டும் வழியில் நடைமுறைபடுத்த வேண்டிய காரியத்தை கதையில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதே வண்ணம்; உரையாடலின்போது ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள், அதற்கேற்ப பதிலை சொல்லுபவராய் நீங்கள் காணப்பட வேண்டும்.

## அன்பான பெரியவர்

ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட கிராமத்தை சேர்ந்த மக்கள், பல பெரியவர்கள் மத்தியில் உட்கார்ந்து பேசத் தொடங்கினர் ஒரு சிலர் சகல ஞானமாய் பேசும் பெரியவர் பக்கத்தில உட்கார்ந்து, அவர் சொல்லுவதை கேட்க விரும்பினர். அவர் சொல்லுவதை கேட்பதாயும் அவர் ஜனங்களுக்கு கூறும் அறிவுரையை கேட்பதாய் இருந்தனர். ஆனால் பெரும்பாலான மக்கள் ஒரு குறிப்பிட்ட பெரியவர் உடன் பல நேரம், அவர் சொல்லுவதை கேட்க விரும்பினர். அந்த கிராமமே அவரை "அவருமையான பெரியவர்" என அழைத்தது.

அந்த பெரியவர் ஞானமாய் பேசினாலும், மற்றவர்கள் சொல்லுவதை கேட்பவராய் இருந்தார். இதைவிட அந்த பெரியவர் மிகச் சிறந்த திறமையை காண்பித்தார், அவருக்கு நன்கு தெரியும்; எப்படி தன் ஞானத்தை மற்றவர்களுக்கு தெரியபடுத்தி. அவர்களை ஆராய செய்து மற்றும் யோசிக்கவைப்பது. அந்த பெரியவர் எல்லா காரியம் அறிந்திருக்க மற்றவர்கள் சொல்லுவதை கேட்பதும், மற்றும் அவர்கள் சொல்லும் காரியத்தை அறிவதில் ஆர்வம் காட்டுபவராய் இருந்தார். இந்த பெரியவர் அதிகம் பேசாமல், அவர்கள் கேள்விகளுக்கு பதில் தெரிந்திருந்தும், மற்றவர்களை யோசிக்க வைத்து அவர்களாக பதில் சொல்லி, தங்கள் பிரச்சனைக்கு ஏற்ற தீர்வை கண்டு

பிடிக்க செய்வார்.

இந்த பெரியவர் அவர் குடும்பத்தார் மகன்கள் மற்றும் மனைவி, மகள்கள் அவர்களின் கண்ணோட்டத்தை உற்சாகப்படுத்தி, கேட்பவராய் இருந்தார். அவருக்கு மற்றவர்களை பேசவைப்பதால் பயம் இல்லை, அவர் சகல ஞானம் கொண்டவராய் காணப்பட்டார், அவரின் எண்ணம் மற்றவர்களை உற்சாகப்படுத்தி, தைரியப்படுத்தி, அது பல பெரியவர்களாகிய தலைமைத்துவத்திற்குள் அவர்களை கொண்டு செல்லும் என அறிந்திருந்தார். அவரை பின்பற்றுவோர், அவரின் பணியை பின்பற்றி மற்றவர்களை உற்சாகப்படுத்தி அவர்களும் ஞானத்தை அறிய உதவி செய்தனர். இந்த பெரியவரின், பிள்ளைகள் வளர்ந்து, அவர்கள் தைரியசாலிகளாய் மாறி; அவர்கள் தகப்பனின் வழியை பின்பற்றுபவர்களாய் காணப்பட்டனர்,

வேதம் தெளிவாய் சொல்லுகிறது, இயேசுவின் ஊழியத்தில் அவர் உலகத்தில் இருந்த நாட்களில் அவரின் வார்த்தையை கேட்ட; 5,000 பேர் கூடி வந்தனர். ஆனால் இந்த ஜனங்களுக்கு உணவு தேவையாய் இருந்தது.

இயேசு ஒரு கேள்வியை பிலிப்பிடம் மற்றும் சீஷர்களிடம் கேட்டார். அவர்களை யோசிக்க வைத்தது, அவர்களே அந்த பிரச்சனையை தீர்க்க செய்தார். ஆனால் ஒருவரும் அவர் அற்புதம் செய்ய வேண்டும் என துணிச்சலாய் கேட்க முன்வரவில்லை, அதினால் இயேசுவே, அந்த பிரச்சனைக்கு தீர்வாய் ஒரு அற்புதம் செய்தார். ஒரு சிறு பையனின் உணவு, அநேகருக்கு பெருக்கமாய் கொடுக்க செய்தார்.

அடிக்கடி இயேசு சீஷர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, மற்றவர்கள் யோசித்து தேவனின் வழிமுறைக்கு மூன்று வருடம் சீஷர்களை இயேசு உற்சாகப்படுத்தி அவர் வார்த்தையை கேட்க, நம்பி, அவருடைய ஞானத்தை அப்பியாசப்படுத்த அவர் உதவினார். இயேசு தம்முடைய சீஷர்கள்; சேவை, செய்ய மற்றவர்களை வழிநடத்த, உதவினார்.

இன்றைக்கு வேதாகம பகுதிகளை எஸ்.டி.எஸ் முறையில் சொல்ல; அந்த கலந்துரையாடலில் ஈடுபடுவோர் குடும்ப மற்றும் ஊழிய தலைவர்கள் ஆவர், அவர்களுக்கு மற்றவர்களைவிட ஞானமும், மற்றவர்களுக்கு போதித்து வழி நடத்த அறிவு உள்ளது. கலந்துரையாடலில் ஈடுபடாத, கேள்விக்கு பதில் சொல்லாதவர்களையும் உற்சாகப்படுத்துகிறோம். என்ன ஒரு சந்தோஷம் இப்படி தைரியமான தலைவர்கள், மற்றவர்கள் சொல்லுவதற்கு உதவி செய்பவர்களாய் காணப்படுகின்றனர். இந்த தலைவர்கள் மற்றவர்களை உற்சாகப்படுத்துவதுமட்டும் அல்லாமல்; கேட்போர் சிந்திக்க

வைத்து அவர்கள் கருத்து சொல்ல வாய்ப்பு அளிக்கின்றனர். எப்படி அருமையான, அன்பான பெரியவர், இயேசுவை போல்; தைரியத்தை மற்றவர்களுக்கு சொல்ல தலைவர்கள், தங்களுடைய ஆழமான ஞானத்தை இலவசமாய், ஏற்ற நேரத்தில் பகிர்ந்து கொள்கிறார்கள்.

கேட்பது மற்றும் சொல்லுவதின் சவால்கள்:-

நீங்கள் முதலில் எஸ்.டி.எஸ் யின் திறமையை கற்க; அதிகமான காரியம் ஞாபகத்தில் இருத்த வேண்டியது அவசியமாகும் புதிதாய் எஸ்.டி.எஸ் யில் ஆர்வம் காட்டுவார்; மற்றும் அதை சரியாய் எடுத்துரைப்பது, கதை சொல்லி அதன், பல பகுதிகளை மனதில் வைப்பதும், கேள்விகள் கேட்பது, என அதில் முழு கவனம் செலுத்துவர்; இப்படிப்பட்டவர்கள் சொல்லி கொடுக்கும் பகுதிகளில், மாத்திரம் கவனம் செலுத்தி, முக்கிய காரியங்களை விட்டு விடுவார்கள். மக்கள் முக்கியமாய், இப்படி கதையை கேட்டு அதை ஒவ்வொருவரும் மற்றவருக்கு பகிர்ந்து சொல்ல வேண்டும். மற்றவர்கள் சொல்லுவதை கேட்காமல், அவர்களின் கேள்விக்கு பதில் அளிக்காமல் இருக்க அதில் எந்தவொரு பகிர்ந்துரையாடல் இருக்காது.

ஒரு முக்கிய மூளைக்கு, ஒரு திறனாய்வு; அதாவது நுழைவாயில் அல்லது பேச்சுவார்த்தையின் மூலமாய்தான் சாத்தியம். நீங்கள் பல விலையுயர்ந்த பொக்கிஷங்களை கதையில் கண்டெடுக்க, அந்த அருமையான காரியத்தை நீங்கள் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதினால் உங்களின் தொகுப்புரை; மற்றும் நீங்கள் திட்டமிட்ட காரியமாகிய, கேள்வி கேட்பதைவிட; மற்றவர்கள் சொல்லுவதை கேட்க வேண்டும். மக்களிடம் கதையை பற்றி பேசி அவர்களிடம் உரையாடுங்கள்.

கலந்துரையாடல் செய்யும்போது நீங்கள் தயாரித்த கேள்வியை, கொண்டு உரையாடலுக்கு அந்த கதையை பற்றிய காரியங்களை கேட்கத் துவங்க, நீங்கள் கேட்கும் கேள்வியின் மூலம் நீங்கள் வேத கதையை தயாரிக்கும் போது நீங்கள் கண்டெடுத்த பொக்கிஷத்தை அவர்கள் அறிய உதவுகிறீர்கள். பலர் இப்படி, ஒவ்வொரு நாளும், ஒருவரோடு ஒருவர் பேசுவதுண்டு; எந்தவொரு எழுத்துபடிவம். அல்லாமலேயே நம்மை ஆச்சரியத்தில், நம்மை பரவசப்படுத்தும் காரியத்தை; நாம் பகிர்ந்து கொள்வது உண்டு. நீங்கள் உங்களை நிதானப்படுத்தி, வேதாகம கதையைப்பற்றிய உரையாடலை ஆரம்பிக்கவும்.

முக்கியமாய்; கேட்பது மற்றும் பகிர்ந்து கொள்வது எஸ்.டி.எஸ் யில் முக்கிய இடத்தை பிடிக்கும்; அதற்காகத்தான் இதன் விளக்கமாய், எஸ்.டி.எஸ் முறை, கேட்பது மற்றும் பகிர்ந்து கொள்வதாகும்.

கேட்பது மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் (நடிப்பின் மூலம்)

பல கதைகளை எஸ்.டி.எஸ் முறையில் ஆராய; அதில் ஒன்று சங்கீதம் 23 பலருக்கு இந்த வேத பகுதி சிறிதும், மற்றும் தெரிந்த பகுதியாய் இருக்கலாம். ஆனால் இப்பகுதியை நிதானமாய் ஆராய்ந்து, கேள்வி கேட்க பல ஆழமான சத்தியமும் அப்பகுதியில் இருந்து தேவன்; வெளிக் காட்டுகிறார். ஏன் தெரியுமா! அது அதிசயமானதாய், சில நாட்களுக்கு முன்பு ரமேஷ் எங்களின் தொகுப்பாளர்; ஒரு புத்தக உலகத்தை சேர்ந்தவர், சொன்னது, எஸ்.டி.எஸ் முறையில் சங்கீதம் 23 அதிகாரத்தை சொல்லிக் கொடுப்பதாய் சொன்னார் (உங்கள் கவனத்திற்கு நேபாலில் உள்ள இந்த மனிதனுக்கு எஸ்.டி.எஸ் முறையை சொல்லிக் கொடுத்தேன்). எஸ்.டி.எஸ் முறையை சங்கீதத்தில் பயன்படுத்துகிறார் என்றது; எனக்கு சிரிப்பாய் இருந்தது. நான் அவரிடம் எனக்கு சொல்லிதர முடியுமா, என்று கேட்க? அந்த நாள் மறக்க முடியாத நாளாய் அமைந்தது.

இந்த பகுதியில் எப்படி மெதுவாக கதை கேட்பது கதை சொல்லுபவர் சொல்லுவதை கேட்பதும்; மற்றும் எப்படி ரமேஷ் எனக்கு ரொட்டி துண்டு போல ஒவ்வொரு துண்டை; அதாவது ஆதாரம் கொடுத்து அவ்வேத பகுதியில் பொக்கிஷத்திற்கு நேராக என்னை வழி நடத்தினார்: நான் சொல்லுவதை கேட்டு, எனக்கு பல ஆதாரம் கொடுத்து, அந்த ஆராய்ச்சிக்குள் என்னை நடத்தி சென்றார் என பார்க்கலாம்.

என்னிடம் அந்த வேதாகம கதையை, பற்றிய கேள்வி கேட்டார், ஆனால் ரமேஷ் கடைபிடித்த, அந்த ஒரு நூல்போன்ற செய்தி இன்றும் மேலோங்கி நிற்கிறது. இன்றைக்கு அவர் கேட்ட பல கேள்விகளை தவிர்த்து அந்த மேலோங்கி நின்ற நூலை; போல செய்திகொண்ட அந்த கேள்வியை மட்டும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

ரமேஷ் முதலில் கேட்டது "எப்படி ஆடு என்றது மேய்ப்பன் என அழைக்கப்பட்டது? நான் கொடுத்த பதில் பல ஆண்டுகளாக எனக்கு தெரிந்தது" இது என் மேய்ப்பன்"; இது ஆண்டவராகிய இயேசுவை தனிப்பட்ட முறையில் அறிந்தது என்றேன்.

என்னை ரமேஷ் அந்த கேள்வியை விட்டு முன்னோக்கி போகவிடாமல், எஸ்.டி.எஸ் முறையில் கதையை கவனமாய் கேட்பதும், அதன் பின்னரே அப்பியாசப்படுத்த கூடிய காரியத்தை எடுக்க செய்கிறது.

ரமேஷ் என்னை இன்னும் பொறுமையாய் அந்த கதையை கவனிக்க; அந்த பகுதி தெரிந்ததாய் இருந்தாலும், அவர் இன்னும் அந்த பகுதியை ஒருமுறை கேட்கும்படி செய்தார்.

நான் அதற்கு சம்மதித்து, அந்த பகுதியை திரும்ப வாசிக்க கேட்டேன். என்ன அந்த திறமை என கண்டுபிடிக்கவும், ஒப்புக்கொண்டேன். உண்மையை சொல்ல, என் மாணவன் எனக்கு நன்கு தெரிந்த சொல்லிக் கொடுத்த பல புத்தகங்களில், நானே இந்த பகுதியை எழுதியிருக்க; இதில் இருந்து எனக்கு என்ன இவர் எடுத்துரைக்க; விரும்புகிறார் என யோசித்தேன்.

இதை பேசுவது ஆடு அதுதானே? என ரமேஷ் என்னை கேட்க; நான், ஆம் என்றேன்; எப்படி ஒரு ஆடு தன் மேய்ப்பனைப் பற்றி பேச இயலும்? எப்படி அந்த ஆட்டிற்கு அந்த மேய்ப்பனை பற்றி தெரியும்; நான் கேட்டது நீங்கள் சொல்லுகிறபடி; எப்படி அந்த ஆடு தன் மேய்ப்பனை அவன்? என அழைக்க முடியும் என்பதுதானே என்றேன்.

அது சரி; என்றார் ரமேஷ் "ஆனால் உங்களுக்கு தெரியாது எங்கிருந்து அந்த ஆடு தன் மேய்ப்பனை கண்டது என"? என்றார்.

என்ன? எனக்கு புரியவில்லையே என்றேன். அந்த பகுதியில் ஆடுக்கு மற்றும் மேய்ப்பனுக்கு என்ன சம்மந்தம் உள்ளது? அதை பாருங்கள்? என்னை இன்னும் அதிகமாய். ரமேஷ் அந்த பகுதியில் ஏதோ ஒரு காரியத்தை தேட முன்னோக்கினார்? (எஸ்.டி.எஸ் முறையில் எந்த ஒரு நபரையும் நாம் கண்ட பொக்கிஷத்தை. அறிய வலுக்கட்டாயபடுத்துவது இல்லை, ஆனால் ரமேஷ் எனக்கு எதையோ சொல்ல விரும்புகிறார், மற்றும் எனக்கு அவரை நன்கு தெரிந்து இருந்ததால், இப்படி என்னை கட்டாயப்படுத்த நான் ஒபுக்கொடுத்தேன்.

சரி, நான் நினைத்தது ஆடு நடத்தப்பட, அதன் மேய்ப்பன் அதற்கு முன்பாக செல்ல வேண்டும்?

சரி, அதுதான், "ரமேஷ் எனக்கு சொன்னது! அப்பொழுது நான் மரண பள்ளத்தாக்கில்

நடந்தாலும் இதில் எப்படி ஆடு தன் மேய்ப்பனை பற்றி சொல்ல இயலும் என்றார்?

"அவர்"? என்று பதில் அளித்தேன்; திரும்பவும் எனக்கு ரமேஷ் இந்த கதை சொல்லுகிறது "நான் பொல்லாப்புக்கு பயப்படேன், தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர்? அந்த ஆடு எப்படி மேய்ப்பனை அழைத்தது? இங்கு எப்படி ஆடு அந்த மேய்ப்பனைபற்றி சொல்லிற்று?

கொஞ்சம் பொறு என நான் கூறி; "நீர்" என்றேன். இங்கு ஒரு மாற்றம் உள்ளது நான் அதை இவ்வளவு நாள் கண்டுகொள்ளவில்லை. இங்கு அந்த ஆடு மேய்ப்பனிடம் பேசுகிறது; அது மேய்யப்பனை பற்றி பேசவில்லை! அதுதான் மேன்மை

சரி இன்னும் பாருங்கள், இங்கு எங்கு அந்த மேய்ப்பன் உள்ளான்? என்ன மாறினது? அதைபாருங்கள்? என்றார்.

எதை பார்க்க வேண்டும்? என்று நான் கேட்க; இப்பொழுது என்ன மாறி இருக்கிறது; அதை பாருங்கள். முதலில் அந்த மேய்ப்பன் முன்பாக இருந்தார், இப்பொழுது அந்த மேய்ப்பன் எங்கே; நான் உற்சாகமாய் சொன்னது முதலில், அந்த மேய்ப்பன் முன்பாக இருந்தார்; இப்பொழுது அந்த மேய்ப்பன் அந்த ஆட்டுடன் இருக்கிறார் என்றேன். ரமேஷ், நீங்கள் சொன்னது சரிதான்; முதலில் முன்பாக இருந்த மேய்ப்பன், இப்பொழுது ஆட்டின் பக்கத்தில் உள்ளார், ஆனால் அதோடு அல்ல இன்னும் கூர்ந்து அந்த அதிகாரத்தை பார்க்க செய்தார்; திரும்பவும் “நீர்” என்ற வார்த்தை வந்தது; மேய்ப்பன் அபிஷேகத்தை, ஆட்டின் தலையில் ஊற்ற இப்பொழுது அந்த மேய்ப்பன், எந்த இடத்தில் இருக்கிறார்? என கேட்டார்.

நான் சொன்னது எனக்கு புரிந்தது; அந்த ஆட்டின் மேல் மேய்ப்பன் இருக்கிறார்.

இன்னும் பாருங்கள், ரமேஷ் என்னை உற்சாகப் படுத்தினார். இந்த கதை சொல்லுகிறது என் ஜீவனுள்ள நாளெல்லாம்; நன்மையும் கிருபையும் என்னை தொடரும் என. இதில் அந்த ஆடு இந்த வார்த்தையை சொல்லுகிறது. அது நம்பினது மேய்ப்பனின் பிரசன்னம் அதன் உடன் இருக்கும் என்று நம்பினது அதை கட்டறிந்தீர்கள் என்றார்?

ஆம், ஆச்சரியமாய் உள்ளது, ரமேஷ் புன்னகையுடன் எனக்கு சொன்னது" அந்த மேய்ப்பன் முன், பின் மற்றும் முழுமையான அந்த ஆட்டை பாதுகாப்பவராய் காணப்படுகிறார்.

அங்கு இருந்து, நாங்கள் இருவரும் அந்த பகுதியை வாழ்வில் நடைமுறைபடுத்துவதை பற்றி பேசினோம்; எப்படி பேசாமல் இருக்க முடியும் அந்த புதிய ஆராய்ச்சி, எப்படி இயேசு மேய்ப்பனாய் நமக்கு முன்பாக, பின்பாக, நம்மீதும்; என்ற காரியம் எங்களின் பேச்சாய் இருந்தது. அது எப்படிப்பட, ஆறுதலான காரியமாய் காணப்பட்டது.

பின் கதை:-

சில நாட்களுக்கு பிறகு எங்கள் வேலை இடத்தில் என்னென்ன தவறுகளை ஊழியத்தில் செய்கிறோம் / என; அங்கு வேலை செய்பவர்கள் பேச. தேவன் திரும்ப திரும்ப தம் கிருபையால்; எல்லாவற்றையும் தாண்டிவர கிருபை செய்கிறார். அவர்கள் பேசிக் கொண்டு இருக்க, நான் சொன்னது, ஆண்டவர் எப்பொழுதும் நம்மை பின்பாக பராமரிக்கிறவராய் இருக்கிறார் என்றேன். ஒவ்வொரு நாளும் சவால்களை சந்திக்க, அதற்கு துணையாய் உள்ளவர் ஆண்டவர். அவர் சொல்வது, முன்பாக செல்லுங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம். நான் உன்னை மூடிக்கொள்கிற கர்த்தர்; உங்களை துன்புறுத்த நான் ஒருபோதும் அனுமதிப்பதில்லை; என்றார் நம் தேவன்.

பின்னர் அந்த சங்கீதம் 23 கதை எனக்கு ஞாபகத்தில வந்தது, ஆண்டவர் இந்த அதிகாரத்தில் சொன்னவண்ணமாக; தேவன் நம்மை முழுமையாய் ஆண்டுக் கொண்டு இருக்கிறார். அந்த வசனத்தின்படி, அவருடைய நன்மை மற்றும் கிருபை நம், ஜீவ நாட்கள் வரையில் தொடரும்.

ஆம் ஆசிரியர்கள் கூட, மாணவர்களிடம் கேட்கின்றனர். அந்த அதிகாரம் தெரிந்ததாய் இருந்தாலும், இப்படி மாற்றமாக; விசுவாசிகள் தலைவர்களுக்கு சொல்லிக் கொடுப்பவர்களாய் காணப்படுகின்றனர். முக்கியமாய் ஐரோப்பிய நாடுகள், மற்றும் தெற்கு நாடுகளில் கூட இப்படி செய்யப்படுகிறது. மிஷனரிமார்கள் பல நாடுகளை சேர்ந்தவர்கள் இந்தியா, டாகோ, மொசாம்பிக்யு, தைசர் மற்றும் பிலிப்பைன்ஸ் அது பல காரியங்களை ஆராயும் தலைவர்கள்; மூலம் எஸ்.டி.எஸ் கற்க விரும்புகிறார்கள்.

இந்த எஸ்.டி.எஸ் ஆனது, மனிதர்களை கொண்டது. அவர்கள் சொல்லுவதை கேட்பது, அவர்கள் தேவ வார்த்தையை கேட்பவராய் காணப்படுகிறார்கள். கேட்பதும், மற்றும் அதற்கு பதில் அளிப்பது, அது எல்லாம் உள்ளது. தன் விளைவுகள், வேறு தலைவர்கள், மாத்திரம் தேவனிடம் கேட்தும்; அந்த அறிவை மற்றவர்களுக்கு சொல்வது அல்ல, இந்த அறிவுள்ள பயிற்சியாளர்கள்; வேண்டிக்கொள்வதின் மூலம்; பல பயிற்சியாளர்கள், மிஷினரிமார்கள் 3 மற்றும் 4 ஆம் தலைமுறையை சேர்ந்தவர்கள்

எஸ்.டி.எஸ்யில் பயிற்சியளிக்கிறார்கள்.

வெற்றிக்கு வழிமுறை

நாங்கள் சொன்ன பல செய்திகள், உங்களை எஸ்.டி.எஸ் பயிற்சியை எடுக்க உதவும் என நம்புகிறோம். நாம் கல்வியை கற்றவர்களுக்கு தேவையான காரியங்களை பார்ப்போம். நீங்கள் எப்படி கேள்விகளை மனதில் வைக்க இயலாது, என்று நினைக்கிறீர்களோ அதே வண்ணம் அதை எழுதிவைத்து கதையில் உள்ள கேள்வியை நீங்கள் கேட்க இயலாது உங்கள் கேள்வியை ஞாபகத்தில் இருத்த, மனதளவில் அந்த கதையை வாசித்து; அந்த கதையே, உங்களுக்கு கேள்வியை உணர்த்த செய்யுங்கள். அந்த கதையே உங்கள் ஞாபகமமாய் மாறி, அந்த கதை உங்கள் புத்தகமாய் அமையும்.

முன்னுரையை திரும்ப யோசி

நீங்கள் பல பொக்கிஷத்தை கதையில் அறிந்திருக்க; நீங்கள் தயாரித்த முன்னுரையை கூட்ட மற்றும் சுருக்க, மனதில் பதியவைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் சொல்லும் முன்னுரையே, அக்கதையில் இருக்கும் பல காரியங்கள், செய்தியை அந்த முன்னுரையில் இருந்தே எடுக்கலாம்.

எ.டு. நீங்கள் ஆபிரகாம் கதையை சொல்ல, ஆதி 12:1-9 இதை சொல்லும் போது நீங்கள் " இந்த கதை ஒரு மனிதனை பற்றியது, தேவனால் அழைக்கப்பட்டு, தன் சொந்த நாடு, இடத்தைவிட்டு புதிய இடத்தில், தேசத்தில் தேவன் போக கட்டளையிட்டார். நீங்கள் இந்த செய்தியை அந்த வசனபகுதியில் ஆராய, பொக்கிஷத்தை அறிய ஆரம்பிப்பீர்கள். பின்பு நீங்கள் அறிவது, அந்த முக்கிய பகுதி ஆபிரகாம் குறித்தது, அந்த கதையில் அடங்கி இருக்க; நீங்கள் முன்னுரையில் இருந்து செய்தியை எடுத்துக்கொள்ளலாம்.

நீங்கள் கதையில் கண்டுபிடித்த காரியம் கதையை புரிய உதவி செய்யும்மானால் அதை முன்னுரையில் சொல்லலாம்.

பொக்கிஷம் எ.டு. மார்த்தாள் - மரியாள் கதையில் உள்ள மார்த்தாளின் விருப்பம் அநேகருக்கு உணவு தயாரிப்பதற்கும், அதன் பின்னர் அதில் கண்டடையும் பொக்கிஷம்; எப்படி மார்த்தாள் அநேகருக்கு முன்பாய் இயேசுவை அவமதிப்பதும். இயேசுவை அதிகாரம் செய்ததை, என்பதை காண்கிறோம். இந்த கதை ஆரம்பிக்கும்போது இயேசு, மற்றும் அவருடைய சீஷர்கன் பட்டணத்திற்குள் வந்தார்கள்;

என போடப்பட்டுள்ளது. ஆனால் கதையில் நமக்கு தெரியவருவது. மார்த்தாள் இயேசுவை மட்டும் தன் வீட்டிற்கு அழைக்கிறாள்.

இந்த கதையை தெளிவாய் அறிந்து; அதை பகிர்ந்துரையாட; இந்த கதைக்கு சரியான முன்னுரை கொடுப்பது அவசியம். இயேசு இவ்வுலகில் இருந்த நாட்களில்; அவர் மனிதர்களை தம்முடன் அழைத்து செல்பவராய் காணப்பட்டார். இந்த மனிதர்கள், தான் அவருடைய சீஷர்கள் அவருடன் எங்கும் சென்றார்கள். ஆனால் சில இடங்களில் இயேசு, சில சீஷர்களை மாத்திரம் சிறிய நேரமளவில் தம்முடன் இருக்க செய்தார். இந்த செய்தி கேட்டவர்களுக்கு, இயேசு அந்த வீட்டிற்கு வந்தபோது தம்முடைய சீஷர்கள் உடன் வந்தார் என தெரியவருகிறது. கதை சொல்லுபவர்களுக்கு தெரிய வேண்டியது; கேட்பவர்கள் ஒன்று அல்லது அநேகர் கதையை கேட்க, அவர்களுக்கு வேதத்தை குறித்து அறிவு இருக்க இயலாது. அதனால், நீங்கள் சொல்லும் முன்னுரையில் இருந்து அதை புரிய உதவுகிறது. நீங்கள் திறமையான எஸ்.டி.எஸ் கலந்துரையாடலை, நீங்கள் கேட்கிற கேள்விக்கு பதில்வர; நீங்கள் அதற்கு தேவையான செய்தியை முன்னுரை அல்லது கதையில் தெரிவிக்கலாம்.

நீங்கள் சில கதையை; முன்பு உங்களை கேட்போரிடம் சொல்லியிருக்க அதற்கு சம்மந்தப்பட்ட கேள்விகளை கேட்கலாம். ஆனால் உங்கள் மனதில் இருக்க வேண்டியது; நீங்கள் சொல்லும் கதையில், அநேக செய்தி அடங்கி இருக்க; அதை சம்மந்தப்பட்ட மற்ற கதையை சொல்ல அவசியம் இல்லை.

சில செய்திகளை, இயற்கையாய் நீங்கள் முன்னுரையில் தெரிவிக்கலாம். அதாவது, ஆண்டவரின் விதிமுறை குஷ்டரோகிக்கு சாதகமாக, ஓய்வுநாளில், சாப்பிடுவது அல்லது யூதர்கள் சமாரியர்கள் பற்றி அறிந்திருந்த செய்தி இப்படிப்பட்ட விஷயம் உங்கள் கதைக்கு ஆயுதமாக அமைகிறது.

நீங்கள் கலந்துரையாடலை முடித்த பின்பு, நீங்கள் சொன்ன கதையில் சில செய்தியை இணைக்க விரும்புவீர்களேயானால்; அந்த கதை சம்மந்தப்பட்ட சம்பவம் அல்லது ஏதேனும் விளக்கம்; அதை விளக்க வேறு கதையை பல பகுதிகளில், வேதாகம அதிகாரத்தால் இருந்து எடுத்துரைக்கலாம், உங்கள் மனதில் இருத்த வேண்டிய காரியம், அதை எஸ்.டி.எஸ் முறையில் சொல்லுங்கள்; இதை எப்பொழுது சொல்ல வேண்டும் என்றால் உங்களை கேட்போர் ஆழமான ஆவிக்குரிய பகுதிகளை கதையில் இருந்து புரிந்தவர்களாய் காணப்பட்ட, அல்லது ஆவியானவரின் வழி நடத்துதல் இருக்க இதை நீங்கள் செய்யலாம்.

நீங்கள் கொடுக்க பிற செய்திகளை உங்களை கேட்போர் புரிய, அதை அப்பியாசபடுத்துவதில் உதவவேண்டும். ஆரம்பிக்கும் போது; இப்படி சொல்லலாம், இன்னொரு கதை உள்ளது நான் சொன்ன கதைக்கு பல காலம் கழிந்து நடந்த சம்பவம்" இந்த கதையாகும், பின்னர் அந்த அதிகாரத்திற்கு நேராய், சில வார்த்தைகளை மற்றும் உருமானங்கள், இதற்கு நேராய் ஜனத்தை நடத்தினால்; நல்லது இரண்டாம் கதை, பெரும்பாலாய் புதிய ஏற்பாட்டில்தான் இருக்கும்.

எ.டு. நீங்கள் மோசேயை மற்றும் அவன் செய்த வெண்கல சர்ப்பத்தை பற்றி கூற, எண்ணாகமம் 21:4-9, உங்கள் குழு பல காரியத்தை ஆராய்ந்து ஆவிக்குரிய அப்பியாசப்படுத்துதலை முடித்த பின்பு, நீங்கள் இந்த காரியத்தை சொல்லலாம்.

வேதாகமத்தில் உள்ள பல கதையை ஆராய, நான் சொல்லப்போகும் கதை; வேதத்தில் பல காலங்களுக்கு மேலானதாகும். இது நமக்கு இன்னும் ஆராய்ச்சிக்கென்று மோசே மற்றும் யோவான் 3:1-16 சொல்லாம்) உங்கள் நேரம் சுருக்கமாய் இருக்க, நீங்கள் சின்ன முன்னுரை அளித்து பல பகுதிகளை சேர்த்து வசனம் 1-13 மற்றும் இயேசு இப்படிப்பட்டவர் என வசனம் 14-16 சொல்லாம். எஸ்.டி.எஸ் முறையில் இதனை சொல்லுங்கள்.

> எப்படி மோசே வெண்கல சர்ப்பத்தை வனாந்திரத்தில் உயர்த்தினானோ, அதே வண்ணம் இயேசு தேவனின் ஒரே பேரான குமாரன் உயர்த்தப்படகடவர்: அவரை நம்புகிறவன் அழியாமல் நித்திய ஜீவன் பெறுவான். தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ; அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்.

கதைகேட்டவரின் பதிலை கேளுங்கள்

பதிலை சொல்லுபவர்களின், பதிலின் மூலம்; அவர்களின் தேவை தனிப்பட்ட கேள்விகளை நாம் அறிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட செய்திகள் மூலம் தெரிந்த கேள்வியை நீங்கள் தயாரிக்க உதவுகிறது இதுதான் "அந்த நொடியில் சொல்லித்தருவதாகும்"

பெரும்பாலான கேள்விகள், மனிதர்கள் என்ன செய்தார்கள் மற்றும் கடவுள் என்ன செய்தார் என்பதாய் இருத்தல் வேண்டும்

இந்த கேள்விகள் கேட்பவரை பல ஆவிக்குரிய உண்மையை ஆராய உதவுகிறது. நீங்கள் அந்த கதாபாத்திரத்தின் செயல்பாடு மற்றும் வார்த்தைகள் கவனமாய் பாருங்கள், எந்த ஒரு சூழ்நிலையிலும் "ஏன்" என்ற கேள்வியை கேட்காதீர்கள்; அது சில நேரம் பல காரியத்தை ஆராயச் செய்ய வைத்து, எந்த ஒரு வசன பின்- உதவி இல்லாமல், அதை சொல்ல முடியாத அளவில் நம்மை பின்னோக்கி தள்ளிவிடும். பெரும்பாலாக நீங்கள் கேட்கும் "என்ன" என்ற கேள்வி கேட்போரை ஆராய செய்து; அது "ஏன்" என்ற கேள்வியின் பதிலை சொல்வதாய் மாறிவிடும்.

**கண்ணோட்டம் நிறைந்த கேள்வியை கேள்**

கதையின் சிறு பகுதியான முதல் பகுதியை சொல்லி, முடித்த பின்பு, நீங்கள் கேட்கலாம். யாராவது இந்த முதல் பகுதியல் உள்ள விசுவாசம் (ஒரு கதாபாத்திரத்தை, அந்த கதையில் இருந்து எடுத்து? எப்படி அந்த கதை இந்த மனிதன் மதித்த காரியத்தை காட்டுகிறது?

இந்த பகுதியில் உள்ள காரியம், தேவனின் சுபாவத்தை வெளிபடுத்துவதாய் உள்ளதா? இந்த இடத்தில் விசுவாசத்தை பற்றி பார்க்கிறோமா; நீங்கள் இப்படி ஒவ்வொரு பகுதியை ஆராய; அங்கு கொடுக்கப்பட் கதாபாத்திரம், வெளிப்படுத்தின செய்கை, மற்றும் வார்த்தை அவர்கள் வெளிப்படுத்தினார்களா; அதாவது மதிக்காத தன்மை அல்லது பயம், குழப்பம், பொறாமை, பரிவு, தைரியம், நம்பிக்கை, ஞானம், நீங்கள் கேட்கும் கேள்வி அந்த கதையில் சொல்லப்பட்ட செய்தியை சார்ந்ததாய் இருக்க வேண்டும்.

நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆம், மற்றும் இல்லை என பதில் வர; ஆம் பதில்களை பின்னர் கேள்விகள் மூலம் அறியலாம், எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்றும்; எப்படி இந்த கதையின் பகுதியை நீங்கள் பார்க்கிறீர்கள்?

பின்னர் மெதுவாய்; கேட்பவர்கள் கதையில் உள்ள உண்மைகளை தங்கள் அப்பியாசப்படுத்த உதவுங்கள்

நீங்கள் கலந்துறையாடலில் கண்டறிந்த பொக்கிஷத்தை பற்றி, பேச அது ஆவிக்குரிய, அப்பியாசப்படுத்துதலை பற்றி பேச, கேட்பவர்கள் அபிப்ராயத்தை கேளுங்கள். கதையில் கேட்ட வண்ணமாக அவர்கள் அல்லது அவர்களுக்கு தெரிந்தவர்களுக்கு இப்படிப்பட்ட உணர்ச்சிகள் அதாவது (சந்தேகம், பயம், விசுவாசம், நம்பிக்கை, குழப்பம்) இதை

நீங்கள் எதிர்கொண்டதுண்டா என கேளுங்கள். நீங்கள் கேட்டதற்கு "ஆம்" என்ற பதில் வர அல்லது ஏதாகிலும் சரீர அசைவு "ஆம்" என்று எடுத்துரைக்க, அது தான் சரியான நேரம் "உங்களில் ஒருவர் அப்படிப்பட்ட காரியத்தை உங்கள் அனுபவத்தை எடுத்துரையுங்கள் என கேட்கலாம்?

## தனிப்பட்ட அப்பியாசப்படுத்தலை சொல்லுதல்

உங்கள் கலந்துரையாடல் முடிவடைந்து பின்பு, ஆண்டவர் உங்களை நடத்தினால், நீங்கள் கதையில் உங்களை தொட்டகாரியம், அல்லது உங்களை கேட்போர் மனதை தொட்ட பகுதியை அவர்களிடமே கேட்கலாம்.

நல்ல கேள்விக்கான முக்கிய குறிப்பு கேள்விக்கு உங்களின் பதிலாவது

- கதையில் உள்ளது
- கதையில் நிருபிக்க கூடிய காரியம்

## கதையின் வெளியே உள்ள செய்தி

ஒரு முக்கியமான உள் குறிப்பு, அல்லது நடைமுறைபடுத்தும் காரியம் கதையில் இருக்க; அதை சரியாய் சொல்ல, வெளியே உள்ள அதிகாரத்தை எடுத்து அந்த உண்மையை தெரியப்படுத்தலாம். அந்த காரியத்தை நீங்கள் முன்னுரையில் தெரிய படுத்தலாம், அதே வண்ணமாக பல வேத பகுதிகளை நீங்கள் சொல்லி அப்பியாசப்படுத்தும் காரியத்தில் அதை நிருபித்த பின்பு; அந்த கதையில் உள்ள செய்தியை பற்றிபேசலாம்.

இதை பெரும்பாலான நேரத்தில் குறைப்பது நல்லது. ஏனெனில் இது கேட்பவர்கள், கதை சொல்லுபவர், ஆராய்ச்சியை பற்றியே இருக்கும் தவிர அது கதையை கேட்பதாய் இருக்கலாகாது. கதை சொல்பவர்; கதையில் எடுக்கப்பட்ட கேள்விகளை கேட்கலாம்; கதை கேட்பவர்கள் முன்பு கேட்ட காரியத்தில் இருந்தும் செய்தி சொல்லலாம்.

## நல்ல பதில்கள்

மனிதர்கள் சரியான பதிலை அளிக்க, அவர்களை உற்சாகப்படுத்துங்கள், "நான் இப்படிப்பட்ட காரியத்தை கேட்டதில்லை, அல்லது இது நல்ல அர்த்தமுள்ளதாய் இருக்கிறது; என்று உற்சாகப்படுத்தலாம்.

## சரியான பதில் இல்லாதது

பதிலை, கதை கேட்பவர்கள் சரியாய் சொல்லாமல் இருக்க, "நாம் திரும்பவும் அந்த கதையை பார்க்கலாம்; நீங்கள் சொன்ன பதில் அதோடு ஒத்துள்ளதா என பார்க்கலாம்; என கேட்க வேண்டும். கதையின், இறுதி பகுதியில் தவறான பதிலை கூற; நீங்கள் தான் "நான் இந்த கேள்வியை தெளிவுபடுத்தவில்லை என்றும், கேட்ட கேள்வி உங்களுக்கு சரியாய் தெளிவுர நீங்கள் நான் அறிய உதவவில்லை என்று சொல்லலாம்"; கதை சொல்பவர்களாகிய நீங்கள் தான் மன்னிப்பு கேட்க வேண்டும்.

உங்களை கேட்டவர்கள் நீங்கள் கேட்க வேண்டும் உங்களை கேட்பவர்கள், நீங்கள் கேட்ட கேள்விக்கு சம்மந்தமில்லாமல் ஏதோ ஒரு பதிலை கொடுக்க; நீங்கள் சொல்ல வேண்டியது" இந்த தலைப்பை பின்பு நாம் பார்க்கலாம், அல்லது அடுத்த கதையில் நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில் கிடைக்கும். சில கேள்விகள், ஒரு தொடர்போல் அது எங்கேயோ நம்மை சம்மந்தமான கதையில், இருந்து வேறு இடத்திற்கு நம்மை எடுத்துச் செல்லும்.

## உங்கள் குழு அதிகமாய் இருக்க அல்லது நேரம் சுருக்கமாய் இருக்க

கேள்விகளை கேட்டு, அதற்கு பதில் வருவது; அதுதான் ஒரு சரியான எஸ்.டி.எஸ் முறை உங்கள் நேரம் குறைவாய் இருந்து சூழ்நிலை காரணமாக குழுவிடம் சரியான பதில் கிடைக்காமல் போக அதற்கு ஒரு வழி உண்டு. எதை பயன்படுத்தும் ஆசிரியர்கள் கோர்வையான கேள்விகளை கேட்கலாம். கேட்பவர்கள் யோசிக்கும் அளவு, கேள்வி கேட்க, ஆனால் அதை சத்தமாய் சொல்ல சொல்லாமல், கதை சொல்பவராய் நீங்கள் இருக்க உங்களை கேட்பவர்கள் யோசிக்க உதவியாய் இருக்கும்

## தெளிவை தற்காப்பது: திரும்ப சரி பார்த்தல்

அல்லது அலசிபார்த்தல் எஸ்.டி.எஸ் கலந்துரையாடல் பல நன்மையான காரியம் கொண்டு; அது சரி பார்க்க சிறந்த ஆயுதமாகும்

திரும்ப சரி பார்ப்பது, எஸ்.டி.எஸ் முறையில் வேதாகம கதையை முதலில் இருந்து சரிவர நடத்த சிறந்த முறை ஆகும். கதை சொல்பவர்; முன்னுரை சொல்லுவதற்கு முன்பு, அவர் தம்மை கேட்பவரிடம் போன வாரம் எடுத்த கதையை பற்றி கேள்வி மற்றும் ஆராய்ச்சிபற்றி கேட்கலாம். ஏனெனில் புது நபர்கள் அந்த பயிற்சியில் உட்காரலாம்; அல்லது போனவாரம் நடந்த பயிற்சியை சிலர் தவறி இருக்க; இப்படி

திரும்ப காரியங்களை சரிபார்த்து அலச கேட்பவர்கள்; கேட்ட கதையை ஞாபகத்தில் கொண்டுவந்து அதனை விளக்க முடியும்.

அது மட்டும் அல்லாமல்; போன வாரம் சொல்லி கொடுத்த கதையில் கண்டு பிடித்த பொக்கிஷத்தை சொல்ல வேண்டும். இந்த அலசிபார்க்கும் முறையால், பல செய்திகளை மனதில் இருத்தி, வேத வாக்கியங்களை சொல்ல உதவுகிறது. இது முக்கியமாய் சாட்சி பற்றி; அதாவது போன வாரம் கதையில் அவர்கள் கற்றுகொண்டது; தங்களுக்கு பயன் அளித்த காரியத்தை உணர்த்த உதவும்.

இப்படி சொல்வதன் மூலம்; அந்த கதை சொல்லும் ஆசிரியருக்கு சொல்லிக்கொடுத்த கதை; கண்டு பிடித்த பொக்கிஷம், அவர்கள் சரியாய் புரிந்து இருப்பது அறிய முடிகிறது. சிலர் போனவாரம் கதையை பற்றி சரியாய் புரியாமல் இருக்க; இதனை ஆசிரியர் அவர்களுக்கு புரியவைக்க உதவுகிறது. நடத்தும் ஆசிரியருக்கு அலசிப்பார்ப்பதன் முக்கியத்துவத்தை அறிய செய்கிறது.

சொன்ன கதை புரியாமல் இருக்க, அடுத்த கதையில் செய்தியின் மூலம், எந்த பயன் மற்றும் நன்மை இல்லை.

# பாடம் - 7 சரியாய் அப்பியாசப்படுத்துதல்
# கண்பிடிக்கபட்ட யானை

கதை சொல்பவர்கள ஆராய ஆரம்பிக்க, அவர்கள் முன்பு சொன்ன கதையில் விடுபட்ட காரியத்தை அதிகாரங்களில் பார்க்கலாம். எவ்வளவு நுணுக்கமான அளவில் ஆராய்ச்சி மூலம் நீங்கள் அந்த பொக்கிஷங்களை கதையில் கண்டுபிடித்தாலும், அந்த முழு கதையின் தன்மையை ஒருபோதும் மறக்க கூடாது. சரித்திர கதையைவிட, வேதாகமம் முக்கியம்; என மனதில் இருத்த வேண்டும். வேதாகமத்தில் உள்ள எந்த ஒரு ஆவிக்குரிய செய்தி அது எவ்வளவு சின்ன பகுதியாய் இருந்தாலும் அதைவிட்டு விடக்கூடாது.

பொதுவாக மக்கள் தாவீது, மற்றும் கோலியாத் கதையை சொல்லும்போது இப்படி விளக்கம் சொல்வது வழக்கம், தாவீது ஒரு சின்ன பையன் தைரியமானவன், பல கலையை கற்றவன், அவன் தைரியமாய் கோலியாத்தை மேற்கொண்டு அவனை எதிர்த்து அவனை வீழ்த்தினான். பின்னர் நம் வாழ்வில் அப்பியாசப்படுத்த நீங்களும் தாவீதை போல, தைரியமாய் சவாலை சந்திக்க வேண்டும், நல்ல செய்தி? ஆனால் இது மட்டும்தான் இந்த கதையில் உள்ளதா?

ஒரு உண்மையான, முக்கியமான காரியம் இங்கு விடப்பட்டு உள்ளது, அதாவது இந்த கதையில், தாவீதுக்கு நன்கு தெரியும், என் தேவன் பெரியவர், விக்கிரகத்தை வணங்கும், கோலியாத்தை வீழ்த்த வல்லவர் என்று; தைரியம் இருந்தது ஆனால் சவுல் மற்றும் இஸ்ரவேலர் இந்த விக்கிரகத்தை வணங்கும் கோலியாத்தை பார்த்து பயந்தனரே ஒழிய, தேவனை நம்பவில்லை, ஆனால் ஒரு மனிதனின் தேவ விசுவாசம் கோயாித்தை வீழ்த்தியது.

இந்த யானையின் கதை மூலம், ஒவ்வொரு கதை சொல்லுபவர் கதையின் முக்கியத்துவத்தை மனதில் இருத்தவும்; கதையில் இதனை கண்டு பிடிக்க உதவும்.

## முதலாவது, காணாமல்போன யானை

இந்த கதை நீங்கள் அறிந்திருக்கலாம், ஐந்து குருடர்களை யானைக்கு முன் நிறுத்தபட நீங்கள் பெரிய யானைக்கு முன் நிற்கிறீர்கள் நீங்கள் அதைதொட்டுபார்த்து அது எப்படி இருக்கு என வர்ணியுங்கள் என்றனர்.

ஒருவன் யானை வாயை தொட்டு, ஐயோ இது மரக்கிளையை போல சிறியது என்றான்.

இன்னொருவன் காதுகளை தொட்டு, அப்பா, இந்த யானை மரத்தின் பெரிய இலையாகும் என்றான்.

அடுத்த குருடன், அதன் தும்பிக்கையை தொட்டவுடன், ஐயோ இது ஒரு பெரிய பாம்பு என குதித்தான்.

ஐந்தாவது குருடன் சொன்னது நான் தொட்டு பார்க்க அவசியம் இல்லை யானை அவ்வப்பொழுது கத்துகிறது, அப்படியானால் இது ஒரு பெரிய இசை கருவி என்றான். ஒருகுருடன் கூட ஒழுங்காய் யானையை, பற்றி சொல்லவில்லை; அதன் உறுப்புகளை புரியாமல், அது யானை தான் என அறிய மறந்து விட்டனர்.

வேதாகமத்தில் பொக்கிஷத்தை தேட, அதன் முழுமையயை அறிய வேண்டும். "முழுமை" என்றழைக்கலாம்," யானை" கதை பெரிதாய் இருக்க பல பகுதி இருக்கும், இப்படிபட்ட கதை மற்றும் பகுதிகளில் பல யானை கதை போல உண்மை அடங்கி இருக்கும்.

சில நேரம் ஒரு மாதிரியான கதையை படிக்க, இந்த கதை இப்படிதான் என அதை சரியாய் கேட்காமல் விட்டுவிடுகிறோம். ஒரு குருடன் அந்த யானையை தொடாமலேயே அது ஒரு இசை கருவி என்றன்; நாமும் அந்த வேதாகம பகுதி எனக்கு தெரிந்ததே, அதன் உண்மையை அறியாமல் தவறுகிறோம்.

நாமும் அந்த குருடனை போல பல நேரத்தில் வேத பகுதிகளில், உள்ள உண்மையான சத்தியம் அறியாதபடி, இது யானை தான் என கணக்குபோட்டு அந்த "யானை" அதாவது அக்கதையை முழுமையாய் அறியாதபடி அதில் அடங்கி உள்ள பல காரியத்தை அறியக்கூடாதபடி இழந்து விடுகிறோம்.

இது இன்னும் பொருமையாய் கேட்டு, ஜெபத்தின் மூலம் இந்த ஆழமான உண்மை கதையில் அடங்கி உள்ளதை அறிய முடிகிறது. ஆழமான உண்மை அந்த கதைக்கு மதிப்பை அளிக்கும், ஆனால் ஒவ்வொரு பகுதி அந்த யானை போல முழுமையை வெளிப்படுத்தாது

யானையை கதையில் கண்டு பிடிப்பது

மாற்கு 1:40-45 இந்த வசனத்தில் உள்ள யானையை கண்டுபிடி

40 - அப்பொழுது குஷ்டரோகி ஒருவர் அவரிடத்தில் வந்து அவர் முன்பாக

முபங்கால்படியிட்டு: உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக்கொண்டான்.

41- இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனை தொட்டு எனக்குச் சித்தமுன்டு, சுத்தமாகு என்றார்.

42 - இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விடு நீங்கிற்று அவன் சுத்தமானான்.

43- அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

44-ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னை காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்கும் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி உடனே அவனை அனுப்பிவிட்டார்.

45- அவனோ புறப்பட்டும் போய்: இந்த சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான். அதினால் அவர் வெளியரங்கமாய் பட்டணத்தில் பிரவேசிக்ககூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார் எத்திசையில் இருந்து ஜனங்கள் அவரிடத்தில் வந்தார்கள். இந்த வசனத்தில், அநேக பொக்கிஷம் உள்ளது, ஆனால் யானையை பாத்திதீர்களா? ஆசிரியர் பல காரியத்தை விட்டுவிடுகின்றனர்.

அவர்கள் பொதுவாய் பார்ப்பது:-

1) மனிதனின் விசுவாசம் - தேவன் தன்னை சுத்திகரிப்பார் என
2. இயேசு தானாக அவனை சுத்தம் செய்தது
3) இயேசுவின் சுகமளிக்கும் வரம்
4) இயேசுவின் அன்பு / இரக்கம்
5) இயேசுவின் அன்பு, குஷ்டிரோகியையும் தொட்டது
6) இயேசுவின் தனித்தன்மை; தொடக்கூடாதவனை தொட்டது

இது மட்டும் அல்ல இன்னும் பல காரியங்களை சொல்லுவார்கள்

1. இயேசு அந்த மனிதனுக்கு சொன்னது நீ சுகமானதை யாரிடம் சொல்லாது,

வேதபாரகரிடம் மட்டும் சொல்; ஆனால் இவனோ எல்லாரிடமும் சொல்லி, தன் சுகத்தை எல்லோரிடமும் சொல்லி தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். நடைமுறையில் நாமும் செய்ய வேண்டியது சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ளுதல்.

2. அந்த மனிதனுக்கு மற்றவர்களுக்கு சொல்லாதே என்று சொல்லியும் அவனுடைய சந்தோஷம், மற்றவர்களுக்கு சாட்சி சொல்ல தூண்டியது, நடைமுறைபடுத்த கூடிய காரியம் மற்றவருக்கு சாட்சியாய் இரு.
3. இவன் சந்தோஷத்தில் தன் சுகத்தை பகிர்ந்து கொள்ள, அதன் மூலம் அநேகர் இயேசுவை அறிய, அவரிடம் வர; இதனால் தேவனின் மகத்துவம் ஒரு சுகப்பட்ட குஷ்டரோகி மூலம் வெளிப்பட்டது.

இப்பொழுது இக்கதையில் அமைந்து உள்ள பல புதையல்களை பார்க்கலாம் முன்பு சொல்லப்பட்ட இந்த ஒன்பது காரியங்கள் மூலம் அந்த கதையின் ஆழத்துவத்தை அறிய முடிகிறதா? பாதியானை தான் கண்டு பிடிக்கப்பட்டதா?

பல பொக்கிஷத்தை பகிர்ந்து கொள்ளலாம், சுகமாக்குதல் மற்றும் குஷ்டரோகியின் விசுவாசம்; ஆனால், சில காரியத்தை மேலோட்டமாய் பார்க்க பல காரியங்களை இழக்க நேரிடுகிறோம்.

நாம் இந்த கதையின் பாகங்களை பார்க்கிறோம். என்ன அந்த நாளில் நடத்தது என அறிகிறோம், அவன் உற்சாகமான மனிதன் என அறிகிறோம், அதுமட்டும் அல்ல, பல நபர்களுக்கு இயேசு சுகப்படுத்தினதை சொன்னான். இதுவும் நமக்கு பல வாய்ப்புகளில், இயேசுவின் மகத்துவத்தை சொல்ல ஆசைபடுகிறோம் என காட்டுகிறது.

இப்பொழுது மெதுவாக இக்கதையின் உள்ளே போகலாம், என்ன கண்டுபிடிக்கிறோம் என பார்க்கலாம்,

இயேசு அந்த குஷ்டரோகிக்கு சொன்னது / அவன் செய்தது மற்றும் செய்யக்கூடாதது?

இந்த இரண்டு காரியம் சொல்லப்பட்ட நோக்கம் என்ன? அதில் ஏதாகிலும் அர்த்தம் உண்டா? இல்லை, இயேசு உறுதியாய் சொன்னது நீ புதிதாய் சுத்தமாக்கப்பட்டதை யாரிடம் சொல்லாதே, ஆனால் நியாயப்படி உன்னை ஆசாரியரிடம் காண்பி, உன்னை சுத்தமுள்ளவன் என்று அவர் சொல்ல, நீ செய்ய வேண்டிய பலிகளை செலுத்து, ஏன்! ஆசாரியருக்கு ஒரு சாட்சியாக.

இந்த கதை என்ன சொல்லுகிறது, என்பதை பார்க்க வேண்டும். அதை விட்டு நாம் சந்தோஷம், சாட்சி சொல்லுவதின் முக்கியம் அல்லது தேவனின் மகத்துவம் என்றால், அந்த பகுதியில் தேவன் கொடுத்த செய்தியை இழக்கிறோம்.

சரியாய் கேட்காதபட்சத்தில், யானையை அறிய இழந்த போவாய் நல்ல ஆழமாய் காரியங்களை அறிந்து கதை சொல்லுபவர், அக்கதையின் உள்ளடக்கத்தை அறிவர். இந்த கதைக்கு முன்பாக உள்ள காரியம் இயேசுவின் சித்தம் / விருப்பம்.

(மாற்கு 1:38 -39)

> 38- அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்கும் போவோம் வாருங்கள் இதற்காக புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி,
>
> 39- கலியேயா நாடெங்கம் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக் கொண்டு பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தார்.

38- வசனத்தில் இயேசு அடுத்த நகரத்திற்கு போக வேண்டும் என்றார்?

இயேசு குஷ்டிரோகிக்கு சொன்னதை, எந்த விதமாய் அவன் ஆசாரியருக்கு காட்டுதல்; எதை நமக்கு இணைத்து காட்டுகிறது? ஆண்டவர் உறுதியாய் சொன்னது; சுத்தமாக்கப்பட்ட நீ மோசேயின் பிரமாணத்தின்படி ஆசாரியருக்கு உன்னை காட்டி சம்மந்தப்படுத்து என்பதாகும்.

முதலாவது இயேசு, கீழ்படிதல் மோசேயின் பிரமாணத்தின்படி; சுத்தமாகுதலை அந்த குஷ்டரோகி செய்யாமல் போனான், மோசேயின் பிரமாணத்தின்படி அவன் சுத்தம் ஆகவும் இல்லை.

இயேசு உறுதியாய் சொன்னது, போய் உன்னை ஆசாரியனுக்கு உன்னை காட்டு என்பதை, அந்த சுகமாக்கப்பட்டவன் கீழ்படியாமல் விட்டுவிட்டான். இந்த கதையில் இயேசு, அந்த ஆசாரியன் இந்த சுகத்தை அறிய விரும்பினாரா?

இங்கு யார் மதிக்கப்பட விரும்பினார், அந்த மனிதனின் சுகத்தின் மூலம்? இயேசு? ஆசாரியன்? ஆண்டவரின் பழையகட்டளை? ஆம்; அவர் மதிக்கப்படதான்!

சுகப்படுத்தப்பட்ட பின்பு அந்த மனிதனின் சித்தம், இயேசு இந்த கதையில்

சொன்னது, அவரால் பல நகரத்திற்கு விடுதலையாய் போக முடியவில்லை என்பதாகும்?

சுகமாக்குதல், மற்றும் குஷ்டரோகியின் விசுவாசம், இயேசுவின் உண்மை வியப்பூட்டும், ஆனால் குஷ்டரோகியின் கீழ்படியாமையால் இயேசுவை அசட்டைசெய்து மதிக்காத தன்மை காட்டினான், அவனை குணப்படுத்தினவரை மிகவும் அசட்டை செய்தான்; இந்த செய்தியை அறியாமல் போக இந்த கதையின் அரை பகுதியை இழந்திருப்போம்.

அதே பகுதியானது சொல்லுவது, இந்த கதை சந்தோஷம் மற்றும் சாட்சி பகிறுதல் அல்ல அது "சுயசித்தம்" பற்றியது பலர் தங்களை மாற்றக்கூடிய வரத்தைதேவனிடம் கேட்டு வாழ்நாள் முழுமையாய் கீழ்படியாமையின் வாழ்க்கை வாழ்வதாகும். சரியாய் நுணுக்கமாய் கதையை வாசிக்க, அந்த யானை வெளிபடும். அதாவது கிருபையாய், இரக்கத்தோடு இயேசு தொடக்கூடாத குஷ்டரோகியை சுகப்படுத்தினார்; ஆனால் அந்த மனிதனோ தன் சித்தப்படி, ஆண்டவருக்கு கீழ்படியவில்லை இதுதான் "யானை " இந்த உண்மையை அழக்க நேரிடும்.

குஷ்டரோகிக்கு தன் சுகத்தை பற்றிதான் கண், தவிற "சுகப்படுத்தினரை" பற்றி அக்கறை அல்ல; இதே மாதிரியான தவறை பலர் செய்வதை காண்கிறோம். "மதசம்மந்தப்பட்ட பாவம்"; தங்களின் உற்சாகத்தால் "பல காரியத்தை ஆண்டவருக்கு செய்வார்கள்" ஆனால் ஆண்டவரின் சத்தம் மற்றும் அவர் சொல்லாத காரியத்தை; அவரை மதிக்காமல் செய்வார்கள் அப்படியானல் "சாட்சி சொல்வது தவறா? இல்லை, நாம் சாட்சி சொல்ல நாம் சாட்சி சொல்லதான் இருக்கிறோம். இயேசுவின் சித்தத்தில் சரியான இடம்/ நேரம் முக்கியமா? ஆமாம்.

சரியான எ.டு - எப்படி ஆண்டவர் பாாக்கிறார்: சரி, என நினைத்து சிலர் செய்யும் காரியம் இதனை I சாமுவேல் புத்தகத்தில் பார்க்கலாம். அங்கு ஒரு மனிதன், ஒரு பலியை செலுத்துவதை பார்கிறோம். அந்த நேரம், சூழ்நிலை இரண்டும் கீழ்டியாமையின் பட்டியலில் உள்ளது. இந்த விதமான கீழ்படியாமையை தனக்கு சரியென எண்ணி, செய்வது ஆண்டவருக்கு முன்பு அது பாவமாகும். I சாமு 15:22-23

> 22- அதற்கு சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்மோ. பலியை பார்க்கிலும் கீழ்படிதலும், ஆட்டுக் கடாக்களின்

நிணத்தை பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.

23- இரண்டகமம் பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது. நீர் கர்த்தருடைய வார்த்தையைப்படியினாலே அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்கும் புறங்கணித்து தள்ளினார் என்றான். அந்த குஷ்டரோகியின் கீழ்ப்படியாமையை மையமாக வைத்து கலந்துரையாட, அது நம்மை வெளிவராது பாவமாகிய கீழ்ப்படியாமையை வெளிப்படுத்தும். இந்த பாவம் சில நேரம், அமைதியாய் காணப்படும்; அல்லது இதனை நாம் சொல்வதில்லை, அதாவது என் வழி ஆண்டவருக்கு மேலானவழி" ஆண்டவர் சொன்னதைவிட்டு நீ செய்ய, வேண்டியதை செய்தால், அது பாவம் கீழ்படியாமை பார்க்கிலும் பெரிய கீழ்படியாமை ஆகும்.

இந்த இரண்டாம் பகுதியை பார்க்காமல் இருக்க கூடாது; அதாவது கீழ்படியாமையின் விளைவுகள் இந்த குஷ்டரோகியின் கீழ்படியாமையை பார்க்காமல் இருக்க நாம் இந்த பாவத்தை அறியாமலும், தேவசித்தத்தை நம் சித்ததிற்கு மேலாய் இடைபோடுவதாய் மாறிவிடும். இன்றைய விசுவாசிகளின் நிலை பரிதாபமானது, அவர்கள் சொல்லுவது" ஆம், எனக்கு தேவ வார்த்தை என்ன சொல்லுகிறது என தெரியும் ஆனால் என் பட்சத்தில் ஏன் நான் இதை செய்யவேண்டும் என்ற, நல்ல காரியம் அமைந்துள்ளது என்கிறோம். இப்படி பல வேளையில் நம் வழி, சரி என்கிறோம் "நான் தேவ வார்த்கைக்கு கீழ்படியமாட்டேன், ஏன்னெனில் தேவனைவிட நான் நல்ல தீர்மானம் எடுப்பேன். என்ற எண்ணம் நமக்குள் மறைந்து உள்ளது.

இந்த பகுதியை தேர்ந்தெடுக்க காரணம், அநேக ஆசிரியர்கள் பல காரியத்தை வேத வாக்கியத்தில் இருந்து எடுக்க தவறுகிறார்கள். இதனால் தேவ வாக்கியத்தின் முக்கியத்துவம், முழுமையயை இழக்கிறோம்.

தேவ வசனத்தை எப்படி சொல்வது முக்கியமோ, அதே வண்ணம் அதன் கதையும் ஆகும். இந்த யானை எடுத்துக்காட்டு, தேவன் கதையில் சொல்லும் காரியத்தை கவனமாய் கற்பதின் முக்கியத்தை உணர்த்துகிறது. வேதம் சொல்லுகிறபடி “காதுள்ளவன் கேட்கக்கடவன்”.

எஸ்.டி.எஸ் படிகளை பயன்படுத்தும்போதும், மற்றும் அதில் பயன்படுத்தும் கதையை கவனமாய், ஜெபத்தோடு அதை அறிந்து தேவனை நம்பி கதையை கேட்க வேண்டும்.

ஒவ்வொரு கதையின் பகுதி அதன் முழுமையை அறிவது அவசியம்.

குஷ்டரோகியின் கதை மூலம், ஆண்டவர் கீழ்படியாமையால் வரும் பிரட்சனையை எடுத்துரைக்கிறார். பல வேதாகம கதைகளில், கீழ்படியாமையால் வரும்பிரட்சனையை காட்டுவது இல்லை. இப்படிப்பட்ட கதைகளின் மூலம் நாம் சொல்ல கூடிய காரியமாகிய; தேவனுக்கு கீழ்படியும் ஞானம்; அது தேவனையும் அவரின் தலைமைத்துவத்தை மதிப்பதாக இருக்குமே ஒழிய பயத்தின், காரணமாய் கீழ்படியாமையின் விளைவு அல்ல என்பதாகும்.

இந்த மாற்கு பகுதியில் சொல்லப்பட்ட இக்கதையை, அதன் முழுமையால், ஆண்டவருக்கு கீழ்படியாமையால் வரும் பிரட்சனை, மற்றும் அதினால் வரும் சோகத்தை வெளிப்படுத்துகிறது. நமக்கு வாழ்வு மற்றும் சந்தோஷத்தை தரும் தேவனை அவமதிக்கும் காரியத்தை காட்டுகிறது. இக்கீழ்படியாமையை இந்த முழு கதையில் நாம் அறியாமல் போய் இருந்தால்; நாம் விசுவாசகளை விசுவாசத்திற்கு நேராய் உற்சாக படுத்துவதை மறந்திருப்போம்.

# பாடம் 8

## கல்வி கற்காதோர் மற்றும் வாய் வழி வேதாகம பள்ளி

### கல்வி கற்றோர் கற்காதவர் பயிலும் பாடசாலை

பெரும்பாலான எஸ்டி.எஸ் பயிற்சி கூடத்தில், படிக்காதவர் வருவர் அவர்களுக்கு வாய்வழி கதையை சொல்லவோ அல்லது ஒலிபெருக்கி தட்டுகளின் மூலமோ அல்லது நாடகம் வாயிலாக கற்பிக்க வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட கதைகள் எஸ்.டி.எஸ் பயிற்சியில் தேவைபட, சூரிய-ஒலி கருவியான ஒலிபெருக்கி மூலம் மெகா சத்தம் அல்லது தேவ கதைமூலம் புதிய ஏற்பாடு அதில் பயிலும் மாணவர்களின் மொழிக்கு ஏற்ப; கொடுக்கப்படும். இந்த தேவனின் கதை பயிற்சியில், பல கதை பதவு செய்து பயில்வோருக்கு போடப்படும்.

இந்த பயிற்சி முடிந்த பின்பு, அந்த கிராமத்தை சேர்ந்தவர் அவர்களை வழிநடத்துபவரிடம் இந்த பதிவு செய்யப்பட்ட சி.டி தட்டு ஒலிபெருக்கியை கொடுப்போம்; இதனை எல்லோரும் பகிர்ந்து கொண்டு கதைகளை கேட்டறிவர்.

பல நேரங்களில், அந்த முழு கிராமமே, அந்த ஒலிபெருக்கி மூலம் சந்தோஷமாய் கதையை கற்பார்கள். அதற்கு ஈடாக ஒரு பரிசையும் தக்க போதகர்களுக்கு கொடுப்பார்கள். அவர் அந்த பணத்தை ஊழியத்தில் பயன்படுத்துவார்; இந்த ஒலி பெருக்கி ஒரு பெரிய பயன் அளிப்பதாகும். இதன் மூலம் பல கதைகளை கற்கிறார்கள், இது ஒரு கூர்மையான காரியங்களை கதையில் காண்பித்து மாற்றம் இல்லாமல் கதை சொல்ல உதவுவதாக உள்ளது.

ஆச்சரியமாக, இந்த எஸ்.டி.எஸ் பயிற்சிகூடத்தில்; படித்தவர்கள் மற்றும் படிக்காதோருக்கு ஒரே பயிற்சிமுறை புத்தகத்தில் இருந்து கொடுக்க. படிக்க தெரியாதவர் மிக உற்சாகமாய் கலையை கற்று நன்கு கதை சொல்லுபவர்களாய் மாற, அது படித்து கதையை புரிந்து கொள்வோரை காட்டிலும் நன்கு திறமை வாய்ந்தவர்களாய காணப்படுகின்றனர்.

முதலில் படித்தவரோ, படிக்காதவரோ, கேள்விகளை சேகரிக்க கஷ்டப்படுவார்கள். அந்து பதில்களை மற்றவர்கள் கண்டுபிடிக்க உதவ கடினபடுவார்கள். ஒன்று மனதில் இருத்த வேண்டியது படித்தவரோ அல்லது படிக்காதவரோ கேள்விகளை உருவாக்கும் திறமை ஒவ்வொருவரையும் சார்ந்ததாகும்.

எதிர்பாராத நடைமுறைபடுத்துதல்

ஒரு பயிற்சி கூடத்தில் அதாவது, குவானிரோ, உகாண்டா என்ற இடத்தில் இருந்து ஒரு வயதானவர் கொடுத்த செய்தி. அந்த ஆப்பிரிக்கா பொருப்பாளரை நான் மறக்கவே முடியாது. அவர் சொன்னது யாவது?

நாங்கள் இருக்கும் இடம் ஒரு ஏழை பகுதி, இங்கு யாருக்கும் படிக்க தெரியாது. ஒரு கதை சொல்லுபவர், ஒரு மரத்தடியில் 5 நபர்களை வைத்து எஸ்.டி.எஸ் முறையில் கதை சொல்ல ஆரம்பித்தார். கதை சொல்பவர் ஒரு 65 வயது நிறைந்த முதியவர், அவர் சென்ன கதை I இராஜா இழந்துபோன கோடாரி; பின்பு நான் கவனித்தது, அவர் அந்த 5 நபர்களை உரையாடலுக்கு நேராய் கொண்டு சென்றார்.

அந்த கதை சொல்லுபவர் கேட்ட கேள்வி? பாருங்கள் எலிசாவின் மாணவன் மிகுந்த சோகத்தோடு காணப்பட்டான்; இவன் இரவலாக வாங்கின கோடாரி தொலைந்துபோனது? அந்த 5 நபர்கள்; ஆம் என்றனர், பின்னர் எலிசாவும், தேவனும் இணைந்து அந்த மாணவனுக்கு இழந்த கோரிரியை கொடுத்தனர்?

உங்கள் வீட்டில் மற்றவர்களிடம் இருந்து இரவலாக வாங்கின பொருள் ‘உண்டா’? என்றார், அந்த 5 நபர்களும் ஒருவருக்கு ஒருவர் தோலில் தட்டி கொண்டு உண்டா என்றனர்.

கதை சொல்லும் நபர், இன்னொரு முறை கேட்டார் "உங்கள் வீட்டில் நீங்கள் வாங்கி கொடுக்காத மற்றவர் பொருள் உண்டா" என கேட்க அந்த கிராமத்தார் நாங்கள் வைத்திருக்கும் எந்த பொருளும் எங்களுடையது அல்ல என்றனர்.

கதை சொல்லுபவர் சொல்லும் அர்த்தம், அவர் கண்டறிந்ததை கேட்பவர்கள் அறியமுடியவில்லை என, அவர் திகைத்தார்? பின்பு அவர் "உங்கள் மனைவிகள்" அவர்கள் உங்களுடையவர்கள் சரிதானே என்றார்.

ஆம், என்றார் ஒருவர் 4, ஆடுகளை கொடுத்து நான் என் மனைவியை திருமணம் சொய்து கொண்டேன் என்றார்.

எனக்கு தெரியும் என, கதை சொல்லுபவர் சொல்லி. அந்த ஆட்டிற்கு உயிர் கொடுத்தது அதை நீங்கள் பராமரிக்க உதவி செய்தது யார் என்றார்? எல்லோரும் கடவுள் என்றனர். அப்படியானால் உங்கள் மனைவி ஆண்டவருக்கு உரியவர், உங்களுடையவர்கள் அல்ல ஒருவரை ஒருவர் பார்த்துகொண்டனர்.

சரி, உங்கள் மனைவிகளை எப்படி நடத்துகிறீர்கள் அவர்கள் உங்களுடையவர்களா அல்லது தேவனிடம் இருந்து இரவலாக பெற்றவர்களா என்றார்? நான் என் மனைவியை அடிப்பதும், கொடுமைப்படுத்துவம், அவள் என்னுடையவள் அல்ல, இரவலாக தேவனிடம் இருந்து பெற்றது; என் பிள்ளைகளும் கூடதான்; அந்த முதியவர், அவர் செய்த பாவத்தை குறித்து மனஸ்தாபட்டு அழ, அவருடன் மற்றவர்கள் ஆவியானவரின் வழிநடத்துதல்படி அவர்களும் பாவமன்னிப்பு கேட்டு, அழ அந்த கருத்துரையாடல் சற்று நேரம் நின்றது.

என் மனது சூழல ஆரம்பித்தது, இந்த செய்தியை கதை சொன்னதா? மற்றவர்களிடம் இரவலாக வாங்கின பொருளின் மதிப்பு அது எனக்கு தெரியும்; ஆனால் இது ஒரு நல்ல நடைமுறைபடுத்தும் காரியமா? அந்த நாளின் அச்செய்தி அந்த நபர்களுக்கு முக்கியம், நான் யோசித்தது எனக்கு கீழ் வேலை செய்வோரை நான் எப்படி நடத்துகிறேன்? அவர்களை திட்டுவது, அவர்கள் என் உரிமை அல்ல, இரவலாய் தேவனிடம் இருந்து பெற்றது? எனக்குள் மனமாற்றம் நடந்தது. இந்த படிக்காத முதியவர், அந்த கதையில் உள்ள உண்மையை வெளிப்படுத்தினாரா? அவருடைய கேள்வி மக்களை கதையில் உள்ள சத்தியத்தை அறிய செய்ததாரா, படிப்பறிவு, பெற்ற; வேத வசனத்தை அறிந்திருக்க, படிப்பறிவு அற்றவரிடம் இருந்து ஆவிக்குரிய காரியத்தை கற்க இயலுமா? ஆம், ஆம்

## வாய் வழி பள்ளிகள்

ஒ.பி.எஸ் இந்த பயிற்சி கூடத்தில் ஆழமான வேதாகம கல்வியை கற்பதின் மூலம், அநேக தலைவர்கள் அநேக கதைகளை கற்று தங்கள் இனத்திற்கு சொல்ல விரும்ப இந்த பள்ளி உருவானது.

இந்த ஒ.பி.எஸ்யில் சேர விரும்புவோர், தங்கள் விண்ணப்ப படிவங்களை கொடுக்கவோ அல்லது அவற்றை அந்த இடத்தின் போதகரிடத்தில், தங்கள் விசுவாசிகளை இப்பயிற்சிக்கு தேர்ந்தெடுத்து; அந்த தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளித்து, கூடுதலாக ஒருவாரம் எஸ்.டி.எஸ் பயிற்சியாளர் மூலம் பயிற்சி தரபடுகிறது.

- இதுவரை, இந்த கதையில் சகேயு இயேசுவை தேடினான் என்று உங்களால் சொல்ல முடியுமா?
- எது இதை காட்டுகிறது?
- கதையை திரும்பி நாம் உற்றுப்பார்க்கும்போது இயேசுதான் சகேயுவை தேடினார் என்று நீங்கள் சொல்ல முடியுமா?
- இதில் எது உண்மை? சகேயு இயேசுவை தேடினதா அல்லது இயேசு சகேயுவை தேடினதா?
- ஒருவேளை இரண்டும் சரியாக இருக்குமோ? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஆவிக்குரிய விதத்தில் அப்பியாசப்படுத்துவதை பார்க்கலாம்

ஆவிக்குரிய அப்பியாசபடுத்துதலை அந்த படியாக தயாராக்க வேண்டும் குறிப்பிட்ட ஆவிக்குரிய காரியங்களை பழக்கப்படுத்த நாம் முதலிலிருந்து எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும் அப்படி பட்டியலிட்ட பிறகு கவனித்த ஒவ்வொரு காரியங்களையும் சரியாக அப்பியாசப்படுத்த வேண்டும். இறுதியாக எப்படி கவனிப்பதற்காக கேள்விகளை பயன்படுத்தினோமோ அப்படியே ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தலுக்கும் கேள்விகளை உண்டாக்க உதவுகிறோம்.

நாங்கள் ஒரு காரியத்தை திரும்ப திரும்ப சொல்வதின் நேக்கம், கேட்கிறவர்களை, கவனிக்கிறவர்களும் கவனிக்கிறவர்களை அப்பியாசப்படுத்துகிறவர்களாகவும், கேள்விகள் கேட்கிறவர்கள் தங்களுக்கு பயன்படுத்தவுமே எஸ்.டி.எஸ் சாவலான காரியமென்பது கேள்விகளை உண்டாக்கி மற்றவர்கள் அதை அறிந்துக்கொள்வதும்தான்.

கடைப்பிடித்தல்தான் அப்பியாசப்படுத்துதல், எல்லாமே ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் தான் மேலே சொல்லப்படுகிறது. இதைதான் ஆவிக்குரிய கண்ணோட்டம் எஸ்.ஒ என்றும் எல்லா ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தலை எஸ்.எ என்றும் சொல்கிறோம்.

1. எஸ்.ஒ. இயேசுவின் மீது ஆர்வமுள்ளதுபோல் தோன்றும் ஜனங்கள் தான் சகேயு, இயேசுவிடம் நெருங்காதபடி தடை செய்தார்கள்.

எஸ்.எ - இயேசுவை பின்பற்ற வேண்டும் என்கிற நாம் சில வேளைகளில் மற்றவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு தடையாக இருக்கிறோம்.

2. எஸ்.ஒ - சகேயு குள்ளனாயிருந்தாலும், பதவியில் உயர்ந்தவன் அவன் ஐஸ்வரியவானும் வரிவசூலிப்பவர்களின் தலைவனாக இருந்தாலும் அவன் இயேசுவை பார்க்க தன்னால் பார்ப்பது கஷ்டம் என்றும் தெரிந்து வேறு வழியில் முயற்சித்தான்.

எஸ்.எ - தாம் இயேசுவை தேடுகிறவர்களாய் இருப்போமானால் நம்முடைய பெருமையை அகற்றிவிட்டு அவரை தேடுகிறதர்க்கு எது அவசியமோ அதைச் செய்வோம்.

3. எஸ்.ஓ - ஜனங்கள் ஒரு வேளை தன்னை ஏளனமாய் பார்ப்பவர்க்ள பேசுபவர்கள் என்பதை யுறக்கணித்து சகேயு விதிகளில் ஓடி மரத்தில் ஏறுவதை அவனுடைய பதவியோ, செல்வாக்கோ தடை செய்யவில்லை.

எஸ்.எ- இயேசுவை அறிந்துக்கொள்ள முற்படும்போது ஜனங்கள் என்ன நினைப்பார்கள், என்ன சொல்வார்கள், என்னுடைய கவுரவம் என்ன ஆகும் என்று நினைக்கக்கூடாது. ஒருவேளை அது மற்றவர்கள் பார்வைக்கு முட்டாள்தனமாக இருந்தாலும், நம்முடைய கவுரவம் போவதாக இருந்தாலும் சரி நாம் அதைச் செய்ய வேண்டும்.

4. எஸ்.ஓ - இயேசு ஜனங்கள் சுற்றி நெருக்கும்போது அவர்கள் அருகே சென்றார். எல்லோரும் நெருக்கும்போது மரத்திலிருந்த ஒருவனை இயேசு கண்டார்!

5. எஸ்.ஓ.- அந்த நாளில் பல ஜனங்கள் இயேசுவிடம் இரக்கத்தை பெற ஆசைபட. அவர்கள் இயேசு மீது விருப்பம் காட்ட, இயேசு அதை எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரே ஒரு நபரை தெரிந்து கொண்டார். இந்த உலகத்தில் பலர் இயேசுவோடு, அவர் இரக்கத்தை பெற அவர் மேல் விருப்பம் உள்ளவர் போல நடிக்கிறார்கள். எப்படி; இந்த கதையில் இருக்கிறதோ; அதைபோலவே ஆனால் பலர் உண்மையானவர்கள் அல்ல. ஒரு உண்மையான நபரை அவர் தேடி சென்றார். ஆண்டவர் நம்முடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். உண்மை தம்மை தேடுவோரை நன்கு அறிந்துள்ளார்.

6. எஸ்.ஓ: இயேசு சகேயுவை பேரைச்சொல்லி அழைக்க அதிலிருந்து அவரின் ஆர்வம் மனிதன் மேல் உள்ள அன்பு வெளிப்படுகிறது.

எஸ்.எ. - இங்கு நம் இருதயத்திற்கு ஏற்ற, ஒரு தேவனை பார்க்கிறோம், நாம் எங்கு இருக்கிறோம், நம் பெயரை அறிந்திருக்கிறார். நம் இயேசு இரக்கம் உள்ளவர் என்று அறிய மற்றும் அவரை தேடுவோரின் பெயரை அறித்திருக்கிறார். அவர் நம்மை தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறார். என்பது நமக்கு ஆறுதல் அளிக்கிறது சகேயு இயேசுவை பார்க்க ஆர்வம் கொள்ள, இயேசு அவனை கூப்பிட அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி பொங்கியது.

7. எஸ்.ஓ. - இயேசு சகேயுவை, தன் வீட்டிற்கு வருவதாய் அழைப்பு கொடுத்தார். இது பல கலாச்சாரத்திற்கு வித்தியாசமானது. இது இயேசுவின் அறிவு மற்றும் என்ன நடக்க இருக்கிறது என்று அவர் நம்பிக்கையை காட்டுகிறது.

எஸ்.எ. - ஆச்சரியமான உற்சாகம் ஊட்டும் காரியம், அவரை தேடுவோரோடு அவர் இருக்க விரும்புகிறார் என்பதுதான்.

8. எஸ்.ஓ. - ஒரு நபர், முக்கியமாய் தலைவர்; அவரை பின்பற்றுகிறவர்கள், அவர் மேலே பார்க்க அவரை சார்ந்தவர்களும் அதை செய்வார்கள். அது என்ன உணர்த்துகிறது என்றால், இயேசு மாத்திரம் சகேயுவை பார்த்தது அல்ல, அந்த ஜனங்களும் பார்த்தனர், ஆனால் சகேயு எந்த ஒரு பயம் மற்றும் அவமானத்தை அவனை கண்டு பிடித்தத்தின் நிமித்தம் அடையாமல் சந்தோஷத்தை வெளிப்படுத்தினான்.

எஸ்.எ.- அவ்விசுவாசி மற்றும் நம்பிக்கையற்ற, தேவனை பின்பற்றுகிறவர்கள் கடவுளை தேடுவது மற்றும் அவரை பின்பற்றுவது ஒரு வேடிக்கையாய் இருக்கலாம். ஆனால்

இப்படிப்பட்ட காரியம் நம்மை பாதிக்ககூடாது. ஆண்டவர் நம்மேல் விருப்பம் உள்ளவர் என தெரிய நாம் சந்தோஷமாய் அதற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

9. எஸ்.ஓ - இயேசு சொன்ன காரியத்திற்கெல்லாம் சகேயு யோசிக்காமல், அவன் விருவிருப்பாய் விருப்பத்தை காட்டினான்.

எஸ்.எ - ஆண்டவர் நம்மை அழைத்து, செய்கை மூலம் நாம் எதையாகிலும் செய்ய வேண்டும் என்று சொல்ல. அவருடைய விருப்பம் சொல்லும், காரியத்திற்கு கீழ்படிய வேண்டும். அதிக நேரம் எடுத்து கீழ்படிவது அது கீழ்படியாமைக்கு ஒப்பாகும்.

10. எஸ்.ஓ - சகேயுவுக்கு விரோதமாய் முனுமுனுத்த ஜனங்கள், இயேசுவையும் குறை கூறினார்கள். எப்படி இப்படிபட்ட பாவியின் வீட்டிற்கு சாப்பிட செல்கிறார் அதாவது, "போகிறார்" என்பது இயேசு போய்விட்டார் என்பதை குறிப்பதாய் உள்ளது.

ஜனத்தின் முனுமுனுப்பு சகேயு வீட்டிற்கு செல்வதில் அது ஒருபக்கம் இருக்க. போவதைப்பற்றிய இயேசுவின் தீர்மானம் நமக்கு தெரியவில்லை. ஆனால், ஜனத்தின் முன்பு சகேயுவை பற்றி சொல்ல இருவருக்கு ஜனத்தின் ஏலனத்தை அறியாதவர்களாய் காணப்பட்டனர். சகேயு ஜனங்களின் ஏலனத்தை பற்றி கவலைபடவில்லை, அவன் சந்தோஷமாய் இயேசுவை தன் வீட்டில் அழைத்து சென்றான்.

எஸ்.எ - நம் ஆரம்பம் நன்றாக இருக்கலாம், ஆனால் நாம் சரியான நோக்கத்தில் நம்பிக்கையில் இருக்க வேண்டும், நமக்கு விரோதமாய் மக்கள் பேச அதைப்பற்றி கவலை படக்கூடாது.

11. எஸ்.ஓ - அந்த ஜன கூட்டத்தார் இயேசு" ஒரு பாவியின் வீட்டிற்கு விருந்தாளியாய் போனார்" என்று சொல்வதால் தாங்கள் ஒரு பாவமும் செய்யாதவர்கள், என்று நினைப்பதாய் இருந்தது.

எஸ்.எ - தங்களின் சொந்த நாவினால், பெருமை உள்ளவர்கள், மற்றவர்களை நியாயம் தீர்ப்பார்கள், நாம் அப்படிப்பட்ட ஜனம் போல, தம் பாவங்களை அறிக்கையிடாதவனாய் இருக்கக்கூடாது.

12. எஸ்.ஓ. - அந்த கூட்டத்தார் இயேசுவை பின்பற்றுவோர்போல நடித்தனர். அவர்கள் இயேசுவின் அருகில் நெருங்கி நடந்தனர். அவர்கள் ஏலனம், இயேசு எங்கு சாப்பிட போகிறார் என்பதை பற்றி இருக்க அவர்கள் சொன்னது. எங்களுடைய வீட்டில் அவர் சாப்பிட வந்திருந்தால், அவரின் தெரிந்து கொள்ளுதல் நன்றாக இருக்கும் என்று எண்ணினார்.

எஸ்.எ - அவரை பின்பற்றும் பெரும்பாலான நபர்கள், அவரை மதிப்பதோ, அல்லது அவரை அறிவது, அவர் திட்டங்களுக்கு மதிப்பு கொடுப்பதில்லை. பல கலாச்சார மக்கள் தேவனின் வார்த்தையை மதிப்பதில்லை.

13. எஸ்.ஒ - இந்த நியாயத்தீர்ப்பின் கூட்டத்திற்கு நம்பிக்கை இருந்தது, ஆனால் தேவனை கேள்வி கேட்க தைரியம் இல்லை. அவர்களுக்கு தேவ வல்லமையை பற்றி தெரியாது, அவர் தாங்கள் சொல்வதெல்லாம் கேட்க வேண்டும் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தனர்.

எஸ்.எ - இன்றைக்கு உள்ள மக்கள்போல அந்த ஜனங்களும் ஆண்டவர் சொல்வதை கேட்க முடியாதவர்களாய், தாங்கள் அந்தரங்கத்தில் செய்வது இயேசுவுக்கு தெரியாது என்று எண்ணினர்.

14. எஸ்.ஒ. - சகேயு பணக்காரனாய் இருந்தாலும், அவன்தன் இருதய விருப்பத்தை தெரிவித்தான் ஆஸ்தியில் பாதியை ஏழைக்கு கொடுப்பேன் என்று முன்வந்தான்.

எஸ்.எ - ஒருவன் இயேசுவால் சந்திக்க பட, அவன் ஒரு பெரிய மாற்றத்தை, உலகபார்வைக்கு மற்றும் நடக்கையிலும் மாற்றம் வருகிறது.

15. எஸ்.ஒ. - சகேயு, நான் யாரிடமிருந்தாவது அநியாயமாய் எதையாகிலும் வாங்கியிருந்தால் அதை நாலத்தனையாக திரும்ப கொடுக்கிறேன், என்றுச் சொன்னான். ஏதோ குற்றம் சாற்றப்பட்டதாலோ அல்லது நியாயபிரமாணத்தினாலேயோ, நாலத்தனையாக தருப்பித் தருகிறேன் என்றுச் சொல்லவில்லை. சகேயு ஏற்கனவே ஏழைக்கொடுக்கிறவன் என்று சிலர் சொன்னாலும், அங்க கூடியிருந்தவர்கள் சகேயுவை பற்றிச் சொன்னது வேறு.

ஒரு வேளை அவன் வரிவசூலிக்கிறவனாக இருந்தால், அவனுடைய பணத்தை ஏழைக்கு கொடுப்பானா, ஒருவேளை அதை ரகசியமாக செய்திருக்கலாம், ஆனால் ஏற்கனவே அநியாமாய் வாங்கினதை திரும்ப கொடுத்திருந்தால், ஜனத்தின் மத்தியில் அவன் நீதியுள்ளவனாக காணப்பட்டிருப்பான்.

இந்த கதையிலிருந்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில், சகேயு தன்னை பாவி என்று ஏற்றுக்கொண்டு தன்னை சரிபடுத்திக் கொண்டான் என்று பார்க்கிறோம். அப்போது அவனுக்கு இரட்சிப்பு வந்தது என்று இயேசு சொன்னார். சகேயு எப்படி தாராள மனதுள்ளவனான் யானான் என்று நாம் பார்க்க முடியும்.

எஸ்.எ- வரிவசூலிக்கிறவர்களின் தலைவனும், செல்வந்தனுமாகிய சகேயு எப்படி தன்னுடைய பேராசையிலிருந்து மாறிவிட்டான் என்று பார்த்தோம். அவன் தன்னை

தாழ்த்தி ஜனங்களுக்கு முன்பாக நான் எதையாகிலும் அநியாயமாக வாங்கியிருந்தால் நாலத்தணையாக திருப்பிக் கொடுப்பேன் என்றுச் சொன்னான். நாம் இயேசுவை விசுவாசிக்கும்போது, நம்மை தாழ்த்தி நம்முடைய, பழைய பாவமான வழிகளை விட்டு நம்முடைய பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும்.

16. எஸ்.ஒ - முதலாவது சகேயு ஆவிக்குரிய அங்கீகாரத்தை விலை கொடுத்து வாங்குவது போல் தோன்றும் ஆனால் இயேசு அவனிடம் இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று சொன்னது நாம் நன்றாக அறிந்ததே சகேயு ஒருவன் மாத்திரம்தான் இந்த கதையில் மனந்திரும்பிய பாவி என்று பார்க்கிறோம்.

எஸ்.எ- தன்னை முதலில் பாவி என்று ஏற்றுக்கொள்ளாத எவனுக்கும் இரட்சிப்பு வராது.

17. எஸ்.ஒ- இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது, என்று இயேசு நேரடியாக சகேயுவை நோக்கிச் சொன்னார். தொடர்ந்து இயேசு, இவனும் ஆபிரகாமுடைய குமாரன், என்று இதிலிருந்து மற்றவர்கள்; மற்றும் அந்த இடத்தில் இருந்தார்கள் அறிந்துகொள்வது தெரிகிறது. இயேசு சகேயுவை, மற்றவர்கள் முன்பு தற்காத்ததையும் காணமுடிகிறது.

எஸ்.எ- இயேசு, சகேயு, அவரை விசுவாசிக்க வேண்டும் என்பதற்காக, அங்கே பணிச்செய்தார். எல்லாவற்றையும், அந்த குற்றப்படுத்தும் ஜனக்கூட்டம் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனாலும் இயேசு அவர்களிடத்தில், எப்படி சகேயு தேவனை அறிய தகுதியுள்ளவன் என்று சுட்டிக்காட்டி, அவர்களுக்கும் தேவன் யார் என்பதை அறிய வேண்டும் என்று அவர்களை தேடிப்போனார்.

18. எஸ்.ஒ - இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவுமே நான் வந்தேன், என்று இயேசுச் சொன்னார். இதுவே சகேயுவை கனப்படுத்தின காரியமும், குற்றப்படுத்தின ஜனங்களுக்கு ஒரு பாடமாக அமைந்த கதையின் சுருக்கம்.

எஸ்.எ - நாம் தேவனுடைய அங்கீகரிப்பைப் பெறவேண்டுமென்றால் நாமும் பாவத்திலே தொலைக்கப்பட்டவர்கள் என்றும் ஒப்புக்கொண்டு தேவன் நம்மை இரட்சிக்க அனுமதிக்க வேண்டும்.

19. எஸ்.ஒ - முதலில் சகேயு, இயேசுவை தேடினான் என்று தெளிவாக தெரிகிறது. ஆனால் கதையின் பாதியில் இயேசு, சகேயுவை தேடுவதைப்போல தோன்றுகிறது.

எஸ்.எ- ஆனால் கதையில் பார்க்கும்போது இரண்டு பேருமே தேடினார்கள் என்பதுதான் உண்மை. நாம் தேவனைத் தேட வேண்டும், அதே சமயத்தில் அவரும் நம்மை தேட

வேண்டும் அதே சமயத்தில் அவரும் நம்மை தேடுகிறார் என்பதை அறிய வேண்டும்!

ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தலின் கேள்விகளை உருவாக்குதல்:

ஆவிக்குரிய அப்பியாசப்படுத்த கேள்விகளை நாம் கடைசியாக, தயாரித்தல் உருவாக்க வேண்டும். ஆவிக்குரிய கண்ணோட்டமும், அப்பியாசப்படுத்தலும் கீழே பட்டியலிடப்பட்டிருக்கிறது ஆகவே அதை எல்லாவற்றையும் வரிசையாக பார்க்க முடியும். ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தலின் கேள்விகளை குறிப்பாக பாருங்கள். அந்த ஆவிக்குரிய அப்பியாசப்படுத்தலின் கேள்விகளைத் தான் கீழே சுருக்கமாக எஸ்.எ-.கியு என்று எழுதியிருக்கிறோம்.

1.எஸ்.ஒ - இயேசுவை பார்க்க ஆர்வமாய் இருந்ததுபோல் தோன்றும் ஜனங்கள், சகேயு இயேசுவிடம் கிட்டிச்சேர்வதற்கு தடையாக இருந்தார்கள்.

எஸ்.எ- நாம் ஒரு வேளை இயேசுவை தேடுகிறோம் என்றுச்சொல்லி மற்றவர்கள் அவரைக் கிட்டே சேராதபடிக்கு தடையாக இருக்கிறோம்.

எஸ்.எ.கியு-

- தங்களை சிறந்த பக்கதர்கள் என்று சொல்லும் சிலர், மற்றவர்கள் உண்மையாக ஆண்டவரை தேடும்போது தடையாய் இருப்பதை இந்த நாட்களில் பார்க்க முடியுமா?
- அது எந்தெந்த வழிகளிலெல்லாம் நடக்கிறது?

2. எஸ்.ஒ - குள்ளனாயிருந்தாலும் சகேயு உயர்ந்த பதவியிலிருந்தான். அவன் ஆஸ்தி, அந்தஸ்தும், வரிவசூலிக்கிறவர்களுக்குள் தலைவனாக இருந்தபோதும்; இயேசுவை சுலபமாக பார்க்க முடியாது என்று தெரிந்து வேறு வழியில் முயற்சித்தான்.

எஸ்.எ. - நாம் இயேசுவை தேடும்போது, நம்முடைய மேன்மை, கௌரவத்தை ஓரமாக வைத்துவிட்டு அவரை தேடுவதற்கும், பின்பற்றுவதற்கும் என்ன வழி இருக்கிறதோ அதை நாம் முயற்சிக்க வேண்டும்.

எஸ்.எ.கியு-

- சகேயுவைப்போல் இப்போது கூட ஜனங்கள், தங்களுடைய மேன்மையை விட்டு இயேசுவை தேட வேண்டுமா?
- அந்த வேளை எப்போதும் வரும்?
- நீங்களோ அல்லது உங்களுக்கு தெரிந்த யாரோ அந்த வேளையை அறிந்திருந்தார்கள் சொல்லமுடியுமா?

3. எஸ்.ஒ- ஒருவேளை தன்னை ஏளனம் செய்ய வாய்ப்பு இருந்தும் சகேயு அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், தன்னுடைய வெட்கத்தை விட்டு ஓடி மரத்தில் ஏறுவதை தடைப்பண்ண முடியவில்லை.

எஸ்.எ.- நம்முடைய பயம், ஜனங்கள் நம்மை என்ன நினைப்பார்கள் என்றோ இயேசுவை தேடும் பணியிலிருந்து நம்மை தடைப்பண்ணக்கூடாது. ஒரு வேளை நாம் செய்யும் காரியம் மற்றவர்களுக்கு முட்டாள்தனமாகவும், கேலியாகவும் தெரிந்தாலும் அதை விட்டுவிடக்கூடாது.

எஸ்.எ.கியு-

- இன்றைக்கு சிலவேளைகளில் தேவனை தேடும் சிலரை ஏளனம் செய்ய வாய்ப்பு இருக்கா?
- ஏளனம் செய்யும்போது எப்படி உணருவார்கள்?
- நீங்களோ அல்லது உங்களுக்கு தெரிந்த வேறு யாராவதோ இப்படி கேலிக்கு ஆளாகியிருக்கிறார்கள்ா?
- அப்படி கேலிச்செய்யும்போது ஒருவேளை நாம் அவரை தேடுவதை விட்டுவிட்டிருப்போமா?
- சகேயு கதையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட எந்த உதாரணம் சரியான தீர்மானத்தையெடுக்க உதவியிருக்கும்?

4. எஸ்.ஒ. - இயேசு ஜனங்கள் நெருக்கும் கூட்டத்தில் எல்லோரும் நெருக்கும்போதும் தன்னை ஒருவன் தேடுகிறான் என்று அறிந்து அவனை நோக்கி மரத்துக்கு நேராக நடந்தார்.

எஸ்.எ - அநேகர் அந்நாட்களில் தேவகிருபை பெற முயற்சித்தார்கள். அவர்களெல்லாரும் இயேசுவிடம் ஆர்வமுள்ளவர்களாக காணப்பட்டாலும்; அவர்களை பொருட்படுத்தாமல் ஒருவனை நோக்கிப்போனார். இந்த உலகத்தில் அநேகர் தேவனை தேடுவதுப்போல் நடிக்கிறார்கள். அவர்களில் அநேகர் பொய்யர்கள், இயேசு மெய்யாகவே அவரை தேடினவனை அழைத்தார். நாம் மெய்யாகவே அவரை தேடுகிறோமா, என்று நம்முடைய இருதயத்தை அறிந்த தேவன் அவர்.

எஸ்.எ.கியு-

- இந்த உலகத்தில் எத்தனை சதவீதம் பேர் ஏதாவது ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள்

என்று நினைக்கிறீர்கள்?

- பக்தியுள்ள மதத்தைச் சார்ந்த ஒருவன் மெய்யாகவே தேவனை பின்பற்றாதவனாக இருக்கிறதை பார்த்திருக்கிறீர்களா?
- இந்த கதையிலிருந்து நாம் கற்றுக்கொண்டதிலிருந்து உங்கள் மனதில் இருப்பது. எந்த மதத்தை பின்பற்றுவர்களில், சிலர் உண்மையாய் மதத்தை பின்பற்றுகிறார்கள் என்றும் சிலர் மெய்யாகவே கடவுளை தேடுகிறார்கள் என்றும் உங்களால் சொல்ல முடியுமா?
- உண்மையாக ஆண்டவரை தேடினவனுக்கு இந்த கதையில் என்ன சம்பவித்தது?

5. எஸ்.ஒ. - இயேசு, சகேயுவை பெயர்ச்சொல்லி அழைத்தது, அவளிடம் அவருக்கு தனிப்பட்ட விருப்பம் இருந்ததை காட்டுகிறது.

எஸ்.எ. - நம்மையும், நம்மை பெயர் சொல்லி அழைக்கிற தேவனை நாம் பார்த்தோம். தன்னை மெய்யாக தேடுகிறவர்களுக்கு இயேசு இரக்கம் காட்டி அவர்களை பெயர் சொல்லி அழைக்கிறார் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சகேயு, இயேசுவை ஆர்வமாக தேடினான். அதினால் இயேசு அவனை பெயர்ச்சொல்லி அழைத்தபோது சந்தோஷமாக பதிலளித்தான்.

எஸ்.எ.கியு-

- இயேசு பேசின விதம் சகேயுவிற்கு நம்பிக்கை உண்டுபண்ணினதா?
- அதை விவரிக்க முடியுமா?
- எது சிறந்ததாக தெரிகிறது: உங்களை தெரியாத தேவனை அல்லது உங்களை நன்கு தனிப்பட்ட முறையில் அறிந்த தேவனா?
- உங்களை அறிந்த தேவன் இருப்பது நல்லதா கெட்டதா?
- தேவன் எப்போதாவது தனிப்பட்ட முறையில் பேசியிருக்கிறாரா?

6. எஸ்.ஒ - எல்லா கலாச்சாரத்திலிருந்தும் வேறுப்பட்டதாக இயேசு சகேயுவை, அவனுடைய வீட்டிற்கு அவனை அழைத்தது தெரிகிறது. இதிலிருந்து இயேசு அங்கே என்ன சம்பவிக்கப் போகிறது என்பதை நன்கு அறிந்திருந்தார் என்றுச் சொல்லாம்.

எஸ்.எ. தன்னை தேடுகிறவர்களிடத்தில், இயேசு இருக்க வேண்டும் என்று விரும்பினது மிகுந்த உற்சாகத்தையும் ஆச்சரியத்தையும் கொடுக்கிறது.

எஸ்.எ.கியு-

- சகேயுவை, இயேசுவை அவள் வீட்டிறக்கே அழைத்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?
- கண்டிப்பாக இது சம்பவிக்கும் என்று இயேசு செய்ததில், சொன்னதிலிருந்து தெளிவாக தெரிகிறதா?
- இந்த கதையில் சகேயுவை இயேசு அவன் வீட்டிற்க்கே அழைத்து, நாம் தேவனை தேடுவதற்கு உற்சாகத்தை கொடுக்கிறதா?

7. எஸ்.ஓ - ஜனங்கள் பின்பற்றும் ஒரு தலைவன், மேலே நோக்கும்போது ஜனங்களும் அந்த தலைவன் என்ன மேலே பார்க்கிறான் என்ற அவர்களும் பார்ப்பார்கள். இதிலிருந்து. இயேசு மாத்திரம் அல்ல ஜனங்களும் சகேயுவை பார்த்தார்கள்! சகேயு, எல்லோரும் தன்னை பார்க்கிறார்கள்; என்று பயப்படாமல் சந்தோஷப்பட்டான்.

எஸ்.எ:- நாம் அவ்விசுவாசிகள், மற்றும் அவபக்தி உள்ளவர்களால், ஏளனமாய் பார்க்கப்பட மற்றும் நாம் இயேசு தேடும் தகுதியற்றவர்கள் என்று என்ன, அது எல்லாம் நம்மை தாக்க நாம் பயப்படகூடாது. இயேசு நம்மீது அக்கரை உள்ளவர் என்று தெரிய அதற்கு சந்தோஷமாய், நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

எஸ்.எ.கியு:-

- கடவுளை அறியும் நோக்கத்தில், ஜனங்களை வித்தியாசமாய் மற்றவர்களை வேறுப்பட்டவர்களாய் குடும்ப, கலாச்சாரம் இதற்கு மாறுபட்டவர்களாய் காணப்படுகின்றதா.
- அப்படி நீங்கள் பாத்ததுண்டா?
- சகேயுவின் சுபாவம், மற்றும் அவன் தெரிந்துகொண்ட காரியம் நம்மை இந்த நாளில் உற்சாகப்படுத்துவதாய் உள்ளது.
- நாம் வித்தியாசமற்றவர்களை விட அல்லது நாம் தெரிந்து கொள்ளுதலில் நம்மை உற்சாகபடுத்துவதாய் இருக்கிறதா?

8. எஸ்.ஓ:- சகேயு தாமதிக்காமல் இயேசு சொன்னதுக்கு கீழ்படிந்தான்.

எஸ்.எ:-

ஏதாகிலும் காலகட்டத்தில் கடவுள் நம்மை செய்கை மூலம், அவருக்கு ஒப்புக்கொடுக்க அல்லது அவரின் வார்த்தையின்படி செய்வது அதை பற்றி அறிந்ததுண்டா. நேரம் எடுத்து கீழ்படிவது, கீழ்படியாமைக்கு சமமாகும்.

எஸ்.எ.கியு:-

- இன்றைக்கும் தேவன் நம்மை அழைக்கிறாரா.
- அப்படியானால், எப்படி தேவன் நமக்கு அழைப்பு கொடுக்கிறார்
- எந்த நேரத்திலாவது நாம் சிலவற்றை செய்ய தூண்டி இருக்கிறரா, இந்த கதை நமக்கு எதை எடுத்துரைக்கிறது.
- அவருக்கு விரைவாய் கீழ்படிதலை காட்டிலும், அவரின் அறிவுரைகள் நமக்கு எப்படிபட்டது? நேரம் எடுத்து கீழ்படிதல் பற்றி உங்களில் அபிப்பிராயம் என்ன.

9. எஸ்.ஓ:- ஜனங்கள் சகேயுவை பற்றி மற்றும் இயேசுவை பற்றி முனுமுனுக்க. அவர் பாவியின் வீட்டிற்கு செல்கிறார் என்றனர். செல்கிறார் என்பது இயேசு சென்றுவிட்டார் அல்லது சென்று கொண்டு இருந்தார் என்பதை குறிக்கும்., இயேசு மற்றும் சகேயுக்கு, ஜனத்தின் ஏளனத்தைபற்றி அறிந்தும், அவர் அவன் வீட்டிற்கு செல்வதை குறித்த காரியம் தெளிவாய் இல்லை.

ஆனால் சகேயுவை பற்றி, இயேசு ஜனங்களுக்கு முன்பாக சொல்ல அவர்களுக்கு ஜனங்களின் ஏளனமான பேச்சு, தெரியாதவர்களாய் இருந்தது தெரிகிறது ஆனால் சகேயு அதை பற்றி கவலைப்படாமல், இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்து சென்றான்.

எஸ்.எ:-

நம்முடைய ஆரம்பம் நன்றாய் இருக்கலாம், அதில் நிலைத்திருப்பது அவசியம், எப்படிப்பட்ட ஏளன பேச்சு வந்தாலும் உறுதி தேவை

எஸ்.எ.கியு-

- ஜனங்கள் வெளியரங்கமாய் இயேசு மற்றும் சகேயுவை குறித்து ஏளனமாய் பேசினார். உங்களைவிட மேலானவர்கள் உங்களை, உங்கள் பேரை கொண்டு எல்லோருக்கும் முன்பாய் அழைத்த அனுபவம் உண்டா?
- அது எப்படி இருந்தது?
- இந்த கதையில் இருந்து நம்மை எதிர்ப்பவர்களுக்கு எப்படி நாம் நடந்துகாட்ட வேண்டும்?

10. எஸ்.ஓ - ஜனங்களின் ஏலம் இயேசு பாவியின் வீட்டிற்கு போகிறார் என்பது ஜனங்கள் தாங்கள் பாவமற்றவர்கள் என்று எண்ணினார்கள்.

எஸ்.எ:- தங்களின் சொந்த வாயினால் பெருமை உள்ளவர்கள், தங்களை

நியாயப்படுத்துகின்றனர். நாம் இப்படி பெருமை படுவார்கள், தங்களின் பாவத்தை ஒத்துக் கொள்ளதாவர்போல இருக்க கூடாது?

எஸ்.எ.கியு:-

- உங்கள் தேவனை தேட, நீங்கள் எப்பொழுதாவது ஜாதி வெறுப்புள்ள மக்களிடம் பேச வாய்ப்பு இருந்ததா; அவர்கள் தங்களை பாவமற்றவர்கள் மற்றும் சரியானவர்கள் என்று எண்ணுகிறவர்களா?
- சுய நீதியை குறித்து உங்களின் அபிப்பிராயம்?
- இந்த நீதி உள்ள கடவுளை பின்பற்றுபவனுக்கு, இருக்க வேண்டியது அல்லது அவசியமானது என்ன?

11.எஸ்.ஒ:- ஜனங்கள் இயேசுவை பின்பற்றுவோர்போல நடித்து, அவரை நெருங்கி நடந்தனர். அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து இயேசு யார் வீட்டில் சாப்பிடுகிறார் என்பது, தேவனையே யார் வீட்டிற்கு அவர் போவது என்பதை தெரிந்தெடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை கட்டுவதாய் உள்ளது. அவர்கள் இயேசுவுக்கு முழுமையான அவமரியாதை காட்டுகின்றனர். அவர் எங்கு செல்ல வேண்டும். யார் வீட்டிற்கு செல்லுதல் ஜனங்கள் இயேசுவை தடை செய்வதின், மூலம் இது வெளிப்படுகிறது.

எஸ்.எ:- பலர் இயேசுவை பின்பற்றுவோர், அவரை அறியாதவர்களாய், அவமதிக்கிறவர்களாய் அவர் விருப்பத்தை உதறியடிக்கிறவர்களாய் உள்ளனர். பல ஜாதி வெறியர்கள் அவர் வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பதில்லை?

எஸ்.எ.கியு:-

- உங்கள் ஞாபகத்தில் உள்ளதா, ஜனங்கள் அவரை மதிப்பதை போல நடிக்க, ஆனால் ஒரு உண்மையான ஆண்டவர் தெரிந்தெடுத்த, அழைத்த நபரை குறித்து ஏளனம் செய்தனர்?
- இன்றைக்கு ஜனங்கள் இயேசுவை பின்பற்றுவோர் என சொல்ல கடவுளை மதிப்பதைவிட தங்களை மட்டும் மிகவும் மதிப்பவர்களாய் உள்ளனர்?
- அது எப்படி இருக்கும்?

12. எஸ்.ஒ - இந்த நியாயத்தீர்ப்பின் ஜனத்திற்கு நம்பிக்கை இருந்தது. இயேசுவை

கேள்விகேட்கவோ தைரியம் இல்லை. இவர்கள் இயேசுவின் வல்லமை, அவர் ஏலனத்தையெல்லாம் கேட்காதவர் என்று நினைத்தனர்.

எஸ்.எ:-

இந்த ஜனகூட்டம் இன்றைக்கு உள்ள மக்கள்போல, கடவுள் ஒன்றும் கேட்கமாட்டார், அந்தரகத்தில் நாம் செய்வது அவருக்கு தெரியாது என நினைக்கிறார்கள்.

எஸ்.கி.கியு:-

- ஜனங்கள் பல இரகசியமான காரியம் அல்லது பல செய்கைகள் மற்றும் செயல்களை அந்தரங்கத்தில் யாரும் பார்க்க அல்லது தெரியாது என நினைக்கிறார்களா?
- இந்த அறிவு நம்மை எப்படி பாதிக்கிறது.

13. எஸ்.ஒ:-

சகேயு செல்வந்தன் ஆஸ்தியில் பாதி கொடுப்பேன் என்பதின் மூலம்தான் இருதய விருப்பத்தை வெளிப்படுத்தினான்.

எஸ்.எ:-

ஒரு உண்மையான தேவனோடு கொள்ளும் சந்திப்பு ஒருவரை மாற்றி உலக மற்றும் செய்கையளவில் மாறுதல் வெளிப்படுத்தும்.

எஸ்.எ.கியு:-

- எப்படி தேவனை சந்திப்பின் மூலம், மனிதனின் உலக மற்றும் செய்கை மாறுதலை பாதிக்கிறது?
- எடுத்துக்காட்டு கூறுக?

14. எஸ்.ஒ - சகேயு சொன்னது யாரிடமாவது பொய் சொல்லி ஏமாற்றி இருந்தால், 4 மடங்கு திரும்ப கொடுப்பேன் என்றான். அவன் நியாத்தீர்ப்பின்படி யாரையாவது அல்லது நான் குற்றமுள்ளவன் என்று தீர்க்கபடி பணத்தை செலுத்துவேன் என சகேயு கூறாமல், தன் சொந்த விருப்பத்தின்படி செய்தான். சிலர் நினைத்தது, யாருக்கும் தெரியாமல் மறைமுகமாய் ஏழைகளுக்கு பணம் கொடுத்துக் கொண்டு இருந்தானோ, என மக்களின் கருத்து வித்தியாசமாய் காணப்பட்டது.

அவன் வரி வசூலிப்பவனாய் இருக்க ஆஸ்தியில் பாதி கொடுக்கிறேன் என, அவன் மறைமுகமாய் ஏழைக்கு கொடுத்திருப்பானோ. ஆனால் 4 மடங்கு திரும்ப, எவனையாவது ஏமாற்றி இருந்தால் கொடுப்பேன் என்று சொன்ன வார்த்தை, அவனை

ஒரு உயர்ந்த நீதிமானாய் மக்கள்முன் நிறுத்தியது.

இந்த கதையில் ஒரு நேரத்தில் சகேயு தான் பாவி என்றும், மற்றும் எல்லா காரியத்தை சரி செய்ய நினைத்தான். அன்றைய நாளில் இரட்சிப்பு வந்தது என இயேசு உரைத்தார். சகேயு கொடுப்பதில் பெரிய மனிதனாய், அவனை நிறுத்தியது.

எஸ்.எ - சகேயு ஒரு செல்வந்தன், வரி வசூலிப்பவன் அவன் சுயநலம் மாறினது. அவன் உண்மை மற்றும் கொடுப்பவனாய் மாறினான். அவன் தன்னை தாழ்த்தி அவன் ஏமாற்றி மற்றவர்களிடம் பொய் சொல்லி வாங்கின பணத்தை 4 மடங்கு திரும்ப கொடுப்பேன் என்றான். நாம் இயேசுவின் விசுவாசத்தில் வர, பாவத்தை அறிக்கையிட்டு, நாம் தாழ்மையை மற்றும், முன்பு செய்த நம் தவறுகளை திருத்தி கொள்ள வேண்டும்.

எஸ்.எ.கியு -

- நீங்கள் இயேசுவின் மேல் விசுவாசத்தை வைத்து வாழ்வு தலைகீழாய் மாறின நபரை அறிவீர்களா?
- அப்படியானால், எந்த விதத்தில் சுபாவ மாற்றம், அடைகிறார்கள் இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க முடியும்.
- எந்த விதமான உணர்ச்சி மற்றும் மனநிலை, நமக்குள் இருக்க வேண்டும். நம்மை நம் வாழ்வில், முன்நிலைக்கு கொண்டு சென்று நாம், செய்த தவறுகளை மாற்றுவதாக இருக்க வேண்டும்?
- நீங்கள் யாரையாவது அறிந்தததுண்டா, அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பு தான் முன்பு மக்களுக்கு விரோதமாய் செய்த தவறுகளை சரி செய்தனர் என்று?
- என்ன நடந்தது?

15. எஸ்.ஒ - முதலாவது சகேயு இயேசுவிடம் ஆவிக்குரிய அங்கீகாரம் பெற விரும்பினான். அந்த நாளில் சகேயு இயேசுவிடம் வர, அவரின் வார்த்தையினால் "இந்த நாளில் இரட்சிப்பு இந்த வீட்டிற்கு வந்தது என்று" சகேயு மட்டும் தான் இந்த கதையில் செய்த பாவத்தை ஒப்புக்கொண்டு, இரட்சிப்பு அடைந்தான்.

எஸ்.எ -தன் பாவத்தை அறிக்கையிடாதவனுக்கு, இரட்சிப்பு வராது?

எஸ்.எ.கியு:-

- நாம் பேசினது, இயேசுவிடம் சகேயு அங்கீகாரம் பெற்றானா, இல்லையா, இன்றைக்கு மக்கள் நல்ல கிரியை செய்து அல்லது பணத்தை செலுத்தி ஆண்டவரை அவர் இரக்கத்தை பெற முடியுமா?
- எந்த வழியில் இப்படி செய்யமுடியுமா?
- இப்படி நீங்கள் நினைத்து அல்லது இப்படிப்பட்ட காரியங்களை செய்யும் மக்களை கண்டதுண்டா?
- இந்த கதையில் சகேயு மாத்திரம்தான் பாவி, என்று ஒப்புக்கொடுத்தான். அவன் உண்மையான மனமாற்றம் அடைந்தான், பணம் மற்றும் மக்கள் குறித்த கண்ணோட்டம் மாறியது., இயேசுவே அதை ஆராய்ந்து அறியசெய்தார்.
- இன்றைக்கும் ஜனங்கள், நாங்கள் பாவி என ஒப்புக்கொடுக்க பயப்படுகிறார்களா?
- இந்த கதையில், பாவத்தை அறிக்கை செய்வது எவ்வளவு முக்கியம், என எண்ணுகிறீர்கள்.

16.எஸ்.ஒ - சகேயுவை பார்த்து இயேசு இந்த நாளில் இரட்சிப்பு உன் வீட்டிற்கு வந்தது என்றார். அவர் பேச ஆரம்பித்தார் அதாவது சகேயுவும் ஆபிரகாமின் குமாரன் என்றார். சகேயுவை தவிற அநேகர் இருந்தனர், என தெரிகிறது. இயேசு சொன்னதின் மூலம் இயேசு மற்றும் சகேயுக்கு சார்பாக பறிந்து பேசினார்.

எஸ்.எ - இயேசு சகேயுவோடு இணைய, சகேயு அவர் விசுவாசத்திற்குள் வந்தார். எல்லா நேரமும் ஏளன கூட்டம் இதை கவனித்துக்கொண்டிருந்தது. இயேசு அந்த மக்களை நீதிமானாய் மாற்ற அவர்கள், கண் திறக்க சகேயு இயேசுவின் அங்கிகாரம் பெற்று உயர்ந்தான் என மக்கள் பார்க்க விரும்பினார். இன்றைக்கு இயேசுவை, பின்பற்றி மாறினவர்களை வெட்கப்படுத்தும் கூட்டம் உண்டு.

எஸ்.எ.கியு:-

- மக்களால் ஒதுக்கப்பட்ட மனிதன் விசுவாசத்திற்குள்வர, பின்பு இயேசு இந்த மதிக்கப்படாத மனிதனை நீதிமானாய் மாற்றினார். இன்றைக்கு வாழ்வு, தொழில் மூலம் கீழ் தனமாய் மக்கள் பார்க்கப்படுகிறார்களா?
- எப்படிப்பட்ட ஜனங்களை பாவிகள் என சொல்லி மற்றும் கீழ்தனமாவர்கள் என்று மக்கள் எண்ணுகிறார்கள்.
- இப்படிப்பட்ட காரியம் நடந்ததை பார்த்ததுண்டா?
- இப்படிப்பட்டதை பார்த்திருக்க, சுய நீதி உள்ளவர்கள் ஒரு பாவி மாறி,

ஆவிக்குரிய அச்சாரம் பெற்று இயேசுவை பார்க்கும் பேச விரும்புகிறார்களா?

- இயேசு ஜனங்கள் மேல் நம்பிக்கை இழக்க இது நமக்கு எதை உணர்த்துகிறது.

17. எஸ்.ஒ. இயேசுவின் வார்த்தை எனது நோக்கம் தொலைந்து போனவனை தேடி கண்டுபிடிப்பதாகும்; உயர்த்தப்பட்ட சகேயுவை ஏளனம், செய்த ஜனம் பார்த்தது.

எஸ்.எ - நாம் தேவனிடம் அங்கிகாரம் பெற, நம் பாவத்தை அறிக்கையிட, அவர் நம்மை இரட்சிப்பார்.

எஸ்.எ.கியு:-

- இயேசுவின், கடைசி வார்த்தை இந்த கதை மூலம் நமக்கு என்ன தேவன் சொல்லுகிறார்.
- எத்தனை ஜனங்கள் இந்த உலகில் தேவனின் இலக்கை அவர் நியமித்ததை அடைகிறார்கள்.
- நம் பாவம், நாம் தொலைத்த காரியத்தை அறிக்கை செய்வது, கஷ்டமா அல்லது எளிதா?
- இந்த கதையில் இருந்து நீங்கள் எடுத்துக் கொண்ட காரியம், என்ன?
- சில ஜனங்கள், இந்த கதையில் உள்ளபடி இயேசுவின் விசுவாசத்திற்குள் வராமல் இருக்கின்றனர். இந்த கதை உங்களுக்கு பேசுவதென்ன?

18. எஸ்.ஒ - முதலில் சகேயு இயேசுவை தேடினான், அடுத்த பகுதியில் இயேசு அவனை தேடினார்.

எஸ்.எ - இந்த கதையில் சகேயு, இயேசுவை தேடினான், இயேசுவும் தேடினார், அது உண்மை. நாமும் இயேசுவை தேட வேண்டும், நீங்கள் அறிய வேண்டியது அவரும் நம்மை தேடுபவராய் காணப்படுகிறார்.

எஸ்.எ.கியு:- இயேசுவை மக்கள் தேடுவது தேவையா?

- இந்த கதையில் ஜனத்தை இயேசு தேடுவதாய் உள்ளதா?
- இந்த செய்தி அதை உணர்த்துகிறது? கடவுள் மனிதனையா அல்லது மனிதன் கடவுளை தேடுகிறான்.
- இது எதிர்மறையானதா?
- இதை எப்படி விளக்குவீர்கள்.

## பின் சேர்க்கை இ : பயனாளிகளின் அறிக்கை பயிற்றுவித்தல் மற்றும் பெருக்குதல்

கடந்த 5 வருடமாக படிப்பறிவில்லாத, நான் போதகனாகவும், சுவிஷேகனாகவும் ஆண்டவருக்காக சேவை செய்கிறேன். நான் படிப்பறிவில்லாததால் வேதாகம கல்லூரிகளில் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. 1993 ஆண்டவரை ஏற்றுக்கொண்டேன். அதன்பிறகு வேதாகமத்தை கற்றுக்கொண்டு அவருக்கு சேவை செய்ய ஆசைப்பட்டபோது அது நடக்கவில்லை. என்னுடைய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் சுவிசேஷத்தைச் சொல்ல மிகவும் கஷ்டப்பட்டேன். இந்நிலையில் நான் ஆண்டவர் இந்த எஸ்,டி.எஸ் பயிற்சி கிடைக்க உதவினார். 155 கதைகளை இந்த எஸ்.டி.எஸ் மூலம் கற்றுக்கொண்டு சந்தோஷமாய் சுவிசேஷத்தை படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் சொல்லி வருகிறேன், அதற்காக ஆண்டவருக்கு நன்றிச் சொல்கிறேன்.

பாபு - சவிசேஷகர், போதகர் - கர்நாடகா, இந்தியா

---

ஏதாவது ஒரு கலாச்சாரத்தை ஒரு வயதினர், விசுவாசியோ அவிசுவாசியோ ஒரு ஜனத்தை கற்பனைச் செய்து அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையிலிருந்து எப்படி பொக்கிஷங்களை எடுக்கிறார்கள் என்று நினைத்து பாருங்கள். இப்போது எஸ்.டி.எஸ் முறை பிரயோஜனமாய் இருக்கும்.

இந்த முறையை எங்களுடைய பணித்தளங்களிலும், முதியவர்களுக்குள்ள வேத பாடங்களிலும், சிறுவர் மற்றும் வாலிபர் ஊழியங்களிலும் பயன்படுத்துகிறோம்.

பாஸ்டர் கிரிஸ் ஜான்சன் - கல்வாரிசபை அமெரிக்கா

---

எஸ்.டி.எஸ் என்பது ஆண்டவரால் நமக்கு கொடுக்கப்பட்ட கருவியாகவும், பிரதான கட்டளையை இந்த உலகத்தில் இந்நாட்களில் நிறைவேற்றப் பயன்படுகிறது. அநேக நூற்றாண்டுகளாக கர்த்தருடைய வார்த்தையை வியாக்கானம் செய்ய முயற்சிகளும் அதில் ஒரு கட்டுபாடுகள் உண்டு.

இப்பொழுது அந்த எஸ்.டி.எஸ் முறையை கற்றுக்கொண்ட பிறகு, நான் தைரியமாக இது சீடராக்க சிறந்த வழியாக கருதுகிறேன். எஸ்.டி.எஸ் எனது உலகப்பார்வையையும், என்னுடைய கண்களையும் திறந்தது. தென் சூடானாகிய என் தேசத்தில் படிப்பறிவு

அதிகமுள்ள மக்களிடத்தில் இது பெரிய தாக்கத்தை உண்டுப்பண்ணுகிறது.

உலகத்திலுள்ள எல்லா தலைவர்களுக்கும் இந்த முறையை சிபாரிசு செய்கிறேன். இந்த பயிற்சி மேன்மேலும் வளர ஜெபிக்கிறேன்.

அருள்திரு. டானியேல் சாகாய் ஜாக் - ஆடா

நான் இறையியலில் முனைவர் பட்டம் எடுத்திருந்தாலும் அதிகம் படித்தவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய இந்த புதிய பாட திட்டங்கள் எவ்வாறு மூலையை மறுக்கப்பண்ணுகிறது என்று கற்றுக்கொண்டேன், டோரத்தி இந்த முறையை கண்டுபிடித்திருக்கலாம். நம்முடைய பிரதான குரு இயேசு கதைகளையே பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்.டி.எஸ் முறையை யூதர்களுக்கு நான் பயன்படுத்தியதால் என் ஊழியத்தில் பெரிய வித்தியாசத்தை கான முடிந்தது.

இந்த எஸ்.டி.எஸ் மேற்கத்திய நாடுகளிலும் சபை வளர்ச்சியை கொண்டு வருகிறது மற்றும் வாய்மொழி கல்வி கற்பவர்களாகிய மேற்கத்திய நாடு அல்லாத மற்ற நாட்களுக்கும் இது பயன்படுகிறது ஆகவே இதை நான் சிபாரிசு செய்கிறேன்.

பில் பிஜ்ரகர் - வில்லியம் கேரி

இண்டர்நேஷனல் யூனிவர்சிட்டி, USA

---

கிறிஸ்தவம் சமுதாய நீதிக்காக போராடும் போது, உலகம் சத்திய நீதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நீதி கர்த்தருடைய வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே கிடைக்கும்.

இந்த எஸ்.டி.எஸ் முறை சீஷத்துவத்தையும், இயேசுவையும் குறித்து படிக்க பெரிதும் உதவுகிறது.

எங்களுடைய பேரப்பிள்ளைகளுக்கு, இதை நாங்கள் தியான பகுதியாக பயன்படுத்துகிறோம். என்னுடைய சக போதகர்கள் இதில் பயிற்சி பெற்று சிறு குழுக்களில் உள்ள வாலிபர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள். இந்த எஸ்.டி.எஸ் முறைக்காக எங்கள் நிறுவனம் பணம் திரட்டி ஆப்பிரிக்காவிற்கு அனுப்புகிறது.

இது மேலும் வளருகிறது. அநேக கள்ள உபதேசங்கள் மத்தியில் அமெரிக்கா நாட்டிலுள்ள மாநகரங்களில் இந்த சத்திய சுவிசேஷம் எங்கள் மூலமாக பரவி நம்பிக்கையில்லாதவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கிறது. உடைந்துபோன கலாச்சாரத்தை ஒன்றிணைக்க ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் கற்ற பாடங்களை இந்த எஸ்.டி.எஸ் முறை பயன்படுத்துவதால் ஒரு பெரிய விடுதலையைச் கொடுக்கிறது.

மார்க் சான்ட்ஸ் - பிரசிபன்ட்

# பயிற்றுவித்தல் மற்றும் பெருக்குதல்

டி.ஜீ.எஸ்.பி.யில் பணிபுரியும் நபர்கள் மூலம் பயிற்றுவிக்கப்பட்ட மூன்று சாட்சிகளை முதல் மூன்றில் படித்தோம். அவர்கள் பயிற்றுவித்தவர்கள் மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கிறார்கள். இது தான் கர்த்தருடைய வழியல்லவா?

---

எம்பு என்கிற இடத்திலுள்ள ஒரு பேராயர் ஒருவர் எழுந்து இப்படியாக சொன்னார். "வேதாகமத்தை உள்வாங்காத ஆயர்கள் இருப்பதாக இன்று சபை பிரச்சனையிலிருக்கிறது.... உங்களை பயிற்றுவித்தவர்களுக்குப் போய்ச் சொல்லுங்கள், "பெருமயல் பேராயர் ஆனத்துக்கு நீங்கள் காரணம் எனச் எனது நன்றியைச் சொல்லுங்கள்"

பெருமயல் முஸ்யா - CEO - கென்யா

---

எஸ்.டி.எஸ் முறை அதிகமான ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்கவும், பெருக்கவும் அவர்களை சபைகளிலும், பணித்தளங்களிலும் பயன்படுத்த பெரும் உதவியாக இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை படித்தவர்கள், படிக்காதவர்கள் வயதானவர்கள், வாலிபர்கள் எல்லாருக்கும் உரியது. திரியேக தேவனுடன் உறவாட இது ஒரு நல்ல உணவாக பயன்படுகிறது.

டாக்டர் மார்க் முனியப்பா - அகில இந்திய கவுன்சில் / TGSP

---

என்ன வார்த்தையை பயன்படுத்தி உங்கள் (எஸ்.டி.எஸ்) எல்லாருக்கும் நன்றிச் சொல்லுவது என்று எனக்கு தெரியவில்லை? கர்த்தருக்கும், இந்த எஸ்.டி.எஸ் கருவிக்கும் மிகவும் நன்றி கூறுகிறேன். என்னுடைய 20 ஆண்டு அனுபவத்தில் இது மிகவும் பிரயோஜனமானதாக கருதுகிறேன். எஸ்.டி.எஸ் தேவனுடைய வார்த்தையை ஆழமாகவும், விரிவாகவும் படிக்கவும் என்று நிறுவனத்தில் பயன்படுத்தவும் உதவினது.

ரமேஸ் சாப்கோட்டா - நேப்பால்

---

முதலாவதாக எல்லா துதி கனம், மகிமையையும் சர்வ வல்ல தேவனுக்கு என்னுடைய இருதயம் நிறைந்த  நன்றியை எனது மூத்த சகோதரர் ரமேஸ்கருக்கு தெரிவித்து கொள்கிறேன்.

நான் முதலாவது ரமேஸ்சை பார்க்கும்போது, அதன் பிறகுதான் நான் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பித்திருந்தேன். என்னுடைய ஊழியம் புதிதாய் பிறந்த குழந்தை போன்று இருந்தது எனக்கு ஆவிக்குரிய தாய் தேவைப்பட்டாள். ரமேஸ் எனக்கு எஸ்.டி.எஸ் பயிற்சி கொடுத்தார் அது தான் ஆரம்பம். ஒரு சிறு கூட்டமாய் நாங்கள் இயேசுவை ஆராதிக்கிறவர்களாய் அப்போது இருந்தோம். ரமேஸ் எஸ்.டி.எஸ் -யை என்னுடைய சபையிலே தொடர்ந்தார்.

குறுகிய காலத்திற்குக்குள்ளாக இந்த எஸ்.டி.எஸ் பயிற்சி மூலம் எட்டு சபைகளையும், இந்த வருடத்தில் இன்னும் இரண்டு சபை ஸ்தாபிக்கும் திட்டத்தையும் கர்த்தர் வாய்க்கச் செய்தார்.

எஸ்.டி.எஸ் முறை ஆகவே சபையை பெருக்கும் திட்டத்தில் இதை பயன்படுத்தினேன் என்னுடைய சின்ன சபை ஊழியர் அதிகமாக இதை பயன்படுத்துகிறார்.

சகோதரர் ரமேஸ்க்கு எனது நன்றி, நான் ஒரு பட்டுபுழுவாக இருந்தேன். அவர் என்னை வண்ணத்துப்பூச்சியாக மாற்றிவிட்டார்.

தேவ ஊழியர்களாகிய எஸ்.டி.எஸ் நண்பர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பாஸ்டர் கிருஷ்ணா - **Asst. Gen. Secretary,**

**National Churches Fellowship of Nepal**

---

## பின் சேர்க்கை ஈ: ஒரு தலைவனின் கண்டுபிடிப்பு சுவிசேஷத்திற்க்கு தடைச்செய்யப்படும் கிறிஸ்துவை அறியாத நாட்டில் மிஷ்னரி ஊழியங்கள்

வாய்மொழி வேதப்பாட வகுப்பு என்று முதலில் நான் அறிந்தபோது எனக்கு அதில் விருப்பமில்லை. சிறுபிள்ளைகளுக்கு சொல்லும் வேதாகம கதைகளிலிருந்து எப்படி வாசத்து ஸ்திரமான கற்பனையை கட்ட முடியும் என்று வினவினேன். ஆனால் அமெரிக்காவில் ஒரு கருத்தரங்கில் இருந்தபோது, ஒரு ஜோடியோடு தங்கியிருந்தேன், அவர்கள் வாய்மொழியில் வேதாகமத்தை உலகம் முழுவதும் சொல்கிறவர்கள். நான் அவர்களுடன் யாத்திரைச் செய்து அவர்கள் கொடுக்கும் பயிற்சிகளை நான் ஒரு வாரக்கடைசியில் வீடியோ எடுத்தும் அநேக கேள்விகளை கேட்கவும் தொடங்கினேன்.

தேவனுடைய வார்த்தையில் ஒரு தனிப்பட்ட விசுவாசியும் சபை எப்படி ஸ்தரமாக இருக்க முடியும் என்று கண்டுக்கொண்டேன். வேத வசனத்தை பகுத்து அறியவும், வியாக்கியனாம் கொடுக்கவும் தெரியவேண்டும், ஏதோ வசனங்களை மட்டும் ஒருவர் அறிந்திருந்தால் போதாது இதைவிடக் குறைவாக அறிந்திருக்கும் ஒரு விசுவாசி சிலபேர் வழிமாறிவிடுவார்.

இப்படி வேதத்தை ஆராய்ந்து படிக்கும் மகிழ்ச்சி வேதவசனத்திற்கு சரியான வியாக்கியானம் கொடுக்கவும் ஒரு சில ஆண்டுகளாக அதில் முன்னேறவும் தொடங்கினேன். இந்த வாய்மொழி வேதாகம போதனை அதில் எனக்கு பெரிதும் உதவினது.

வாய்மொழி இப்படி ஆராய்ச்சி செய்து வேதத்தை படிக்கமுடியும் என்பது எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. இது சாத்தியமா? இது எதுக்கு அவசியம்?

முதலாவது, இது எதுக்கு அவசியம்? வாய்மொழிப் போதனை செய்பவர்கள் அவர்களுடைய சாட்சிகள் நிறைந்த C.D அல்லது வீடியோ துனுக்குகளை காட்டி சிறப்பாக செய்வார்கள். இது எதற்கு அவசியம் என சொல்வதற்கும் மேலாக அது சிறப்பாக இருக்கிறது.

2004-ல் லாசான் கமிட்டியின் உலக சுவிசேஷம் அறிக்கை வந்தபின் எனக்கு ஒரு பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதில் இந்த உலகத்தில் பெரும் பாண்மை மக்கள். யு.கே. யு.எஸ் போன்ற நாடுகளிலும் கூட வாய்மொழியில் கற்றுக் கொள்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

கடந்த 17 ஆண்டுகளாக எங்களுடைய குழுக்களத்தில் பணிசெய்கிறார்கள். எங்களுடைய வாய்மொழி சுவிசேஷத்தை கற்று, மனப்பாடம் செய்து ஜனங்களுக்கு வாய்மொழியில் தான் சுவிசேஷம் சொல்லி வருகிறார்கள். இதன் மூலம் அநேக ஜனங்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். இது ஒரு பெரிய பயனற்றுள்ளதாக மாறியது.

ஆனால் அதை நாங்கள் மறுபடியும் சோதித்தபோது படிப்பறிவு கண்ணோட்டத்தில்

செய்தோம். நாங்கள் வேதாகமத்தை அவர்கள் கையில் கொடுத்து படித்து எப்படி வேதவியாக்கியம் கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். இதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. புதிய விசுவாசிகள் தளர்ந்து போனார்கள். அவர்கள் விசுவாசத்தில் வளராமல் பின்வாங்கிப் போனார்கள்.

நாங்கள் ஒரு கிராமத்திற்கு சென்றோம் அங்கே 20 ஆதி மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் அவர்களிடத்தில் எங்கள் அனுபவத்தைக் கூறி எப்படி தினமும் வேதம் வாசித்து, தங்களுக்காகவே எப்படி வேத ஆராய்ச்சி செய்து தேவனோடு நேரம் செலவிட வேண்டும் என்று கற்றுக்கொடுத்தோம்.

இப்பொழுது, அவர்கள் யாரும் கர்த்தரை அப்படி ஒன்றும் பின்பற்றவில்லை. அநேகர் விரும்பினாலும் நாங்கள் சொல்லிக் கொடுத்த முறை அவர்களுக்கு உதவவில்லை. அது அவர்கள் இருதயத்துக்குள் செல்லவில்லை.

இதற்கும் மேலாக - அவர்கள் வசனத்தை மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ளவில்லை. நாம் ஆண்டவருக்குள் நடத்தியவர்கள் மற்றவர்களை ஆண்டவருக்குள் நடத்தவில்லையென்றால் எப்படி உலகத்தில் மற்றவர்களை நாம் ஆதாயப்படுத்த முடியும்?

வேதாகமத்தை வாய்மொழியில் பேசியது அடிப்படை தன்மைகள் கொண்டது முதலாவது, அநேகர் வேதாகமத்தை ஊகித்துக் கொள்ள முடிகிறது. இரண்டாவது ஜனங்கள் மற்றவர்களுக்கு இந்த சத்தியத்தைச் சொல்ல முடிகிறது.

சுவிசேஷத்திற்கு தடை செய்யப்பட்ட நாங்கள் அதிகாரிகளோடு பிரச்சினை வராமலிருக்க இந்த முறை நன்மை பயக்கிறது. இப்படி நிறைய சொல்லாம்.

என்னுடைய இரண்டாவது கேள்வி தான் மிக முக்கியமானது, இப்படி வாய்மொழி? பயிற்சியில் வேதத்தை வியாக்கியானம் செய்து ஆழமாக படிக்க முடியுமா?

அநேக ஸ்தாபனங்கள் இந்த வாய்மொழிப் பயிற்சியில் சில வித்தியாசங்களை உடையது. அநேகர் அகில உலக வாய்மொழி சங்கத்திலிருக்கும் (ION). ஒரு சில ஸ்தாபனங்கள் மாத்திரமே குறிப்பாக வாய்மொழி வேதாகம பயிற்சியை கொண்டிருக்கிறது. நான் அவர்களின் வீடியோ மற்றும் நாங்கள் பார்த்து படித்திருக்கிறோம்.

நான் அவர்களை சந்திக்க இந்த எல்லா ஸ்தாபனங்களிலும் யார் வாய்மொழி பயிற்சியை சிறப்பாக செய்கிறார்கள் என்றுக் கேட்பேன்?

அவர்கள் எல்லாரும் எஸ்.டி.எஸ் -ன் இணையதளத்தை பார்த்தேன், அவர்களுடைய வீடியோக்கள் மற்றும், நூல்களையும் வாசித்தேன் அதினோடு வித்தியாசம் இருப்பதைப் பார்த்தேன்.

எனக்கு எஸ்.டி.எஸ் பிடித்ததின் காரணம் வாய்மொழியில் வேதத்தை ஆழமாக போதிக்கிறார்கள். நான் எதிர்பார்த்ததை அவர்கள் கொடுத்தார்கள். நான் ஸ்கைப்ப் மூலம் பேசத் தொடங்கினேன்.

நவம்பர் மாத ஆரம்பத்தில் இரண்டு பயிற்சியாளர்கள் எஸ்.டி.எஸ் லிருந்து ஐந்து நாட்கள் பயிற்சிக் கொடுத்தார்கள். முதல் இரண்டு நாட்கள் எங்களில் சிலரைத் தெரிந்துக்கொண்டு (அவர்களும் பயிற்றுவிக்கிறவர்கள்) அவர்களுக்கு பயிற்சிக்கொடுத்தார்கள், மற்ற நாட்களில் மற்ற எல்லாருக்கும் கொடுத்தார்கள். எங்களுடைய ஊழியத்தின் பயன்படுத்திய பிறகு ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தது.

இதை நாங்கள் உடனடியாக பயன்படுத்த தொடங்கினோம். அதிலிருந்து வந்த அறிக்கை திருப்திகரமாக இருந்தது இது முக்கியம் வாய்ந்ததாக கருதினோம்.

எழுதப்பட்ட வேதவார்த்தை (கேனான்) முக்கிய பொக்கிஷம் ஆகாத எப்படி போதிக்க, ஒத்திகைப்படுத்த வேண்டும் என்றும் கற்றுக்கொடுக்க வேண்டும் எழுதிய வார்த்தையிலிருந்து வாய்மொழி வார்த்தையை கற்றுக் கொள்ள வேண்டும் அப்படி கற்றுக்கொடுக்கும்போது வேதாகமத்தை திறந்து வைத்து இதிலிருந்து எழுதிய வார்த்தைகளை தான் போதிக்கிறோம். என்றுச் சொல்ல வேண்டும். அதினால் வேதாகமம் தான் பொக்கிஷம் என்றுக் காட்டுகிறோம்.

முதல் நூற்றாண்டு சபைகளில் ஆண்கள் வசனத்தை வாசிக்க மற்றவர்கள் கவணமாக கேட்டார்கள். பவுல் அப்போஸ்தலர் நிருபங்களை எழுதிய பின்பு அதை சத்தமாக சபையில் வாசிக்கும்படி கேட்டுக்கொண்டாள். ஒரு சி.டியில் கேட்க்கப்பட்ட கேள்வியிலிருந்து எனக்கு ஒரு ஆச்சரியம் தோன்றிற்று. அதாவது முதல் நூற்றாண்டில் எத்தனை பேருக்கு எழுதபடிக்க தெரிந்திருந்தது? ஒரு சமயத்தில் 3000 பேர்கள் எனக்கு கிடைத்த பதில் 5%.

வேதாகமத்தை துல்லியமாக படிக்க உதவுவதால் எனக்கு இந்த முறை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதுமாத்திரமல்ல எப்படி ஆழமாக வேதத்தை படிக்கலாம் என்று அவர்கள் கற்றுக்கொடுப்பது இன்னும் சிறப்பு வாய்ந்தது. கதையை சொல்லிக்கொடுத்த பின்பு அதிலிருந்து கேள்விகளை கேட்டு அவர்களைச் சிந்திக்க வைத்து சரியான விளக்கங்களை கேட்டு அவர்களைச் சிந்திக்க வைத்து சரியான விளக்கங்கள் கொடுத்து வாழ்க்கையில் பயன்படுத்த போதிக்கப்படுகின்றன.

இது நிஜமாகவே ஒரு சிறந்த கருவி

## சுலபமாக கதைச் சொல்லுதல் குறித்து உலக கருத்து

கர்த்தருடைய வார்த்தையை பறைசாற்றும் ஜனங்களுக்கு 21-ம் நூற்றாண்டில் சிறந்த கருவியாக மற்றவர்களை உருவாக்குகிறது.

சாமுவேல் சியாங் - நிறுவனர், அகில உலக வாய்மொழி ஐக்கியம்

---

வட மேற்கு இந்தியாவில் இந்த பயிற்சியை இப்பொழுது மிக அவசியம் வேதத்தை ஆராய்ந்து, வியாக்கியானம் கொடுக்க இந்த முயற்சி சாலச்சிறந்தது.

டாக்டர் பிரகாஷ் பதி - பாஸ்டர் அருட்பணி ஸ்தாபர், வட இந்தியா

---

"எஸ்.டி.எஸ் என்னுடைய உலக கண்ணோட்டத்தை மாத்திரமல்ல என்னுடைய கண்களையும் வேதத்தையும் உற்றுப் பார்க்க உதவினது"

அருட்திரு டானியல் சகாயம் - ஆடாள் - ஆப்பிரிக்கா

---

எஸ்.டி.எஸ் எங்களுடைய பணிதளத்திலும், முதியவர் வேதாகம வகுப்பிலும், சிறுப்பிள்ளை மற்றும் வாலிபர் கூடுகைகளிலும் பயன்படுத்துகிறோம். எங்களுடைய பிரசங்கத்திலும் இது பெரும் தாக்கத்தை உண்டுப்பண்ணுகிறது.

- பாஸ்டர் கிரில் ஜான்சன் - அமெரிக்கா

---

உலக அளவில் எஸ்.டி.எஸ் சாதாரண ஜனங்களுக்கும் ஊழியம் செய்கிறவர்கள் ஒன்று வேதத்தை புரிந்து பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது. வாய்மொழியை அடிப்படையாகவும், வேதாகமத்தை அஸ்திபாரமாகவும், கொண்டு போதிக்கப்படும் எஸ்.டி.எஸ் எல்லோரும் சாட்சிக் கொடுக்க உதவுகிறது.

ஜெப்ரி நெல்சன் - மத்திய அமெரிக்கா

---

அறியாத ஜனங்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க இந்த எஸ்.டி.எஸ் கருவி உதவியாக இருப்பதற்காக சர்வ வல்ல தேவனை நான் மகிமைப்படுத்துகிறேன்.

ஆமோஸ் ஷா - மூத்த போதகர் - மத்திய இந்தியா

---

தங்கள் வேதத்தை புரிந்துக்கொண்டு பழக்கப்படுத்த இந்த வாய்மொழி கருவி உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேட்டு ஒல்சன் - ஆசியா

---

என்னுடைய 23 வருட கிறிஸ்த்துவ பணியில் இப்பொழுது தான் ஒரு நாளும் எழுந்து படிக்க தெரியாத ஒருவரைகூட சீஷராக்கவில்லை என்று உணர்ந்தேன் அந்த மகத்தான பணியை எஸ்.டி.எஸ் மூலம் கற்றுக்கொண்டு ஊழியம் செய்ய தொடங்கினேன். இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பக்கங்களையும் நான் சிபாரிசுச் செய்கிறேன்.

அருட்திரு - லூபோ எருசேலம் - காங்கோ - ஆப்பிரிக்கா

---

வேதாகமம் மற்றும் இயேசு கிறிஸ்துவும் உபயோகப்படுத்தின மாதிரியை அந்த எஸ்.டி.எஸ் பயிற்சி முயற்சித்திருப்பதே இதன் சிறப்பாகும்.

டாக்டர் பெர்லின் கில்பிலான் - அகில உலக ஊழியர்களின் ஸ்தாபகர்.

---

நான் கல்வி அறிவில்லாவதன்.... வேதாகம கல்லூரிகள் எனக்கு அங்கே படிக்க அனுமதி தரவில்லை... கர்த்தருடைய வசனங்கள் பிரசங்கிக்கப்படும்போது எனக்கு அது புரியவில்லை காரணம் அது கல்வி அறிவு உள்ளவர்களுக்கு மட்டும்தான். ஆனால் எஸ்.டி.எஸ் மூலம் 155 கதைகளை படித்து புரிந்து சுவிசேஷதைத் படித்து படிக்காத இருதரப்பினர்களுக்கும் அறிவிக்கிறேன்.

Y. பாபு - போதகர் , சுவிசேஷகர் - தென் இந்தியா

---

# தேவனின் கதை : உலக தோற்றம் முதல் நித்தியம்வரை

மிகவும் எளிதான கதை உருவாக்கப்பட்டதின் காரணம் உலக அளவில் இந்த எஸ்.டி.எஸ் "தாய்" எனப்படும் தேவனின் கதை மூலம் தான் இந்த 80- மணி நேரம் ஒரு தொகுப்பு, வேதாகமத்தின் பல கதைகள் அதாவது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் வி.சி.டி மற்றும் வீடியோ முறையில் உள்ளது. 2011, வரையில் தேவனின் கதை மொத்தம் 300 உலக பாஷைகளில் உருவாக்கப்பட்டது.

தேவனின் கதையை சோலார் - சக்தி வாய்ந்த ஆடியோ பிளேயர் மூலம் பயன்படுதல். ஒரு இளம் வாலிபர், ஏதானை சேர்ந்தவன் தன் சக மாணவனோடு மிகவும் கோபமாய் இருந்தான், அவன் வரும்போது பள்ளிக்கு தன்னுடன் கத்தியை கொண்டுவந்தான், தன் சக நண்பனை கொல்லும்படியாக. இந்த வகுப்பு ஆசிரியர் ஒரு சோலார் தட்டு, கருவியை அதில் தேவனின் கதை அந்த ஊர் பொது தாய்மொழி பாஷையில் இருந்தது. அந்த சந்தர்ப்ப சூழ்நிலைக்கு தக்கதாய் அந்த மாணவனைப்பற்றி அறியாத ஆசிரியர், காயின் ஆபேல் கதையை போட்டார்.

அந்த கோபமுள்ள வாலிபன், அக்கதையை கேட்க ஏதோ ஒன்று அவனுக்குள் நடந்தது. அவன் வைத்திருந்த கத்தியை எடுத்தான், அதை ஆசிரியரிடம் கொடுத்தான். அவனின் திட்டத்தை அறிவித்தான்! தேவன் அவன் இருதயத்தை தொட்டார். அந்த நாள் அந்த வாலிபன் தன் பாவத்தை அறிக்கையிட்டான். அவன் இயேசுவை சொந்த இரட்சகனாய் ஏற்றுக்கொண்டான்.

தேவனின் வார்த்தையை பேசும் நாங்கள் உற்சாகப்படுத்துவது. மிகவும் எளிமையான கதையை பயன்படுத்த மற்றும் இந்த தேவனின் கதையை பயன்படுத்தி அதாவது ஒவ்வொரு இடத்திற்கு ஏற்ற பாஷைகளில் பயன்படுத்த வேண்டும்.

இந்த தேவனின் கதை சோலார் பிலேயர்கள் மற்றும் சி.டி. மற்றும் எம்.பி த்ரி ஜனங்கள் பயன்படுத்துகின்றனர். வீடியோ வடிவில் 100 மேற்பட்ட சரியான வடிவில் நடிக்கப்பட்ட காரியங்கள், வேதாகமத்தை நிஜமாக காணச்செய்கிறது. பல கோடியாக தேவனின் கதை பார்த்தோர், மற்றும் தொலை காட்சி மூலம் பார்த்தவர்கள் விசுவாசத்தினால் தேவனை பின்பற்றுவோராய் மாறிவிட்டனர். பல ஆயிரக்கணக்கான ஊழியம் மற்றும் கிறிஸ்துவ பிரிவினைகள் தேவனின் கதையை பயன்படுத்துகிறார்கள்.

ஒரு கதை சொல்லும் முறையான தேவனின் கதை. அதை கேட்போரை அதன் உள்கருத்தை திரும்ப சொல்ல உதவுகிறது. முக்கியமாய் இந்த வாய்வழி கலாச்சாரத்தை சேர்ந்தவர்கள் விசுவாசத்தோடு இந்த "முழு கதையை கேட்டு" அதற்கு ஏற்ப பதில் அளிப்பவர்களாய் காணப்படுகின்றன. ஆரம்பமான, சிருஷ்டிப்பு மனிதனின் வாழ்க்கை, ஆண்டவனின் உறுதி, ஒரு இரட்சகர் வருவார் மற்றும் சுவிசேஷங்களை அறிய அடிக்கல்லாக உள்ளது. இந்த தேவனின் கதையின் தாக்கத்தை சுவிசேஷத்தில் மற்றும் சீஷத்துவத்தில் காண்கிறோம்.

இந்த தேவனின் கதை சோலார் பிலேயர்கள் தேவனின் கதை அட்டை (அது மொத்தம் 150 வீடியோவில் இருந்து புகைப்படங்களை கொண்டது) ஒரு கிராம சுவிசேஷகர்களை ஒவ்வொரு ஊர்களில் இந்த படத்தை போட்டுகாண்பிக்கும் திரையரங்குகளாக மாற்றுகிறது! இதோடு கலந்துரையாடல் புத்தகம், செய்திப் புத்தகத்தின் வடிவில், ரேடியோ செய்தி மூலம், இந்த தேவனின் கதை பயன்படுத்தபடுகிறது.

# சர்வதேசத் தொடர்புகள்

**Africa: EAfrica@Gods-Story.org**

**Ethiopia: Ethiopia@SimplyTheStory.org**

**West Africa "French & English": STSWestAfrica@SimplyTheStory.org**

**West Africa "French & English": GSWestAfrica@SimplyTheStory.org**

**Europe: Europe@SimplyTheStory.org**

**India: IndiaDirector@Gods-Story.org**

**Nepal: Nepal@SimplyTheStory.org**

**South East Asia: Thailand@SimplyTheStory.org**

**"Spanish": LatinAmerica@SimplyTheStory.org**

**Oceania: Oceania@SimplyTheStory.org**

**Philippines: eb@SimplyTheStory.org**